90091

புலிப்பாணி ஜோதிடம்

(மூலமும் விளக்கவுரையும்)



A. பிரகஸ்பதி M.A.,B.A.L.,

முகவுரை

'ரிக், யஜூர், சாமம, அதர்வணம்' என்னும் நான்கு வேதங்களிலும் முதன்மையாக கருதப்படுவது 'ரிக்' வேதமாகும். இந்த வேதத்தின் சாரம் தான் ஜோதிட சாஸ்திரம். இந்த சாஸ்திரம் குறித்து பகுத்தறிவாளர்கள் பலவாறாக, அவதூறாக கூறினாலும், இறுதியில் இந்த சாஸ்திரம் உண்மை என்பதை அறிவிக்காமல் அவர்களது அனுபவம் விடுவதில்லை! இதுதான், விதியின் அபார சக்தி! இந்த விதி சிலர்க்கு தெய்வம் என்ற மாயப் போர்வையிலும், சிலர்க்கு 'மதி' என்ற போர்வையிலும் ஆட்டிப் படைக்கிறது. சரியான காலம் வரும்போது, இந்த உலக இன்ப, துன்பங்கள் யாவும் நவக்கிரக சக்தியால் உருவாகி வருகிறது என்பதை உணர்கின்றனர். சுருங்கக் கூறின், நவக் கோட்களே உண்மையான தெய்வங்கள் எனலாம். தெய்வங்கள் என்று வழிபடுபவை எல்லாம் இவ்வுலகப் படைப்புகளில் ஓர் இனம் எனக் கூறலாம். எவ்விதம் மனித இனம், பறவை இனம், விலங்கினம் என்று கூறப்படுகிறதோ, அதுபோல் தெய்வங்களையும் ஓர் இனமாக கொள்வதே சரியான கருத்தாகும். இந்தக் கருத்தை கிரேக்கர்கள் சரியாக உணர்ந்துள்ளனர். கிரேக்க சாஸ்திர நியதிப்படி "குரு கிரகமே" தெய்வங்களின் தலைவனாகவும், அரசனாகவும் கொள்ளப்படுகிறது. எனது கருத்தும் அதுதான். இது எனது 20 வருட ஜோதிட ஆராய்ச்சியில் கண்ட உண்மை!

இந்த உலக வாழ்க்கையின் நிலையை சரியாக உணர்ந்து கொள்வதற்கு ஜோதிட சாஸ்திரம் ஒரு பெரும் கருவியாக பயன்படுகிறது. இந்து மத சாஸ்திரம் நிர்ணயிக்கப்பட்டது இந்த சாஸ்திர அடிப்படையில்தான் என்பதை உணர வேண்டும். இப்படிப்பட்ட உயர்ந்த ஜோதிட சாஸ்திரத்தை நமது பண்டைய முனிவர்கள் பல்வித கோணங்களில் ஆராய்ந்து, அதன் நுட்ப கருத்துக்களைச் செய்யுள் ரூபமாக வெளியிட்டுள்ளனர். செய்யுள் ரூபமாக இருப்பதால், அது சாதாரணப்பட்டவர்களுக்கு புரியாது என்பதை மனதில் கொண்டு, அந்த செய்யுள்களுக்கு விளக்கவுரை எழுதி, அனைவரும் அதை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் இந்த 'உரை' எழுதும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

சப்த ரிஷிகளும், பதினெண் சித்தர்களும் தமக்கு தெரிந்த வண்ணம் ஜோதிட கருத்துக்களைச் செய்யுள் ரூபமாக தங்களது ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துள்ளனர். அவற்றுள் ஒன்றுதான் இந்த புலிப்பாணி ஜோதிடம்! புலிப்பாணி முனிவரது கருத்துக்கள் மிகவும் நுட்பம் வாய்ந்தவை. அகஸ்தியரின் கருத்துக்கு ஈடானவை. எனவே, அவரது பாக்களுக்கு பதவுரை எழுதி, விளக்கம் தந்துள்ளேன். இதில், எனது 20 வருட ஜோதிட ஆராய்ச்சியில் கண்ட உண்மைகளையும் விளக்கவுரையில் அவ்வப்போது கொடுத்துள்ளேன். வாசகர்கள் அனைவரும் இதை மிகவும் நுட்பமாக கருத் தூன்றிப் படித்து, ஜோதிட கலை வளர்ச்சிக்கு அரும்பாடு படவேண்டுமென விரும்புகிறேன். இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த, திரு. இந்து பதிப்பகத்தார்க்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்!

நன்றி!

தங்கள் அன்புள்ள
பிரகஸ்பதி

உள்ளடக்கம்

1.	பாலகிரக தோஷ நட்சத்திர பாத பலன்	5
2.	நட்சத்திர பால கிரக தோஷ பலன் (கிழமை மூலம்)	12
3.	நவக் கோட்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் வகையறா.	13
4.	லக்கன பலன்கள்	17
5.	துவாதச பாவங்களின் காரகத்துவம்	24
6.	நவக் கோட்களின் லக்ன பலன்கள்	29
7.	துவாதச பாவங்களில் சூரியன் நின்ற பலன்	31
8.	துவாதச பாவங்களில் சந்திரன் நின்ற பலன்	34
9.	துவாதச பாவங்களில் செவ்வாய் நின்ற பலன்	36
10.	துவாதச பாவங்களில் புதன் நின்ற பலன்	39
11.	துவாதச பாவங்களில் குரு நின்ற பலன்	41
12.	துவாதச பாவங்களில் சுக்கிரன் நின்ற பலன்	43
13.	துவாதச பாவங்களில் சனி நின்ற பலன்	46
14.	துவாதச பாவங்களில் ராகு நின்ற பலன்	48
15.	துவாதச பாவங்களில் கேது நின்ற பலன்	51
16.	சூரியன் நிலைமை	53
17.	சந்திரன் நிலைமை	54
18.	செவ்வாய் நிலைமை	55
19.	வியாழன் நிலைமை	56
20.	சுக்கிரன் நிலைமை	57
21.	சனி நிலைமை	58
22.	குளிகன் நிலைமை	59
23.	செவ்வாய் தோஷம்	61
24.	நவக்கோட்கள் உச்சம் பெற்ற பலன்	62
25.	நீச்சக் கோட்களின் பலாபலன்கள்	65
26.	அரிஷ்ட தோஷம்	68
27.	சர, ஸ்திர, உபய லக்ன பலன்கள்	69
28.	அட்டமன் நிலைமை	70
29.	பிதுரு கண்டம்	74
30.	யோகக் காண்டம்	76
31.	இராஜயோகம்	86
32.	மகா இராஜயோகம்	88
33.	தரித்திர யோகம்	100
34.	ஆயுள் பாவம்	124
35.	தனயோகம்	128
36.	கோசார பலன்கள்	148
37.	திசா புத்திப் பலன்கள்	154

★ ★ ★

1. பாலகிரக தோஷ நட்சத்திர பாத பலன்

கோனென்ற அசுபதியின் முதற் காலப்பா
குணமாகு மொன்பதுநாள் தோஷஞ்சொல்லு
மானென்ற பின்சுகமே உண்டாம் பாரு
மற்ற விரண்டாங்காலே மரணமாகும்
தானென்ற மூன்றாங்கால் பதினைந் தாகும்
தயவான நாட்கழிந்தே சுகமெய்தும்
வானென்ற நாலாங்கால் இரணஞ் செய்யும்
வளமான புலிப்பாணி பாடினேனே. 1

பொருள் :- அசுபதி முதற் பாதத்தில் பிறந்த குழவிக்கு முதல் ஒன்பது நாள் தோஷமாம்; பின் சுகமாகும்! இரண்டாம் பாதத்தில் பிறந்த குழந்தை உடனே மரணமடையும்; மூன்றாம் பாதத்தில் பிறந்த குழவிக்குப் பதினைந்து நாள்வரை தோஷம்; பின் சுகமாகும். நாலாங் காலில் பிறந்தாலோ இரண வியாதியும், பீடையும் உண்டாம்; இதுவன்றோ புலிப்பாணி கூற்று!

விளக்கம் :- ஒரு குழந்தை பிறந்தவுடன், அதன் ஊழ்வினைப் பயன் காரணமாக பல பாலகிரக தோஷங்கள் உண்டாகின்றன. அசுபதி 1-ம் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு முதல் 9 நாள் வரை தோஷமென்பது அந்த பாதத்தின் பலனாகும். மற்றபடி, இலக்கினத்தை சுபர்கள் பார்த்தாலோ (அ) இலக்கினாதிபதி வலுத்திருந்தாலோ, இந்த தோஷம் விலகிவிடும். அசுபதி 2-ம் பாதத்தில் பிறந்த குழவி உடனே மரணமடையுமென்பது, சாஸ்திர ரீதியான பாத பலனாகும். இந்தக் கூற்று உண்மையாக வேண்டுமென்றால், நவக்கோட்களும் பலவீனமடைய வேண்டும். எனவே, நட்சத்திரத்தை வைத்து ஸ்திரமான பலன் கூறக் கூடாது.

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு
பண்புடனே பரணிநாள் முதற்கால்மூன்று
தேடினே னிரண்டாங்கால் நாளேயே ழாகும்
தெரிந்தபின்பு சுகமேவும் பயமேயில்லை
கூடினேன் மூன்றுடனே நாலாம் பாதம்
கொடுத்திடுமே சுகமதுவும் பதினைந்தின்மேல்
நாடினேன் கோள்கள் நிலையதுவும் பார்த்துச்
சகலவிதி பாலர்க்குச் சாற்றுவாயே! 2

பொருள் :- பரணி முதல் பாதத்தில் பிறந்த குழவிக்கு முதல் மூன்று நாட்கள் வரையும், பரணி 2ஆம் பாதத்தில் பிறந்த குழவிக்கு முதல் ஏழு நாட்கள் வரையும் தோஷமுண்டாகும். இந்நாட்கள் கழிந்தவுடன், குழந்தை நல்ல சுகத்தை அடையும். பரணி 3,4ஆம் பாதங்களின் பிறந்த குழவி 15 நாட்கள் கழிந்தவுடன், தோஷம் விலகி நல்ல சுகத்தை அனுபவிக்குமாம் என்பது புலிப்பாணி தரும் விளக்கமாகும். மேலும் மற்ற கோட்கள் நிலை அறிந்து சரியான பலன் கூற வேண்டுமென முனிவர் கூறுகிறார்.

என்னவே கார்த்திகையின் முதற் காலானால்
எளிதில்லா ஒன்பதாம்நாள் தோஷந்தீரும்
பன்னவே யிரண்டாங்கால் பதமே யாகும்
பதமான மூன்றாங்கால் பதினைந்தாகும்
அன்னவே நாலாங்கால் நாற்பத் தெட்டு
அன்புடனே சென்றபின்பு சுகமேயாகும்
இன்னவே ரோகணியில் பிறந்தால் பாலன்
இனியில்லா மாமனுக்கு மரணமாமே! 3

பொருள் :- கார்த்திகை முதல் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 9 நாட்கள் வரை நோய் பீடைகள் தோன்றி, பின்பு குணமாகும். கார்த்திகை 2ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்குத் தோஷமில்லை. கார்த்திகை மூன்றாம் பாதத்தில் பிறந்த சிசுவுககு முதல் 15 நாட்கள் வரை பல்வித பீடைகள் தோன்றி, பின்பு குணமாகும். கார்த்திகை 4ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 48 நாட்கள் வரை பல்வித பிணிகள் வந்து தாக்கும். பின்பு, குணமாகும். ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்த பாலனுக்கு மாமன் முகம் பாராதபடி, அந்த மாமனை மரணமடைய செய்யுமாம்!

ஆமெதான் ரோகணியின் முதற்கால் பத்து
அன்பான ரெண்டாங்கால் பதினெட்டாகும்
போமேதான் மூன்றாங்கால் எண்ணான் காகும்
புனிதமுள்ள நாலாங்கால் எண்பத்திரண்டு
தாமேதானின் னாட்கள் கழிந்த பின்பு
தரணிதனில் சுகமாகுந் தோஷமில்லை
வாமேதான் போகருட கடாக்ஷத் தாலே
வளமான புலிப்பாணி பாடினேனே. 4

பொருள் :- ரோகணி 1ஆம் பாதத்தில் பிறந்த குழவிக்கு முதல் 10 நாட்கள் வரையும், ரோகணி 2ஆம் பாதத்தில் பிறந்த குழவிக்கு முதல் 18 நாட்கள் வரையும், ரோகணி 3ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 32 நாட்கள் வரையும், ரோகணி 4ஆம் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு முதல் 82 நாட்கள் வரையும் தோஷமுண்டாகும். இந்த நாட்கள் கழிந்தபின்பு, அந்தக் குழந்தை நல்ல சுகத்தை அடைந்து சுகஜீவியாக வாழும் என்பதாம்!

முத்தான மான்றலையின் முதற் காலப்பா
முப்பது நாளானபின் தீருந்தோஷம்
சித்தான விரண்டாங் கா்லிருப்பத்தெட்டு
திறமான மூன்றுக்குப் பதினைந்தாகும்
பத்தான நாலாங்கால் முப்பத்தைந்து
பண்பான நாட்கள் வரை பீடையென்று
பெத்தான நவக்கிரக மீன்கால் தோஷம்
பேதமில்லை யென்னூலைப் பிரித்துப்பாரே 5

பொருள் :- முத்து போல் அழகான மான் தலையை சின்னமாக கொண்டுள்ள மிருக சீரிடம் நட்சத்திரம் முதல் காலில் பிறந்தவர்களுக்கு, முதல் முப்பது நாட்கள் வரை தோஷமுண்டாகி, பின்பு விலகும். மிருக சீரிடம் 2ஆம் காலில் பிறந்த சிசுவுக்கு முதல் 28 நாட்கள் வரை தோஷமுண்டாம்; ஸ்திரமான 3ஆம் காலில் பிறந்த சிசுவுக்கு முதல் 15

நாட்கள் வரை பீடைகள் உண்டாகி, பின்பு விலகும். நாலாம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 35 நாட்கள் வரை பல்வித பீடை, நோய்கள் உண்டாகி, பின்பு குணமாகும் என்பது புலிப்பாணி கூற்று!

ஆமெ தானின்ன மொன்று சொல்லக்கேளு
அடைவான ஆதிரைநாள் முதற்காலொன்பான்
தாமேதா னிரண்டாங்கால் மரணமாகும்
தயவாக மூன்றாங்கால்நாள் தான்பத்து
வாமேதான் நாலாங்கா லிருபத் தைந்து
வளமான புனர்பூச முதற்நாலேழு
போமே தானிரண்டாங்கால் நாள்தான் பத்து
பொங்கமுடன் மூன்றாங்கால் பதினெட்டாமே. 6

பொருள் :- திருவாதிரை முதல் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு முதல் 9 நாட்கள் வரை தோஷமுண்டு. திருவாதிரை இரண்டாம் பாதத்தில் பிறந்த சிசு உடனே மரணமடையுமாம். திருவாதிரை 3ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 10 நாட்கள் வரை தோஷமுண்டு. திருவாதிரை 4ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 25 நாட்கள் வரை தோஷமுண்டு. புனர்பூசம் முதல் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு, முதல் 7 நாட்கள் வரை தோஷமுண்டு. புனர்பூசம் இரண்டாம் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு முதல் 10 நாட்கள் வரை தோஷமுண்டு. புனர்பூசம் 3ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 18 நாட்கள் வரை தோஷமுண்டு. மேற்கூறிய கால கட்டம் முடிந்தவுடன், தோஷம் நீங்கி, பிறந்த குழந்தை சுகமாக இருக்குமென்பதாம்!

ஆமெப்பா நாலாங்கால் மரணஞ் செய்யும்
அடைவான பூசமப்பா முதற்நாலேழு
சோமப்பா யிரண்டாங்கால் பனிரெண்டின் மேல்
சுகங் கொடுக்கு மூன்றாங்கால் மரணமாகும்
காமப்பா நாலாங்கா லிருபத் தேழில்
கனிவான வாயிலியம் முதற்காலொன்பான்
தாமப்பா விரண்டாங்கா லிருப தோடு
தன்தமையன் மரணமாவன் தரணிமீதே 7

பொருள் :- புனர்பூசம் 4ஆம் பாதத்தில் பிறந்த குழந்தை மரணமடையும். பூசம் முதலாம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 28 நாட்கள் வரை தோஷமுண்டு. பூசம் இரண்டாம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 12 நாட்கள் வரை தோஷமுண்டு. பின்பு, சுகமாகும். மூன்றாம் பாதத்தில் பிறந்த சிசு மரணமடைந்துவிடும். பூசம் 4ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 27 நாட்களுக்குள், அதன் சகோதரன் மரணமடைவான். அதுபோல், ஆயில்யம் 1ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு. முதல் 9 நாளிலும், ஆயில்யம் 2ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 20 நாளிலும் அதன் சகோதரன் மரணமடைவான் என்பதாம்!

மீதான மூன்றாங்கால் மூன்றே மாதம்
முன்னுரைத்த தோஷமொடு தகப்பன்பீடை
தானான நாலாங்கால் முப்பத் தொன்பான்
தயவான மகமுதற்கால் மரணஞ் செய்யும்
வானான ரெண்டாங்கா றனக்கு தோஷம்
வகையான மாமனலபி முடியும்பாரு

தேனான மூன்றாங்கா லொன்பதுடன் பெற்ற
தேன்மொழியாள் மாதாவும் மரணமாமே. 8

பொருள் :- ஆயில்யம் 3ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு, மூன்று மாதத்திற்குள் அதன் சகோதரன் மரணமடைவதோடு, அதன் தந்தைக்கும் பீடையுண்டாகும். ஆயில்யம் 4ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு, முதல் 39 நாட்களிலும், மகம் 1ஆம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு, பிறந்த உடனேயும் மரணமுண்டாகும். மகம் 2ஆம் காலில் பிறந்த சிசுவுக்கு தோஷமுண்டா வதுடன், அதன் மாமனுக்கும் மரண முண்டாகும். மகம் 3ஆம் காலில் பிறந்த சிசுவின் தாய், குழவி பிறந்த 9 நாட்களுக்குள் மரணமடைந்து விடுவாள் என்பதாம்!

நானே தானின்னமொன்று நாலாம் பாதாம்
நயமாகும் நாலைந்து நாட்குப்பின்னே
வீணே தான் பூரமுதல் காலுதித்தோன்
வீரமில்லை சாவாகும் கிரகதோஷம்
கூனேதான் பூரமதி லிரண்டாம் பாதம்
குணமில்லை யிருபதுடனைந்து நாளும்
தேனான மூன்றினிலே தெரிய வந்தோன்
தோஷமுண்டு யிருப்பாரோ டாறுநாளே 9

பொருள் :- மகம் 4ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 20 நாட்கள் வரை நோய், பீடைகள் உண்டாகி, பின்பு குணமடையும். பூரம் 1ம் பாதத்தில் பிறந்த குழந்தைக்குச் சுகமில்லை; மரணமடைந்துவிடும். பூரம் இரண்டாம் பாதத்தில் பிறந்த குழவிக்கு முதல் 25 நாட்கள் வரை கெண்டாதி பீடைகள் தோன்றி, பின்பு சுகமாகும். பூரம் 3ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு தோஷமுண்டு. இப்புவியில் 6 நாட்கள் வரையிருந்து மரணமடையும்.

ஆறான நாலாங் காலிருபத் தொன்பான்
அடைவான உத்திரந்தான் முதற்காலுக்கு
வீறான தந்தை தாய் மரணமாகும்
விதமான ரெண்டாங்கால் முப்பதாகும்
தீரான மூன்றாங் காலென்பத் திரண்டாம்
திறமான நாலாங்கால் மரணமாகும்
கூரான அஸ்தமுதற் கால் தானெட்டு
குணமாகு மிரண்டாங்கால் பதினைந்தாமே 10

பொருள் :- பூரம் 4ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு முதல் 29 நாட்களிலும், உத்திரம் 1ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு பிறந்தவுடனேயும், அதன் தாய் தந்தையர் மரணமடைந்து விடுவர். உத்திரம் 2ம் காலில் பிறந்த சிசுவுக்கு ஒரு மாதத்திற்குள் தோஷ முண்டாகும். உத்திரம் 3ம் பாதத்தில் பிறந்த சிசு, எண்பத்திரண்டு நாட்களிலும், உத்திரம் 4ம் பாதத்தில் பிறந்த சிசு பிறந்தவுடனேயும் மரணமடையும். அஸ்தம் முதற் காலில் பிறந்த சிசு எட்டு நாளிலும், இரண்டாம் காலில் பிறந்த சிசு பதினைந்து நாட்களிலும், தோஷம் நீங்கி, சுக ஜீவியாய் வாழும் என்பதாம்.

எட்டான மூன்றாங்கா லிருபத் தெட்டே
எளிதான நாலாங்கா லெண்பத்திரண்டு
நெட்டான சித்திரை முன்பாட்டன் சாவாம்
நேரான ரெண்டாங்கால் பதினைந்தாகும்

கிட்டான மூன்றுக்கு மரணம் நாலாம்
கெதியான நாற்பதுநாள் பீடைசுவாதி
குட்டான முன்னீராறு பின் மரணமாகும்
குணமான மூன்றாங்கா லெண்பத்தெட்டே 11

பொருள் :- *அஸ்தம் 3ம் காலில் பிறந்த சிசுவுக்கு 28 நாட்கள் வரையும், அஸ்தம் 4ம் காலில் பிறந்த சிசுவுக்கு 82 நாட்கள் வரையும் தோஷமுண்டாகி, பின்பு குணமாகும். சித்திரை 1ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு தோஷமில்லை. ஆனால், அதன் முன் பாட்டன் இறந்து விடுவார். சித்திரை 2ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு 15 நாட்கள் வரை தோஷமுண்டு. சித்திரை 3ம் பாதத்தில் பிறந்த சிசு மரண மடைந்துவிடும். சித்திரை 4ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு, 40 நாட்கள் வரை பீடைகள் உண்டாகி, பின்பு குணமாகும். சுவாதி முதல் இரண்டு பாதங்களில் பிறந்த சிசுவிற்கு, 12 நாட்களில் மரணமுண்டாகும். சுவாதி 3ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு முதல் 82 நாட்கள் வரை நோய் பீடைகள் உண்டாகி, பின்பு சுகமாகும் என்பதாம்.*

எட்டான நாலாங்கால் பன்னிரண்டு நாளாம்
எளிதான விசாகமுதற் காலொன்பான்
கட்டான விரண்டாங்கால் நாள்தான் மூன்றே
தயவான மூன்றாங்கால் நாற்பதாகும்
பட்டான நாலாங்கால் பாட்டனுடன் தாயும்
பாங்கானசாவுடனே அனுஷமுதற் தகப்பன்சாவாம்
சிட்டான விரண்டாங் காலிருப தப்பா
செயலான மூன்றுக்கே மாமன்சாவாம் 12

பொருள் :- *சுவாதி 4ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு 12 நாள் வரை ஆயுள் பலமுண்டு. விசாகம் 1ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு 9நாள் ஆயுள் பலம் உண்டு. விசாகம் 2ம் காலில் பிறந்த சிசுவிற்கு 3 நாளும், 3ம் காலில் பிறந்த சிசுவிற்கு 40 நாளும், ஆயுள் பலம் உண்டாம். அதன் பின் மரண மடையுமாம். விசாகம் 4ம் காலில் பிறந்த சிசுவின் பாட்டனும், தாயும் மரணமடைவர். அனுஷம் 1ம் பாதத்தில் பிறந்த சிசுவின் பிதா மரண மடைவார் என்பதாம்.*

என்னவே நாலாங்கால் பாட்டனுடன் தாயும்
எழிலாக துஞ்சுவர்கள் கேட்டை முதற்சாவாம்
நன்னவே விரண்டாங்கா லிருபதப்பா
நாயகனே மூன்றாங்கால் முப்பத் தொன்று
துன்னவே தாய்மரணம் நாலாம்பாதம்
துஞ்சிடுவன் மூலமுதற் றகப்பன் சாவாம்
அன்னவே ரெண்டாங்கா லெண்பதுநாள் பீடை
அவன்மாதா மாமனுமே மூன்றாங்கால் சாவே 13

பொருள் :- *அனுசம் 4ம் காலில் பிறந்த சிசுவின் பாட்டனும், தாயும் மரணமடைவர். கேட்டை 1ம் பாதத்தில் பிறந்த சிசு மரணமடையும். கேட்டை 2ம் பாதத்தில் பிறந்த சிசு, இருபது நாட்கள் உயிருடன் இருந்து, மரணமடையும். கேட்டை 3ம் பாதத்தில் பிறந்த சிசு முப்பத்தொரு நாட்களில் மரணமடையும். கேட்டை 4ம் பாதத்தில் பிறந்த சிசுவின் தாயும் மரண மடைந்து விடும். மூலம் முதல் காலில் பிறந்த சிசுவின் பிதாவுக்கு மாரகம் உண்டாகும். மூலம் 2ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு 80 நாட்கள் வரை*

கெண்டாதி பீடைகள் தோன்றி மரணமடையும். கிரக பலம் இருந்தால், இந்த தோஷம் விலகி பிழைத்துவிடும். மூலம் 3ம் பாதத்தில் பிறந்த சிசுவின் மாதாவும், மாமனும் மரணமடைந்து விடுவார்கள் என்பதாம்.

சித்தான நாலாங்கால் பாட்டனுடன் தாயும்
செயலான பூராடம் முன்கா லொன்பான்
பத்தான விரண்டாங்கால் பாலகனே மரணம்
பண்பான மூன்றாங்கால் தகப்பனுடன் சாவாம்
வித்தான நாலாங்கால் மரணம் மாமன்
விதமான உத்திராடம் முதற் காலேழும்
நித்தான ரெண்டாங்கா லிருபதுநாள் பீடை
நேரான மூன்றுக்கே பிதா மரணமாமே 14

பொருள் :- மூலம் 4ம் பாதத்தில் பிறந்த சிசுவின் பாட்டனுடன், தாயும் மரணமடைவர். பூராடம் முதற்காலில் பிறந்த சிசு 9 நாளில் உயிர்விடும். பூராடம் 2ம் காலில் பிறந்த சிசுவும் மரணமடைந்து விடும். பூராடம் 3ம் காலில் பிறந்த சிசுவும், பிதாவும் மரணமடைவர். பூராடம் 4ம் காலில் பிறந்த குழவியின் மாமன் மரணமடைவார். உத்திராடம் முதற்காலில் பிறந்த சிசுவிற்கு 7 நாட்கள் வரையும், உத்திராடம் 2ம் காலில் பிறந்த சிசுவிற்கு 20 நாட்கள் வரையும் கெண்டாதி பீடைகள் உண்டாகும். அதற்குப் பின், கிரக பலம் இருந்தால் உயிருடன் இருக்கும்; இல்லையெனில் மரணமடைந்து விடும். உத்திராடம் 3ம் காலில் பிறந்த சிசுவின் பிதாவும் மரணமடைவார் என்பதாம்.

பேச்சப்பா நாலாங்கா லிருபதுநாள் பீடை
பேதமில்லை ஓணமுதற் பதினொன்றப்பா
ஆச்சப்பா ரெண்டாங்கால் பத்து நாளாகும்
அடைவான மூன்றுக்கே எட்டுநாள் தோஷம்
வீச்சப்பா நாலாங்கால் மரணஞ் செய்யும்
விதமான அவிட்டமுதல் ஒன்பதாம் நாளாம்
நீச்சப்பா ரெண்டாங்கால் பதினைந்தாகும்
நிசமான மூன்றுக்கு முப்பத்திரண்டே 15

பொருள் :- உத்திராடம் நாலாம் காலில் பிறந்த சிசுவிற்கு முதல் இருபது நாள் வரையும், திருவோணம் முதற் காலில் பிறந்த குழந்தைக்கு 11 நாட்கள் வரையும், திருவோணம் இரண்டாம் காலில் பிறந்த சிசுவிற்கு 10 நாட்கள் வரையும், திருவோணம் 3ம் காலில் பிறந்த குழவிக்கு 8 நாட்கள் வரையும் தோஷமுண்டு. அதற்குப் பிறகு கிரக பலம் இருந்தால் பிழைத்திருக்கும். இல்லையெனில் மரணமடையும். திருவோணம் 4ம் காலில் பிறந்த சிசு, பிறந்த சில நாட்களில் உயிர்விடும். அவிட்டம் முதற் காலில் பிறந்த சிசுவிற்கு முதல் 9 நாட்கள் வரையும், அவிட்டம் 2ம் காலில் பிறந்த சிசுவிற்கு முதல் 15 நாட்கள் வரையும், அவிட்டம் 3ம் காலில் பிறந்த சிசுவிற்கு முதல் 32 நாட்கள் வரையும் தோஷமுண்டாகும். பின்பு கிரக பலத்தை பொறுத்து பிழைத்திருக்கும் (அ) மரணமடையும்.

வண்டான நாலாங்கால் பிதா மரணமாகும்
வளமான சதயமுதல் மாமன் சாவாம்
இரண்டான கால்களுககே பத்துநாள் பீடை
இதமான மூன்றாங்கால் நாள்தான் பத்து

திண்டான நாலாங்கால் நாள்தானைந்து
திறமான பூரட்டாதி முதற்கால் மாமன்
விண்டான ரெண்டாங்கால் பதினாறாகும்
விதமான மூன்றாங்கா லெண்பத் தொன்றே 16

பொருள் :- அவிட்டம் நாலாம் காலில் பிறந்த சிசுவின் பிதா மரண மடைவார். சதயம் முதல் பாதத்தில் பிறந்த சிசுவின் மாமனுக்கு அரிஷ்ட முண்டாகும். சதயம் இரண்டாங்கால், மூன்றாங்கால் பிறந்த குழந்தைகளுக்கு முதல் 10 நாட்கள் வரை நோய், பீடைகள் உண்டாகும். சதயம் 4ம் காலில் பிறந்த சிசுவிற்கு முதல் 5 நாள் வரை தோஷமுண்டு. பூரட்டாதி 1ம் பாதத்தில் பிறந்த சிசுவின் மாமனுக்கு தோஷமுண்டாகும். பூரட்டாதி 2ம் காலில் பிறந்த சிசுவிற்கு முதற் 16 நாட்கள் வரை தோஷம். பூரட்டாதி 3ம் பாதத்தில் பிறந்த சிசுவிற்கு முதல் 81 நாட்கள் வரை தோஷமுண்டு என்பதாம். இந்த காலம் கழிந்தவுடன், குழந்தையின் பீடை விலகும் என அறிக.

ஒன்றான நாலுக்கே பீடையது நாற்பத் தொன்றாம்
உத்தமனே உத்திரட்டாதி முதற்கேளு
நன்றான ரெண்டுக்கே பதினெட்டு நாளாம்
நலமான மூன்றுக்கே யேழாம் பாரு
குன்றான நாலாங்கா லிருபத்தெட்டும்
குணமான ரேவதியு முதற்கால சாவு
அன்றான ரெண்டாங்கால் பதினொன்றப்பா
அப்பனே இவை கழிந்தால் பீடை போமே 17

பொருள் :- பூரட்டாதி 4ம் காலில் பிறந்த சிசுவுக்கு 41 நாட்கள் வரை கெண்டாதி பீடைகள் தோன்றும். உத்திரட்டாதி 1ம் பாதத்தில் பிறந்தால் நல்லது; உத்தமம். உத்திரட்டாதி 2ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு 18 நாட்கள் வரை தோஷமுண்டாகும். உத்திரட்டாதி 3ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு 7 நாட்கள் வரை தோஷமுண்டாகும். உத்திரட்டாதி 4ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்கு 28 நாட்கள் வரை தோஷமுண்டாகும். ரேவதி 1ம் பாதத்தில் பிறந்த சிசு மரணமடையும். ரேவதி 2ம் காலில் பிறந்த சிசுவுக்கு பதினொரு நாட்கள் வரை பீடைகள் தோன்றும். இக்காலம் கழிந்தவுடன், தோஷம் நீங்கி, குழந்தை சுக ஜீவியாக வாழும் என்பதாம்.

போமப்பா ரேவதியின் மூன்றாம் பாதம்
பொங்கி வந்த தகப்பனுமே மரணமாவான்
வாமப்பா பீடை பதினெட்டு நாளாம்
வளமான ரேவதியின் நாலாம் பாதாம்
போமப்பா குழவியது மரணமாகும்
கொடுமை செய்யும் நாட்களிது கழிந்து போனால்

பொருள் :- ரேவதி 3ம் பாதத்தில் பிறந்த சிசுவின் பிதா மரணமடைவார். ரேவதி 4ம் பாதத்தில் பிறந்த சிசுவுக்குக் கெண்டாதி பீடைகள் 18 நாட்கள் வரை தோன்றி பின்பு மரணமடையும் என்பதாம்.

குறிப்பு :- இப்பாடல்களில் கூறிய விஷயங்கள் யாவும் அவரவர் ஜென்ம நட்சத்திர பாத சாரங்களில் ஏற்படும் தோஷங்களாகும். இவை, சாஸ்திர ரீதியான விஷயங்கள்; இவற்றை பாடலில் உள்ளது போல் அனுசரித்துப் பலன் கூறிவிடக் கூடாது. பலன் முழுவதும் தவறிப் போய்விடும்.

குழந்தையின் பாலாரிஷ்டம் குறித்து பல விதமாக ஜோதிட சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவையனைத்தையும் அனுசரித்து நடுவு நிலைமையாய், குழந்தையின் பாலாரிஷ்டம் குறித்து பேச வேண்டுமென்பது குறிப்பிடத் தக்கது.

உதாரணமாக, இலக்கனத்தில் பாவிகள் சூழ்ந்து, இலக்கினாதிபதி நீசமடைந்து, குருவும் பலவீனமடைந்து அஷ்டமஸ்தானாதிபதியும், சனியும், சூரியனும் பலவீனமடைந்திருந்தால், அந்தக் குழவி ஜெனித்தவுடன் மரண மடைந்து விடும். ஆனால், ஷெஸ்தானாதிபதிகள் வலுவாக இருந்தால், அந்தக் குழவி தீர்க்காயுசுவாய் சலக வித சுகபோகங்களுடன் வாழும். இந்தக் குழந்தைக்கு ஷி பாடல்களில் கூறியபடி நட்சத்திர பாததோஷம் இருந்தாலும் பாதிப்பு ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, கோள் நிலை ஆய்ந்து பலன் கூறுவதே சரியான கணிப்பு என்பதை உணரவும்.

2. நட்சத்திர பால கிரகதோஷ பலன் [கிழமை மூலம்]

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு
பரமனுட பதியேகு நாளே தென்றால்
வாடினேன் அருக்கநாள் பரணியாகா
வளமான திங்கள் சித்திரை யாகா
சாடினேன் செவ்வாய்க் குத்திராடஞ்
சாந்தமுடன் புதனுக்கு அவிட்டமாகா
கூடினேன் குருநாள்தான் கேட்டையாகா
கொற்றவனே புகர்க்கு பூராடம் தீதே

பொருள் :- சிவலோக பதவி அடையும் நாள் எதுவென்பதை முனிவர் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார். அதாவது சூரியனுடைய நாளான ஞாயிற்றுக் கிழமையில் பரணி நட்சத்திரம் வந்தால் குழந்தைக்கு தோஷம் உண்டாகுமாம். அதுபோல, திங்கள் கிழமையில் சித்திரை வருவது நல்லதல்ல. செவ்வாய்க்கு உத்திராட நட்சத்திரமும், சாந்தகுணமுள்ள புதனுக்கு அவிட்டம் நட்சத்திரமும் ஆகாது. குருவின் நாளான வியாழனுக்கு கேட்டை நட்சத்திரம் பகையாம். சுக்கிரனின் நாளான வெள்ளிக்கு பூராடம் பகையாம்.

தீதான சனிநாள் ரேவதியுமாகா
தீங்குவரு மின்னாளில் ஜெனனமானால்
சூதான யெமனுக்கே அறுதியாவார்
சொல்லிவிட்டேன் நுணுக்கமுடனேசல் தூது
வாதான சோதிடரே யென்னூல் பாரு
வளமையுடன் கோள்நிலையும் குணமும் பாரு
மாதான போகருட கடாக்ஷத்தாலே
மனமுவந்து புலிப்பாணி பாடி னேனே 2

பொருள் :- தீமையே செய்யும் குணமுடைய சனீஸ்வரன் நாளான சனிக்கு ரேவதி நட்சத்திரம் ஆகாது. இவ்வாறு தீது தரும் நாட்களில் பிறந்த சிசு சூழ்ச்சி மிகுந்த எமன் வலையில் விழுந்து எமலோகம் சென்றுவிடும். வாதம் செய்யும் ஜோதிடர்களே என்னூலை பார்த்து, கோள் நிலை ஆய்ந்து அவற்றின் வலிமையை நிதானித்து பலன் கூறுங்கள். இந்த சுலோகம், நல்ல

போகர் சொன்ன வாக்கின்படியே, மனமுவந்து புலிப்பாணி பாடினேன். பலன் தவறாது மகனே!

விளக்கம் :- சூரியனுக்கு பரணியும், சந்திரனுக்கு சித்திரையும், செவ்வாய்க்கு உத்திராடமும், புதனுக்கு அவிட்டமும், வியாழனுக்கு கேட்டையும், வெள்ளிக்கு பூராடமும், சனிக்கு ரேவதியும் பகை யாகும். எனவே, இந்த தினங்களில் ஷி நட்சத்திரங்கள் வந்தால், அந்த நாள் மிகவும் கெட்ட நாளாகக் கருதப்படுகிறது. இந்த தினங்களில் எந்தவித சுபகாரியங் களும் செய்யக் கூடாது; செய்தால், அந்தச் சுப காரியங்கள் யாவும் நாசமாய் போய்விடும். அதுபோல், இந்தக் கெட்ட நாட்களில் குழந்தை பிறந்தால், அதற்கு பல்வித பீடைகள், நோய்கள் உண்டாகி, எமலோகம் சென்று விடும் என்பது முனிவர் கருத்து. இருப்பினும் ஷி குழந்தையின் ஜாதகத்தில் நவக் கோட்கள் பலமாக இருந்து, ஆயுள் ஸ்தானமும் பலமாக இருந்தால், அந்தக் குழந்தை தீர்க்காயுசுவாய் பல்வித சுகபோகங்களுடன் வாழும் என்பது அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மையென்பதை நினைவில் கொள்க.

3. நவக் கோட்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் வகையறா.

சூரியன்

தானென்ற சூரியனுக் காட்சி சிங்கத்
தன்மையுள்ள மேஷமது உச்சமாகும்
தானென்ற துலாமதுவும் நீசமாகும்
தனியான தனுசுடனே மீனம் நட்பாகும்
மானென்ற மற்றேழு ராசிநாதனும்
வரும் பகையா மென்றுனக்கு சாற்றினோம் யாம்
கோனென்ற போகருட கடாக்ஷத்தாலே
குணமான புலிப்பாணி குறித்திட்டேனே!

பொருள் :- சூரியனுக்கு சிம்மம் ஆட்சி வீடாகும். மேஷம் உச்ச வீடாகும். துலாம் நீச வீடாகும். தனுசுவும், மீனமும் நட்பு வீடுகளாம். மற்ற ஏழு இராசிகளும் சூரியனுக்கு பகையாகும். முன் சொன்ன போகர் நூலை பார்த்து புலிப்பாணி இவ்வாறு கூறுகிறார்.

குறிப்பு :- சூரியனுக்கு கும்பம் நட்பு வீடு என்பது சிலர் கருத்து. எனது ஆய்வுப்படியும், கும்பம் சூரியனுக்கு நட்பு வீடு தான். எனவே, இதை அனுசரித்துப் பலன் கூறவும்.

சந்திரன்

பாரப்பா சந்திரனுக்குக் காட்சி நண்டு
பாங்கான விடையதுவே உச்சமாகும்
வீரப்பா விருச்சிகமும் நீசமாகும்
விருது பெற்ற தனு மீனம் கன்னி நட்பு
ஆரப்பா அறிவார்கள் மற்றாறு ராசி
அருளில்லாப் பகையதுமே யாகும்பாரு
கூறப்பா கிரகம் நின்ற நிலையைப் பார்த்து
குறிப்பறிந்து புலிப்பாணி கூறினேனே!

பொருள் :- சந்திரனுக்கு நண்டு இராசியான கடகம் ஆட்சியாகும். சிறப்பு பொருந்திய ரிசப இராசி சந்திரனுக்கு உச்சமாகும். வீரம் பொருந்திய விருச்சிகம் நீசமாகும். தனுசு, மீனம், கன்னி இவை மூன்றும் சந்திரனுக்கு நட்பு வீடுகளாகும். மற்ற ஆறு இராசிகளும் சந்திரனுக்கு பகை வீடுகளாகும். கிரகங்கள் நிற்கும் ஸ்தான பலமறிந்து பலாபலன் கூற வேண்டுமென முனிவர் கூறுகிறார்.

குறிப்பு :- மிதுனம் சந்திரனுக்கு நட்பு வீடு என்பது சிலர் கருத்து. என் கருத்தும் அதுதான். இதை அனுசரித்துப் பலன் கூறவும்.

செவ்வாய்

கேளப்பா செவ்வாய்க்கு மேஷம் தேளும்
கெணிதமுட னாட்சியது வாழும் பாரு
நாளப்பா மகர மது உச்சமாகும்
நலமில்லா நீசமது கடகமாகும்
தாளப்பா தனுமீனம் ரிஷபம் கும்பம்
தயங்குகின்ற கோதையுடன் மிதுனம் நட்பாம்
பாளப்பா கோல் சிங்கம் வகையாமென்று
பண்புடனே போகரெனக் குரைத்தார் தானே

பொருள் :- செவ்வாய்க்கு மேஷமும், விருச்சிகமும் ஆட்சி வீடுகளாகும். மகரம் உச்ச வீடாகும். நன்மை தராத நீச வீடு கடகமாகும். தனுசு, மீனம், ரிஷபம், கும்பம், மிதுனம், கன்னி இவை ஆறும் செவ்வாய்க்கு நட்பு வீடுகளாகும். வீரம் பொருந்திய சிங்கமும் துலாமும் செவ்வாய்க்குப் பகை வீடு என போகர் உரைத்ததாக புலிப்பாணி முனிவர் கூறுகிறார்.

குறிப்பு :- ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம் இவை நான்கும் செவ்வாய்க்கு நட்பு வீடுகள் என்றும், தனுசு, மீனம், கும்பம், சிங்கம் இவை நான்கும் செவ்வாய்க்கு பகை வீடுகளென்றும் கூறும் நூல்கள் உள்ளன. இவை அனுபவத்திற்கு ஒத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

புதன்

தானென்ற புதனுக்கு மிதுனமாட்சி
தன்மையுள்ள கன்னியது மாட்சி உச்சம்
மானென்ற மீனமது நீசமாகும்
மனத்தறிவாய் கடகமரி பகையாமென்று
வானென்ற மற்றேழு ராசிநாதனும்
வகையான நட்பென்று வாழ்த்தினோம் யாம்
நானென்ற போகருட கடாக்ஷத்தாலே
நவக்கிரக நிலையறிவாய் நன்மைதானே

பொருள் :- புதனுக்கு மிதுனம் ஆட்சி வீடாகும். கன்னி ஆட்சி, உச்ச வீடாகும். மீனம் நீச வீடாகும். கடகம், சிம்மம் புதனுக்குப் பகை வீடுகள்; மற்ற ஏழு இராசிகளும், புதனுக்கு நட்பு வீடுகள் என புலிப்பாணி, போகர் நூலைப் பார்த்துக் கூறுகிறார். 9 கோட்களின் நிலையறிந்து நன்மை, தீமை கூறவேண்டுமென்பது முனிவர் கருத்து.

குறிப்பு :- 'கடக மரி' என்பது கடகம், சிம்ம இராசிகளை குறிப்பிடும். இவையிரண்டும் புதனுக்குப் பகை வீடுகளென முனிவர் கூறுகிறார். ஆனால்.

கடகம், புதனுக்கு நட்பு விடு எனக் கூறும் நூல்கள் உள்ளன. எனவே, சிம்மம் ஒன்றே புதனுக்கு பகை விடாகும். எமது ஆய்வுப்படி, கடகம் புதனுக்கு நட்பு வீடு என்பதைக் கண்டுபிடித்துள்ளேன். எனவே, இதை அனுசரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வியாழன்

ஓமென்ற வியாழனுக்கு ஆட்சி கேளு
உண்மையுடன் தனுமீன மிரண்டேயாகும்
நாமென்ற கற்கடகம் உச்சமாகும்
கனமில்லாத மகரமது நீச்ச விடாகும்
போமென்ற விருச்சிகமும் பகையதாகும்
புகழ்பெற்ற மற்றாறு ராசி நட்பாகும்
நாமென்ற போகருட கடாக்ஷத்தாலே
நயமாக புலிப்பாணி நவின்றிட்டேனே.

பொருள் :- பூரண சுபக் கிரகமான வியாழனுக்கு தனுசுவும், மீனமும் ஆட்சி வீடுகளாம். கற்கடகம் உச்ச விடாகும். மகரம் அதன் நீச்ச விடாகும். மேஷம், விருச்சிகம், இவையிரண்டும் அதன் பகை வீடுகளாகும். புகழ் பெற்ற மற்ற ஆறு இராசிகளும் வியாழனுக்கு நட்பு வீடுகள் என்பது முனிவர் கருத்து.

குறிப்பு :- மற்றாறு இராசிகள் என்பது ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் முதலிய ஆறு இராசிகளைக் குறிப்பிடும்.

சுக்கிரன்

கேளப்பா சுக்கிரனுக் கெருது கோலும்
கெனிதமுட னாட்சியது உச்சம் மீனம்
வாளப்பா கோதையவள் நீச்சமாவள்
வகையில்லா சிங்கமுடன் விருச்சிகந்தான்
ஆளப்பா பகையதுவே யாகும் ஆறும்
அளவில்லா நட்பென்றே யறைந்த வாறு
மாளப்பா போகருட கடாக்ஷத்தாலே
மார்க்கமுடன் புலிப்பாணி யறிவித்தேனே!

பொருள் :- சுக்கிரனுக்கு ரிஷப இராசியும், துலாம் இராசியும் ஆட்சி வீடுகளாகும். மீனம் உச்சமாகும். கன்னி அதன் நீச்ச வீடாகும். சிறப்பில்லா சிம்மமும், விருச்சிகமும் அதற்கு பகை வீடுகளாகும். மற்ற ஆறு இராசிகளும் அதற்கு நட்பு வீடுகள் என்பது புலிப்பாணி கருத்து.

குறிப்பு :- 'எருது கோலும்' என்பது எருதுவை சின்னமாகக் கொண்டுள்ள ரிஷப இராசியை குறிப்பிடும். 'கோல்' என்பது துலாக் கோலை சின்னமாகக் கொண்டுள்ள துலாம் இராசியைக் குறிப்பிடும். இதுபோல், கன்னி இராசியை முனிவர் 'கோதை' எனக் குறிப்பிடுவதைக் காண்க. விருச்சிக இராசியை சுக்கிரவனுக்குப் பகை என முனிவர் கூறுகிறார். இது அனுபவத்துக்கு ஒத்துவரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. விருச்சிகத்தை சுக்கிரவனுக்கு நட்பு வீடாகவும், கற்கடத்தைப் பகையாகவும் கொள்க.

சனி

தேனென்ற சனி தனக்கு மகரம் கும்பம்
தெவிட்டாத ஆட்சியது உச்சம் கோலாம்

மானென்ற மேஷமது நீசம் மற்ற
மற்கடக சிம்மமொடு விருச்சிகந் தான்
ஊனென்ற வீண்பகையாம் மற்றோராறும்
உள்ளபடி நட்பாகு முடவனுக்கே
கோனென்ற குருவருளாம் கடாக்ஷத்தாலே
கொற்றவனே புலிப்பாணி கூறினேனே

பொருள் :- சனிக்கு மகரம், கும்பம் ஆட்சி வீடுகள். துலாம் உச்ச வீடாகும். மேஷம் அவர்க்கு நீச்ச வீடாகும். கடகம், சிம்மம், விருச்சிகம் இவை மூன்றும் அவர்க்கு ஆகாத பகை வீடுகளாம். மற்ற ஐந்து இராசிகளும் அவர்க்குப் பிரியமான நட்பு வீடுகள் என போகர் கூறிய நூலின் வாயிலாக முனிவர் கூறுகிறார்.

ராகு - கேது

பாரப்பா ராகுடனே கேதுவுக்கும்
பாங்கான வீடதுவே கும்பமாட்சி
வீரப்பா விருச்சிகமும் கடகம் உச்சம்
வீருடைய ரிஷபமது நீச்சம் சிம்மம்
காரப்பா பகையாகும் மற்றேழ் நட்பாம்
காண்பதுவும் மூன்று பதினொன்றாம் சொல்லார்
ஆரப்பா போகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி அறிவித்தேனே

பொருள் :- ராகு, கேது என்னும் சாயாக் கோட்களுக்கு ஆட்சி வீடு கும்பம் என்றும், உச்ச வீடு விருச்சிகம், கடகம் என்றும், நீச்ச வீடு ரிஷபம் என்றும், பகை வீடு சிம்மம் என்றும், மற்ற ஏழு வீடுகள் நட்பு என்றும் முனிவர் கூறுகிறார். இவர்கள் 3, 6, 11ம் இராசிகளில் இருந்தால் நற்பலன்களை அளிப்பார்கள் என்று முன்பு கூறிய போகர் நூலின் வாயிலாக புலிப்பாணி தெரிவிக்கிறார்.

விளக்கம் :- ராகு, கேது என்றும் இரண்டு கோட்களுக்குச் சாயா கோட்கள் என்று பெயர். இவர்களது நட்பு, ஆட்சி, உச்சம், பகை குறித்து ஒவ்வொரு முனிவரும் ஒவ்வொரு விதமாகக் கூறுகின்றனர். அதாவது, பல கருத்து பேதங்கள் உள்ளன. எமது ஆய்வின்படி, இவர்களுக்குச் சொந்த வீடுகள் கிடையாது. எனவே, இவர்கள் எந்த வீட்டிலும் ஆட்சி பலம் பெற முடியாது. கும்பம் ராகு, கேதுக்களுக்கு ஆட்சி வீடு என முனிவர் கூறியது தவறான கருத்தாகும். மேலும், கடகம் உச்ச வீடு என முனிவர் கூறுகிறார். இதுவும் தவறாகும். கடகம் இவர்களுக்கு பகை வீடு எனக் கொள்க. எனவே, இவர்களது வலிமை குறித்துக் கீழ்க்கண்டவாறு கணக்கிட்டு கொள்க.

ராகு - கேதுக்களின் நட்பு, பகை, உச்ச, நீசம் விபரம்

மேஷம்	-	பகை
ரிஷபம்	-	நீசம்
மிதுனம்	-	நட்பு
கடகம்	-	பகை
சிம்மம்	-	பகை
கன்னி	-	நட்பு
துலாம்	-	நட்பு

விருச்சிகம்	-	உச்சம்
தனுசு	-	நட்பு
மகரம்	-	நட்பு
கும்பம்	-	பகை
மீனம்	-	நட்பு

இந்தக் கணிதத்தைச் சில நூல்கள் ஏற்றுக் கொள்கின்றன. தற்காலத்தில் பலர் இதை அனுசரித்து வருகின்றனர். எமது அனுபவப்படியும் இதுவே சரியாக வருகிறது எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

4. இலக்கன் பலன்கள்

மேஷம்

கேளப்பா மேஷத்தில் ஜெனித்த பேர்க்கு
கெடுதி மெத்த செய்வனடா கதிரோன் பிள்ளை
ஆளப்பா அகம்பொருளும் நிலமும் ஈந்தால்
அவன் விதியுங்குறையுமடா அன்பாய்க்கேளு
கூளப்பா கோணத்தி லிருக்க நன்று
கொற்றவனே கேந்திரமும் கூடாதப்பா
தாளப்பா போகருட கடாக்ஷத்தாலே
தனவானாய் வாழ்ந்திருப்பன் திசையிற் சொல்லே

பொருள் :- மேஷ இலக்கனத்தில் பிறந்த ஜாதகர்க்கு சனி பகவான் மிகவும் கொடுமையான பலன்களைக் கொடுப்பார். இவர்கள் மற்றவர் களுக்கு நிலமும், பொருளும் கொடுத்து உதவினால், இவர்களது ஆயுள் பலம் குன்றிப் போகும். கோட்களெல்லாம் கோணத்தில் இருக்க நற்பலன்கள் உண்டாகும். குரு பகவான் கேந்திரத்தில் இருப்பது நல்லதல்ல. முன் சொன்ன போகர் முனி வாயிலாக கூறுகிறேன். இந்த இலக்கனத்தார் தனவானாய் வாழவும் வாய்ப்பு உண்டு. திசா புத்திகளின் பலமறிந்து சரியாய் பலன் கூறுவாயே!

விளக்கம் :- 'கதிரோன் பிள்ளை' என்பது பானு மைந்தனாகிய சனி பகவானை குறிப்பிடும். மேஷ இலக்கனத்தில் பிறந்தவர்க்கு இலக்கினாதிபதி செவ்வாய் ஆவார். இவர்க்குச் சனி பகை என்பதால், "கதிரோன் பிள்ளை கெடுதி மெத்த செய்வார்" என முனிவர் கூறியதைக் காண்க. இலக்கினாதிபதி செவ்வாய் என்பதால், இவர்கள் மற்றவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவ வேண்டுமானால், செவ்வாய் பலவீனமாக இருக்க வேண்டும். எனவே தான், முனிவர் இவர்களது ஆயுள் பலம் குறைந்து போகுமெனக் கூறுகிறார். செவ்வாய் மேஷ இலக்கனத்துக்கு அஷ்டமாதிபதி என்பதை நினைவில் கொள்க. எந்தக் கிரகமாயிருந்தாலும் அவர்கள் திரிகோணங்களில் இருந்தால் நன்மையை செய்வார்கள். ஆனால், கொற்றவனாகிய சூரியன் கேந்திரமேற தீமை தரும் என்பதை சிறப்பு விதியாக கொள்க. 'பாவர்க்குக் கேந்திர தோஷமுண்டு' என்ற விதியின்படி மேற்கூறியவாறு முனிவர் கூறியிருக்கலாம். இந்த லக்ன பலன்கள் அவரவர் திசாபுத்திகளின் வலிமைக்கேற்ப மாறுபடும் என்பதை "திசையிற் சொல்லே" என மறைமுகமாக முனிவர் சுட்டிக் காட்டுவதைக் காண்க.

ரிஷப மிதுன லக்ன பலன்கள்

சொல்லப்பா எருதோடு மிதுனத் தோர்க்கு
சுகமெத்த உண்டொன்று சொல்லுவார்கள்
செல்லப்பா அந்தணரும் கேந்திரமேற
அவர் செய்யுங் கொடுமையிற் மெத்தவுண்டு
தள்ளப்பா தரைபொருளும் தனமும் நாசம்
தார்வேந்தர் தோஷமுடன் அரிட்டம் செப்பு
குள்ளப்பா குருமதியுங் கோணமேற
கொற்றவனே குழவிக்கு நன்மை கூறே

பொருள் :- ரிஷப, மிதுன இலக்கனத்தில் பிறந்தவர்களுக்கு பொதுவாக நல்ல சுப பலன்கள் உண்டாகும் என்று பெரியோர்கள் கூறுவதை காணலாம். ஆனால் அந்தணராகிய குருகேந்திரமேறினால், மிகவும் கஷ்டமான பலன்கள் உண்டாகும். பொன் பொருள் நஷ்டமும், தன நாசமும் வந்து சேரும் குருதோஷம் ஏற்படுவதுடன், குழவிக்கு அரிஷ்ட தோஷமும் உண்டாகும். பூரண சுபக் கோட்களாகிய குருவும், சந்திரனும் 1, 5, 9 என்னும் கோணஸ்தானங்களில் இருந்தால், அந்த ஜாதகர் அரசர்க்குச் சமமான அந்தஸ்த்தையும், கௌரவத்தையும், புகழையும் பெறுவார் என்பதாம்.

விளக்கம் :- குரு கேந்திரமேற தோஷம் என்று குறிப்பிட்டது, ரிஷப லக்னத்துக்கு குரு அஷ்டம, லாபாதிபதியாகி பாவியாகி விடுகிறார். எனவே, இவர் கேந்திரம் ஏற நல்ல பலன் தராது என்பது முனிவர் வாதம். மிதுன இலக்கனத்துக்கு குரு 7-10க்குரிய ஆதிபத்தியம் பெற்று கேந்திராதிபத்திய தோஷம் பெற்று விடுகிறார். மேலும், மிதுன இலக்கனத்துக்கு 7ம் அதிபதியாகிய குரு பாதகாதிபதியாகி விடுகிறார். இவ்விருவகை தோஷத்தால், குரு கேந்திரத்தில் இருந்தாலும் நல்ல பலன் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்பது முனிவரது கணிப்பு. ஆனால், குரு பூரண சுபக்கிரகம் என்பதாலும், கேந்திரஸ்தானம் சுபர்களுக்கு நட்பு வீடு என்பதாலும் அவர் சில சுப பலன்களை செய்வதைத் தடுக்க முடியாது. எனவே, கூட்டிக் கழித்துப் பார்த்தால் ரிஷப, மிதுன இலக்கனகாரர்களுக்கு குரு கேந்திரமேறினால், சுபம், பாவம் கலந்து சம பலனாக பலன் தரும் எனக் கொள்ளலாம். பூரண சுபக் கோட்களாகிய குருவும் சந்திரனும் திரிகோணங்களில் நின்றால் பூரண சுப பலன் தரும் என்பது யாவரும் அறிந்த உண்மை. அனால், இவர்கள் இருவரும் கூடி 1, 5, 9ம் ஸ்தானங்களில் நின்றால், அந்த வர்க்கமே நாசமாய் போகும் என்பதும் உண்மை. எனவே இவர்கள் தனித் தனியாக 1, 5, 9ம் ஸ்தானங்களில் இருந்தால் நல்ல இராஜ யோக பலன்களைத் தருவார்கள் எனக் கொள்க.

கடக இலக்கன பலன்

கூறப்பா கடகத்தில் ஜெனித்த பேர்க்கு
கொடுமை பலன் தந்திடுவார் சுக்கிராச்சாரி
வாரப்பா வரம் பெற்ற இந்திரசித்து
வகை மடிப்பாய் மாண்டான் வெள்ளியாலே
சீரப்பா திரிகோணம் கரந்து நிற்க
சிவசிவா செம்பொன்னும், ரதங்களுண்டு
கூறப்பா மற்றவிடம் கூடாதப்பா
கொற்றவனே நிலை சமயம் கூர்ந்து பாரே

பொருள் :- கடக லக்னத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரன் மிகவும் கொடுமையான பலன்களைத் தந்திடுவார். சகலவித பெரிய வரங்களைப் பெற்ற இந்திரசித்து மாண்டது இந்த சுக்கிரனால் தான். ஆனால், இந்த சுக்கிரன் திரிகோணங்களில் நின்றால், செம்பொன்னும் ரதங்களும் சேரக் கூடிய சுப பலன்கள் உண்டாகும். மற்ற விடங்களில் நின்றால், தீய பலன் களே உண்டாகும். அசுர குருநிலை, பதிநிலை ஆய்ந்து பலன் கூறவும்.

விளக்கம் :- சுக்கிரனுக்கு கடகம் பகை வீடு. இலக்கனாதிபதி சந்திரனும், சுக்கிரனும் ஒருவருக்கொருவர் பகைவர்கள். கடக லக்னத்துக்கு சுக்கிரன் 11ம் ஆதிபத்தியம் பெற்று பாவியாகிய மாரகன் ஆகிவிடுகிறார். 4ம் ஆதிபத்தியம் பெற்று கேந்திராதிபத்திய தோஷம் பெற்று விடுகிறார். இவ்வகை தோஷங்களால் கடக லக்கன காரர்களுக்கு சுக்கிரன் நல்ல பலன்கள் செய்ய நியாயமில்லை. திரிகோணங்களில் நின்றால் ஏதோ ஓரளவு சுப பலன்கள் உண்டாகும் எனலாம். மற்ற இடங்களில் நின்றால், நற்பலன்கள் தரமாட்டார் என்று முனிவர் கூறியது சரி தான். ஆனால், சுக்கிரன் ஆட்சி, உச்சமாய் இருந்தால், நற்பலன்கள் செய்ய முடியும். அத்துடன் குரு பலமும் ஓங்கியிருந்தால் கடக லக்னத்தார்களுக்கு நற்பலன்கள் மிதமிஞ்சி ஏற்படும் எனலாம்.

சிம்ம லக்ன பலன்கள்

பாரப்பா சிங்கத்தில் ஜெனித்த பேர்க்கு
பவுமனுமே திரிகோண மேறி நிற்க
சீரப்பா செம்பொன்னும் செல்வம் பூதி
சிவசிவா சிக்குமடா சென்மனுக்கு
வீரப்பா மற்றயிடந் தனிலே நிற்க
வெகு மோசம் வருகுமடா வினையால் துன்பம்
கூறப்பா போகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனே புலிப்பாணி குறித்திட்டேனே

பொருள் :- சிம்ம லக்னத்தில் பிறந்தவர்களுக்கு 4-9ம் ஆதிபத்தியம் பெற்ற செவ்வாய் திரிகோணங்களில் ஏறி நின்றால், அந்த ஜாதகர் செம்பொன்னும், பொருளும், ஆஸ்தியும் கூடி, செல்வச் சிறப்பாய் வாழ்வார். அதே செவ்வாய் மற்ற இடங்களில் நின்றால் எல்லாம் நினைத்தற்கு மாறாய் நடைபெறும். பூர்வீக ஜென்ம வினையால் பலவித துன்பங்கள் உண்டாகும். போகர் சொன்ன வாக்கின்படியே, புலிப்பாணி முனிவர் இவ்வாறு கூறுகிறார்.

விளக்கம் :- ஒரே கிரகம் கேந்திர திரிகோணாதிபதியாய் இருந்தால், அந்தக் கிரகம் இராஜயோகப் பலனை தரும் என்பது ஜோதிட உலகில் நிலவி வரும் உண்மை. சிம்ம லக்ன காரர்க்கு செவ்வாய் 4-9ம் ஆதிபத்தியம் பெற்று ஷ இராஜயோகத்தைப் பெறுகிறார். இவர் 1, 5, 9 என்றும் என்னும் திரிகோணங்களில் இருந்தால் மிகவும் சிறப்பான இராஜயோகப் பலன்களை தருவார். பாவர்க்கு கேந்திர தோஷமுண்டு. எனவே, செவ்வாய் இராஜயோக காரகனாக இருந்தாலும், கேந்திரஸ் தானங்களில் இருந்தால் விசேஷ சுப பலன்களைத் தர முடியாது. 4,9ம் ஆதிபத்தியம் பெற்ற செவ்வாய், பாவஸ்தானங்களாகிய 3,6,8,11,12ல் இருப்பதும் நல்லதல்ல. அதே சமயம் பாவியான செவ்வாய் 3,6,11ல் இருப்பது நல்லது.

எனவே, யோகநாதனாகிய செவ்வாய் மற்ற இடங்களில் சம பலன்களை தருவார் எனக் கொள்ளலாம். அதாவது, செவ்வாய் ஆட்சி, உச்சமாய் இருந்தால் மற்ற இடங்களில் சுப பலன்களையும், பகை, நீசமாய் இருந்தால், பாவ பலன்களையும் தருவார் என்பது சரியான கருத்தாகும்.

கன்னி லக்ன பலன்கள்

குறித்திட்டேன் கன்னியிலே குதித்த பேர்க்கு
குற்றம் வந்து நேருமடா குருவினாலே
பறித்திட்டேன் பண்டு பொருள் நிலமும் சேதம்
பகருகின்ற குருவதியும் கோணமேற
சிரித்திட்டேன் சென்மனுக்கு வேட்டலுண்டு
செந்திருமால் தேவியுமே பதியில் வாழும்
குறித்த தொரு மனைதனிலே தெய்வமுண்டு
குற்றமில்லை புலிப்பாணி கூறினேனே!

பொருள் :- கன்னி இராசியில் ஜெனனமானவர்களுக்கு கஷ்டம் ஏற்பட் நியாயமுண்டு குருவினாலே! நிலம், பொருள், சொத்து, சுகம் நாசமாகும். அந்த குரு கோண இராசிகளில் இருந்தால் குற்றமில்லை. நற்பலன்கள் உண்டாகும். திருமாலின் பத்தினி தேவியான ஸ்ரீ மகாலட்சுமியே ஜாதகர் பதியில் வாசம் செய்வாள். மேலும், அவர் பதியில் தெய்வம் நின்று நல்ல பலன் செய்யும். குற்றமில்லை, புலிப்பாணி வாக்கு பொய்க்காது.

விளக்கம் :- கன்னி லக்ன காரர்களுக்கு குரு 7-10ம் ஆதிபத்தியம் பெற்று, கேந்திராதிபத்திய தோஷம் பெறுகிறார். 7ம் ஆதிபத்தியம் பெற்று மாரகாதிபத்திய தோஷமும், பாதகாதிபத்திய தோஷமும் பெறுகிறார். இவ்வாறு மூன்று வகை தோஷம் பெறுவதால், குரு கன்னி லக்னக் காரர்களுக்கு நன்மை செய்ய நியாயமில்லை. மேலும் குருவுக்கு புதன் பகை; எனவே, முனிவர் கூறுவது சரிதான். ஆனால், பாவிகளோ (அ) பாவ ஆதிபத்தியம் பெற்றவர்களோ திரிகோணங்களில் இருந்தால் தங்களது தீய பலன்களைக் குறைத்து சம பலன்களாக செய்வர். குரு சுபர் என்பதாலும் திரிகோணஸ்தானங்கள் சுப வீடுகள் என்பதாலும், திரிகோணங்களில் நின்ற குரு மிகவும் நல்ல பலன்களைத் தர அதிக வாய்ப்பு உள்ளது. எனவே தான் முனிவர் மகாலட்சுமிகூட ஜாதகர் இல்லில் வாசம் செய்வாள் எனக் கூறுகிறார். பாவிகளுக்கும், பாவ ஆதிபத்தியம் பெற்ற சுபர்களுக்கும், கேந்திரஸ்தான வீடுகள் பகை வீடுகள் எனக் கொள்க. எனவே, கன்னி லக்ன காரர்களுக்கு குரு கேந்திரமேறுவதால், சுப பலன் தர வாய்ப்பில்லை என்பது உண்மைதான். ஆட்சி, உச்சமாக இருந்தால், ஏதோ அற்ப சொற்பமான சுப பலன்கள் உண்டாகுமெனக் கொள்க.

துலாம் லக்ன பலன்கள்

கூறினேன் கோலுடயில்லு மாகில்
கொற்றவனே கதிரவனும் கோணமேற
சீரினேன் சென்மனுக்கு யோகம் மெத்த
சிவசிவா சிவபதவி கிட்டும் செப்பு
மாறினேன் மற்றவிடந் தன்னில் நிற்க
மார்த்தாண்டான் திசையுமது ஆகாதப்பா
தேறினேன் போகருட கடாக்ஷத்தாலே
திடமான புலிப்பாணி தெரிவித்தேனே!

பொருள் :- துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு கதிரவனாகிய சூரியன் கோணமேற நல்ல யோக பலன்கள் உண்டாகும். சிவ பதவியும் கிடைக்கும். மற்ற இடங்களில் ஷ சூரியன் இருந்தால், அந்தத் திசையே ஆகாது. முன் சொன்ன போகர் நூல் வாயிலாகவே முனிவர் இவ்வாறு கூறுகிறார்.

விளக்கம் :- துலாம் லக்னக் காரர்களுக்கு 11ம் இடம் பாதகஸ்தானமாகும். எனவே, 11ம் அதிபதியான சூரியன் பாதகாதிபத்திய தோஷம் பெற்று, கொடிய பாவியாகி விடுகிறார். பாவிகள் திரிகோணங்களில் நின்றால் சம பலனையும், கேந்திரங்களில் நின்றால் பாவ பலன்களையும் அளிப்பார் என்பது பொது விதி. எனவே, சூரியன் திரிகோணங்களில் இருந்தால் சுப பலன்களையும், மற்ற இடங்களில் இருந்தால் அசுப பலன்களையும் கொடுப்பார் என்பதாம். எனவே, திரிகோணம் தவிர, மற்ற இடங்களில் நிற்கும் சூரிய திசையே துலாம் லக்ன காரர்களுக்கு ஆகாது என முனிவர் கூறியது சரிதான். மேலும் துலாம் இராசி, சூரியனுக்கு நீச வீடு என்பதாலும், துலாம் லக்ன ஜாதகர்க்கு சூரியன் நற்பலன்களைச் செய்ய நியாயமில்லை. இதுபோக, இலக்கினாதிபதியான சுக்கிரனுக்கு சூரியன் பகை என்பதையும் நினைவில் கொள்க.

குறிப்பு :- "மார்த்தாண்டான் திசை" என்பது சூரிய திசையைக் குறிப்பிடும்.

விருச்சிக லக்ன பலன்கள்

தெரிவித்தேன் தேளில்லம் ஜென்மந் தோன்ற
செழுமதியும் கோணத்தில் சேர நின்று
அறிவித்தேன் அகம் பொருளும் அடிமை செம்பொன்
அப்பனே கிடைக்குமடா அவனில் வாழ்வன்
மறிவித்தேன் கேந்திரமும் கூடாதப்பா
மறையவனே கொடும் பலனைக் குறித்து சொல்லு
தெரிவித்தேன் போகருட கடாக்ஷத்தாலே
தேர்ந்து நீ புலிப்பாணி நூலைப்பாரே

பொருள் :- விருச்சிக லக்னத்தில் பிறந்தவர்களுக்கு அழகிய கலைகளை யுடைய சந்திரன் கோணம் ஏறி நிற்க, நற்பலன்கள் உண்டாகும். அகம் பொருளும், செல்வாக்கும், தனமும் உண்டாகும். சேவை செய்ய ஆட்களும் செம்பொன்னும் கிடைக்கும். ஆனால், சந்திரன் கேந்திரம் ஏற தீய பலன்கள் உண்டாகும். போகர் சொன்ன வாக்கின்படியே, புலிப்பாணி முனிவர் இவ்வாறு கூறுகிறார்.

குறிப்பு :- விருச்சிக லக்ன காரர்களுக்கு சந்திரன் பாக்கியாதிபதி என்பதால் யோகநாதன் என்பது பொதுவிதி. யோகநாதன் திரிகோணங்களில் இருந்தால், இராஜயோக பலன்களைத் தருவார் என்பது அகஸ்தியர் வாக்கு. எனவே, முனிவர் கூறுவது சரிதான். பாக்கியாதிபதியான சந்திரன், கேந்திரத்தில் இருந்தாலும் நன்மை செய்ய வேண்டுமென்பது ஜோதிட உலகில் அனுசரிக்கப் பட்டு வருகிற உண்மை. ஆனால், புலிப்பாணி முனிவர் சந்திரன் கேந்திர மேற கொடிய பலன்களைக் கொடுப்பார் எனக் கூறுவது சற்று குழப் பத்தை உருவாக்குகிறது என்றாலும், அதிலும் ஓர் உண்மை இருக்கிறது. அதாவது, விருச்சிகம் சந்திரனுக்கு நீச்ச வீடு; கடகம் செவ்வாய்க்கு நீச்ச வீடு. எனவே, விருச்சிக இராசிக் காரர்களுக்கும், கடக இராசிக்காரர்களுக்கும் ஊர் பகை உண்டு. இந்த சத்துருத்துவத்தால், விருச்சிக லக்ன காரர்களுக்கு, சந்திரன் கேந்திர மேறினாலும் தீய பலன்களையே கொடுப்பார் எனலாம். மேலும், விருச்சிக லக்னத்துக்கு சப்தம கேந்திரம் தவிர, மற்ற மூன்று கேந்திர வீடு களும், பகை, நீசம் பெற்றுள்ளதை நினைவில் கொள்க. எனவே, முனிவர் கூறுவது சரிதான். சப்தம கேந்திரத்தில் மட்டும் சந்திரன் இருந்தால், நற்பலன் களைச் செயவார் எனக் கூறுக. காரணம், சப்தம கேந்திரம் அவர்க்கு உச்ச வீடு.

தனுசு லக்ன பலன்கள்

பாரப்பா வில்லுதனில் உதித்த பேர்க்கு
பகருவேன் புத்தியுமே பகையுமாவர்
சீரப்பா சென்னல் வினை பூமி தோப்பும்
சிவசிவா செம் பொன்னும் சேதமாகும்
நீரப்பா நெடுமாலும் கோணமேற
நீணிலத்தில் பேர்விளங்கும் நிதியுமுள்ளோன்
ஆரப்பா போகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி பாடினேனே.

பொருள் :- தனுசு லக்னத்தில் ஜெனனமானவர்களுக்கு 'புந்தி' என்று அழைக்கப்படும் புதன் நற்பலன்களைத் தர மாட்டார். பொன், பொருள், பூமி, தோப்பு, செம்பொன் அனைத்தும் சேதமாகும். ஆனால், அவர் திரிகோணமேற ஜாதகர் புகழ் எட்டு திசையும் பரவும். பொன், பொருள் பாக்கியம் சேரும். போகர் சொன்ன வாயிலாகவே புலிப்பாணி பாடினார்.

குறிப்பு :- தனுசு லக்கனத்துக்கு அதிபதியாகிய குருவுக்கு புதன் பகை. தனுசு இலக்கனத்துக்கு 7-10ம் ஆதிபத்தியம் பெற்ற புதன் கேந்திராதிபத்திய தோஷம் பெறுகிறார். 7ம் ஆதிபத்தியம் பெற்றதால், அவர் பாதகாதிபத்திய தோஷமும், மாரகாதிபத்திய தோஷமும் பெற்று பாவ பலன்களைத் தர கடமைப்பட்டுள்ளார். எனவே, புதன் திரிகோணம் தவிர, மற்ற வீடுகளில் தீய பலன்களைத் தருவார் எனக் கூறப்பட்டது. புதன் ஆட்சி உச்சம் பெற்றாலோ (அ) வேறு எந்த வகையிலாவது இராஜ யோக அடைவை பெற்றாலோ, இந்த தோஷம் நீங்கி, சுப பலன்களைச் செய்ய வழி வகைகள் உண்டாகுமெனக் கூறுக.

மகர லக்ன பலன்கள்

அறைந்திட்டேன் இன்னமொன்று அன்பாய்க் கேளு
அப்பனே மகரத்தில் உதித்த சேய்க்கு
திரந்திட்டேன் திரவியமும் மனையும் சேதம்
தேச மாளரசனுட பகையுண்டாகும்
குரைந்திட்டேன் கொடுஞ்சேயும் கோணமேற
கோவேறு கழுதைகளும் காவல் மெத்த
புரந்திட்டேன் போகருட கடாக்ஷத்தாலே
பதியறிந்து புவியோர்க்குப் பாடினேனே

பொருள் :- மகர லக்னத்தில் பிறந்த ஜாதகர்க்கு பொன், பொருள் நாசமாவதுடன் அவன் இருந்த மனையும் நாசமாய் போகும். நாடாளும் மன்னராலே பகையுமுண்டாகும். கொடிய பலன்களை தருபவராகிய செவ்வாய் கோணமேற, கோவேறு கழுதைகளும், வாகன விருத்தி யுமுண்டாகும். காவல் மெத்தமுண்டு. போகர் சொன்ன நூலை பார்த்து, புலிப்பாணி மக்கள் நலன் கருதி பாடினார்.

குறிப்பு :- மகர லக்னம் என்பது சனியின் வீடு என்பதால், அந்த லக்னத்தில் இருக்கும் சுபரும், அசுபராக மாறி அசுப பலன்களை செய்ய இடமுண்டு. எனவே, மகர லக்னத்தில் பிறந்தோர் கஷ்ட பலன்களை அனுபவிக்க பிறந்தோர் என்றே கூறலாம். இவர்களது லக்னாதிபதி சனி என்பதால், மற்றவர்களை அனுசரித்து போக மாட்டார். நாடாளும்

மன்னரையே பகைத்து சிறை செல்லும் படியாக வாழ்வார். பணத்தைச் சேமிக்கும் புத்தியும் கிடையாது. எனவே, இந்த லக்னத்தில் பிறந்தவர்களுக்கு பொன், பொருள், மனை அனைத்தும் சேதமாகும் என்பது உண்மைதான். 4-11க்குரிய செவ்வாய் சிலர்க்குப் பகை என்றாலும், கோணமேறினால் ஏதோ அற்ப சொற்ப சுப பலன்களைத் தர இடமுண்டு. எனவே, முனிவர் கூறும் கருத்து சரிதான்.

கும்ப லக்ன பலன்கள்

பாடினேன் இன்னமொரு புதுமைகேளு
பாங்கான கும்பத்தி லுதித்த சேய்க்கு
ஆடினேன் அசுரர்குரு கோணமேற
அப்பனே உப்பரிகை மேடையுண்டு
தேடினேன் திரவியமும் சென்னல் பூமி
திடமாகச் சேருமடா செல்வ முள்ளோன்
கூடினேன் கேந்திரமும் நட்புமேற
கொற்றவனே துர்ப்பலனைக் கூறுவாயே

பொருள் :- கும்ப லக்னத்தில் உதித்த குழந்தைக்கு 4-9க்குரிய ஆதிபத்தியம் பெற்ற சுக்கிரன் கோணமேறினால், நற்பலன்களைச் செய்ய இடமுண்டு. பொன், பொருள், பூமி உண்டு. திரவியம் சேரும். ஆனால், அந்த சுக்கிரன் கேந்திர ஸ்தானமேறி நட்பு பெற்றாலும், நன்மை செய்ய மாட்டாராம்.

குறிப்பு :- கும்ப லக்னத்துக்கு அதிபதியான சனி முழுப்பாவி என்பதால், இந்த லக்னகாரர்களுக்குச் சுப கோட்களும், கேந்திர, கோணாதிபதிகளும் அவ்வளவு நன்மை செய்ய மாட்டார்கள் என்பது உணரத்தக்கது. இந்த சத்துருத்துவம், சுபவர்க்கம், பாவவர்க்கம் என்ற அடிப்படையில் ஏற்படுகிறது. மகர லக்னத்தார் பாவ வர்க்கமாகவும், அவர்க்கு கேந்திர கோணாதிபதிகளும் சுபக்கோட்களும் சுபவர்க்கமாகவும் கொள்க. இந்த சத்துருத்துவத்தால் 4-9ம் ஆதிபத்தியம் பெற்ற சுக்கிரன், சனிக்கு நண்பரான போதிலும் நன்மை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், சுக்கிரன் 4ம் ஆதிபத்தியம் பெற்றுள்ளதால் கேந்திராதிபத்திய தோஷமும், 9ம் ஆதிபத்தியம் பெற்றுள்ள தால் பாதகாதி பத்திய தோஷமும் ஏற்படுகிறது. இவ்வகை காரணங்களால் சுக்கிரன் மகர லக்ன காரர்களுக்கு நன்மை செய்ய வாய்ப்பு இல்லை என்பது உண்மைதான். (கோணம் தவிர, மற்ற இடங்களில் இருந்தால்)

மீன லக்ன பலன்கள்

கூறே நீ மீனத்தில் குழவி தோன்ற
கொற்றவனே மாலோடு வெள்ளியாகா
ஆறேநீ அகம் பொருளும் நிலமுஞ் சேரும்
அப்பனே அங்கத்தில் மச்சமுண்டு
பாரே நீ கோணத்திலிருந்த பேர்க்கு
பகருவாய் நற்பலனை யறிந்து நீதான்
ஏரே நீ போகருட கடாக்ஷத்தாலே
எமலோகஞ் சேர் வனடா இயம்பினேனே

பொருள் :- மீன லக்னத்தில் பிறந்தவர்களுக்கு புதனும், சுக்கிரனும் ஆகாது. இவர்களுக்குப் பொன், பொருள், நிலம் அதிகமாக சேரும். உடலில் மச்சமுண்டு. கோணத்தில் இருந்த கோட்கள் அனைவரும் அவரவர்

ஆதிபத்திய அடிப்படையில் நன்மை செய்வர். முன் சொன்ன போகர் நூல் வாயிலாக கூறுகிறேன். இந்த லக்னத்தார் எமலோகம் செல்வார் என்பதாம்.

குறிப்பு :- மீன லக்னத்துக்கு அதிபதியான குருவுக்கு புதனும், சுக்கிரனும் பகைவர்கள். மேலும், புதன் கேந்திராதிபத்தியம், மாரகாதிபத்தியம், பாதகாதிபத்தியம் என மூவகை தோஷங்களைப் பெற்று ஒரு பெரிய பாவியாகிறார். சுக்கிரன் 3-8ம் ஆதிபத்தியம் பெற்று, துர்ஸ்தானாதிபத்தியம் பெறுவதோடு, மீன லக்னகாரர்களுக்கு சுக்கிரன், புதன் ஆகாது எனக் கூறப்பட்டது. ஆனால் மீன ராசி குருவின் வீடு என்பதாலும், குரு ஒரு பரிபூரண சுபக் கிரகம் என்பதாலும், இந்த லக்னத்தார் பலவித சுக போகங்களை அனுபவிப்பார் என்பது உண்மையே. இந்த லக்னத்துக்கு, கோண ராசிகளும், அந்த வீட்டில் இருப்பவர்களும் நண்பர்களாவர். எனவே, இந்தக் கோட்கள் நன்மை செய்யும் எனக் கூறியது சரிதான். ஒரு ஜாதகர் இறந்த பிறகு, அவர் மோட்க்ஷத்துக்குப் போவாரா (அ) நரகத்துக்குப் போவாரா என்பதை அவரது லக்னத்துக்கு 12ல் உள்ள சூரியாதி கோட்களால் நிர்ணயம் செய்ய வேண்டும். மீன லக்ன காரர்களுக்கு 12ம் அதிபதி சனி என்பதால் இவர்கள் பெரும்பாலும் எமலோகம் செல்ல வாய்ப்புகள் உருவாகும். இந்தக் கருத்தை மறைமுகமாக புலிப்பாணி கூறுவதைக் காண்க.

5. துவாதச பாவங்களின் காரகத்துவம்

முதல் பாவம்

சீர்மலி முதற் பாகத்தின் பலன்றான் சித்தி தங்கிலேசமெய் சொருபம்
பேர்மலி வயதும் பிரபல புத்ரனும் பெருநிதி கீர்த்தி மூர்த்திகளும்
ஏர்மலி சுப சந்தோஷ ஞானமு மிலக்னமு பாங்கமே முதலாம்
தார்மலி போகர் தாளினை வணங்கிச் சாற்றினேன் புலிப்பாணி தாமே

பொருள் :- சிறப்பு மிகுந்த இலக்கன பாவமான முதலாம் பாவத்தால், சித்தி, மனக்கிலேசம், தேகம், வடிவம், பெயர், வயது, புகழ், புத்திரன், கீர்த்தி, செல்வம், மூர்த்தி, சுபம், சந்தோஷம், ஞானம், குணம் முதலிய பலாபலன்கள் அறிய முடியுமென போகர் நூலைப் பார்த்து புலிப்பாணி முனிவர் கூறுகிறார்.

விளக்கம் :- இலக்கன பாவத்தைக் கொண்டு தேகம், திறம், குணம், அழகு, வடிவம், மனக்கிலேசம், புகழ் முதலிய அம்சங்களை அறியலாம். அதாவது, இலக்கனத்தில் சுபர்கள் இருந்தாலும், இலக்கினாதிபதி வலுவாக இருந்தாலும், அந்த ஜாதகர் நல்ல தேக புஷ்டியுடன் அழகு நிறைந்தவராய், புகழ், செல்வாக்கு, கௌரவம், அந்தஸ்தோடு வாழ்வார் எனக் கூற வேண்டும். இலக்கனத்தில் பாவிகள் இருந்தால், மேற்கூறியதற்கு எதிர்மாறான பலன்கள் நடைபெறும்.

இரண்டாம் பாவம்

தானமிகு ரெண்டிடத்தின் பெயரைக் கேளு
தனம் குடும்பம் மொளிசெறி நேத்திரமும் வித்தை
ஈனமில்லாச் செல்வமுடன் சாஸ்திர வாக்கு
இரும் பொன்னும் முபதேச மியம்பு கேள்வி
மானமிகு சவுபாக்கியங் கமனம் புத்தி
மற்றுமுள நவரெத்தின வகையின் பேதம்

ஈனமிலாமிவை பார்த்து முணர்த்துமென்று
உரைத்திட்டேன் புலிப்பாணி உறுதியாமே!

பொருள் :- இரண்டாம் பாவத்தைக் கொண்டு, தனம், குடும்பம், நேத்திரம், வித்தை, செல்வம், சாஸ்திரம், வாக்கு, இரும்பு, பொன், உபதேசிக்கக் கூடிய கேள்வி ஞானம், மானம், சௌபாக்கியம், கமனம், புத்தி, நவரத்தின பேதங்கள் முதலிய பலா பலன்களை அறியலாம் என புலிப்பாணி முனிவர் கூறுகிறார்.

விளக்கம் :- இரண்டாமிடமான குடும்ப ஸ்தானத்தை சுபர்கள் பார்த்தாலும் (அ) ஷி தானத்தில் சுபர்கள் இருந்தாலும், (அ) 2ம் அதிபதி வலுப்பெற்று, சுபர்களுடன் கூடியிருந்தாலும், அந்த ஜாதகர்க்குச் சகலவித யோக பாக்கியங்களும் பெருகி, வித்தை, கலை ஞானம் பெற்று அநேக சுக போகங்களுடன் வாழ்வார் எனக் கூற வேண்டும். அதாவது, மேலே கூறிய விஷயங்களிலெல்லாம், அவர் கெட்டிக்காரராக திகழ்வார். கிரகங்கள் பலவீனமாக, பாவர் திருஷ்டியுடன் இருந்தால், கல்வி, வித்தை ஞானமின்றி முட்டாளாக இருப்பான். கையில் இருந்த பணத்தை எல்லாம் பறிகொடுத்து விட்டு, பிச்சையெடுக்கும் நிலைக்கு வந்துவிடுவார் எனக் கூறவும்.

மூன்றாமிடம்

ஆன மூன்றா மிடத்தி னரும்பலன்
மான வீரியம் மற்றுயர் சேர்க்கையும்
தான யோகந் தயிரியஞ் சோதரர்
ஈன வேலை இருங்கலன் வீரமே

பொருள் :- மூன்றாமிடத்தைக் கொண்டு, மனோதிடம், நண்பர்கள், தானம், யோகம், இளைய சகோதரர்கள், அடிமை வேலை, ஆபரணங்கள், வீரம் முதலிய பலாபலன்களை அறியலாம்.

விளக்கம் :- 3ல் சுபர்கள் இருந்தாலும், 3ம் அதிபதி பலவானாக இருந்தாலும், அந்த ஜாதகர் ஷி அம்சங்களில் சிறப்புற்று விளங்குவார். 3ல் பாவிகள் இருந்தாலும், 3ம் அதிபதி பலவீனமாக இருந்தாலும், அந்த ஜாதகர் ஷி அம்சங்களில் சிறப்புற்றிருக்க மாட்டார்கள் என்பது புலிப்பாணி கூற்று.

நான்காமிடம் + ஐந்தாமிடம்

வித்தை வாகனம் வீடு சுபஞ்சுபம்
மெத்தை யன்னை மிகுசுக நான்கதாம்
பத்தின் பாதி பழைய சீமான் மந்திரம்
வித்தை புத்தி புத்திரர் செல்வமே

பொருள் :- நான்காம் பாவத்தைக் கொண்டு, வித்தை, வாகனம், வீடு, சுபம், மெத்தை, அன்னை முதலியவற்றை அறியலாம். ஐந்தாம் பாவத்தைக் கொண்டு பழைய சீமான், மந்திரம், வித்தை, புத்தி, புத்திரர், செல்வம் முதலியவற்றை அறியலாம்.

விளக்கம் :- 4, 5ம் பாவ நிலைகள் சுப பலம் பெற்றிருந்தால் ஷி விஷயங்களில் சுப பலன்கள் நடைபெறும். பலவீனமாக இருந்தால், ஷி விஷயங்களில் பாவ பலன்கள் மிகுதியாக நடைபெறுமென அறிக.

ஆறாமிடம்

ஆறாமிடத்தினது பலன் றானப்பா
ஆயுதத்தால் ரணஞ் சொல்லு ஞாதிதுன்பம்
வீரான யுத்தமொரு திரவிய நஷ்டம்
மிகுதிருடர் ஜலமடந்தை வினையுஞ் சோர்வும்
கூரான மெய்வாதை பெண்ணால் கண்டம்
கூடுமே பெரும்பாலும் நோயுமென்று
பேரான சிறைச்சாலை கிட்டுமென்று
பேசினேன் புலிப்பாணி பிரியத்தோடே

பொருள் :- ஆறாமிடத்தைக் கொண்டு, ஆயுதத்தால் ரணம் ஏற்படுதல், பந்துக்கள் துன்பமடைதல், யுத்தம், திரவிய நஷ்டம், திருடர் பயம், ஜலம், பெண்களால் தொல்லை ஏற்படுதல், உடல் வாதை, பெண்களால் கண்டம் ஏற்படுதல், ரோக பயம், சத்துரு, சிறைச்சாலை செல்லுதல் போன்றவற்றை அறியலாம்.

விளக்கம் :- 6ல் சுபர்கள் இருந்தால் (அ) 6ம் அதிபதி பலமாக இருந்தாலும் அந்த ஜாதகர் சத்துரு பயமின்றி நல்ல தேக பலத்துடன் நிம்மதியாக வாழ்வார். மேலும், மேற்கூறிய விஷயங்களிலெல்லாம் கெட்டிக் காரராகத் திகழ்வார். 6ம் இடம் பலவீனமாக இருந்தால், இதற்கு நேர்மாறான பலன்கள் நடைபெறுமெனக் கொள்க.

ஏழாமிடம்

சப்தமத்தின் பலன் கேளு மணமதாகும்
தருமடந்தை புதல்வருக்கு சாற்றுமின்பம்
சித்தருள் விபகார மனஞ் சுற்றத்தார்
அபிமானமரசரது சேர்சன் மானம்
தத்துகயல் விழிமாது சேர்க்கை நன்றாய்
சதிருடனே தான் வந்து சேருமென்று
கொத்தாக நீ யறிந்து கூறுவாயேல்
குறிதப்பா பலன் வந்து கூடுமென்றே

பொருள் :- 7ம் பாவத்தைக் கொண்டு விவாகம், களத்திரம், புதல்வர்க்கு ஊட்டும் இன்பம், மனேசித்தம், உள்ளம், விபகாரம், மனம், சுற்றத்தார், அபிமானம், அரசனது சன்மானம், அன்னியஸ்திரீ சேர்க்கை போன்ற பலா பலன்களை அறியலாம்.

விளக்கம் :- 7ல் சுபர்கள் இருந்தாலும், 7ம் அதிபதி பலமாக இருந்தாலும் ஜாதகர்க்கு நல்ல களததிரம் வாய்ந்து, சுற்றத்தார் அபிமானத்தோடு, செல்வச் சிறப்புடன் வாழ்வார். 7ல் பாவிகள் இருந்தாலும் (அ) 7ம் அதிபதி பலவீனமாக இருந்தாலும், துர்களத்திரம் வாய்ப்பதுடன், மனதில் நிம்மதியின்றி பலரும் தூற்றும் வண்ணம் வாழ நேரிடும். காமஸ்திரீகளின் வலையில் விழுந்து பணத்தைப் பாழாக்க நேரிடும்.

எட்டாமிடம்

அஷ்டமயோக மரும்பிணி சண்டையும்
நஷ்டங்கிலே சம் பகை நன் மரணமும்

துஷ்டடம்பமும் துன்று மலையேறி
கஷ்டப்பட்டு கலங்கி விழுதலே

பொருள் :- எட்டாமிடத்தைக் கொண்டு, தீர்க்க வியாதி, சண்டை சச்சரவு, நஷ்டம், கிலேசம், பகை, மரணம், துஷ்டர் சகவாசம், மலையேறி கஷ்டப்படுதல், கலங்கி விழுதல் போன்ற பலா பலன்களை அறியலாம்.

விளக்கம் :- எட்டாமிடத்தில் பாவிகள் இருந்தால் மேற்கூறியவாறு கெட்ட பலன்கள் உண்டாகும். சுபர்கள் இருந்தால் மேற்கூறிய கெட்ட பலன்கள் வந்து விலகும். எட்டாம் அதிபதியும் பலமாக இருந்தால், மேற்கூறிய கஷ்டப்பலன்கள் வராத வண்ணம் தடுத்து விடலாம்.

ஒன்பதாமிடம்

ஒன்பதாம் பலனாகு முபதேச
மின்பகூப மிகும் பணிகூபமும்
வன்பதான பரியும் வளப்பமும்
தன்மதானந் தனங்களுஞ் சாற்றுவர்

பொருள் :- ஒன்பதாம் பாவத்தைக் கொண்டு, குரு உபதேசம் செய்தல், இன்பம் தரும் ஆலய பணிகள் செய்தல், அன்பு, தானம், குதிரை, செழிப்பு, தர்மம், பாக்கியம் முதலிய பலாபலன்கள் அறியலாம்.

விளக்கம் :- ஒன்பதாம் இடம் என்றாலே 'பிதுரு' ஸ்தானம் என்று கூறுவது மரபு. ஆனால், இந்த முக்கியமான காரகத்துவத்தை முனிவர் விட்டுவிட்டார். எனவே, இதையும் சேர்த்து, பலன் பார்க்கவும். மற்றபடி, 9ம் பாவ நிலை சுபமாக இருந்தால், மேற்கூறிய காரகத்துவ பலன்கள் சுபமாகவும், பாவமாக இருந்தால் அசுபமாகவும் நடைபெறுமெனக் கொள்க.

பத்தாமிடம்

பத்தாகுமிடத்தினது பலனைக் கேளு
பட்டணங்கள் தாபித்தல் பவங்களோடு
வித்தான பல புண்ணியந் தேசாபிமானம்
வீரான அரசனோடு கருமம், ஞானம்
சித்தமதி லிரக்கமிகு தெய்வ பக்தி
சேருகின்ற சவுரியமுங் கெர்ப்பமூனும்
நத்துகின்ற பூசையொடு மனைவி சேர்க்கை
நலமாக கவிப்பலனை நவிலுவாயே

பொருள் :- பத்தாமிடத்தைக் கொண்டு, பட்டணங்கள் ஸ்தாபித்தல், தொழில், புண்ணியஸ்தலம் சென்று வருதல், தேசாபிமானம், பராக்கிரமம், அரசன், கருமம், ஞானம், சித்தமதி, இரக்கம், தயை, தாட்சணியம், தெய்வ பக்தி, சௌகரியம், கெர்ப்பம், தேவதா பூஜை, மனைவி சேர்க்கை முதலிய பலா பலன்களை அறியலாம்.

விளக்கம் :- 10மிடம் தான், ஒரு மனிதரது வாழ்வில் மிகவும் முக்கியமான ஸ்தானமாகும். காரணம், தொழில் செய்யும் தன்மையை இந்தப் பாவம் தான் காட்டுகிறது. தொழிலை வைத்தே, ஒரு மனிதரது மதிப்பும், மரியாதையும் ஏற்படுகிறது. இந்தப் பாவம் பலவீனமாக இருந்தாலோ (அ) இந்தப் பாவாதிபதி இலக்கினாதிபதிக்கோ (அ) குருவுக்கோ தொடர்பின்றி தனியாக ஒதுக்கப்பட்டிருந்தாலோ, அந்த ஜாதகர் எந்தத் தொழில்

செய்தாலும், அது வெற்றி தராது. இதன் விளைவாக, மற்ற பாவங்கள் பலமாக இருந்தாலும், அந்தச் சுப பலன்களை ஜாதகர் அடைய முடியா சூழ்நிலை ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பதினொன்றாமிடம்

பத்தின் மேலொன்றாகும் பலனை நன்றாய்
    பகருகிறேன் பயிர் வளப்பம் பரிநல் வேழம்
வித்தை மிகு லாபநல்லறிவு சேர்க்கை
    மிகுமனதிற் றுக்கமொடு சிவிகை சேரும்
உத்தரியஞ்செறிந்த பசும் பொன்னை யொத்த
    உயர்மனைவி யோகமது முதலாயுள்ள
மெத்தவே நீயறிந்து விளம்பு வாயேல்
    வேதமாயுன் வார்த்தை விரும்புவாரே

பொருள் :- *11ம்* இடத்தைக் கொண்டு, பயிர் வளம், குதிரை, யானை வித்தை, லாபம், நல்லறிவு, பல்பொருள் சேர்க்கை, மன ஊக்கம், சிவிகை யோகம், ஆடை ஆபரண சேர்க்கை, பசும்பொன் போன்ற உயர் மனைவி அமைதல் போன்ற பலன்களைக் கூறலாம். நன்றாக ஆராய்ந்து இப்பலன் களைக் கூறினால், வேதத்தைப் போன்று நின் வார்த்தைகள் மதிக்கப்படும் என்பதாம்.

விளக்கம் :- *11ல்* சுபர்கள் இருந்தாலும் (அ) 11ம் அதிபதியை சுபர்கள் கூடினாலும், மேற்கூறிய விஷயங்களில் நல்ல சுப பலன்கள் உண்டாகும் பாவர் கூடின், தீய பலன்கள் உண்டாகுமென அறிக.

பன்னிரண்டாம் பாவம்

பத்தின் மேல் இரண்டாகும் பெயரைக் கேளு
    பரதேசவுத்தியோகம் பணத்தின் சோர்வு
சத்தான பல போகி சயனம் தியாகம்
    தர்மமொடு கர்ம பலன் சவுக்கியமாக
வித்தான பல புண்ணிய விவாதமோடு
    விளைந்திடுமே தொழிலான பலதானங்கள்
கத்தாதே போகருட கருணையாலே
    கரைந்திட்டேன் புலிப்பாணி கருத்தைதானே

பொருள் :- *12ம்* இடத்தைக் கொண்டு, வெளிநாடு சஞ்சாரம், உத்தியோகம், பணமின்றி சோர்வடைதல், போகம், சயனசுகம், தியாகம், தர்மம், கர்மம், சௌக்கியம், புண்ணியம் செய்தல், விவாதம், பல தொழில் ஸ்தாபனங்கள் அமைத்தல் போன்ற பலன்கள் ஏற்படுமென, புலிப்பாணி போகரின் தயவாலே கூறுகிறார்.

விளக்கம் :- *12ம்* இடம் என்றாலே 'விரய' ஸ்தானம் என்று கூறுவது மரபு. ஆனால், முனிவர் இதை விடுத்து, மற்ற அம்சங்களைக் கூறுகிறார். எல்லோருக்கும் இது தெரியும் என்பதாலோ இதை விட்டுவிட்டாரெனக் கொள்ளலாம். மற்றபடி, 12ல் சுபர்கள் இருந்தாலும் (அ) பாவிகள் இருந்தாலும், முன்பு கூறியவாறே சுப பாவ பலன்களைக் கூறவும்.

6. நவக் கோட்களின் லக்ன பலன்கள்

(1) இலக்கனத்தில் சூரியன் - சந்திரன் நின்ற பலன்

ஆதித்தன் தேளிலேற அம்புலிக் கரசனாவான் - அன்றும்
சேயன் மூர்க்கன், முன்கோபி, கலகனடி தாயே
அதுகேள் - ஆதிஜென்மம் சதிசேற அரசன் பிரதானி
சீலன்யோகன், அன்றும் அரிதேவி வாசமுள்ளோன்
அமுர்தமேனி குணசீலன் மகளே

பொருள் :- லக்னத்தில் சூரியன் இருந்தால், நாடாளும் பாக்கியம் உண்டு. ஆனால், மிகவும் மூர்க்க குணமுள்ளவனாகவும், முன்கோபியாகவும், கலகம் செய்பவனாகவும் இருப்பான் என்பதாம்.

லக்னத்தில் சந்திரன் இருந்தால், அரசனுக்கு அருகில் இருந்து சேவை செய்பவனாகவும், யோகமுள்ளவனாகவும் இருப்பான். மேலும், சிவனுக்கு மனைவியாகத் திகழும் உமையவள் அவளது இல்லில் வாசம் செய்வாள். குளிர்ந்த மேனியும், நல்ல குணமுடையவனாகவும் இருப்பான் என்பதாம்.

விளக்கம் :- ஆதித்தன் என்பது சூரியனையும், 'சசி' என்பது சந்திரனையும் குறிப்பிடும். 'அரிதேவி' என்பது சிவபெருமானின் மனைவியான பார்வதியை குறிப்பிடும். மற்றபடி விளக்கம் தேவையில்லை.

(2) இலக்கனத்தில் செவ்வாயும் புதனும் நின்ற பலன்

சேயும் நல்ல தேளிலேற சேயன் சூரன், அபிமானி, கலகன்
அன்றும் செய்யும் தொழில் வல்லவனாம் சேயன்
ரோகமுடையவனாம் தாயே, அதுகேள் - புந்தி
ஜென்மம் உச்சமாகில் புலவன் தேகலெக்ஷணத்
தோன் ஞானி, அன்றும் வந்த புதன் நீச்சமாகில்
வாதரோகன் அற்ப வித்தை மகனே

பொருள் :- செவ்வாய் லக்னத்தில் நிற்க, ஜாதகர் வெகு சூரனாகவும், அபிமானியாகவும், கலகம் செய்பவனாகவும் இருப்பான். ஆனால், செய்யும் தொழிலில் வல்லவனாக திகழ்வான். ரோக பயமும் உண்டு.

புதன் லக்னத்தில் நிற்க, அந்த ஜாதகர் தேகலக்ஷணம் உள்ளவராகவும், ஞானியாகவும் இருப்பார். புதன் உச்சமாகில் இந்தப் பலன் இன்னும் விசேஷமாக நடைபெறும். புதன் நீச்சமாகில் வாத ரோகமுடையவனாகவும், அற்ப வித்தையுடையவனாவும் இருப்பான் என்பதாம்.

விளக்கம் :- செவ்வாய் தீக்கோள் என்பதால் ஜென்மத்தில் இருக்க, தீய பலன்கள் கூறப்பட்டது. அதே சமயம், இவர் ஆட்சி, உச்சமாக இருந்தால், சத்ருக்களை வெல்லும் வீரமுடையவனாகவும், தைரியமுடையவனாகவும் இருப்பான் எனக் கொள்க. அதுபோல், புதனுக்கும் அதன் வலிமையறிந்து சுப, பாவ பலன் கூறுக.

(3) இலக்கனத்தில் குரு நின்ற பலன்

தேவகுரு தேளிலேற தேவ பதினேசனழகுடையோன்
அன்றும் தேசனதிகாரி, யூகிவாசன், பாக்கியசாலியடி

தாயே, அதுகேள் - தேவகுரு தேரிலுச்சம் தேன்
மொழியே கோடி தோஷம் நீங்கி, பின்னும் தேவர்
களுங் கொண்டாட திரவியத்தால் தானஞ்செய்வன் மகளே

பொருள் :- தேவகுரு லக்னத்தில் நிற்க, தேவாதி தேவனைப் போல் மிகவும் அழகாகவும், கவர்ச்சியாகவும் இருப்பான். மேலும், நாடாளும் மன்னனாகவும், மிகுந்த புத்திசாலியாகவும், பாக்கியசாலியாகவும் இருப்பான். மேலும், குரு ஜென்மத்தில் உச்சமாக இருந்தால், கோடி தோஷம் நீங்கி, தேவர்களும் கொண்டாடும் வண்ணம், திரவியத்தால் தானம் செய்து மக்கள் யாவரும் பாராட்டும் வண்ணம் வாழ்வான் என்பதாம்.

இதற்கு விளக்கம் தேவையில்லை.

(4) இலக்கனத்தில் சுக்கிரன் நின்ற பலன்

அசுர குரு பதியிலேற அதிக செல்வன், அழகன், குண
சீலன், அன்றும் - அறமுள்ளோன் சுகித்திருப்பன்
அயன் விதியை எடுத்துரைத்தேன் தாயே, அது கேள்
அசுர குரு பதயிலுச்சம் அதிக வித்தை பந்துறவு
முள்ளோன், பின்னும் அந்தணர்க்குப் பிரியவனாவன்
அகத்தில் மெத்த பாக்கியமுள்ளோன் மகளே

பொருள் :- சுக்கிரன் ஜென்மம் ஏற அதிக செல்வனாகவும், அழகனாகவும், குணமுள்ளவனாகவும் இருப்பான். மேலும், அறநெறி தவறாது வாழ்வான். பெண் பிரியனாகவும் இருப்பான். சுக்கிரன் ஜென்மத்தில் உச்சப் பலத்துடன் இருந்தால், அதிக வித்தைகளைக் கற்று, பந்து ஜனங்களோடு, அந்தணர்களுக்குப் பிரியமுள்ளவனாகவும், மிகுந்த பொருள் சம்பாதித்துப் பாக்கியவான் என்று கூறும்படியாக வாழ்ந்திருப்பான் என்பதாம்.

விளக்கம் :- சுக்கிரன் ஒரு சமக் கோள் என்பதால் மேற்கூறியவாறு சுப பலன்கள் கூறப்பட்டது. ஆனால் சுக்கிரன் பகை நீசமாக இருந்தால், காமவெறி பிடித்தவனாகவும், கயவனாகவும், களத்திர விரோதம் உள்ள வனாகவும், மேற்கூறியதற்கு நேர் மாறான பாவ பலன்களை அனுபவிக்கக் கூடியவனாகவும் இருப்பான் எனக் கூறுக.

(5) இலக்கனத்தில் சனி நின்ற பலன்

சனியன் தேளிலேறி நிற்க, ஜென்மன் மனோவியாதி
இளம் வயதில் அன்றும் - துக்கம் பீடை வியாதியினால்
தோன்றும் விதிதீர்க்க மாகுந்தாயே அதுகேள் - உச்ச
முடன் ஆட்சியாகில் ஓங்குங் கீர்த்தி பேர் விளங்கும்
விதியோன் அன்றும் உலகில் சகோதர நேசன், கலக
முள்ளோன் கடு மொழியன் மகனே

பொருள் :- ஜென்மத்தில் சனி நிற்க, ஜாதகர் மனோ வியாதியுடையவனாகவும், துக்கம், பீடை நிறைந்தவனாகவும் இருப்பான். விதி தீர்க்கமுண்டு. ஆட்சி, உச்சமாக இருந்தால் அவனது புகழ், கீர்த்தி, செல்வாக்கு உலகம் முழுவதும் பரவும். சகோதர நேசமுள்ளவனாகவும், சற்று கடுமொழி பேசுபவனாகவும், கலகம் செய்பவனாகவும் இருப்பான் என்பதாம்.

விளக்கம் தேவையில்லை.

(6) இலக்கனத்தில் ராகு, கேது நின்ற பலன்

பதியில் நல்ல ராகு நிற்க பாலன் விஷரோகன், குட்டம்
பயனாம் அன்றும் - பாலனுக்கு புத்திரயீனன் பங்கு
முள்ளோனென் றுரைத்தேன் தாயே, அதுகேள் - பதியில்
நல்ல கேது நிற்க, பாலன் விஷரோகமுள்ளோன் பயனாம்
அன்றும் சீல மற்றோன், மெல்லிய தேகன் பகரும்விதி
பகர்ந்துரைப்பாய் மகனே

பொருள் :- ஜென்மத்தில் ராகு நிற்க, அந்த பாலனுக்கு விஷரோகமும், குஷ்டமும் உண்டாகும். மேலும் அந்த ஜாதகர்க்கு புத்திர தோஷமுண்டு.

ஜென்மத்தில் கேது நிற்க, பாலனுக்கு விஷரோகமுண்டாகும். துஷ்ட குணமுடையவன்; மெல்லிய தேகமுடையவன் என்பதாம்.

விளக்கம் :- ராகு, கேது நட்பு, உச்சம் பலம் பெற்றிருந்தால் ஷி தோஷத்திலிருந்து நிவாரணம் பெற முடியுமெனக் கூறுக.

7. துவாதச பாவங்களில் சூரியன் நின்ற பலன்

2ம் இடத்தில் சூரியன் நின்ற பலன்

கதிரவனு மிரண்டில் நிற்க, காளைக்கு நேத்திர ரோக
முண்டு, கூறும் - கன்றுகாலி நஷ்டமுண்டு கடு
மொழியன் முகரோகன் தாயே அதுகேள் - பதியோர்க்குப்
பிரியனாவன், பொருள் விரையம், பொருளுண்டு
பயனாம், கூறும் பதமறிந்து விதிகூர்ந்து பகர்ந்து
ரைப்பாய் புவியோர்க்கு மகளே.

பொருள் :- சூரியன் இரண்டாமிடத்தில் நிற்க, அந்த ஜாதகர்க்கு நேத்திர ரோகமுண்டாகும். கன்று, காலி நஷ்டம் ஏற்படும். கடுமையான வார்த்தை களை உச்சரிப்பவனாகவும், முகரோகமுடையவனாகவும் இருப்பான். குடும்பத்தில் உள்ளவர்களுக்குப் பிரியவனாகவும் இருப்பான். பொருள் விரையமுண்டு; பொருளுண்டு. சூரியன் நிலையறிந்து சரியான பலன் கூறுவாய் மகளே.

விளக்கம் :- 'கதிரவன்' என்று அழைக்கப்படுவனாகிய சூரியன் 2ம் இடத்தில் இருந்தால், தீய பலன்கள் உண்டாகும். கார்ணம், அது ஒரு பாவக்கோள். ஆனால், அது ஆட்சி உச்சமாக இருந்தால், மேற்கூறியதற்கு மாறாக நல்ல சுப பலன்கள் உண்டாகுமென அறிக. பகை, நீசமாக இருந்தால், ஷி ஸ்லோகத்தில் கூறியபடியே கெட்ட பலன்கள் உண்டாகுமென அறிக.

3ம் இடத்தில் சூரியன் நின்ற பலன்

பானு மூன்றில் நின்ற பலன் பாலனுக்கு விதி கூற
வேணும், முன்னாள் பதினென்பேர் செய்யும் தூது பக்கு
வமாய் எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - காணும்
சகோதர பீடை, காளைக்கும் மைந்தனுக்கும் பீடை
அன்றும் கடுமொழியன் வீரசூரன், கண்மணியே பதியைப்
பார்ப்பாய் மகளே!

பொருள் :- சூரியன் 3ம் இடத்தில் நிற்க, பாலனுக்கு தீர்க்காயுள் உண்டு. அதே சமயம், சகோதர பீடை, ஜாதகர்க்கும் மைந்தனுக்கும் பீடையுண்டாகும். அதுபோக, அந்த ஜாதகர் கடுமொழி பேசுபவராகவும், வீராதி வீரனாகவும் இருப்பார். இலக்கன பலனைப் பார்த்துச் சரியான பலன் கூறுவாய் மகளே!

விளக்கம் :- சூரியனது வலிமையறிந்து சுப, பாவ பலன்களை நிர்ணயம் செய்ய வேண்டும். அதாவது, சுபமாக இருந்தால் சகோதர விருத்தியென்றும், பாவமாக இருந்தால் சகோதர பீடையென்றும் கூற வேண்டும். அதுபோல், மற்ற காரகத்துக்கும் பலன் கூறிப் பழகி கொள்ளவும்.

சூரியன் 4ம் பாவத்தில் நின்ற பலன்!

பனிப்பகைஞுன் சுகத்திலேற புத்தி மந்தன், ஜன
விரோதன் வாசன், கூறும் - பந்து ஜனயீனன்
மனஸ்தாபன், மாதர் பீடையுண்டு தாயே, அதுகேள்
கணித விதி பிசகாது அரசர் சேவை செய்தன், மகா
டம்பன், அன்றும் - கோள் பெலமு மாராய்ந்து குறித்தி
டுவாய் புவியோர்க்கு மகளே!

பொருள் :- சூரியன் சுகஸ்தானமாகிய 4ம் இடத்தில் ஏற, அந்த ஜாதகர் புத்தி மந்தனாகவும், ஜன விரோதியாகவும் இருப்பான். பந்துக்களைப் பகைத்து வாழ்பவனாகவும், வீண் மனஸ்தாபம் கொண்டவனாகவும், மாதர் பீடையுள்ளவனாகவும் இருப்பான். மேலும், அரசர் சேவை செய்யக் கூடியவனாகவும், மகா டம்பம் அடிப்பவனாகவும் இருக்கக் கூடும். சூரியனது வலியறிந்து சரியான பலன்களைப் புவியோர்க்கு உரைத்திடுவாய் மகளே!

சூரியன் 5ம் பாவத்தில் நின்ற பலன்

கதிரவனு மைந்தில் நிற்கக் காளைக்கு தீரபுத்தி ஞானம்
கூறும் - காமி சௌபாக்கியன் கோபி தூலதேக
முள்ளோன் தாயே, அதுகேள் - பதிமன்னர் பகை
யுமுண்டு பார்தனிலே மாந்திரீகம் செய்வன், அன்றும்
பிதிர் நஷ்டம் புத்திர தோஷம் பிரதேச சஞ்சாரம் மகளே!

பொருள் :- சூரியன் 5ம் இடத்தில் நிற்க, ஜாதகர்க்கு தீர்க்கமான புத்தியும், நல்ல ஞானமும் உண்டாகும். மேலும், வெகு காமியாகவும், சௌபாக்யம் நிறைந்தவனாகவும், அதிக கோபமுள்ளவனாகவும், தூல தேகமுள்ளவனாகவும் இருப்பான். நாடாளும் மன்னர் பகையுமுண்டு. மாந்திரீகமும் செய்வான். இதுபோக, பிதுர் நஷ்டம், புத்திர தோஷம், தேச சஞ்சாரம் போன்ற அசுப பலன்களும் உண்டாகும். கிரக வலியறிந்து சரியான பலாபலன் கூறுவாய் மகளே!

சூரியன் 6ம் பாவத்தில் நின்ற பலன்

அலரியாறில் கொக்கரிக்க அநேக மைந்தர் காமி
ஞானம் வசியள், அன்றும் - அரசர் சேவை அவனி
தன்னில் ஜன விரோதி என்றுரைத்தேன் தாயே, அதுகேள்
சல்லாபமுள்ள சேயும் சமர்த்தாக கடன் வியாபாரஞ்
செய்வன், கூறும் சரச மொழி மாதழகி
சுருதிப்படி யுரைத் தேனடி மகளே!

பொருள் :- சூரியன் 6ம் பாவத்தில் நிற்க, அநேக மைந்தருண்டு. வெகு காமியாகவும், ஞானமுள்ளவனாகவும், ஜனவசிகராகவும் இருப்பான். மேலும், அரசர் சேவை செய்பவனாகவும் இருப்பான். 'ஜனவிரோதி' எனவும் கூறலாம். அதுபோக, மிகவும் சமர்த்தனாக கடன் வியாபாரம் செய்வான். கிரக வலியறிந்து சரியான பலன் கூறுக.

7-8ம் இடங்களில் சூரியன் நின்ற பலன்

வெய்யோனு மேழில் நிற்க வெகு ஜனங்கள் பார்க்கத்
தந்திரம் செய்வன், கூறும் - வேல் விழியாள் துதிக்கை
யுள்ளோன் வேசியுடன் கலந்திருப்பன் தாயே, அதுகேள்
துய்ய வெய்யோன் எட்டில் நிற்க துலைத் திடுவன்
ஜென்மனையும் திசையில், அன்றும் துட்ட லங்காரன்
நட்டன் அக்கினி சோரன் கண்ணோயன் மகளே!

பொருள் :- சூரியன் 7ல் நிற்க, எல்லா ஜனங்களும் பார்க்கும் படியாக தந்திரம் செய்வான். பெண்ணாசை பிடித்தவன். வேசியுடன் கலந்திருப்பான் தாயே!

சூரியன் 8ல் நிற்க, சூரிய திசையில் ஜாதகரது ஆயுள் முடியும். கையில் காசு உள்ளவன் போல் டம்பம் அடிப்பவன். தன நஷ்டம், அக்னி பயம், சோரபுத்தி, கண்நோய் முதலியவற்றால் அவதியுறுவான் மகளே! கிரக வலியறிந்து தோஷ நிவாரண பலன் கூறுவாயே!

9-10 இடங்களில் சூரியன் நின்ற பலன்

மார்த்தாண்டன் நவத்திலேற மைந்தனுக்குப் பிதிர்
நஷ்டப் பயனாம், அன்றும் - மறையோரைத் தூஷிப்பன்
குருத்துரோகி துராங்காரன் தாயே, அதுகேள் பத்தில்
கதிர் நிலைத்திருக்க பாலனுக்கு கூட்டான வித்தை
அன்றும் சிவதரும சிந்தையுள்ளோன் சிவிகை இன்னும்
புரவியுண்டு மகளே!

பொருள் :- சூரியன் 9ம் இடத்திலேற, ஜாதகர்க்குப் பிதுர் நஷ்ட முண்டாகும். மேலும், வேதநூல் அறிந்தவர்களைத் தூஷிப்பவன். குருத்துரோகி; ஈவு இரக்கமில்லாதவன் தாயே. சூரியன் பத்தாமிடத்திலேற பாலனுக்கு பல்வித வித்தைகள் உண்டாகும். மேலும், சிவபக்தி, தரும சிந்தனையுள்ளவன். சிவிகை யோகம், குதிரைகளுமுண்டு மகளே! கிரக வலியறிந்து பேசுக!

11-12ம் இடங்களில் சூரியன் நின்ற பலன்

கதிரோன் பதினொன்றிலேற காளைக்கு மன்னராலே
லாபம், சொல்லும் - காரியங்கள் முடிக்க வல்லோன்
கனமாக தேடிவைப்பன் தாயே, அதுகேள், மார்த்தாண்
டன் வியத்திலேற மைந்தனுக்கு பொருள் விரையம்
பிதிர்கால், கூறும் - மறைவல்லோர் விதிநூலை
மகிழ்ந்துரைப்பாய் புவியோர்க்கு மகளே!

பொருள் :- சூரியன் 11ம் இடத்திலேற, பாலனுக்கு மன்னராலே லாபம் உண்டு. காரியங்களை எளிதில் முடிக்கக் கூடிய திறமையுள்ளவன். அநேக செல்வங்களைத் தேடி வைப்பவன் தாயே!

சூரியன் 12ம் இடத்திலேற, ஜாதகர்க்கு பொருள் விரையமும், நஷ்டமும் உண்டாகும். பிதுர் நஷ்டம் ஏற்படும். முன்னாள் கூறிய மறைநூல் வல்லோரின் நூலைப் பார்த்துச் சரியான பலன்களைப் புவியோர்க்குக் கூறுவாய் தாயே!

விளக்கம் :- சூரியன் ஒரு தீக்கோள் என்பதால், அது 3,6,10,11ம் வீடுகளில் இருந்தால் சுப பலன்களையும், மற்றவிடங்களில் இருந்தால் பாவபலன் களையும் அள்ளி வழங்கும் என மேற்கூறிய பாடல் பகுதிகளில் கூறப் பட்டுள்ளது! ஆனால், சூரியன் ஆட்சி, உச்சம் பெற்று எந்த வீடுகளில் இருந்தாலும் சுப பலன்கள் அதனதன் ஸ்தான பலத்திற் கேற்ப ஏற்படு மென்றும், பகை, நீசமாய் இருந்தால், அவ்வாறே அசுப பலன்கள் உண்டாகு மென அறிக. இதைத்தான் 'கிரக வலிவறிந்து பேசுக' என்று பொருளுரையின் முடிவில் யாம் குறிப்பிட்டுள்ளோம்! இவ்வாறு, சூரியன் வலிவறிந்து பலன் கூறினால், பலன் தப்பாது பலிதாகு மென்பது திண்ணம்!

8. துவாதச பாவங்களில் சந்திரன் நின்ற பலன்

2ம் பாவத்தில் சந்திரன் நின்ற பலன்

வெண்மதியு மிரண்டில் நிற்க வித்தை புத்தி சலரோக
முண்டு, நல்ல வாலிபத்தில் விகாகஞ் செய்வன், விதரணை
யாய் மொழியுரைப்பன் தாயே, அதுகேள் - சன்மார்க்க
முள்ள சீலன் சம்பத்து புத்திரருமுள்ளோன், நல்ல
சந்திர பிம்பமுக முடையான் சுருதிப்படி யுரைத்தேனடி மகளே!

பொருள் :- வெண்மதியாகிய சந்திரன் இரண்டாமிடத்தில் நின்றால், வித்தை, புத்தி, சலரோகமுண்டாகும். நல்ல வாலிப வயதில் திருமணம் செய்வான். மேலும், சன்மார்க்கத்தைப் போதிக்கும் குணமுள்ளவன். அநேக வித சம்பந்து புத்திர யோகமுடையவன். சந்திரனைப் போன்று அழகான முகமுடையவன் என புலிப்பாணி முனிவர் கூறுகிறார்.

விளக்கம் :- சந்திரன் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று சுபர் பார்வையுடன் இருந்தால், மேற்கூறிய சுப பலன்கள் நடைபெறும். பகை, நீசம் பெற்று பாவர் திருஷ்டியுடன் இருந்தால் மேற்கூறியதற்கு நேர் மாறான பலன்கள் நடைபெறுமென அறிக.

3ம் பாவத்தில் சந்திரன் நின்ற பலன்

மதி மூன்றில் நின்றாலும் மைந்தனுக்கு ஆபரணம், அகமும்
நல்ல - மதியுடையோன் மமதையுள்ளோன் மழலைச்
சொல்மேல் விருப்பமுள்ளோன் தாயே, அதுகேள்
மதிபோலே வாழ்ந்திருப்பன் பெண் துணையை யுடை
யவனாம், சேயும், கூறும் - பாக்கியவான் பொறுமை
யுள்ளோன் பாங்கியையு மாதரிப்பன் மகளே!

பொருள் :- சந்திரன் 3ல் இருந்தால், நல்ல ஆபரணாதி வஸ்துக்களை காதில் அணிவான். நல்ல அறிவு கூர்மையுள்ளவன். சற்று கர்வம் பிடித்தவன். மழலை மொழி மேல் விருப்பமுள்ளவன். சந்திரனைப் போல் வாழ்ந்திருப்பான். நல்ல பெண் துணையுடையவன். பாக்கியவான். மிகுந்த பொறுமைசாலி என புலிப்பாணி கூறுகிறார்.

குறிப்பு :- கிரக வலிவறிந்து அதன் சுப பாவ பலன்களைக் கூறுக.

4-5 ஆம் இடங்களில் மதி நின்ற பலன்

மாமதியும் நாலில் நிற்க மைந்தன் பரதார மோகன்
பலநாள், கூறும் - மாடுபரி மனையுண்டு மைந்தனுக்கு
வித்தையுண்டு தாயே, அதுகேள் - மாமதியு மைந்தில்
நிற்க மைந்தனுக்கு பெண் பிரசையுண்டு, அன்றும்
மாநிலத்தில் சீமானாய் மவுடியாக இருப்பனடி மகளே!

பொருள் :- சிறப்பு பொருந்திய சந்திரன் நான்காமிடத்தில் நிற்க பரஸ்திரீ மோகமுள்ளவன். மாடு, குதிரை, மனைகள் உண்டு. வித்தையில் வல்லவன்.

சந்திரன் 5ம் பாவத்தில் நிற்க, அந்த ஜாதகர்க்கு பெண் குழந்தைகள் அதிகம் உண்டாகும். மேலும், அவர் இப்புவியில் சீமானாய், செல்வச் சிறப்புடன் வாழ்வார் என்பதாம்.

விளக்கம் :- சந்திரன் சுப பலம் பெற்றிருந்தால் மேற்கூறியவாறு சுப பலம் உண்டாகும். பலவீனமாக இருந்தால், மேற்கூறியதற்கு மாறான பலன்கள் நடைபெறுமெனக் கொள்க. சுபம், பாவம் கலந்து சந்திரன் சம பலனாக இருந்தால், இன்பம், துன்பம் இரண்டும் கலந்து நடைபெறும். நினைத்ததைச் சாதிக்கக் கடுமையாகப் போராட வேண்டியது வரும்.

சந்திரன் 6 - 8ம் வீடுகளில் நின்ற பலன்

மாமதியுமாறில் நிற்க மைந்தனுக்கு சலபயமும் ரோகம்
அன்றும் மன்னர் பகையுறில் மீளாது மானிலத்தில்
சஞ்சாரன் தாயே, அதுகேள் - மாமதியும் எட்டில் நிற்க
மைந்தன் உயர் வித்தையுள்ளோன் சீலன், அன்றும்
மலக்கழிச்சல் நீர்ப்பயமும் முட்ட க்ஷயரோகன்
குறைவிதியோன் மகளே!

பொருள் :- சிறப்பு பொருந்திய சந்திரன் 6ஆம் இடத்தில் நிற்க, அந்த ஜாதகர்க்கு ஜலபயமும், ரோக பயமும் உண்டாகும். மேலும், அரசனது கோபத்துக்கு ஆளாக நேரிடும். தேசமெங்கும் அலைந்து திரிந்து வயிற்றுப் பசியைத் தீர்ப்பான் என்பதாம்.

சந்திரன் எட்டாமிடத்தில் நிற்க, அந்தக் குழந்தை பல்வித கலைகளில் தேர்ச்சி பெற்று விளங்குவான். அதே சமயம் மலக்கழிச்சல், நீர்ப் பயம், க்ஷயரோகம் முதலியவற்றாலும் அவதியுறுவான் என்பதாம்.

7ம் இடத்தில் சந்திரன் நின்ற பலன்

கனமதியும் ஏழில் நிற்க தனவானாம் தாக்ஷணியன்
போகி அன்றும் காதலியாள் லாபமுள்ளோன் கற்பு
டையான் சஞ்சாரன் தாயே, அதுகேள் - அலை கடலில்
வாசஞ் செய்யும் அரியருளால் சீமானாய் வாழ்வன்
அன்றும் - அகமுடையோன் நிலை சமயம் ஆராய்ந்து
குறி செப்புவாய் மகளே!

பொருள் :- வளர்பிறை சந்திரன் ஏழாமிடத்தில் நின்றால், அந்த ஜாதகர் தனவந்தனாகவும் மற்றவர்களை அன்புடன் ஆதரிப்பவனாகவும் இருப்பான். காதலியால் நல்ல அனுகூலமான பலன்களை அடைபவனாகவும், கற்புடைய

பெண்ணை மனைவியாக அடைபவனாகவும் இருப்பான். திருப்பாற் கடலில் வாசம் செய்யும் திருமால் அருளால் செல்வ சீமானாய் வாழ்வான். இருப்பினும், சந்திரனின் இருப்பிடம், அதன் வலிமையறிந்து சரியான குறி சொல்லுவாய் மகளே!

9 - 10ம் இடங்களில் சந்திரன் நின்ற பலன்

பால்மதியும் நவமேற பாக்கியவான் தெய்வ பக்தன்
காமி, அன்றும் - பரதார மோகமுள்ளோன், புத்திர
பாக்கியம் மெத்த வுண்டாம் தாயே, அதுகேள்
பால்மதியும் பத்தில் நிற்க பலவன் தனலாப
முள்ளோன் பாக்கியன் அன்றும் - பல தீர்த்தமாடச்
செய்வன் பதியறிந்து உரைத்திடுவாய் மகளே!

பொருள் :- வளர்பிறை சந்திரன் பாக்கிய கோணத்தில் ஏற, ஜாதகர் பாக்கியவனாகவும், தெய்வ பக்தி நிறைந்தவனாகவும், காம உணர்வு மிகுந்தவனாகவும் இருப்பான். மேலும், பரஸ்திரீ பிரியன், புத்திர பாக்கியன் நிறைந்தவன் என்பதாம்.

வளர்பிறை சந்திரன் பத்தாமிடத்தில் நிற்க, அந்த பாலகன் தனலாபமுள்ளவன்; பாக்கியவான். மேலும், பல தீர்த்தமாடி உல்லாசமாய் வாழ்வான் என்பதாம். கிரக வலியறிந்து செப்புவாய் மகளே!

11-12ம் இடங்களில் சந்திரன் நின்ற பலன்

மதியன் பதினொன்றி லேற மாதர் வழி ஜெனங்க
ளாலே லாபம், அன்றும் - மாந்திரீகன் போகி சூரன்
மைந்தனுக்குத் தீர்க்காயுள் தாயே, அதுகேள்
மதியன் வியமேறி நிற்க மாதராலே பொரு
ளழியும் நஷ்டம், கூறும் - மதிபெலமும் இருப்பிடமும்
மைந்தனுக்கு கூர்ந்து சொல்லு மகளே!

பொருள் :- வளர்பிறை சந்திரன் 11ல் ஏற, மாதுர் வழி ஜனங்களால் லாபம் உண்டு; மேலும், மாந்திரீக கலையில் வல்லவனாகவும், சுகபோக முள்ளவனாகவும், வீராதி சூரனாகாவும், தீர்க்காயுள் நிறைந்தவனாகவும் இருப்பான் என்பதாம்.

சந்திரன் 12ல் இருக்க, மாதரால் பொருள் நஷ்டம் உண்டாகும். சந்திரனின் வலிமையையும், அதன் இருப்பிட சிறப்பையும் அறிந்து சரியான பலன் கூறுவாய் மகளே!

9. துவாதச பாவங்களில் செவ்வாய் நின்ற பலன்

2ம் இடத்தில் செவ்வாய் நின்ற பலன்

பவுமனிரண்டில் நின்றாலும் பாலனுக்குப் பூமி பொருள்
நஷ்டம், அன்றும் - பாரியாளை பகை செய்வன் சத்தியஞ்
செய்வன் நேத்திர ரோகன் தாயே, அதுகேள் - பவுமன்
தனமாட்சியாகில், பாலனுக்கு அமையு நன்று நன்று

கூறும் பதிபொருளும் பூமி லாபம் பாரியாளும் யோக
மென்றேன் மகளே!

பொருள் :- செவ்வாய் இரண்டாமிடத்தில் நிற்க, பாலனுக்கு பூமி பொருள் நஷ்டம், ஊரார் பகை, பொய் சத்தியம் செய்தல், நேத்திர ரோகம் முதலிய கெட்ட பலன்கள் உண்டாகும். ஆனால், செவ்வாய் ஆட்சி, உச்சமாக இருந்தால், பாலனுக்கு மிகவும் நல்ல பலன்கள் உண்டாகும். நல்ல பொருள் சேர்க்கை, பூமி லாபம், பாரியாளும் யோகம் முதலியவை கைகூடி வரும் என்பதாம்.

3ம் இடத்தில் செவ்வாய் நின்ற பலன்

பவுமன் மூன்றில் நின்ற விதி பாலன் வேத ஆசாரன்
யூமி அன்றும் - சீலன் சகோதர பீடை தீரன் படுகாய
முள்ளோன் தாயே, அதுகேள் கவுதமர் நூல் பிசகாது
காளையவன் மலை புகுவன் ஞானி, அன்றும் காரியங்கள்
மெத்த செய்வன் கனமயிலே நீயுரைப்பாய் மகளே!

பொருள் :- செவ்வாய் மூன்றாமிடத்தில் நிற்க, அந்த ஜாதகர் வேத ஆசாரமுள்ளவனாகவும், யூகியாகவும் இருப்பார். அதே சமயம், சகோதரர் பீடை, படுகாயம் முதலிய துர்ப் பலன்களும் ஏற்படும். கவுதமர் நூல்படி அந்த ஜாதகர் மலை புகுந்து ஞானியாக வாழ்ந்து பல விசேஷமான காரியங்களை செய்து புகழ் வாங்கவும் கூடும். கனமயிலே கிரக நிலை யறிந்து கச்சிதமாய் பலன் கூறுவாயே!

4-5ம் இடங்களில் செவ்வாய் நின்ற பலன்

சுகத்திலேயும் சேய் நிற்க சோராக்கினி பயம் நஷ்டம்
துவேஷி, அன்றும் ஜனப் பகைஞன் தற்புகழ்ச்சி
சா ருமயலார் துவேஷி தாயே, அதுகேள், அகமைந்துள்
சே ய நிற்க அக்கிரம மத்தோன் கோபி தனநாசன்
அன்றும் அருமையுள்ள புத்திர நாசம் நீசக்கன்மம்
தானே செய்வன் மகளே!

பொருள் :- சுகஸ்தானமாகிய 4ம் இடத்தில் செவ்வாய் நிற்பது நல்லதல்ல. சோரபுத்தி, அக்கினி பயம், பொருள் நஷ்டம், பந்து துவேஷி, ஜனப் பகைஞன், தற்புகழ்ச்சி, அயலார் துவேஷி போன்ற அசுப பலன்கள் ஏற் படும்.

ஐந்தாமிடத்தில் புத்தி ஸ்தானத்தில் செவ்வாய் நிற்க, முன் கோபம், தன நாசம், புத்திர தோஷம், 'நீச கர்மம்' செய்தல் போன்ற அசுப பலன்களை ஜாதகர் அனுபவிப்பார் என்பதாம். ஆனால் செவ்வாய் ஆட்சி, உச்சமாக இருந்தால், ஷ அசுப பலன்கள் நீங்கி, நற்பலன்கள் உண்டாகுமென கூறுக.

6-7-8ம் இடங்களில் செவ்வாய் நின்ற பலன்

கொடிய சேயும் ஆறில் நிற்க காமி பிரசித்தன் பசி
யுள்ளோன், அன்றும் - கோலாகலன் சேனாபதி
வெற்றி கொள்வன் சத்துரு நாசன் தாயே, அதுகேள்
கொடிய சேயும் ஏழு எட்டில் குறியாக நின்றிருந்தால்

சேய்க்கு கூறும் கொடிய சிந்தை காரியந்தன்
களத்திர நஷ்டம் பொருளழிவு மகளே!

பொருள் :- கொடிய செவ்வாய் ஆறில் நிற்க, நற்பலன், தீய பலன் இரண்டும் உண்டு. காமவெறி, தற்புகழ்ச்சி செய்தல், பசிக் கொடுமை போன்ற அசுப பலன்களும், சேனாதிபதியாகுதல், குதூகலமாக இருத்தல், சத்துரு ஜெயம் போன்ற சுப பலன்களும் ஏற்படும்.

ஆனால், கொடிய செவ்வாய் 7,8ம் இடங்களில் இருந்தால், கொடுமையான சிந்தனையும், கொடிய காரியங்களைச் செய்வதில் ஈடுபடுதலும், களத்திர நஷ்டமும், பொருள் அழிவும் உண்டாகும். செவ்வாய் ஆட்சி, உச்சமாயிருந்தால் தோஷமில்லை மகளே!

9ம் இடத்தில் செவ்வாய் நின்ற பலன்

கொடிய சேயும் நவமேற குமரன் குருதுவேஷி செல்வம்
நாசம், அன்றும் - கோள் பகைஞன் கர்மி துக்கன்
வீண் அலைச்சல் சஞ்சாரன் தாயே! அதுகேள் -
குழந்தை பெற்றோர் நாசமாவார் கூறும் சகோதர
நஷ்டம் ஏகன் அன்றும் - குவலையத்தோர் பாவி
யென்றே கூறிடுவார் நிலையறிவாய் மகளே!

பொருள் :- கொடிய செவ்வாய் பாக்கியம் ஏற, அக்குழந்தை குரு துவேஷியாகவும், தன நாசம் செய்பவனாகவும் இருக்கும். மேலும், கோள் சொல்லி திரிவான்; கர்மி; துக்கன்; வீண் அலைச்சல் அலைவான். மேலும், குழந்தையின் பெற்றோர்க்கு தோஷமுண்டாகும்; சகோதர நஷ்டமும் ஏற்படும். இப்புவியிலுள்ளோர் அதை ஒரு பாவி யென்றே கூறுவார் என்பதாம். கிரக வலியறிந்து கூறுவாய் மகளே!

10-11ம் இடங்களில் செவ்வாய் நின்ற பலன்

பவுமன் பத்திலேறி நிற்க பாக்கியவா னாசாரன்
சூரன் அன்றும் பார்மன்னர் சேவையுள்ளோன்
புத்திர பாக்கியம் பூமிதானம் தாயே, அதுகேள் பவுமன்
பதினொன்றிலேற பிரலாபம் நல்வாக் கோன்காமி
அன்றும் பலவிதத்தால் லாபமுண்டு பாலனுக்கு
எடுத்துரைப்பாய் மகளே!

பொருள் :- செவ்வாய் பத்தாமிடமாகிய தொழில் ஸ்தானத்தில் நிற்பது நல்லது. பாக்கியவான்; ஆசாரன்; சூரன்; பார்மன்னர் சேவையுள்ளோன்; புத்திர பாக்கியம், பூமி - தனம் விருத்தியுடையோன் என்பதாம்.

செவ்வாய் 11மிடமாகிய லாபஸ்தானத்தில் நிற்பதும் நல்லது தான். பலவழிகளில் லாபம் நல்வாக்குடையவன், காமி என்பதாம். செவ்வாய் பலமாய் இருந்தால், ஷே பலன்கள் சித்திக்கும் எனக் கூறுக.

12மிடத்தில் செவ்வாய் நின்ற பலன்

பவுமன் வியமேறி நிற்க பாரி நஷ்டம் கால்
முடவன் தரித்திரன், அன்றும் - பாலனுக்கு நேத்திர
ஏச்சம் பாரிலவமானங் கொள்வன் தாயே, அதுகேள் -
பவும நிலை யிருப்பிடமும் பாபர் சுபர் பெலமாய்ந்து,

கூறும் - பருவமுள்ள பெண்ணழகி புவியோர்க்கு உரைத்
திடுவாய் மகளே!

பொருள் :- செவ்வாய் 12மிடத்தில் நிற்க, பொருள் நஷ்டம், கால் ஊனமாகுதல், தரித்திர நிலைமை ஏற்படுதல், கண் நோய், இப்புவியில் அவமானமடைதல் போன்ற அசுப பலன்கள் உண்டாகும். செவ்வாயின் நிலையறிந்து அதன் இருப்பிட சிறப்பறிந்து பாபர், சுபர் பலமாய்ந்து நுட்பமாய் யோசித்துப் பலன் கூறுவாய் மகளே!

10. துவாதச பாவங்களில் புதன் நின்ற பலன்

2-3ம் இடங்களில் புதன் நின்ற பலன்

கணக்கன் ரெண்டில் நின்ற பலன் கவியில் வல்லோன்
வாலிபத்தில் விவாகம், அன்றும் - கவியில் விடுகதை
கூர்வன் முகவசியன லங்காரன் தாயே, அதுகேள் - கணக்
கன் மூன்றில் நின்றாலும் கலை வல்லோரிடத்தில்
கேள்வி கேட்பன், அன்றும் - காளை சகோதர நட்பும்
தாக்ஷண்யன் மைந்தனடி மகளே!

பொருள் :- கணக்கன் என்று அழைக்கப்படும் புதன் இரண்டாமிடத்தில் நிற்க, அந்த ஜாதகர் கவியில் வல்லவராகவும், வாலிப விவாகம் செய்பவராகவும் இருப்பார். கவியாலே விடுகதை கூறும் ஆற்றல் உள்ளவன்; முகவசியன்; ஆள் அலங்காரன் தாயே!

கணக்கன் மூன்றில் நின்றாலும், கனல் வல்லுநர்களை எதிர்த்து கேள்வி கேட்பவன்; ஆனால், சகோதர நஷ்டமுண்டு; ஈகை குணமுடையவன் தாயே!

4-5மிடங்களில் புதன் நின்ற பலன்

மாலவனும் நாலிலேற மாசமர்த்த சுயகாரி வித்வான்
அன்றும் - மாதர் பீடை தீர்க்காயுளன் சௌபாக்கிய
னென்றுரைத்தேன் தாயே, அதுகேள் - மாலவனு மைந்தி
லேற மனதுக்கண் அற்பாயுளன் ரோகி, அன்றும்
மைந்தனலுத்த வாக்கன் சோம்பல் மாநிலத்தில்
விரோதஞ் செய்வன் மகளே!

பொருள் :- புதன் நான்காமிடத்தில் ஏறி நிற்பது நல்லது. ஜாதகர் மகா சமர்த்தனாகவும், தன் சுய பலத்தில் நிற்பவராகவும், வித்வானாகவும் இருப்பான். மாதர் பீடையுண்டு என்றாலும், ஜாதகர்க்குத் தீர்க்காயுள் உண்டு. நல்ல சௌபாக்கியமும் உண்டு.

புதன் ஐந்தாமிடத்தில் நிற்பது அவ்வளவு நல்லதல்ல. மனசஞ்சலம் பிடித்தவன், அற்பாயுளன், ரோகி; துஷ்ட வார்த்தை பேசுபவன்; சோம்பலுடையவன்; பலரை பகைத்து வாழ்பவன் என்பதாம். கிரக வலியறிந்து பலாபலன் கூறவும்.

6ஆம் இடத்தில் புதன் நின்ற பலன்

மாலவனு மாறில் நிற்க மாமன் விர்த்தி மன்னர் சேவை
வாசன், அன்றும் - மாநிலத்தில் கலைகள் கேட்பன்

மந்த புத்தி அற்ப ரோகி தாயே, அதுகேள் - மண்ட
லத்தோர் சொன்ன விதி மைந்தனுக்கு புத்திர தோஷம்
நீச்சம், அன்றும் - கோள்நிலையை ஆராய்ந்து குறித்தி
டுவாய் உச்சம் நீச்சம் மகளே!

பொருள் :- புதன் ஆறாமிடத்தில் நிற்க, மாமன் விருத்தி, மன்னர் சேவை, மாநிலத்தில் கலைகளைக் கேட்டு ரசிப்பவன் என்பதாம். மந்த புத்தி, அற்பரோகி, புத்திர தோஷம் நிறைந்தவன் என்பதாம். புதன் பலமறிந்து சுப, பாவ பலன்களை சரியாகக் கூறுவாய் மகளே!

7-8ம் இடங்களில் புதன் நின்ற பலன்

மாலவனும் ஏழில் நிற்க மைந்தனுக்கு இராஜ யோகம்
தனவான், அன்றும் - பாலனுக்கு புத்திர சோபம் நல்ல
தாரம் அல்ப போகி தாயே, அதுகேள் - மாலவனும்
யெட்டிலேற மன்னர் சேவை அவமான ரோகி,
அன்றும் - மாபெலவான் தீர்க்காயுளன் மன்னனுக்கு
மன்னனாவன் மகளே!

பொருள் :- புதன் ஏழாமிடத்தில் நிற்க இராஜ யோகமும், தனயோகமும் கிட்டும். அதே சமயம், புத்திர சோகம், நல்ல தாரம், அற்ப போகி போன்ற பலன்களும் ஏற்படும்.

புதன் அஷ்டமத்தில் ஏற, மன்னர் சேவை செய்பவன்; அவமான ரோகியாவான். அதே சமயம் மிகுந்த பலவானாகவும், தீர்க்காயுள் உடையவனாகவும், மன்னர்க்கு மன்னனாகவும் ஆக வாய்ப்பு உண்டு. புதன் பலமாய்ந்து சரியான பலன் கூறவும்.

9ம் இடத்தில் புதன் நின்ற பலன்

மாலோனும் நிதியேற மாசமர்த்தன் வித்தையுள்ளோன்
தர்மன், அன்றும் - மாநிலத்தில் தனவானாம் மகிழ்
வுடையோ னென்றுரைத்தேன் தாயே, அதுகேள் - மைந்தனுக்கு
மாமன் துணை பிதிர் பொருளும் கீர்த்திகளுமுண்டு, அதை -
கோள்நிலையால் ஆராய்ந்து குறித்திடுவாய் புவியோர்க்கு மகளே!

பொருள் :- புதன் 9ம் இடத்தில் நிற்க, அந்த ஜாதகர் மாசமர்த்தனாகவும், பல்வித கலைகளில் கெட்டிக்காரராகவும், தர்ம சிந்தனை நிறைந்தவராகவும் இருப்பார். மேலும், இப்புவியில் பெரிய தனவந்தராகவும், மகிழ்வுடைய வராகவும் இருப்பார். மாமன் ஆதரவு, பிதுர் பொருள் சேர்க்கை, கீர்த்திகளு முண்டு. கிரக வலியறிந்து சரியாக பலன் கூறுவாய் மகளே!

10-11ம் இடங்களில் புதன் நின்ற பலன்

கணக்கன் பத்திலேறி நிற்க கவியில் வல்லோன், ஆசாரன்
சத்தியன், அன்றும் - கடவுள் பக்தி வைராக்கியன் கனத்த
பொருளுண்டாகுந் தாயே, அதுகேள் - கணக்கன் பதினொன்றி
லேற கவிதையிலும் கணக்கினிலும் லாபம், அன்றும் -
காளைக்கு ஆளடிமை கீர்த்தியுள்ளோனென்றுரைத்தேன் மகளே!

பொருள் :- புதன் பத்தாமிடத்தில் நிற்க, ஜாதகர் ஒரு பெரிய கவிஞராக திகழ்வார். மேலும், சத்திய நெறி தவறாது ஆசார அனுஷ்டானங்களை

செய்து கடவுள் பக்தியுடன், ஒரு வைராக்கிய சீலராக வாழ்வார். மிகுந்த பொருள் சேர்க்கையு முண்டாகும்.

புதன் பதினொன்றாமிடத்திலேற கவிதை எழுதுவதிலும் கணக்கிலும் கெட்டிக்காரராகத் திகழ்வார். மேலும் பல மனிதர்களை வேலைக்கு அமர்த்தி, மிகுந்த புகழுடன் வாழ்வார் என்பதாம்.

12ம் இடத்தில் புதன் நின்ற பலன்

கணக்கன் வியமேறி நிற்க கடலினின்றும் பேரஞ் செய்வன்
முடக்கன் - கடன் வாங்கி சமர்த்து சொல்வன் கிரானி
குய்ய ரோகஞ் சொன்னேன் தாயே, அதுகேள் - பிணிக்குள்
ளோன் கலகஞ் செய்வன் பந்து ஜன யீனமாகும் பயனால்
கூறும் - பசும் பொன் மேனியுடையாளே பதிநிலையை
கூர்ந்து செப்பு மகளே!

பொருள் :- புதன் விரையஸ்தானமென்னும் 12ம் இடத்தில் நிற்க, கடல் கடந்து வியாபாரம் செய்வான். கடன் வாங்கி சமர்த்தனாக வாழ்வான். இடை இடையே சில குதர்க்கங்கள் செய்வான். வாதரோகத்தால் அவதியுறுவான். சில சமயம் ஏட்டிக்கு போட்டியான சில காரியங்கள் செய்வான். கலகம் புரிவான். இதன் விளைவாக, பந்து ஜனங்களின் விரோதத்தை சம்பாதிப்பான் என்பதாம். அழகிய பொன் போன்ற மேனியை யுடைவளே, பதிநிலை ஆய்ந்து சரியான பலன் கூறுவாய்.

11. துவாதச பாவங்களில் குரு நின்ற பலன்

2ம் இடத்தில் குரு நின்ற பலன்

இரணியனு மிரண்டில் நிற்க குரு பக்தி வாய்ச்சாலன்
வித்தை, அன்றும் - குவலயத்தில்பேர் விளங்குவான்
சுக போகனென்றுரைத்தேன் தாயே, அதுகேள் - வாலிபத்
தில் சோபனமும் பாக்கியவான் - மன்னனாலே லாபம்
கூறு - பதி நிலையும் குரு நிலையும் பார்த்து புவியோர்க்கு
ரைப்பாய் மகளே!

பொருள் :- குரு இரண்டாமிடத்தில் நின்றால், அந்த ஜாதகர் குரு பக்தி நிறைந்தவர். வாய்ச்சாலன்; வித்தையில் வல்லவர்; குவலயத்தில் பேர் புகழுடன் வாழ்பவர்; நல்ல சுகபோகன். வாலிப வயதிலேயே சோபனம் உண்டாகும். பாக்கியவான்; மன்னர் ஆதரவு பெற்றவர் என்பதாம். இரண்டாமிடத்தின் நிலையையும் குரு நிலையையும் ஆராய்ந்து சரியான பலன் கூறுவாய் மகளே!

3ம் இடத்தில் குரு நின்ற பலன்

மூன்றில் குரு பதியேற முடிமன்னர் சேவையுள் ளோன்
ஞானன் அன்றும் மூவர் பூஜை செய்வன் ஜென்மம் மாநி
லத்தில் கீர்த்தி கொள்வன் தாயே, அதுகேள் - தோன்றும்
பொருள் நிலைக்காது தொல் புவியில் விதி தீர்க்கம் சேய்க்கு
கூறும் - துறைமுகஞ் சென்றாலும் வீணாய்த் திரும்பிடுவன்
ஜென்மனுந்தான் மகளே!

பொருள் :- மூன்றாமிடத்தில் குரு நிற்க, நாடாளும் மன்னர்க்கு சேவை செய்வான்; ஞானமுள்ளவள்; மும்மூர்த்திகளின் பூஜை செய்வன்; புவியில் புகழுடன் வாழ்வான்; ஆனால் கைக்குக் கிட்டிய பொருள் தங்காது விரயமாகும். ஆயுள் பலம் தீர்க்கமுண்டு. துறைமுகம் சென்றும் சரியான வியாபாரம் இன்றி திரும்பவும் வாய்ப்புண்டு என்பதாம்.

விளக்கம் :- மூன்றாமிடம் என்பது அசுப ஸ்தானங்களில் ஒன்று. மேலும் குரு 3, 6, 8, 12ல் இருந்தால் குருதோஷம் என்பதும் உண்மை. அதே சமயம், குரு ஒரு பரிபூரண சுபக் கிரகமாகும். எனவேதான், முனிவர் குரு 3ம் இடத்தில் இருந்தால், சுப பலன், பாவ பலன் இரண்டும் கலந்து நடைபெறும் என்கிறார்.

4ம் இடத்தில் குரு நின்ற பலன்

தேவகுரு நாலிலேற தேசத்திலதிகாரியாவன், அன்றும்
தீர்க்காயுளன் சங்கீதத்தில் புகழ் வித்தை யுள்ளவனாம்
தாயே, அதுகேள் - மூவர்களால் அமைந்தவிதி மேதினியில்
நிலை கூர்ந்து செப்பு அன்றும் - முடிமன்னர் சேவையுள்ளோன்
மாடகூட இராஜயோகம் மகளே!

பொருள் :- தேவகுரு 4ம் இடத்தில் நிற்க, தேசத்தில் அதிகாரியாவான். தீர்க்காயுள் உண்டு. சங்கீத கலையில் வல்லவன். அதிக புகழ், கீர்த்தி நிறைந்தவன். வித்தையில் வல்லவன். மேலும் முடி மன்னர் சேவையுள்ளவன். மாட கூட இராஜயோகம் உண்டு தாயே! கிரக வலியறிந்து சரியான பலன் கூறுக.

5-6ம் இடத்தில் குரு நின்ற பலன்

பூபதியுமஞ்சிலேற பிரபுக்கள் சேவை கீர்த்தி புனிதன்
கூறும் - பெண் பிரசை விருத்தியுண்டு, பாங்கினேசமுள்ள
வனாம் தாயே, அதுகேள் - பூபதியும் ஆறில் நிற்க பகை
விரோதன் பொருள் நட்டன் களைப்போன், அன்றும் -
பொன்னுமுண்டு சஞ்சாரன் பதமறிந்து செப்பிடுவாய்
மகளே!

பொருள் :- குருபரன் ஐந்தாமிடத்தில் நிற்க, பிரபுக்கள் சேவை, செல்வாக்கு, கீர்த்தி, புகழ், புனிதத்தன்மை போன்ற சுப பலன்கள் உண்டாகும். பெண் குழந்தை விருத்தியாகும். எல்லோரையும் அன்புடன் ஆதரிப்பவன் என்பதாம்.

குருபரன் ஆறாமிடத்தில் நிற்க, சத்ரு பயம், பொருள் நஷ்டம், ஜன விரோதம், மனச் சோர்வு முதலியன உண்டாகும். அதே சமயம், பொன் பொருள் சேர்க்கையுண்டு. கிரகவலி, இருப்பிட வலியறிந்து கூறுவாய் மகளே!

7-8ம் இடங்களில் குரு நின்ற பலன்

பூபதி யேழில் நிற்க புனிதன் காமி ராஜ கன்னியால் லாபம்
அன்றும் - புரவி கன்று காலியுண்டு யேகதார னென்றுரைத்தேன்
தாயே, அதுகேள் - பூபதியுமெட்டில் நிற்க புத்தி யுக்தி
தீர்க்காயுளன் கீர்த்தி, அன்று - பொன்னன் நிலை விதி
கூர்ந்து புவியோர்க் குரைத்திடுவாய் மகளே!

பொருள் :- குரு ஏழில் நிற்க, ஜாதகர் மிகவும் உத்தமனாகவும், காம உணர்வு நிறைந்தவனாகவும் இருப்பான். ராஜ கன்னியால் லாபமுண்டாகும். குதிரை, கன்று காலியுண்டு. ஏகதார விரதமுள்ளவன் தாயே!

குரு எட்டில் நிற்க, புத்தியுக்தியுண்டு; தீர்க்காயுளும் கீர்த்தியுமுண்டு. பொன்னன் நிலையறிந்து கூறுவாய் மகளே!

9-10ம் இடங்களில் குரு நின்ற பலன்

மன்னன் நவமேறி நிற்க ஆசாரன் ராஜமன்னன் ஞானி
அன்றும் - மன்னனாலே லாபமுள்ளோன் மாநிலத்தில்
துவங்கி நிற்பன் தாயே, அதுகேள் - மன்னன் பத்தில்
நின்றாலும் மாசமர்த்தன் வாகனங்களுள்ளோன்,
அன்றும் - மாதேவரருளுமுள்ளோன் மன்னர் சேவை
யுள்ளவனாம் மகளே!

பொருள் :- குருபரன் பாக்கிய கோணமேறி நிற்க, ஜாதகர் ஒரு ஆசார சீலனாகவும், ராஜமன்னனாகவும், ஞானியாகவும் இருப்பார். பாராளும் மன்னனாலே லாபமுண்டு. மாநிலத்தில் சிறப்புற்று நிற்பார் தாயே!

பொன்னவன் பத்தாமிடமேற, மாசமர்த்தன், வாகன விருத்தியுடையோன். தேவர்களுடைய அருளுமுள்ளோன். மன்னர் சேவையுள்ளவனாம் தாயே!

11-12ம் இடங்களில் குரு நின்ற பலன்

மன்னன் பதினொன்றிலேற, மன்னர் சேவை வாகனங்
களுள்ளோன், அன்றும் - மன்னராலும் வித்தையாலும்
மாநிலத்தில் பொருள் சேரும் தாயே, அதுகேள் -
மன்னன் வியமேறி நிற்க மனமகிழும் சயனசுகம்
வல்லோன், அன்றும் மனதின்படி முடிக்க வொட்
டான் மாமயிலே கூர்ந்து சொல்லு மகளே!

பொருள் :- குரு 11ல் நிற்க, மன்னர் சேவை, வாகன விருத்தியுண்டு. மன்னராலும், வித்தையாலும் பொருள் சேரும் தாயே!

குரு 12ல் நிற்க, மனமகிழும் சயனசுகம் உண்டு. ஆனால் நினைத்தபடி நடக்காது தாயே! கிரக வலியறிந்து கூறுவாய் மகளே!

12. துவாதச பாவங்களில் சுக்கிரன் நின்ற பலன்

2 - 3ம் இடங்களில் சுக்கிரன் நின்ற பலன்

வெள்ளிரெண்டில் நின்ற பலன் வெள்ளி முத்து பொன்
நகைகள் கொள்வன், அன்றும் - வாலிபத்தில் விவாகமுள்
ளோன் பரியாசன கவிப்புலவன் தாயே, அதுகேள்
வெள்ளி மூன்றில் நின்ற பலன் விரகன் கோபி தாக்ஷண்
யன் கலகன், அன்றும் - வேல் விழியான் போகி
யவன் அலங்காரன் முத்து அணிவோன் மகளே!

பொருள் :- சுக்கிரன் இரண்டாமிடத்தில் நிற்க, வெள்ளி, முத்து, பொன் நகைகள் அணியும் யோகமுண்டாகும். வாலிபத்தில் விவாகம் செய்வான்; கவியில் வல்லவன் தாயே!

சுக்கிரன் 3ம் இடத்தில் நிற்க, விரகதாபமுள்ளவன்; கோபக்காரன்; தாட்சண்ய குணமும் உண்டு; கலகக்காரன் தாயே! மேலும் பெண் மோக முள்ளவன்; அலங்காரப் பிரியன். முத்து ஆபரணம் அணிவானடி தாயே!

4-5ம் இடங்களில் சுக்கிரன் நின்ற பலன்

ஒத்தக் கண்ணன் நாலிலேற உப்பரிகை ஆளடிமை
அழகன், அன்றும் - உத்தமனாம் தர்ம மித்திரன் ஓதும்
வித்தை கியானமுள்ளோன் தாயே, அதுகேள் - ஒத்தைக்
கண்ணன் அஞ்சில் நிற்க உப்பரிகை பிரசங்கன்
மித்திரன், அன்றும் - உள்ளூராளும் வேந்தனுக்குத்
தோழனாக இருப்பன்டி மகளே!

பொருள் :- 'ஒத்தக் கண்ணன்' என்றழைக்கப்படும் சுக்கிரன் நான்கா மிடத்தில் நிற்க, அடுக்கு மாளிகை கட்டி வாழ்வன். ஆளடிமையுண்டு. கவர்ச்சி மிகுந்த அழகேசன் தாயே! மேலும், தர்ம சிந்தனை, வித்தை, ஞான முள்ளவன்; மகா உத்தமனடி மகளே!

ஒத்தக்கண்ணன் ஐந்திலேற, அடுக்கு மாளிகையில் வாழ்வான் பிரசங்கம் செய்வதில் மகாகெட்டிக்காரனாகத் திகழ்வான். உள்ளூராளும் வேந்தனுக்குத் தோழனாக இருப்பானடி தாயே!

6-7ம் இடங்களில் சுக்கிரன் நின்ற பலன்

வெள்ளி ஆறில் நின்ற பலன் வெகுகாமி துக்கன் சத்துரு
நாசன், அன்றும், வெகு புசிப்பன் பயமுடையோன்
வேல் விழியன் பகை கொள்வன் தாயே! அதுகேள் -
வெள்ளியேழில் நின்ற பலன் வெகுகாமி அதிரூபன்
மித்திரன், அன்றும் - வேல் விழியாள் துதிகையுள்
ளோன் வேசியுடன் கலந்திருப்பன் மகளே!

பொருள் :- சுக்கிரன் ஆறாமிடத்தில் நிற்க, வெகு காமவெறி பிடித்தவன். துயரம் நிறைந்தவன். சத்துரு நாசன்; அதிகமாக சாப்பிடுபவன்; பயம் நிறைந்தவன்; பெண் விரோதமுள்ளவனடி தாயே!

சுக்கிரன் ஏழாமிடத்தில் நிற்க, அதிக காமவெறி பிடித்தவன்; நல்ல அழகுடையவன்; ஜனவசியன்; பெண் மோகமுள்ளவன்; வேசியுடன் கலந்திருப்பனடி மகளே!

குறிப்பு :- சுக்கிரன் 7ல் நிற்பது நல்லதல்ல. காரகர்கள் தங்கள் பாவங்களை நாசம் செய்வர் என்பது ஓர் விதி! இந்த விதிக்குட்பட்டே, 7மிட சுக்கிரன் பெண் மோகத்தையும், வேசித்தனத்தையும் உருவாக்கும் என புலிப்பாணி மறைமுகமாகக் கூறுவதைக் காண்க.

8ம் இடத்தில் சுக்கிரன் நின்ற பலன்

வெள்ளியெட்டில் நின்ற பலன் விதி தீர்க்கம் ராஜ
யோகம் பெலவான், அன்றும் - வேசியின் மேல், விருப்பங்
கொள்வன் வெள்ளி செய்ய பிரமை கொள்வன் தாயே,
அதுகேள் - தள்ளிடுவன் களத்திரத்தை தரை நஷ்டம்
கன்று காலி நஷ்டம்,அன்றும் - தார் வேந்தனால் அவ
மானன் தாய் நூலை எடுத்துரைப்பாய் மகளே!

-

பொருள் :- சுக்கிரன் அஷ்டமத்தில் நிற்க, ஆயுள் பலம் தீர்க்கமுண்டு. இராஜயோகம் சித்திக்கும். பலம் வாய்ந்தவன். ஆனால், வேசி மேல் மோகம் கொள்பவன். வெள்ளி செய்ய பிரமை கொள்வானடி தாயே! மேலும், தன் மனைவியை விரட்டிடுவன்; பூமி பொருள், கன்று காலி நஷ்டமுண்டு; பாராளும் மன்னராலே அவமானமுண்டு தாயே!

விளக்கம் :- சுக்கிரன் ஒரு சுபக் கோள் என்பதாலும், 8மிட சுக்கிரன் இராஜயோக தரும் என்பதாலும், பாடலின் ஆரம்பத்தில் சுப பலன்களைக் கூறுகிறார் முனிவர்! பொது விதிப்படி, எட்டாமிடம் துர்ஸ்தானமாகும். 8ல் சுக்கிரன் இருந்தால், சுக்கிரன் தோஷம் என்பது சிறப்பு விதி. இந்த இரண்டு அமைப்புகளால் பாடலின் பிற்பாதியில் அசுப பலன்களை முனிவர் கூறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோக, சுக்கிரனின் வலிமையையும், அதில் அமைந்துள்ள மற்ற யோகங்களையும் கணக்கிட்டு பார்த்துத்தான், சுக்கிரன் ஒரு சுபரா (அ) பாவரா என்பதை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதை நினைவில் கொள்க.

9ம் இடத்தில் சுக்கிரன் நின்ற பலன்

சுங்கன் நவமேறி நிற்க சொற்றவறான் தேவ பக்தி
தனவான், அன்றும் - சுய கவிதை தீர்க்காயுளான் காதலி
யாள் அற்பமுள்ளோன் தாயே, அதுகேள் - கோள்
நிலையின் உச்ச நீசம் குறிப்பறிந்து புவியோர்க்குச்
சொல்ல, கூறும் - குரு பக்தி தேவ பக்தி குணம் தவம்
ஒழுக்கமுள்ளோன் மகளே!

பொருள் :- சுக்க்ரன் 9ம் இடத்தில் நிற்க, சொல் தவறாது நடப்பவன்; தெய்வ பக்தி நிறைந்தவன்; தனவான்; சுயகவிதை எழுதும் ஆற்றலுள்ளவன்; தீர்க்காயுளன்; காதலி அற்பமுள்ளவன்; சுக்கிரனின் உச்ச, நீச்ச நிலையறிந்து, புவியோர்க்கு சரியாகக் கூறுவாய் மகளே! குரு பக்தி, தெய்வ பக்தி, நல்ல குணம், தர்ம சிந்தனை, ஒழுக்கம் நிறைந்தவனடி தாயே!

10-11ம் இடங்களில் சுக்கிரன் நின்ற பலன்

சுங்கன் பத்தில் ஏறி நிற்க சுருதிமொழி தவறாமல் நடப்
போன், அன்றும் - சுகிர்தன் கல்வி தீர்க்காயுளன்
சுய கவிதை காடியுண்டு தாயே, அதுகேள் - சுங்கன்
பதினொன்றிலேற சூரன் வஞ்சன் அற்பாயுள் காமி
அன்றும் - சுகமாக புசித்திடுவன் சங்கீதத்தால் லாப
முள்ளோன் மகளே!

பொருள் :- சுக்கிரன் பத்தாமிடத்தில் நிற்க, சொன்ன சொல் தவறாமல் நடப்பவன். பெண் சுகப் பிரியன். கல்வி, தீர்க்காயுள் நிறைந்தவன். சுய கவிதை எழுதும் ஆற்றல், பொன் பொருள் சேர்க்கையுண்டு தாயே!

சுக்கிரன் 11ல் நிற்க, அதிசூரன், வஞ்சகம் நிறைந்தவன். அற்பாயுள் உள்ளவன்; காமவெறி பிடித்தவன்; மேலும், சுகமாக புசிப்பதில் ஆர்வம் உள்ளவன். சங்கிதத்தால் லாபமுள்ளவனடி மகளே!

12ம் இடத்தில் சுக்கிரன் நின்ற பலன்

சுங்கன் வியமேறி நிற்க சயன சுகன் பாக்கியவான்
அமைச்சன், அன்றும் - சலப் பகைஞன் மடந்தைக்

கள்ளன் செலவு செய்வனென்றுரைத் தேன் தாயே,
அதுகேள் - தானம் செய்வன் அன்னம் சொர்ணம் தவறாது
சுருதிமொழி பின்னும், கூறும் - தையலர்க்கே பாதி
பொருள் தாரை வார்த்து சுகிப்பனடி மகளே!

பொருள் :- சுக்கிரன் 12ம் இடத்தில் நிற்க, சயன சுகம் அனுபவிப்பான். பாக்கியவனாகவும், அமைச்சனாகவும் இருக்கக் கூடியவன். ஆனால், ஜலத்தால் மாரகமும், பெண் மோகமும் உடையவன். வீண் செலவு செய்பவன். தானம் செய்யும் குணம் படைத்தவன். தான் உழைக்கும் பணத்தில் பாதியை வேசிகளுக்குக் கொடுத்துச் சுகித்திருப்பனடி தாயே!

விளக்கம் :- 12மிடமென்பது ஒரு மோசமான துர்ஸ்தானமாகும். அதே சமயம், சுக்கிரன் 12ல் இருந்தால் நன்மை செய்வார் என்ற சிறப்பு விதியும் உள்ளது. எனவே, 12ல் இருக்கும் சுக்கிரன் நன்மை, தீமை இரண்டும் கலந்த பலன்களை செய்யும் என்பது முனிவர் கூற்று!

13. துவாதச பாவங்களில் சனி நின்ற பலன்

2-3ம் இடங்களில் சனி நின்ற பலன்

முடவனிரண்டில் நின்றாலும் மதலைக்கு களத்திர
மெத்த போகி, அன்றும் - மந்த புத்தியுடைய வஞ்சன்
தந்தரோகி பண்டு நஷ்டம் தாயே, அதுகேள் - முடவன்
மூன்றில் நின்றாலும் மூத்தோனுக்கும் தனக்கும் பீடை
காமி, அன்று - முடவன் நீசகீர்த்தியன் மைந்தன் சகோ
தரர் கன்னி மகளே!

பொருள் :- சனி இரண்டாமிடத்தில் நிற்க, ஜாதகரது களத்திரம் அதிக விரகதாபமுள்ளவளாக இருப்பாள். மந்த புத்தி, வஞ்சகம் நிறைந்தவனாக இருப்பான் அந்த செல்வன். தந்த ரோகம், பொருள் நஷ்டம் முதலியவற்றால் அவதியுறுவான். கால் ஊனனடி தாயே!

சனி மூன்றாமிடத்தில் நிற்க மூத்தோனுக்கும், தனக்கும் பீடையுண்டாகும். காம உணர்வு நிறைந்தவன். அப கீர்த்தியுடையவன். அவனது சகோதரர்க்கும் அப கீர்த்தியுண்டாகுமடி தாயே!

4-5ம் இடங்களில் சனி நின்ற பலன்

சனி நாலில் நின்ற பலன் ஜனப் பகைஞன் துக்கி வாத
ரோகி, அன்றும் - சுனங்கன் பயம் மாதர் பீடை நட்பன்
கால் முடவன் தாயே, அதுகேள் - சனி அஞ்சில் நின்ற பலன்
சென்மன் துக்கி அற்பாயுள் ரோகி, அன்றும் - சென்மனுக்கு
புத்திர தோஷம் பிதிர் நஷ்டம் தேகபின்னம் மகளே!

பொருள் :- சனி நான்காமிடத்தில் நிற்க, ஜனப் பகைஞன், துக்கம் நிறைந்தவன்; வாதரோகமுள்ளவன்; பந்து ஜனபீதி, மாதர் பீடை, பொருள் நஷ்டம், கால் ஊனம் முதலிய உண்டாகும் தாயே!

சனி ஐந்தாமிடத்தில் நிற்க, துக்கம் நிறைந்தவன்; அற்பாயுள் உள்ளவன்; ரோக பயமுள்ளவன் தாயே; மேலும், புத்திர நஷ்டம், பிதுர் பொருள் நஷ்டம், தேக உபாதை போன்ற அசுப பலன்களும் உண்டாகும் தாயே!

குறிப்பு :- சனி ஆட்சி உச்சமாக இருந்தாலோ (அ) சுபர் பார்த்தாலோ ஷ் தோஷம் நிவர்த்தியாகுமெனக் கூறுக.

6-7ம் இடங்களில் சனி நின்ற பலன்

சனி ஆறில் நின்ற பலன் ஜனப் பகைஞன் வெகுபசியன்
பொசிப்பன், அன்றும் - சத்துரு சம்பத்துள்ளன் ஸ்திரீ
மோகன் என்றுரைத்தேன் தாயே, அதுகேள் - சனியேழில்
நின்ற பலன் சுமை எடுப்பன் பொருளுள்ளோன் ரோகி,
அன்றும் - ஜென்மனுக்கு களத்ர நஷ்டம் சேய்க்கு விதி
யுரைத்தேன் மகளே!

பொருள் :- சனி ஆறில் நிற்க, ஜனப் பகைஞன், அதிக பசியுள்ளவன்; நிறைய சாப்பிடுபவன்; சத்துரு சம்பத்து சேர்க்கையுள்ளவன்; ஸ்திரீ பிரியன் தாயே!

சனி ஏழில் நிற்க, அதிக சுமை தூக்குபவன், பொருள் வசதியுள்ளவன். ரோகமுள்ளவன். மேலும், களத்திர நஷ்டம், ஆயுள் தீர்க்கமுண்டு தாயே! இதுவும், முன் போல் கிரக வலிவறிந்து பேசுக.

8-9ம் இடங்களில் சனி நின்ற பலன்

சனி எட்டில் நின்ற பலன் ஜென்மனுக்கு நேத்திர ரோகம்
பொய்யன், அன்றும் - ஜென்மன் மாதர் பீடையுண்டு
துர்ச் சீவனம் பட்டினி துக்கன் தாயே, அதுகேள் - சனி
நிதியின் நின்ற பலன் சென்மன் பிறக்க ஆளடிமை செல்
வன், அன்றும் ஜென்மனுக்கு விதியுண்டு சேயன் பிதிர்
நஷ்டமடி மகளே!

பொருள் :- சனி எட்டாமிடத்தில் நிற்கப் பிறந்தவர் நேத்திர ரோகமுள்ளவராகவும், பொய்யனாகவும் இருப்பர். மாதா பீடையுண்டு. கஷ்ட ஜீவனம், பட்டினியாக இருத்தல், துயரமான சம்பவங்கள் ஏற்படுதல் முதலிய அசுப பலன்கள் ஏற்படும்.

சனி ஒன்பதாமிடத்தில் நிற்க, ஆளடிமை, செல்வந்தனாம் தாயே, மேலும் ஆயுள் பலம் தீர்க்கமுண்டு. பிதுர் நஷ்டமடி மகளே!

விளக்கம் :- சனி 8ல் இருந்தால், அசுப பலன்கள் அகோரமாக நடைபெறும். ஆட்சி, உச்சமாக இருந்தால் ஓரளவு அந்தக் கெட்ட பலன் களிலிருந்து நிவாரணம் பெற முடியும். சனி 9ம் இடத்தில் நிற்பதால், நல்ல பலன், தீய பலன் இரண்டும் கலந்து நடைபெறும். காரணம், 9ம் இடம் என்பது முழு சுபஸ்தானங்களில் ஒன்று. எனவே, 9மிட சனி சம பலன் களைத் தருவார் எனக் கொள்க. சனி நட்பு, ஆட்சி, உச்சமாய் இருந்தால் நற்பலன்களே மிதமிஞ்சி நடைபெறுமென அறிக.

10ம் இடத்தில் சனி நின்ற பலன்

பானுமைந்தன் பத்திலேற பாக்கியவான் தேவபதிநேசன்
அன்று - பார்மன்னரால் லாபமுண்டு பக்தனென்றே தெளிந்
தேனடி தாயே, அதுகேள் - என்ன தொழிலானாலும் இவன்
யூகி செய்ய வல்லோன் சூரன், அன்றும் - துர்க் கடவுள்
நேசன் விசுவாசன் மனத் திடவானடி மகளே!

பொருள் :- சனி பத்தாமிடத்தில் நிற்க, பாக்கியவான். தெய்வ பக்தி நிறைந்தவன். பார் மன்னராலே லாபமுண்டு. பக்தி சிரத்தையுள்ளவன். செய்யும் தொழில் வல்லவன். மகாசூரன்; துர்க்கடவுள் நேசமுள்ளவன். விசுவாசமுள்ளவன்; திடமான மன உறுதி படைத்தவன் தாயே!

11மிடத்தில் சனி நின்ற பலன்

கொடிய சனி பதினொன்றில் கொலை களவு உயிர் வதைகள்
செய்வன்; அன்றும் - செவிமந்தன் அதிபோகி கானகத்தே
திரிந்தலைவன் தாயே, அதுகேள் - நெடிய சனி நின்ற
ராசிநாதன் திடமாக நோக்க சேயும், அன்று - நெடிய
சனி நோக்கினாலும் இன்னபடி யுரைத்திடுவாய் மகளே!

பொருள் :- கொடிய சனி பதினொன்றாமிடத்தில் நிற்க, கொலை, களவு, உயிர் வதைகள் செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவான். அவனது காது செவிடாகவும், அதிபோகியாகவும், கானகத்தே திரிந்தலைபவனாகவும் இருப்பான். சனி நின்ற இராசிநாதன் 11மிடத்தைப் பார்த்தாலும் (அ) அந்தச் சனியே 11மிடத்தை பார்த்தாலும் இப்படியே பலன் உரைத்திடுவாய் மகளே!

விளக்கம் :- பொதுவாக, சனி எந்த இடத்திலும் இருந்தாலும் அந்தப் பாவத்தை நாசம் செய்வார். இந்த விதியை அனுசரித்து முனிவர் மேற்கூறிய வாறு கெட்ட பலன்களைக் கூறியுள்ளார். ஆனால், பாவக் கோட்கள் 3, 6, 11ல் இருந்தால் நல்ல சுப பலன்களைத் தருவர் என்றொரு சிறப்பு விதியும் உள்ளது. எனவே, 11மிட சனி சம பலனாக பலன் தரும் என்று கூறுவதே சரியான கருத்தாகும். சனி ஆட்சி உச்சமாக இருந்தால் நல்ல சுப பலன்களையும், பகை, நீசமாக இருந்தால், கொடிய பாவ பலன்களையும் தருவாரெனக் கொள்க.

12மிடத்தில் சனி நின்ற பலன்

பானுமைந்தன் வியமேற பாதநேயன் பொருள் விரையமாகும்
அன்று - பதி தனக்கு ஆக்ஷி நட்பு பலன்கள் நல்ல பொருள்
ஈவன் தாயே, அதுகேள் - காணும் புலிப்பாணி நூலை
காளைக்கு யுரைத்திடுவாய் பயனால், நல்ல - கலைமகள்
போல் வீற்றிருக்கும் கார்குழலே விதி கூறுவாய் மகளே!

பொருள் :- சனி 12ம் இடத்தில் நிற்க, பாதரோகன், செலவாளி தாயே! சனி ஆட்சி, உச்சமாக இருந்தால், நல்ல பொருள் சேர்க்கை யுண்டாகும். நல்ல புலிப்பாணி நூலை புவியோர்க்கு புரியும்படி உரைத்திடுவாய் மகளே! கலைமகள் வீற்றிருக்கும் குலமகளே, 12ல் ஆட்சி பெற்ற சனி தீர்க்காயுளைத் தருவாரென கூறுக.

குறிப்பு :- 12ல் ஆட்சி, உச்சம் பெற்ற சனிகூட நற்பலன் தருவது சந்தேகம் தான். காரணம், 12ல் சனி இருப்பது பாப கர்த்தாரி யோகம் எனப்படும். மேலும், சனி ஒரு முழுப் பாவி. 12மிடம் ஒரு மோஷமான ஸ்தானம். இவ்வகை காரணங்களால், 12மிட சனி சுப பலன் தர நியாயமில்லை. இருப்பினும், சனி வேறு எந்த விதத்திலாவது இராஜயோக அடைவுகளை பெற்றிருந்தால், சுப பலன் தர வாய்ப்பு உண்டு.

14. துவாதச பாவங்களில் ராகு நின்ற பலன்

2-3ம் இடங்களில் ராகு நின்ற பலன்

படுராகு ரெண்டில் நிற்க படுவாக்கன் மாந்திரீகன் மூடன்
அன்றும் - பாலனுக்கு நேத்திரயோகம் தரித்திரவா னென்

றுரைத்தேன் தாயே, அதுகேள் - படுராகு மூன்றில் நிற்க
பாக்கியவான் தீர்க்காயுள் புகழுளான், அன்றும் - பால
சகோதர பீடை பதிபெலத்தை அறிந்து செப்பு மகளே!

பொருள் :- ராகு இரண்டாமிடத்தில் நிற்க, மோஷமான வாய் பேச்சு டையவன்; மாந்திரீகம் செய்பவன்; மூடன்; தரித்திரவான்; நேத்திர ரோகமுண்டு தாயே!

ராகு மூன்றாமிடத்தில் நிற்க, பாக்கியவான்; தீர்க்காயுள் உடையவன்; நல்ல புகழ் உள்ளவன்; சகோதர பீடையுண்டு; பதிபலம் ஆராய்ந்து சரியாக கூறுவாய் மகளே!

4-5ம் இடங்களில் ராகு நின்ற பலன்

படுராகு நாலில் நிற்க,பந்து ஜனப் பகைஞன் மாதர் தோஷம்
அன்றும் - படபடத்த வார்த்தையுள்ளோன் சஞ்சாரன்
சோம்பலுள்ளோன் தாயே! அதுகேள் - படுராகு ஐந்தில் நிற்க
பெண் பெறுவன் தலைப் பிள்ளை பயனால், அன்றும் - பரியாசன்
மாந்திரீகன் அற்ப புத்திரனென்றுரைத்தேன் மகளே!

பொருள் :- படுராகு நாலில் நிற்பது நல்லதல்ல. பந்துஜன வகை, மாதர் தோஷம், படபடப்பான வார்த்தை, வெளியிட சஞ்சாரம், சோம்பேறித்தனம் முதலிய அசுப பலன்கள் உண்டாகும்.

ராகு ஐந்தாமிடத்தில் நிற்க, பெண் குழந்தை பெறுவன்; பரிகாசம் செய்பவன்; மாந்திரீக புத்தி படைத்தவன்; அற்ப புத்திரன் தாயே!

விளக்கம் :- தீக் கோளான ராகு, எந்த வீட்டில் இருந்தாலும் தீமை செய்வார் என்ற விதியின்படி முனிவர் 4,5ம் பாவங்களுக்கு அசுப பலன்களை கூறியுள்ளார். ஆனால், 4,5ம் வீடுகள் சுப வீடுகளாகும். மேலும் ராகு கேந்திர கோணங்களில் இருந்தால், நல்ல இராஜ யோக பலன்களையும் தருவார் என்றொரு விதியும் உள்ளது. இந்தச் சிறப்பு விதிபடி ராகு 4,5ம் பாவங்களில் இருந்தால், முனிவர் சொல் பொய்க்கும்படி நற்பலன் தர வாய்ப்பு உண்டு. எனவே, ராகு பலம், அவர் நிற்கும் ராசியின் பலம் இவ் விரண்டையும் பார்த்து பலன் கூறுவது அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.

6-7ம் இடங்களில் ராகு நின்ற பலன்

படுராகு ஆறில் நிற்கப் பெலவானாம் செயமுள்ளோன்
தனவான், அன்று - மனைவியுமுண்டு இல்லுமுண்டு பாலன்
நல்ல மொழியுரைப்பன் தாயே, அதுகேள் - படுராகு ஏழில்
நிற்க பரதாரகவன் அதிபோதிமோகி, அன்றும் - பாங்கி
யுமோ துஷ்டியவன் ஜெகவசியன் கோலாகலன் மகளே!

பொருள் :- ராகு ஆறாமிடத்தில் நிற்க, பெலவாள்; சத்ரு ஜெயமுள்ளவன்; தனவான்; நல்ல மனைவியுண்டு. வீடுமுண்டு. பாலனுக்கு நல்ல பலன்களே ஏற்படுமென அறிக.

ராகு ஏழாமிடத்தில் நிற்க, பரஸ்திரீ நேசன், அதிபோகி, ஸ்திரீமோக முள்ளவன்; துஷ்ட குணமுள்ளவன்; உலக வசியன்; கோலாகலமாக இருப்பவன் தாயே!

குறிப்பு :- ராகு 6மிடத்தில் நிற்பதால், நற்பலன்களே உண்டாகுமென முனிவர் கூறியுள்ளார். இருப்பினும், 6ல் நிற்கும் எந்தக் கிரகமும் தீமை

செய்யும் என்பது பொது விதி. எனவே, 6மிட ராகு நன்மையும் தீமையும் கலந்து செய்யுமெனக் கொள்க. பின்பு, கிரகவலிவறிந்து பேசுக.

அதுபோல், 7மிட ராகு இராஜயோகம் தரும் என்பது சிறப்பு விதி. அதே சமயம், பாவிகளுக்கு கேந்திர தோஷமுண்டு. எனவே, இந்த ராகுவும் முன்பு கூறியது போல் மிக்ஸரான பலன்களே தருமெனக் கொள்க.

8-9ம் இடங்களில் ராகு நின்ற பலன்

அஷ்டமத்தில் ராகு நிற்க அரவு பயம் பிளவை தனநாசன்
அன்றும் - அம்மையாலும் சோரனாலும் அவதி மெத்த
உண்டாகுந் தாயே; அதுகேள் - துஷ்ட ராகு நிதியேற
துலைத்திடுவன் பிதுர்வர்க்கம் துவேசி, அன்றும் - துடியான
மாந்திரீகன் விகடத்தால் லாபமுண்டு மகளே!

பொருள் :- *8ல் ராகு நிற்க, அரவு பயம், தனநாசம், குடும்பத்தில் பிரிவினை, வைசூரி, அம்மை நோய், சோரபுத்தி முதலிய கெட்ட பலன்கள் உண்டாகும் தாயே!*

துஷ்ட ராகு ஒன்பதாமிடம் ஏற, பிதுர் நாசம், பிதுர் வர்க்கத் துவேஷி; மேலும், துடிப்பான மாந்திரீக வித்தை கற்றவன்; விகடத்தால் லாபமுண்டு மகளே!

10-11ம் இடங்களில் ராகு நின்ற பலன்

படுராகு பத்திலேற பாலனுக்கு களத்திர மெத்த புனிதன்
அன்றும் - பார் மன்னரால் லாபமுள்ளோன் புத்திரரற்பம்
மாடியுள்ளோன் தாயே, அதுகேள் - படுராகு பதினொன்றில்
பண்டிதத்தில் வல்லவனாம் நோயன், அன்றும் - பதியுள்ளோன்
செவிமந்தன் சேஷ்டருக்கு தோஷமுண்டு மகளே!

பொருள் :- *ராகு பத்தாமிடத்தில் நிற்க, அநேக களத்திரங்கள் உண்டு. புனித குணமுள்ளவன்; பாராளும் மன்னராலே லாபமுண்டு; புத்திரர் அற்பம்; மாடி வீடுண்டு மகளே!*

ராகு பதினொன்றில் நிற்க, பண்டிதத்தில் வல்லவன். வித்தைகள் பல கற்றவன்; ரோக பயமுள்ளவன்; வீடு வாசல் உடையவன்; செவிடன்; மூத்த சகோதரர்க்குத் தோஷமுண்டு மகளே!

12ம் இடத்தில் ராகு நின்ற பலன்

படுராகு வியமேற பாதனோயன் தனநாசன், அன்றும்
பரதேச சஞ்சாரன் பாக்கியவா னென்றுரைத்தேன் தாயே
அதுகேள் - நடு நாயகம் அணிந்த பெண்ணே நவக்கோள்
கள் நிலையறிந்து கூறு. அன்றும் - நல்ல புலிப்பாணி ஏசல்
நானுரைத்தேன் உனக் கறிய மகளே!

பொருள் :- *ராகு 12ம் இடத்தில் நிற்க, பாத ரோகமுண்டு; தனநாசமும் வரும். மேலும், பரதேச சஞ்சாரம்; பாக்கியவானடி தாயே! அழகு வாய்ந்த பெண்ணே! நவக்கோட்களின் நிலையறிந்து சரியான பலன் கூறுவாயே! நல்ல புலிப்பாணியேசல் அறியும்படி நான் பாடினேன் மகளே!*

15. துவாதச பாவங்களில் கேது நின்ற பலன்

2ம் இடத்தில் கேது நின்ற பலன்

படுகேது ரெண்டில் நிற்கப் பலவினைய புத்தி விஷவாக்கன்
கூறும் - பலமுள்ள வித்தையுள்ளோன் செய்யுந் தொழில்
லாபமுள்ளோன் தாயே, அதுகேள் - துடியான வித்தை
யுள்ளோன் பந்து ஜன விரோதி புறஞ்சொல்வன், பொல்லா
துஷ்டனவன் கொடிய வஞ்சன் சுருதிபடி யுரைத்தேனடி
மகளே!

பொருள் :- கேது இரண்டாமிடத்தில் நிற்க, வஞ்சகக் குணம், விஷவாக்கு உடையவன்; நல்ல வித்தை ஞானமும் உண்டு; செய்யுந் தொழிலில் லாபமுள்ளோன் தாயே! நீச வித்தை கற்றவன்; பந்து ஜன விரோதி; புறஞ் சொல்வன்; மிகவும் பொல்லாத துஷ்டக் குணமுள்ளவன்; கொடிய வஞ்சகக் குணம் நிறைந்தவன் தாயே!

3-4ம் இடங்களில் கேது நின்ற பலன்

கேது மூன்றில் நின்ற பலன் காரியங்கள் தாழ்ச்சி வீர
சூரன், அன்றும் - கலை கேள்வி கேட்பன் ஜென்மம்
கபாலி ரோக முடையவனாம் தாயே, அதுகேள் கேது
நாலில் நின்ற பலன் காளையவன் ஜெனித்த மனை
பாழாம், கூறும் - கிரகமுண்டு மாதர் தோஷம் குளிகனின்
றால் கூச்சமில்லை மகளே!

பொருள் :- கேது மூன்றாமிடத்தில் நிற்க, எடுத்த காரியம்யாவும் தோல்வியில் முடியும். ஆனால், வீரசூரன்; கேள்வி ஞானம் உள்ளவன்; கபாலி ரோகமுடையவனாம் தாயே!

கேது நான்காமிடத்தில் நிற்க, காளையவன் உதித்த மனை பாழாய் போகும். அதே சமயம் நல்ல பலனும் உண்டு. மாதர் தோஷமுண்டு. குளிகன் நின்றால் தோஷமில்லை மகளே!

5-6ம் இடங்களில் கேது நின்ற பலன்

கேது அஞ்சில் நின்ற பலன் கிலேசன் வஞ்சம் பெற்
றிழப்பன் ரோகி, பொல்லா - குளிக னேற சாவடியில்
புசித்திருப்பன் துர்க்கியவன் தாயே, அதுகேள் - கேது
ஆறில் நின்ற பலன் கீர்த்தி கொள்வன் ஞானி பகை
வெல்வன், அன்றும் கவியில் வல்லோன் பெலவானாய்க்
காளையவனிருப்பானடி மகளே!

பொருள் :- கேது ஐந்தாமிடத்தில் நிற்க, மனக்கிலேஷம், வஞ்சகம், ரோக பயம், பிறந்த குழந்தை மரணமாகுதல் போன்ற அசுப பலன்கள் உண்டாகும். கேதுவோடு குளிகனும் கூடி 5ம் இடத்தில் நிற்க, அவலக்ஷ்ணமான இடத்தில் இருந்து சாப்பிடுபவன்; துஷ்ட குணம் நிறைந்தவன் தாயே!

கேது ஆறாமிடத்தில் நிற்க, புகழ், கீர்த்தி, ஞானம், சத்ரு ஜெயம், கவி எழுதும் ஆற்றல், தேக பலம் முதலிய சுப பலன்கள் உண்டாகும் தாயே!

7-9ம் இடங்களில் கேது நின்ற பலன்

துடிகேது யேழில் நிற்க தூரஸ்திரீயை புணர்ந்திடுவன் சோம்பல், அன்றும் - தொல்புவியில் சஞ்சாரன் மூர்க்கனென்றே தெளிந்தேனடி தாயே, அதுகேள் - துடிகேது நவத்திலேற தன முடையோன் தீரன் கோபன் சாலன், அன்றும் - சுரத வித்தை சோர வித்தை நீச வித்தை பிதிர் பகைவன் மகளே!

பொருள் :- துஷ்ட கேது எழில் நிற்க, ரொம்ப தூரத்தில் உள்ள பெண்ணை புணர்ந்திடுவான்; சோம்பல் நிறைந்தவன்; அங்குமிங்கும் அலை பவன்; மூர்க்க குணமுள்ளவன் தாயே!

துஷ்ட கேது பாக்கிய கோணத்தில் ஏற, தனவிருத்தியுடைவன்; வீரதீரம் நிறைந்தவன் மேலும். கோபக்காரன்; சாலக்காரனடி தாயே! மேலும் சங்கீத ஞானம், சோர வித்தை, நீச வித்தை, பிதுர் பகைஞனடி மகளே!

8ம் இடத்தில் கேது நின்ற பலன்

அஷ்டமத்தில் கேது நிற்க அரவு பயம் புத்திரதோஷன் கொடியன், அன்றும் - அயலார் சொத்தை இச்சிப்பன் அலகையது பிடிக்கும் சொன்னேன் தாயே, அதுகேள் துஷ்ட ஜென்மன் கொடிய சிந்தை துர்மரணம் மாதராசையுள்ளோன், அன்றும் - தொல்புவியில் மானிடர்க்குப் புலிப்பாணியேசன் சொன்னேல் மகளே!

பொருள் :- அஷ்டமத்தில் கேது நிற்பது நல்லதல்ல. பாம்பு பயம், புத்திர தோஷம், குரூர புத்தி, அயலார் சொத்தை அபகரிக்கும் தன்மை முதலிய துஷ்ட குணங்கள் உண்டாகும். மேலும், துஷ்டகுணம் கொண்டவன், துர்மரணம் அனுபவிப்பன் தாயே! தொல் புவியில் உதித்தோர்க்குப் புலிப்பாணியேசல் கிரக இருப்பிட நிலையறிந்து கூறினேன் மகளே!

10-11ம் இடங்களில் கேது நின்ற பலன்

படுகேது பத்திலேற பெலவான் ஞானம் தனமுள்ளோன் லோபி, அன்றும் - பலஜெனத்தால் விரோதி சூரன் படுரோகி தொழிலுடையோன் தாயே, அதுகேள் - படுகேது பதினொன்றில் பாலன் மகிழ கெம்பீரன் தனவான், அன்றும் - புத்திரனாலும் பேரத்தாலும் நீச்சனாலும் லாபமுள்ளோன் மகளே!

பொருள் :- துஷ்டகேது பத்தாமிடத்தில் நிற்க பெல சாலி; ஞானமுள் ளவன்; தனவான்; லோபி; ஆனால் பல ஜனங்களை விரோதம் செய்பவன்; வீர சூரன்; ரோக முடையவன்; தொழிலுடையவன் தாயே!

துஷ்ட கேது பதினொன்றாமிடத்தில் நிற்க, அந்தப் பாலன் மகிழ்ச்சி நிறைந்தவன்; கெம்பீரமான தோற்றமுள்ளவன்; தனவான்; மேலும், புத்திரர்களாலும், பேரம் செய்வதாலும், நீச்சர்களாலும் லாபம் அடைபவன் மகளே!

12ம் இடத்தில் கேது நின்ற பலன்

துஷ்டகேது வியமேற பாதரோகம் நேத்திர ரோகம் முடக்கன், அன்றும் - பல விதத்தால் பொருள் நஷ்டம் பதியறிந்து உரைக்கலுற்றேன் தாயே, அதுகேள் - போகர் பாதம் வணங்கிச்

சொன்னேன் புலிப்பாணியேசலுடன் தூதும், மற்றும் - கோள்
நிலையும் பதிநிலையும் குறிப்பறிந்து கூறிடுவாய் மகளே!

பொருள் :- துஷ்ட கேது 12 மிடத்தில் நிற்க, பாதரோகம், நேத்திர ரோகம் (கண்நோய்), முடக்கு வாதம் முதலியவற்றால் அவதியுறுவான். மேலும், பல விதங்களில் பொருள் நஷ்டம் உண்டாகும். பதியறிந்து போகர் பாதம் பணிந்து புலிப்பாணியேசல் கூறினேன்! கோள்நிலையும், அதன் இருப்பிட நிலையுமறிந்து சரியாக இப்புவியில் உதித்தோர்க்குக் கூறுவாய். மகளே!

குறிப்பு :- கேது 12ல் இருப்பது நல்லதில்லை என்றாலும், உச்சபலம் பெற்றிருந்தால், நன்மை செய்ய இடமுண்டு. சுபர் நோக்கினால், விசேஷமான சுப பலன்களைக் கொடுக்க முடியும்! மேலும், கேதுவின் யோக அடைவுகளையும் கணக்கிட்டுக் கூறவேண்டு மென்பது குறிப்பிடத்தக்கது! அவ்வாறு கணிதம் செய்து கூறப்படும் பலா பலன்களே சரியாக பலிதமாகும் என்பதை மனதில் கொள்க.

16. சூரியன் நிலைமை

சூரியன் நிலைமை No : 1

பாரப்பா மூன்றாறு பத்து ஒன்று
பகருகின்ற பன்னொன்றில் வெய்யோன் நிற்கில்
சீரப்பா சீலனுட மனையில் தானும்
சிவசிவா தெய்வங்கள் காத்திருக்கும்
வாரப்பா வாகனமும் ஞானம் புத்தி
வளமான புத்திரர்கள் அரசர் நேசம்
கூறப்பா புரிவனடா சத்துரு பங்கன்
கொற்றவனே மூர்க்கனென்று கூறுகூறே

பொருள் :- சூரியன் மூன்று, ஆறு, பத்து, ஒன்று, பதினொன்று ஆகிய இராசிகளில் நின்றால், அந்த ஜாதகரின் மனையில் தெய்வங்கள் வந்து நன்மை புரியும். இதன் விளைவாக, வாகன விருத்தி, ஞானம், புத்திக் கூர்மை, நல்ல யோகமுள்ள புத்திரர்கள், அரசர் சிநேகம், சத்ரு ஜெயம் போன்ற சுப பலன்கள் உண்டாகும். மேலும், ஜாதகர் அதிமூர்க்கனென்று கூறுவாயே!

விளக்கம் :- சூரியன் 1, 3, 6, 10, 11ம் இராசிகளில் இருந்தால் நல்ல சுப பலன்களைத் தருவார். இருப்பினும் அதன் வலிவறிந்து கூறுவதும் அவசியமாகும். ஷ வீடுகளில், சூரியன் பகை, நீச்மாக இருந்தால், அவ்வளவு விசேஷமான சுப பலன்களைத் தர இயலாது என்பது குறிப்பிடத்தக்கது!

சூரியன் நிலைமை No : 2

கூறே நீ ஈராறும் ரெண்டிரெண்டு
கொள்ளவளே பாக்கியமும் ஏழோடஞ்சில்
ஆரே நீ ஆதித்த னிருந்தாரானால்
அப்பனே அங்கத்தில் காந்தலுண்டு
சீரே நீ சொற்பனமும் சிரங்கு கண்ணோய்
சிவசிவா சிந்தித்த தெல்லா மாகும்

கூறே நீ போகருட கடாக்ஷத்தாலே
கொலையீனர் வகையுமது வருகுஞ் சொல்லே!

பொருள் :- சூரியன் பன்னிரண்டு, இரண்டு, நான்கு, எட்டு, ஒன்பது, ஏழு, ஐந்து ஆகிய ஸ்தானங்களில் நின்றால், அவனது அங்கத்தில் காந்தல் உண்டாகும். பயங்கர கனவுகளும், சிரங்கு, புண் பொடிகளும், கண் நோயும் உண்டாகும். நினைத்ததெல்லாம் பாழாய்ப் போகும்! கொலைசெய்பவனது பகையும் வந்து சேருமப்பா! போகரின் கடாக்ஷத்தாலே குறியறிந்து கூறினேனப்பா!

விளக்கம் :- சூரியன் 2, 4, 5, 7, 8, 9, 12ம் இடங்களில் இருந்தால் தீய பலன் தருவான் என்பது இப்பாடலின் சுருக்கம்! ஆனால், சூரியன் இவ்விடங்களில் பலமாக இருந்தால், நன்மை செய்ய இடமுண்டு என்பதை மனதில் கொள்க.

17. சந்திரன் நிலைமை

சந்திரன் நிலைமை No : 1

கேளப்பா கலையினுட பெருமை சொல்வேன்
கனமுள்ள தனலாபம் கேந்திர கோணம்
ஆளப்பா அகம் பொருளும் நிலமுங்காடி
அப்பனே கிட்டுமடா கறவையுள்ளோன்
சூளப்பா சுகமுண்டு ஜென்மனுக்கு
சுயதேச பரதேச அரசர் நேசம்
கூளப்பா கொடியோர்கள் சேர்ந்து நோக்க
கொற்றவனே கலை வலுவை கூர்ந்து செப்பே

பொருள் :- கலைகளையுடைய சந்திரன் தன, லாப, கேந்திர, திரிகோணஸ் தானங்களில் நின்றால், அகம்பொருளும், நிலமும், வாகனமும், பசு, பால் பாக்கியமும் பெருகும். நல்ல சுகபோகமும் உண்டாகும். தன் சொந்த தேசத்திலேயே வாசம் செய்வான்; அரசர் நேசமுள்ளவன். கொடியோர்கள் கூடி நோக்கினால் கெட்ட பலன்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கலை வலுவறிந்து சரியான பலன் கூறுவாயப்பா!

விளக்கம் :- சந்திரன் 1,2,4,5,7,9,10,11 என்னும் ஸ்தானங்களில் இருந்தால், நல்ல சுப பலன்கள் உண்டாகும் என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து! தீக்கோட்கள், சந்திரனைப் பார்த்தால் ஷ்டி சுப பலன்கள் பாதிக்கப் படுமென்பதும் புலிப்பாணி முனிவரின் கருத்து! எனவே, சந்திரனின் வலிமையை சரியாக ஆராய்ந்து கூற வேண்டுமென முனிவர் ஆலோசனை கூறுகிறார்.

சந்திரன் நிலைமை No : 2

சூடப்பா சந்திரனார் மூன்றேழ் ஐந்து
சுத்த இந்து பன்னொன்றில் தனித்திருக்க
மாடப்பா மந்திரங்கள் செய்வன் காளை
மகத்தான வாதமொடு வயித்தியம் செய்வன்

கூடப்பா குடும்பமது விருத்தியாகும்
குவலயத்தில் எதிரிக்கு மார்பிலாணி
வீடப்பா போகருட கடாக்ஷத்தாலே
விதமறிந்து புவியோர்க்கு விளம்புவாயே!

பொருள் :- சந்திரன் மூன்று, ஏழு, ஐந்து, ஆறு முதலிய இடங்களிலும், வளர்பிறை சந்திரன் 11லும் தனித்திருந்தாலும், அந்த ஜாதகர் மந்திரம், தந்திரம் செய்பவர். மகத்தான வாதமோடு வைத்தியம் செய்பவர். குடும்ப விருத்தியுடையவர். எதிரியை வென்று அவனது மார்பில் ஆணியை அறைபவராக இருப்பார். போகர் சொன்ன நூல் வாயிலாகவே, பதமறிந்து புலிப்பாணி கூறினேனே!

18. செவ்வாய் நிலைமை

செவ்வாய் நிலைமை No : 1

கேளப்பா செவ்வாயும் ஒன்று பத்து
கனமுள்ள தன லாபம் ஆறிலிருக்க
ஆளப்பா அகம் பொருளும் நிலமும் செம்பொன்
அப்பனே கிட்டுமடா தொழிலுமுள்ளோன்
சூளப்பா சுகமுண்டு ஜென்மனுக்கு
சுயதேச பரதேச அரசர் நேசம்
கூளப்பா குடித்தலைவன் சந்துரு பங்கள்
கொற்றவனே வகையாகப் பகர்ந்து சொல்லே!

பொருள் :- செவ்வாய் ஒன்று, பத்து, தன, லாபம், ஆறிலிருக்க, அதிக பொருளும், நிலமும், செம்பொன்னும் கிட்டும்; நல்ல தொழிலும் அமையும்; ஜென்மனுக்கு நல்ல சுகபோக வாழ்க்கையுண்டு. தன் தாய் நாட்டிலேயே அலைந்து தொழில் தேடுவான்; அரசர் பற்றுமுள்ளவன்; தன் குலத்திற்குத் தலைவனாகவும், எதிரியை நாசம் செய்பவனாகவும் இருப்பான்! கொற்றவனே கோள்நிலை ஆய்ந்து, சரியான விதி கூறப்பா!

விளக்கம் :- செவ்வாய் ஒரு தீக்கோளானாலும், அது *1, 2, 6, 10, 11*ம் இடங்களில் இருக்க, நல்ல சுப பலன்கள் உண்டாகுமென்பது இப்பாடலின் கருத்து! செவ்வாய் பகை, நீசமாய் இருந்தால், தீமை செய்ய இடமுண்டு; ஆட்சி, உச்சமாக இருந்தால், விசேஷமான சுப பலன்கள் ஏற்படுமெனக் கூறுக.

செவ்வாய் நிலைமை No : 2

சொல்லப்பா மூன்றெட்டு பன்னிரெண்டும்
சுக சப்த கேந்திரமும் பாக்கியம் ரெண்டில்
அல்லப்பா அத்தலத்தில் ஆறில் குக்க
அப்பனே அகம் பொருளும் நிலமும் நஷ்டம்
குள்ளப்பா குடும்பமது சிதறிப் போகும்
கொற்றவளே குருவுக்கு தோஷமுண்டாம்
வல்லப்பா போகருட கடாக்ஷத்தாலே
வளமாக புலிப்பானி வசனித்தேனே!

பொருள் :- செவ்வாய் மூன்று, எட்டு, பன்னிரண்டு, நான்கு, ஏழு, ஒன்பது, இரண்டு, ஆறு ஆகிய வீடுகளில் இருக்க கையிலுள்ள பொருளும், நிலமும்

சிதறிப் போகும். குடும்பமது குலைந்து போகும்! குருவுக்கு தோஷமுண்டாகும். போகர் சொன்ன நூல் வாயிலாகவே புலிப்பாணி கூறினேனப்பா!

குறிப்பு :- செவ்வாய் 2, 3, 4, 6, 7, 8, 9, 12 ஆகிய வீடுகளில் இருந்தால், கொடிய தீய பலன்களைக் கொடுப்பவன் என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து! ஆனால், பாவர்க்கு 3, 6ம் வீடுகள் சுபஸ்தானங்கள். எனவே 3, 6ம் வீடுகளில் செவ்வாய் சமபலனாக பலன் தருவானெனக் கொள்க. மற்ற இடங்களில், முனிவர் கூறியபடியே கொடூரப் பலன்கள் ஏற்படுமென்பது உண்மைதான்! மேலும், கிரக வலிவறிந்து பேசுவதும் அவசியமாகும்! கவனம் தேவை!

19. வியாழன் நிலைமை

வியாழன் நிலைமை No : 1

பாரப்பா பரமகுரு நாலேழ் பத்து
பகருகின்ற கோணமுடன் தனமும் லாபம்
சீரப்பா சென்மனுக்கு யோகம் செப்பு
செந்திருமால் தேவியுமே பதியில் வாழ்வாள்
கூறப்பா குடிநாதன் கண்ணுற்றாலும்
குவலயத்தில் வெகுபேரை ஆதரிப்பன்
ஆரப்பா ஆறெட்டு பன்னிரெண்டு
அறைகின்றேன் நின்பலனை அன்பாய்க்கேளே!

பொருள் :- தேவகுரு நான்கு, ஏழு, பத்து என்னும் கேந்திர ஸ்தானங்களிலும், ஒன்று, ஐந்து, ஒன்பது என்னும் கோணஸ்தானங்களிலும், மேலும், தன, லாபஸ்தானங்களிலும் நின்றால், சென்மனுக்கு நல்ல யோக பலன்கள் உண்டாகும். செந்திருமால் தேவியான லட்சுமியே, அவனது இல்லில் வந்து வாழ்வாள். குரு நின்ற இராசிநாதன் ஷ வீடுகளை பார்த்தாலும், ஜென்மன் இந்த உலகில் பல பேரை ஆதரிப்பான்; இனி, தேவகுரு 6, 8, 12ம் வீடுகளில் இருந்தால், அவர் தரும் பலன்களைக் கூறுகிறேன். அன்பாய் கேளப்பா!

விளக்கம் :- குரு ஒரு பூரண சுபக்கிரகம், எனவே, அவர் சுப வீடுகளான கேந்திர, கோணங்களில் இருந்தால், இன்னும் அவரது வலிமை அதிகரித்து, சுப பலன்களை மிதமிஞ்சி செய்ய முடியுமென்பது இப்பாடலின் சாரம். 'குடிநாதன்' என்பது குரு இருக்கும் வீட்டின் அதிபதியை குறிப்பிடும். இந்த குடி நாதன் பாவியாக இருந்தாலும்; குருபரனே அவர் வீட்டில் வந்து உட்காருவதால், அந்த குடிநாதனும் சுபராக மாறி - நன்மை செய்ய ஆரம்பித்து விடுவார்; எனவே, இவரது பார்வை ஷ சுப வீடுகளுக்கு பட்டாலும், அந்த பாவபலன்களின் வலிமை அதிகரிக்கும் என்பது முனிவரது கருத்து! உண்மையும் கூட!

வியாழன் நிலைமை No : 2

கேளப்பா யெட்டுக்கு வேசி கள்ளன்
கெடுதியுள்ள மனைவி பகை நோயால் கண்டம்
ஆளப்பா அரசர் பகை பொருளுஞ் சேதம்
அப்பனே அவமானம் கொள்வன் டம்பன்
தாளப்பா ஆறுக்கு தோஷமுண்டு
தார்வேந்தர் பகையுமுண்டு ரோகமுண்டு
கூளப்பா ஈராறில் எங்கோனாட்சி
குற்றமில்லை சென்மனுக்கு யோகங்கூறே

பொருள் :- வியாழன் எட்டாமிடத்தில் நிற்க, வேசி மேல் மோகம் கொள்வான். துஷ்ட குணமுள்ள மனைவியின் விரோதமும், நோயால் கண்டமும் உண்டாகும். மன்னர் பகையும், பொருள் சேதமும் ஏற்படும். அவமான மடையும்படியான சூழ்நிலை வந்து சேரும். வீண் டம்பம் அடிப் பவன்; வியாழன் ஆறாமிடத்தில் இருந்தாலும் தோஷமுண்டு. பாராளும் மன்னர் பகையுண்டாகும்; ரோக முண்டாகும், குரு 12ல் ஆட்சியாக இருந்தால் குற்றமில்லை, சென்மனுக்கு யோகம் உண்டென்று கூறுவாயப்பா!

விளக்கம் :- குரு *6, 8, 12*ம் இடங்களில் இருந்தால், தீயபலன்கள் உண்டாகுமென்பது இப்பாடலின் கருத்து! ஆனால், குரு ஆட்சி, உச்சமாய் இருந்தால், தீயபலன்கள் வந்து விலகுமெனக் கூறவேண்டும்!

20. சுக்கிரன் நிலைமை

சுக்கிரன் நிலைமை No : 1

கேளப்பா அசுரகுரு கேந்திர கோணம்
கெட்டவர்கள் கண்ணுற்று பார்த்திட்டாலும்
ஆளப்பா அசுரகுரு பலனளிப்பர்
அப்பனே உப்பரிகை மேடையுண்டு
வாளப்பா வயிரங்கள் முத்து மாலை
வளமாகப் பொருந்தியிருக்கும் வளவிலேதான்
நீளப்பா நின்றதொரு இராசியாதி
நிலையறிந்து புவியோர்க்கு நிகழ்த்துவாயே

பொருள் :- அசுரர்களின் குருவாக மதிக்கப்படும் சுக்கிரன் கேந்திர, கோணங்களில் அமர்ந்து, கொடியவர்களின் பார்வையோடு இருந்தாலும், அவர் நல்ல பலனளிக்க உரிமை உண்டு. மாடி வீடு, மேடையுண்டு. வைரம், முத்து மாலை போட்டு வரவேற்கும் வசதிகள் உண்டாகும். சுக்கிரன் நின்ற இராசிநாதனும் பலமாக இருந்தால் மேற்கூறிய பலன்கள் பொய்க்காது அப்பா!

விளக்கம் :- சுக்கிரன் ஒரு நல்ல சுபக்கிரகம். அவர் கேந்திர கோணம் என்னும் சுபஸ்தானங்களில் இருந்தால், அவரது வலிமை இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும். எனவே, இவ்வளவு வலுபொருந்திய சுக்கிரனை பாவிகள் பார்த்தாலும், அதிக பாதிப்பு ஏற்படாது; மாறாக சுபபலன்களே உண்டாகும் என்பது முனிவர் கருத்து! சுக்கிரன் நின்ற வீட்டுக்காரனது பலத்தைப் பொறுத்து மேற்கூறிய பலன்களில், சிறிது கூடுதல், குறைவு ஏற்படும்! எனவே, கிரக வலிமை நிர்ணயம் செய்யும் பொழுது, அதில் அடங்கியுள்ள சகல வித யோக அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, நடுவு நிலைமையான ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்பது, இப்பாடலிலிருந்து புலப்படும்!

சுக்கிரன் நிலைமை No : 2

பாரப்பா பனிரெண்டு மூன்றா றெட்டில்
பலமுள்ள அசுர குரு அதனில் தோன்ற
வீரப்பா விதிகுறைவு வெதர்நோய் வாதம்
விளங்குகின்ற செம்பொன்னும் மனையும் நஷ்டம்

கூறப்பா குழவிக்கு மகோதரமும் பாண்டு
கொற்றவனே குன்மமொடு சயமும் சோகை
சீரப்பா ஈராறில் சுங்கன் ஆட்சி
சிவசிவா சயனசுகம் யோகஞ் சொல்லே

பொருள் :- *அசுர குருவாகிய சுக்கிரன் 3, ,6, 8, 12ம் வீடுகளில் இருந்தால், ஆயுள் பலம் குன்றிப் போகும். பல வித பீடைகள் தோன்றும்; வாதநோயால் அவதியுற நேரிடும்! செம்பொன், குடியிருக்கும் மனை அனைத்தும் பாழாய்ப் போகும். உடன் பிறந்த சகோதரர்களுக்கு மாரகமுண்டாகும். மேலும், குன்மரோகம், க்ஷய ரோகம், சோகை முதலியவற்றாலும் அவதியுறுவான் என்பதாம்! ஆனால், 12ல் சுக்கிரன் ஆட்சியாக இருந்தால், சயனசுகம் உண்டென்று கூறுவாயே!*

21. சனி நிலைமை

சனி நிலைமை No : 1

கனமுள்ள நவமாறு லாபம் மூன்று
கதிர் மைந்தனதிலிருக்க விதியும் தீர்க்கம்
தனமுண்டு பிதுர் தோஷம் சத்துரு பங்கம்
தரணிதனில் பேர்விளங்கும் அரசன் லாபம்
குணமுள்ள கருமத்திலிருக்க நல்லன்
கொற்றவனே வாகனமும் தொழிலுமுள்ளோன்
பொணம் போல போகாதே சபையில் கூறு
பூதலத்தில் யென்னூலைப் புகழுவாயே!

பொருள் :- வலிமை பொருந்திய *3, 6, 9, 11*ம் வீடுகளில் பானுமைந்தனாகிய சனிபகவான் இருக்க ஆயுள் பலம் தீர்க்க முண்டாகும். வெகுபொருள் சேரும். பிதுர் தோஷமுண்டு; சந்துரு நாசம் உண்டு; பாராளும் வேந்தனாலே லாபமுண்டு; மேலும், நல்ல குணமுள்ள கருமஸ்தானமாகிய 10 மிடத்தில், சனி இருக்க, அந்த ஜாதகர் நல்லவன்; வாகன விருத்தி; தொழில் பலம் உண்டு. பிணம் போல் போகாதே! வையகத்தில் என்னூலை புகழ்ந்து, சபையில் கூறுவாயே!

சனி நிலைமை No : 2 (தோஷ நிவர்த்தி)

பாரப்பா இன்னமொன்று பகரக் கேளு
பானு மைந்தன் பன்னொன்றிலமைந்த வாறும்
சீரப்பா சிறந்த குரு சப்தமத்தில்
சீறிவரும் கரும் பாம்பு நாலிலேற
ஆரப்பா ஆரல்யிரு மூன்ற தாகும்
அப்பனே அருக்கனுந் தான் மூன்றில் போக
வீரப்பா விலகுமடா தோஷம் தோஷம்
விதியுண்டு சென்மனுக்கு விளம்பக் கேளே!

பொருள் :- *இன்னொரு விஷயம் சொல்கிறேன் கேளப்பா! சனி 11ல் இருக்க, சிறப்பு வாய்ந்த தேவ குரு 7ல் இருக்க, சீறிவரும் கரும்பாம்பாகிய ராகு 4ல் இருக்க, செவ்வாய் 6ல் இருக்க, சூரியன் 3ல் இருக்க, எல்லா வித தோஷங்களும் விலகுமப்பா! ஜென்மனுக்கு நீண்ட ஆயுள் பலம் உண்டு! விளக்கமாக புவியோர்க்குக் கூறுவாயப்பா;*

விளக்கம் :- 3, 6, 11ம் வீடுகள் பாவிகளுக்குச் சுப வீடுகளென்றும், சனிக்கு 11ம் வீடும், ராகுவுக்கு 4ம் வீடும், தேவகுருவுக்கு 7ம் வீடும், செவ்வாய்க்கு 6ம் வீடும், சூரியனுக்கு 3ம் வீடும் அதிசுப வீடுகளாம்! எனவே இக்கோட்கள் இவ்வாறு தமது அதிசுப வீடுகளில் இருந்தால், எந்தவித தோஷம் வந்தாலும், அவையாவும் உடனடியாக நிவர்த்தியாகி விடுமென்பது இப்பாடலின் முக்கியமான கருத்து!

22. குளிகன் நிலைமை

குளிகன் நிலைமை No : 1

காணப்பா சின்னமொரு செயலைக் கேளு
கனமுள்ள குளியனுமே பதியில் நிற்க
ஆணப்பா அகம் பொருளும் நிலமுங்காடி
அப்பனே அயன் விதியும் தீர்க்கஞ் சொல்லு
கூணப்பா குளியனுமே துதியிற் நிற்க
கொற்றவனே கலகனடா நேத்திர ரோகன்
தானப்பா தனவிரயம் தோடம் சொல்லு
தரணிதனில் துஷ்டனென்று கூறுகூறே.

பொருள் :- இன்னொரு செயலை கேளப்பா! பலமுள்ள குளிகன் ஜென்மத்தில் இருக்க, அளவுக்கு மீறிய பொருளும், செல்வமும், நிலமும், வாகன வசதியும் பெருகும். ஜாதகர்க்கும் தீர்க்காயுள் உண்டு!

குளிகன் இரண்டாமிடத்தில் நிற்க, குணமது கெட்டு கலகம் புரிவான்; நேத்திர ரோகமுண்டாகும்! மேலும், பொருள் நஷ்டம் ஏற்படுவதுடன், இப்பாரினில் துஷ்ட ஜீவனாகக் காலம் கழிப்பானென்று கூறுவாயப்பா!

குளிகன் நிலைமை No : 2

கூறப்பா குளிகனுமே மூன்றில் நிற்க
கொற்றவனே துணைவனுடன் போரும் செய்வன்
வீறப்பா விரகனடா வாய்ச் சமர்த்தன்
விளம்புகிறேன் நாலினுட விபரங்கேளு
பாரப்பா பதி கடந்து கிரியில் வாசம்
பாலனவன் சில காலம் வாழ்ந்திருந்து
கூறப்பா போகருட கடாக்ஷத்தாலே
குற்றமில்லை புலிப்பாணி கூறினேனே!

பொருள் :- குளிகன் மூன்றாமிடத்தில் நிற்க, உடன் பிறந்த சகோதரருடன் கலகம் செய்வான், விரக தாபமுள்ளவன். வாய்ச்சாலன் அப்பா!

குளிகன் நாலாமிடத்தில் நிற்க, தன் இல்லிடம் விட்டு, வெளியிடம் சென்று வாழ்வான்! பாலனவன் சிறிது காலம் நன்றாகவே வாழ்வான்; குற்றமில்லையப்பா! போகருட அருளாலே, புலிப்பாணி கூறினேனப்பா!

குளிகன் நிலைமை No : 3

கூறினேன் கிரி ஐந்தில் முடவன் பிள்ளை
குணமாக வாழ்வனடா சேய்க்கு தோஷம்
தேறினேன். வீரனடா சந்துருபங்கன்
திடமாக வாழ்வனடா தனமுமுள்ளோன்
ஆறினேன் அயன்விதியு மெத்தவுண்டு
அப்பனே அடுத்தோரை காக்கும் வீரன்
கூறினேன் குளியனுமே ஆறில் நிற்க
கொற்றவனே இப்பலனை கூறினேனே.

பொருள் :- குளிகன் ஐந்தாமிடத்தில் இருக்க, நல்ல குணமுடன் வாழ்வான், குழந்தைக்கு தோஷமுண்டாகும்! நல்ல வீரதீரமுள்ளவன்; சத்துரு நாசம் செய்பவன். திடமான மனஉறுதியுடையவன்; தனமுள்ளவன்; ஆயுள் பலம் தீர்க்க முண்டு; மற்றவர்களைக் காக்கும் வீரனப்பா! குளிகன் 6ல் இருந்தால், இம்மாதிரி பலன்கள் ஏற்படும் என்று கூறப்பா!

குளிகன் நிலைமை No : 4

குறித்திட்டேன் குளிகனுமோ ரேழில் நிற்கக்
கொற்றவனே குடும்பிக்குக் கண்டம் சொல்லு
சிரித்திட்டேன் சென்மனுக்கு விவாதத்தாலே
சிவசிவா செம்பொன்னும் நஷ்டமாகும்
அரித்திட்டேன் அட்டமத்தில் குளிகன் நிற்க
அப்பனே அழும் பலனடா ஜலத்தால் கண்டம்
முரித்திட்டேன் போகருட கடாக்ஷத்தாலே
முகரோக முண்டென்று மூட்டுவாயே!

பொருள் :- குளிகன் ஏழாமிடத்தில் நிற்க, ஜென்மனுக்குக் கெண்டாதி பீடைகள் தோன்றும்; மேலும், விவாதம் ஏற்படுவதாலும், செம்பொன்னும் பொருளும் நஷ்டம் உண்டாகும்.

குளிகன் எட்டாமிடத்தில் நிற்க, கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை உண்டாகும். ஜலத்தால் மாரக முண்டாகும். முகரோகமும் ஏற்படும். போகர் சொன்ன நூல் வாயிலாகவே இவ்வாறு கூறினேனப்பா!

விளக்கம் :- குளிகன் என்பது ஒரு துணைக்கோளாகும். இதை 'மாந்தி' என்று கூறுவது முண்டு. சனியின் மகன் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. எனவே, சனிக்குரிய பாவகுணங்கள் அனைத்தும் இவர்க்கு உண்டு என்பது சொல்லாமலேயே புரியும். எனவே, 7, 8-மிடங்களில் இருந்தால் அந்தப் பாவ பலன்கள் பாதிக்கப்படுமெனக் கூறப்பட்டது. ஆனால் குளிகன் நட்பு, உச்சமாக இருந்து, சுபர் பார்வையோடிருந்தால், சுப பலன்கள் உணடாகுமென அறிக.

குளிகன் நிலைமை No : 5

மூட்டுவாய் குளிகனுமோ பாக்கியத்தில்
முகவசியன் அழும்பலனடா பிதுர்துரோகி
கூட்டுவாய் குவலயத்தில் தனமுமுள்ளோன்
குற்றமில்லை கருமத்தின் குறியைக் கேளு
நீட்டுவாய் நீணிலத்தில் கருமி துரோகன்
நிலையறிந்து நீயறிவாய் அய்யம் வாங்கி

தீட்டுவாய் தின்பனடா விரலே உச்சம்
சிறப்பாக செப்புவாய் திண்ணந்தானே!

பொருள் :- குளிகன் பாக்கிய கோணத்தில் நிற்க, முகவசியன்; பிதுர் துரோகி; துஷ்டபலன்கள் உண்டாகும்; அதேசமயம், இப்பூலகில் பெரிய தனவானாகவும் இருப்பான்; குற்றமில்லை என்றேன்!

குளிகன் கர்மஸ்தானமென்னும் 10 மிடத்தில் இருந்தால், வெகு கருமியாகவும், பிறர்க்கு துரோகம் செய்பவனாகவும் இருப்பான். குளிகன் நிலையறிந்து சரியான பலன் கூறிடுவாய்! குளிகள் உச்சப் பலம் பெற்றிருந் தால், நற்பலன் உண்டாகுமெனக் கூறுவாய், மகனே!

குளிகன் நிலைமை No : 6

தானென்ற பதினொன்றில் குளிகன் நிற்கத்
தரணிதனின் பேர் விளங்குந் தனமுள்ளோன்
ஏனென்ற அயன் விதியும் அறிந்து செப்பு
என்மகளே வசியனடா ஜாலக்காரன்
வீணென்ற விரயனடா ரசவாதத்தால்
விளம்புகிறேன் வீடுமனை கொதுவை வைப்பன்
கோனென்ற போகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனே வியத்தில் நின்ற பலனைக் கூறே

பொருள் :- பதினொன்றாமிடத்தில் குளிகன் நிற்க, இப்புவியெல்லாம் புகழ் பாடும் தனமுள்ளோன். ஆனால் மிகுந்த ஜாலக்காரன். முகவசியன்; அவன் கிரக நிலை அறிந்து நுட்பமாய் கூறுவாய் மகனே!

விரயஸ்தானமென்னும் பன்னிரண்டாமிடத்தில் நிற்க, வீணாக பொருள் விரையம் செய்பவன்; வீடு, மனை, சொத்துக்களை அடைமானம் வைப்பவன்; போகர் சொன்ன நூல் வாயிலாகவே விரயஸ்தான பலன் கூறினேன்; அறிவாயப்பா!

23. செவ்வாய் தோஷம்

ஒன்றிரண்டு நாலேழு உதிக்கும் வியமெட்டிடத்தில்சேயும் நிற்க - உதவாது களத்திரங்கள், தருகாது காதலியை தாயே, அதுகேள், மகரம், ஆடு, தேளும் ஏழாய் மங்கலனும் நிற்க - அது நன்றாம், பின்னும் - மன்னன் பார்வை பெற்ற சேய்க்கு மங்கையுண்டு சங்கை இல்லை - மகளே!

பொருள் :- செவ்வாய் இலக்கனம் (அ) இராசியிலிருந்து 1, 2, 4, 7, 8, 12ம் இடங்களில் இருந்தால் அங்காரக தோஷமெனப்படும். இதன் விளைவாக அவனுக்கு களத்திரங்கள் தங்காது! காதலியும் நிலைக்காது போய்விடும்! ஆனால், மகரம், மேஷம், விருச்சிகம் - இவை மூன்றும் 7மிடமாகி அதில் செவ்வாய் இருந்தால், தோஷமில்லை! மேலும், செவ்வாயை, குரு பார்த்தாலும் தோஷம் நிவர்த்தியாகி, களத்திரம் நிலைத்து நிற்கும். குற்றமில்லை, மகளே!

விளக்கம் :- செவ்வாய் 1, 2, 4, 7, 8, 12ம் இடங்களில் இருந்தால், செவ்வாய் தோஷம் என்பது உண்மைதான்! ஆனால், அவர் தனது ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தால், தீமை செய்ய மாட்டார் என்பதை, மறைமுகமாக மேஷம், விருச்சிகம், மகரம் முதலிய இராசிகளில் இருந்தால் குற்றமில்லை;

நன்மையுண்டு எனக் கூறுவதைக் காண்க. மேலும், பூரண சுபக் கிரகமான குரு பார்வை செவ்வாய்க்கு இருந்தாலும் தோஷ நிவர்த்தியெனக் கூறுகிறார்; இது உண்மை யென்றாலும், செவ்வாய் யோக வலியில் வலுவிழந்து விட்டால் தோஷமேற்படுமென அறிக.

இதுவு மது

சேய்க்கு தோஷம் செப்புதற்குச் சேய்நின்ற பதியோனும் வீழ்ந்தால், கூறும் - செல்வனுக்கும், செல்வதிக்கும் செப்பவேணும் சேய்தோஷம் தாயே, அதுகேள் - சேய்நின்ற பதியோனும் செல்வனுக்குத் திரிகோணமேற, கூறும் - சேய்க்கு தோஷம் கிட்டாது செல்வனுக்கு விதி தீர்க்கம் மகளே!

பொருள் :- செவ்வாய் நின்ற இராசிநாதனும் பலமிழந்து, வீழ்ச்சி யடைந்தால், செல்வனுக்கும் செல்விக்கும் தோஷமுண்டாகும் தாயே! ஆனால், செவ்வாய் நின்ற இராசிநாதன் இலக்கனம் (அ) இராசிக்கு திரி கோணமேறினால், செல்வனுக்கு தோஷம் கிட்டது! தீர்க்காயுள் உண்டு எனக் கூறுவாய் மகளே!

விளக்கம் :- ஏதாவது ஒரு கிரகம் பகை, நீசமாய் வலு விழந்திருந்தாலும், அது நின்ற இராசிநாதன் ஆட்சி, உச்சம், திரிகோணமேறி வலுப்பெற்றிருந் தால், அந்தக் கிரகம் நற்பலன் கொடுக்க வாய்ப்பு உண்டு. இந்த விதியின் அடிப்படையில்தான், ஷி செவ்வாய் தோஷ விபரத்தை முனிவர் கூறுகிறார் என்பதை ஆய்ந்துணர்க.

24. நவக் கோட்கள் உச்சம் பெற்ற பலன்

(i) சூரியனும், சந்திரனும் உச்சம் பெற்ற பலன்

வெய்யோனு முச்சமானால் வேந்தனாவன் பிரதாபசாலி, கூறும் - வெகுதனவான் வாகனங்கள் தரும் பொருளு மெத்தவுண்டாம் தாயே, அதுகேள் - துய்யமதி உச்சனானால் சுகுணன் தன தானியங்கள் சேர்ப்பான், கூறும் தூய்மையுள்ள நாரிகளைச் சேர்ந்திடுவன் ஜனவசியன் மகளே!

பொருள் :- சூரியன் தன் உச்ச வீடான மேஷத்தில் இருந்தால், அந்த ஜாதகன் நாடாளும் மன்னன் ஆவான்; மகா பிரதாபசாலி என அழைக்கப் படுவான். மேலும், பெரிய தனவந்தனாகவும், வாகனம், பொருள் சேர்க்கை யுள்ளவனாகவும் இருப்பான்.

தூய்மையான சந்திரன் தன் உச்ச வீடான ரிஷபத்தில் இருந்தால், அந்த ஜாதகன் மிகவும் குளிர்ந்த சுபாவமுடையவனாகவும், தன தான்ய விருத்தியுடையவனாகவும் இருப்பான். நல்ல அழகான பெண்களுடன் சேர்ந்திருப்பன்; ஜனவசியன் - மகளே!

(ii) செவ்வாய் புதன் உச்சம் பெற்ற பலன்

நல்ல செவ்வாய் உச்சமானால் நற்கீர்த்தி நீண்ட விதி மன்னன், கூறும் - நயன மொழியன் புத்திமான் வீரசாலி என்றறிந்தேன் தாயே! அதுகேள் - நல்ல புதன் உச்சமானால் நன்னாடு தென் புவிக்கு அரசன், கூறும் - நாரிகலை வல்லோன் சீமான் - நூற்றாண்டு வசிப்பனடி மகளே!

பொருள் :- செவ்வாய் உச்சப்பலம் பெற்றிருந்தால், நல்ல புகழும், கீர்த்தி யுமுண்டாகும்; நீண்ட ஆயுள் பலம் உண்டு; மன்னன்போல் வாழ்வான்; மேலும், நயமாக பேசும் ஆற்றல் உள்ளவன், புத்திசாலி; மிகுந்த வீரசாலி தாயே!

சிறப்பு வாய்ந்த புதன் தன் உச்ச வீட்டில் இருந்தால், தென்னாட்டு அரசன் ஆவான்; நாடு பொலிவுடன் திகழும்; சகல கலா வல்லவன்; பெரிய சீமானாய், நூற்றாண்டு வரை வாழ்வான் என்பதாம்.

விளக்கம் :- 'உச்சம்' பெற்ற எந்தக்கிரகமும் நன்மை செய்யும், செவ்வாய் வீரம், தீரம், ஆற்றல் நிறைந்த ஒரு கிரகம். எனவே, செவ்வாய் உச்சப்பலம் பெற்ற ஜாதகன் மிகுந்த தைரியசாலியாகவும் பலவானாகவும் இருப்பான் எனக் கூறப்பட்டது!

அதுபோல, புதன் கல்விக்கும், கலைகளுக்கும் அதிபதி என்பதால், அவர் உச்சமாக இருந்தால், ஷ அம்சங்களில் ஜாதகர் சிறந்து விளங்குவார் எனக் கூறப்பட்டது! இவ்வாறு அதனதன் காரகத்துவ அடிப்படையில் பலாபலன்களைக் கூற வேண்டும்!

(iii) குரு, சுக்கிரன் உச்சம் பெற்ற பலன்

வல்ல குரு உச்சமானால் வாகனங்கள் வித்தை யுபகாரி கூறும் -
வடிவுடையோன் சம்பத்துள்ளோன் அரச னென்றே உரைத்தேனடி
தாயே அதுகேள் - வல்ல சுக்கிரன் உச்சமானால்
வலிமையுள்ளோன் வித்தையுள்ளோன் போகன், கூறும் - வசன
மொழி நயமுடையோன் வடிவுடையோனென்றுரைத்தேன் மகளே!

பொருள் :- சக்தி வயர்ந்த குரு தன் உச்ச வீடான கடகத்தில் வீற்றிருந்தால், வாகனம், வித்தை லாப முள்ளவன், பிறர்க்கு உதவி செய்பவன்; மிகவும் அழகு நிறைந்த வடிவமுடையவன்; அதிக பொருள் வசதியுள்ளவன்; அரசன் மகளே!

வல்லமை வாய்ந்த சுக்கிரன் தன் 'உச்ச' வீடான மீனத்தில் இருந்தால், மிகுந்த வலிமையுள்ளவன்; வித்தை நிறைந்தவன்; அழகாக, நயன மொழி பேசும் ஆற்றல் உள்ளவன்; மிகவும் அழகான வடிவ முடையவன் தாயே!

(iv) சனி உச்சம் பெற்ற பலன்

வல்ல சனி உச்ச மானால் வெகுபலவான் தீச்க்காயுள் திடவான்,
கூறும் - வாகனங்களுள்ளவனாம் ஆரோக்கிய னென்றுரைத்தேன்
தாயே, அதுகேள் உள்ள விதி நிலையறிந்து ஓதிடுவாய்
புவியோர்க்கு மானே, கூறும் - போகர் பாதம் தான் வணங்கி
புலிப்பாணி யேசலுற்றேன் மகளே!

பொருள் :- சக்தி வாய்ந்த சனி தன் 'உச்ச' வீடான துலாத்தில் இருந்தால், மிகுந்த பலசாலியாகவும், தீர்க்காயுள் நிறைந்தவனாகவும், திடகாத்திரமுள்ள வனாகவும் இருப்பான். மேலும், அதிக வாகனங்கள் உள்ளவன்; நல்ல ஆரோக்கியம் நிறைந்தவன். தாயே! மேலும், ஜாதகர் விதிநிலை நன்கு ஆய்ந்து புவியோர்க்குக் கூறுவாய் மகளே! போகர் சொன்ன விதி தப்பாது தாயே!

ஒரு கிரகம் உச்சமானால்

ஒரு கிரக முச்சமானால் ஊரிலதிகாரியாவன் மணியன், அன்றும்
- ஊராளும் வேந்தனாலே உதவியுண்டு தனமுமுள்ளோன்

தாயே, அதுகேள் பருவமுள்ள பெண்ணழகி பதிசமையம் விதி நிலையை ஆய்ந்து, நல்ல - பதினெண் பேருரைத்த நூலைப் பக்குவமாய் எடுத்துரைப்பாய் மகளே.

பொருள் :- ஒரு கிரகம் உச்சமானால், அந்த ஜாதகர் ஒரு ஊருக்கே அதிகாரி யாவான்; ஊராளும் வேந்தனாலே உதவியுண்டு; தனமும் உள்ளவன் தாயே! அழகு பொருந்திய பெண்ணே, பதிநிலை, விதிநிலை ஆய்ந்து, மிகவும் பக்குவ மாய் பதினெண்பேர் சொன்ன நூலை பக்குவமாய் எடுத்துரைப்பாய் தாயே!

இரண்டு கிரகம் உச்சமானால்

இரு கிரக முச்சமேற இப்புவியிலோர் தேசமாள்வன், சென்மன் - இறுமாப்போன் வீரம் பெலசாலி யென்றுரைத்தனடிதாயே, அது கேள் கருவமைந்த சமையம் விதி காளைக்குப் பதிநிலையை ஆய்ந்து, கூறும் - கனமுள்ள சித்தர் நூலால் எடுத்துரைப்பாய் கண்மணியே மகளே!

பொருள் :- இரண்டு கிரகங்கள் உச்சம் பெற்றிருந்தால், அந்த ஜாதகர் இப்புவியில் உள்ளோர் தேசத்தை ஆளும் சக்தியுடையவனாக இருப்பான். மேலும், இவன் இறுமாப்பு நிறைந்தவனாகவும், பலசாலியாகவும், வீரம், தீரம் நிறைந்தவனாகவும் இருப்பான். குழந்தை பிறந்த நேரத்தில் உள்ள கிரகநிலைகளை நன்கு ஆய்ந்து, பதிநிலை கூர்ந்து, சரியான விதியை எடுத்துரைப்பாய் மகளே!

விளக்கம் :- இரண்டு கிரகங்கள் ஒரு ஜாதகத்தில் 'உச்சம்' பெற்றிருந்தால், அந்த ஜாதகர் ஒரு இராஜ்ஜியத்தை ஆளக்கூடிய அளவுக்கு யோக பலம் உண்டாகும். ஆனால், மற்ற கிரக பலங்களையும், லக்கன பலனையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால்தான், அந்த ஜாதகரது உண்மையான யோக பலம் தெரியும்! எனவேதான் முனிவர், பதிநிலை, விதிநிலை ஆய்ந்து கூற வேண்டுமென கூறுகிறார்! சித்தர்களின் கருத்தும் இதுதான்!

மூன்று கோள் உச்சமானால்

கோள்கள் மூன்று உச்சம் பெற காசினியில் செங்கோலையுடை யோன், சேயன் - மூர்க்கன் வீரன் பெலசாலி அணியுடையோ னென்றுரைத்தேன் தாயே, அதுகேள் - தோன்றுஞ்சனி சயனசுகன் தினகரனும் பொன் மதியை ஆய்ந்து, நல்ல தொல்புவியில் மானிடர்க்கு யுரைத்திடுவாய் விதிபோல மகளே!

பொருள் :- மூன்று கோள்கள் உச்சம் பெற்ற ஜாதகன் இப்புவியில் செங்கோல் ஏந்தி அரசாளும் தன்மை யுடையவனாக இருப்பான், மேலும், அவன் மூர்க்கக் குணமுள்ளவனாகவும், பெரிய வீரனாகவும், மிகுந்த பலசாலியாகவும் இருப்பாண்டி தாயே! சனி, சுக்கிரன், செவ்வாய், குரு, சந்திரன் முதலிய கோட்கள் நிலை ஆய்ந்து, சரியான பலனை இப்புவியில் உதித்தோர்க்குக் கூறிடுவாய் மகளே!

ஐந்து கோள் உச்சமானால்

வல்ல அஞ்சு கோளுச்சம் பகையாக யேறிநின்ற விதியை, முன்னாள் - வல்லோர் சொன்ன நூல் விதியை வன்மையுடன் எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - பூவுலக மெல்லா மொரு

குடைக்கீழ் ஆண்டிடுவன் பயனால், நல்ல - தாரியர்கள் நேசன்
அருள் தேவ விசுவாசனடி தாயே!

பொருள் :- வல்லமை பொருந்திய ஐந்து கோட்களை உச்சமாக பெற்ற ஜாதகர், இப்பூலக மெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டிடுவன்; முன்னாள் பதினெண்பேர் சொன்ன நூலை ஆய்ந்து கூறினேன் மகளே! மேலும், அவன் பெண்கள் மீது அதிக மோகமுள்ளவனாகவும், தேவர்களின் நல்லாசியைப் பெற்றவனாகவும் இருப்பான் எனக் கூறுவாய் தாயே!

விளக்கம் :- 5 கோட்கள் உச்சம் பெறுவது என்பது ஒரு அரும் பெறும் வாய்ப்பாகும். இப்படிப்பட்ட ஜாதகர்கள் அவனி 56 தேசங்களையும் ஆளும் சக்தியை அடைவர் என்பது ஜோதிட ரீதியான விளக்கமாகும்! உண்மையும் கூட! ஆனால், இவ்ர்கள் ஒருவரையொருவர் பார்த்தால் பலன் குன்றந்து, சாதாரண யோகமுடன் வாழ நேரிடும்!

உச்சனை உச்சன் பார்த்தால்

உச்சக் கோளை யுச்ச னோக்க ஊழ்விதியை யின்ன தென்று
அறியேன், முன்னாள் - அச்சமில்லா போகர் நூலா லறைந்திடுவாய்
எனக் கறியதாயே, அதுகேள் - உச்ச பலனில்லாமல்
பிச்சனென்றேன் பார்தனியே தரித்திரன் சொல்லும் - பதி பெலமும்
நிதிதனமும் படுக்கை சுகன் பெலனறிவாய் மகளே!

பொருள் :- ஒரு உச்சக் கோளை, மற்றொரு உச்சக் கோள் பார்த்தால், ஊழ்வினைப் பயன் இன்னதென்று தெரியவில்லை! உச்சபலன் இல்லாமல் மிகவும் தரித்திரமான பலன்களையே கொடுக்கும்! இப்புவியில் கொடிய தரித்திரனாக வாழ்வான்! இலக்கனம், தனஸ்தானம், சுகஸ்தானம், விரயஸ்தான பல மறிந்து கூறுவாய் மகளே!

விளக்கம் :- உச்சனை, உச்சன் பார்த்தால், இரண்டு கோட்களும் ஒன்றுக் கொன்று கடும் பகைவர்களாக மாறிவிடும். அது மட்டுமல்ல, அவர்கள் வீடுகளில் உள்ள கிரகங்களும் ஒன்றுக் கொன்று பகைவர்களாக மாறிவிடும்! இதன் விளைவாக கோட்களெல்லாம் இரு கட்சிகளாக பிரிந்து, ஒரு பெரிய யுத்தத்தை உருவாக்கி எந்தப் பலனும் சிறப்பாக நடைபெற முடியாத நிலைக்குக் கொண்டு வந்து விடும்! இதன் விளைவாக, அந்த ஜாதகர் 'பிச்சை' எடுக்கும் அளவிற்குத் தள்ளப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை! எனவேதான் முனிவர் 'உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சை யெடுப்பான், என்று கூறினார். மற்ற கிரக நிலைகள் நன்றாக இருந்தால், இந்த தோஷத்தி லிருந்து ஓரளவு நிவாரணம் பெற முடியுமென்பது குறிப்பிடத்தக்கது!

25 நீச்சக் கோட்களின் பலாபலன்கள்

(i) நீச்சனை நீச்சன் நோக்க

விதி நீசம், நீச்தீஷ்டி விளங்கும் வகை இன்னதென்று அறியேன்,
முன்னாள் - பதினெண்போர் செப்பு நூலை பதமறிந்து
எடுத்துரைப்பாய் தாயே அதுகேள் - பதியுமுண்டு நிதியுமுண்டு
பாலனுக்கு சிசு விருத்தியுரைத்தேன் கூறும் - பதிக்கு எட்டோன்
நிலையறிந்து பதமறிந்தேன் புலிப்பாணி மகளே!

பொருள் :- அஷ்டமஸ் தானத்தில் நீசம் பெற்ற கிரகம் இருக்க, அதை இன்னொரு நீசக் கோள் எதிரே நின்று பார்க்க, நன்மையுண்டு; பொருளுமுண்டு; பாலனுக்கு ஆயுள் விருத்தியுண்டு; முன்னாள் பதினெண்பேர் நூல் ஆய்ந்து கூறினேன் மகளே! அஷ்டமஸ்தானாதிபதி நிலையறிந்து கூறுவாய் மகளே!

விளக்கம் :- 'நீச்சனை நீச்சன் பார்ப்பது மிகவும் நல்லது' என்பது ஓர் சிறப்பு விதி! ஜோதிட நூல் வல்லவர்களுக்கு இதன் இரகசியம் புரியும்! இந்த இரண்டு நீச்சக் கோட்களும் ஒன்றுக் கொன்று நெருங்கிய நண்பர்களாக மாறி விடுவது மட்டுமல்லாமல், அவர்களது வீடுகளில் இருந்தவர்களும் அவ்வாறே ஆகிவிடுகின்றனர். எனவே, இவர்கள் அனை வரும் ஒன்று சேர்ந்து, ஜாதகர்க்கு இராஜயோக பலன்களைத் தருவர் என்பது இப்பாடலின் கருத்து! அஷ்டமஸ்தானத்தில் இவர்கள் இருந்தால், ஆயுள் விருத்தியாகும். அஷ்டமஸ்தானாதிபதியும் பலவானாக இருந்தால், மேற்படி நீச்ச தோஷம் விலகி, ஜாதகர்க்குத் தீர்க்காயுள் உண்டு என்று கூறுவது சரியான கருத்தாகும்!

(ii) சுபக்கோள் நீச்சம் பெற்ற பலன்

சுபக்கோள்கள் நீசம் பெற்று சந்திரனை நோக்கும் பலன் என்ன, சற்றும் - சுருதி மொழி வழுவாமல் யேசை தூதை எடுத்துரைப்பாய் தாயே அதுகேள் - அகம் கடந்து செடி மறைவில் அவதியுடன் பெற்றெடுப்பள் மாது, நல்ல அயன் விதியை ஆரறிவோர் அன்பாக கூர்ந்து செப்பு மகளே!

பொருள் :- சுபக் கோள்கள் நீசம் பெற்று சந்திரனை நோக்கினால், அந்த ஜாதகி தன் இல்லம் கடந்து ஏதாவது ஒரு செடி மறைவில், மிகவும் கஷ்டமுடன் தன் குழந்தையைப் பெற்றெடுப்பாள்! முன்னாள் பதினென் பேர் வகுத்த நூல் பார்த்து, வகையாகக் கூறினேன் மகளே! ஈசன் வகுத்த விதியை ஆறறிவு படைத்த மானிடர்க்கு அன்பாக கூறு மகளே!

(iii) பாவக் கோள் நீச்சம் பெற்ற பலன்

பாவக்கோள் நீச்சம் பெற்று பால் மதியை நோக்கும் பலன் என்ன, விதியை - பக்குவமா யெனக் கறிய பக்ஷம்வைத் தெடுத்துரைப்பாய் தாயே - அதுகேள் - நீசனில்லும் புழக்கடையில் நிமைப் பொழுதில் பெற்றிடுவள் மாது, நல்ல ஈசன் விளையாட்டுகளை எவரறியக் கூடுமடி மகளே!

பொருள் :- பாவக் கோட்கள் நீசம் பெற்று, பால் போல் பிரகாசிக்கும் சந்திரனைப் பார்த்தால். அந்த மாது மிகவும் அவலக்ஷணமான வீட்டிலோ (அ) ஏதாவது ஒரு அசிங்கமான புழக்கடை ஓரத்திலோ, ஒரு நொடிப் பொழுதில் தன் குழந்தையைப் பெற்றெடுப்பாள்! நல்ல ஈசன் விளையாட்டுகளை யாரறிய கூடுமடி மகளே!

(iv) நீச பங்க இராஜயோகம்

நீச நின்ற ராசிநாதன் நின்ற மதிக் கேந்திரத்தி லேற சென்மன் - நிச்சயமாய் அடையும் பலன் நினைவாக செப்பிடுவாய் தாயே, அதுகேள் - தேசம் புகழ் கீர்த்திமானாய் சிறப்புடனே ஓங்கி மிக வாழ்வன், திரை கடலில் - ஓடுங்கப்பல் திரவியமும் பேரஞ் செய்வன் மகளே!

பொருள் :- நீசன் நின்ற இராசிநாதன், சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருக்க, அந்த ஜாதகன் தேசம் புகழ் கீர்த்திமானாய் சிறப்புடன் வாழ்வான். திரைகடல் ஓடி திரவியம் தேடுவான்; வெகுபொருள் சேகரிப்பான்; சொன்ன பலன் பழுதில்லை; நிச்சயமாக பலிதமாகும் தாயே!

விளக்கம் :- நீசம் நின்ற இராசிநாதன், சந்திரனுக்கு கேந்திரத்திலிருந்தால். நீசபங்க இராஜயோகம் என இப்பாடல் கூறுகிறது. ஆனால், அவர் எந்த வகையிலாவது வலுப்பெற்றிருந்தால், நீச பங்கமாகி இராஜயோகம் உண்டாகும் என்பது சாஸ்திர ரீதியான விளக்கமாகும்! அதாவது நீசன் நின்ற இராசிநாதன் ஆட்சி, உச்சம் பெற்றாலும், லக்கனத்திற்கு கேந்திர, கோணங்களில் இருந்தாலும் (அ) சந்திரனுக்கு கேந்திர, கோணங்களில் இருந்தாலும் நீச பங்கம் உண்டாகி, இராஜயோகம் சித்திக்கும் என்பது குறிப்பிடத்தக்கது!

(v) நீச்சக் கோட்களின் யோக நிலை!

பதிக்கிரண்டு மூன்று நாலு பத்து நலம் லாப நீச்ச கோள்கள் நிற்க - பாக்கியங்களளித்திடுவர் பாலன் செல்வாக்கனென்றேன் தாயே, அதுகேள் - விதிகள் நிலை பிசகாது விளங்கும் திசா நாத நிலை கூர்ந்து, நல்ல - விண்ணோர்களை மயக்குமானே விடுகதை போலெடுத்துரைப்பாய் மகளே!

பொருள் :- லக்கனத்திற்கு இரண்டு, மூன்று, நான்கு, பத்து, ஒன்பது, லாப ஸ்தானங்களில் நீச்சக் கோட்கள் நிற்பது நன்மையாகும்! நல்ல பாக்கியங்களைக் கொடுத்திடுவர்; அந்த பாலன் பெரிய செல்வந்தனாக வாழ வாய்ப்பு உண்டு! இருப்பினும், பாலன் விதி மாறாது, கிரகநிலைகளை நன்கு ஆய்ந்து, நடப்பு திசாநாதன் நிலையை ஆய்ந்து, இப்புவியில் உள்ளோர்க்கு விடுகதை போல் எடுத்துரைப்பாய், மகளே!

விளக்கம் :- *2, 3, 4, 9, 10,11*ம் வீடுகளில் நீசக் கோட்கள் இருந்தால், அந்தப் பாலன் மிகவும் தரித்திரனாகவும், பிச்சைக்காரனாகவும் வாழ்வான் எனக் கூறலாம்! இவ்வாறு நீசக் கோட்கள் இருந்தால் இவர்கள் ஒருவரையொருவர் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுகிறது; மேலும், நீசம் நின்ற இராசிநாதன் நீசம் பெறும் வாய்ப்பும் ஏற்படுகிறது! நீச்சனை நீச்சன் பார்த்தால் இராஜயோகம் உண்டு என்று ஏற்கெனவே கூறியுள்ளோம். நீசம் நின்ற இராசிநாதன் நீச்சமடைந்தால் 'விசித்திர நீச்சம்' என்று அழைக்கப்படும். இந்த அமைப்பும் இராஜயோகம் தரும். எனவே, தனவிருத்திக்குக் காரணமான ஸ்தானங்களான *2, 3, 4, 9, 10, 11*ம் வீடுகளில் நீச்சக் கோட்கள் இருப்பது குற்றமல்ல; நல்ல பாக்கியங்களே ஏற்படும் என்பது முனிவர் கருத்து! உண்மையுங் கூட! மேலும், இந்த அமைப்புகளை ஒரு சிறப்பு யோக அம்சமாகவும் எடுத்துக் கொள்ளலாம்!

(vi) அசுரகுரு ஏழில் நீச்சம் பெற்ற பலன்

வயதுக்கு மூத்தவளை வளமாக மணம் புரியும் விதியை முன்னாள் - வடிவேலர் நூலெடுத்து வண்மையுடனுரைத்திடுவாய் தாயே, அதுகேள் - அயன்விதிகள் பிசகாது அசுரகுரு நீசனாக எழில், கோள்கள் - அமைந்திருந்த விதிபோல அமையுமடி உலகின் கண் மகளே!

பொருள் :- அசுர குரு என்று அழைக்கப்படும் சுக்கிரன் இலக்கனம் (அ) இராசிக்கு எழில் அமர்ந்து இருந்தால், அந்த ஜாதகர் தன் வயதைவிட

மூத்த பெண் ஒருத்தியை மணமுடிப்பான். முன்னாள் - வடிவேலர் நூலிளை ஆராய்ந்து - வகையாகக் கூறினேன் மகளே! மேலும் மற்ற கிரக நிலைகளை ஆய்ந்து கூறினால், பலன் தப்பாது பலிதமாகுந் தாயே!

விளக்கம் :- 7ம் இடத்திலோ (அ) 7ம் அதிபதியோடு நீச பலம் பெற்ற கிரகங்கள் இருந்தால், அந்த ஜாதகர் தன் வயதுக்கு மூத்தவளை மணமுடிக்கும் வாய்ப்பு உண்டாகும் என்பது இப்பாடல் தரும் கருத்தாகும்! ஆனால், இவர்களை குரு பார்த்தால், இந்த தோஷம் நிவர்த்தியாகி நல்ல அழகான, இளமையான மனைவி கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது!

26. அரிஷ்ட தோஷம்

(1)கருங்கோளும் நாலிலேற குழவிக்கு அரிட்டமுண்டு பயனால், கூறும் - சதிபதியோன் நிலை கூர்ந்து சாஸ்திரத்தை எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - சேய் சனியுமிருவர் கூட சென்மனுக்கு அரிட்டம் விதி செப்பு, பொல்லா - சேயை சனி நோக்கினாலும் செப்பிடுவாய் சுபமொழியை மகளே!

பொருள் :- கருங்கோள் என்று அழைக்கப்படுகிற ராகு லக்கனம் (அ) இராசிக்கு 4ம் வீட்டில் அமர்ந்திருந்தால், குழவிக்கு அரிஷ்ட தோஷமுண்டாகும், 4ம் அதிபதியின் பலத்தை ஆராய்ந்து சரியாக குறி கூறிடுவாய் தாயே! மேற்படி ராகுவுடன் செவ்வாய், சனி கூடினாலும், ஜென்மனுக்கு அரிஷ்டமுண்டு; செவ்வாயை சனிநோக்கினாலும், ஜென்மனுக்கு அபாயம் உண்டாகும்; உயிர் பிரிய வாய்ப்பு உண்டு! மகளே!

விளக்கம் :- 4மிடமென்பது மாதுர்ஸ்தானம், சுகஸ்தானம் என அழைக்கப்படும். இதில் தீக் கோட்களாகிய, சனி, ராகு, செவ்வாய் இருந்தாலும் (அ) நோக்கினாலும் குழவிக்கு அரிஷ்ட முண்டாகுமென்பது இப்பாடலின் கருத்து! ஆனால் 4ம் அதிபதி பலவானாக இருந்து, சுபர் பார்வையுடன் இருந்தால், மேற்படி தோஷம் விலகிவிடுமென அறிக.

2 ஆடெருது கும்பம் பதியாக வந்து உதித்த நல்ல சேய்க்கு கோளும் - என்ன பலனளித்திடுவர் எனக்கறிய செப்பிடுவாய் தாயே, அது கேள் - கருவதுவம் விருத்தியில்லை கனத்த யோக மென்றுரைத்தேன் பயனால், நல்ல - கருவதுவும் விருத்தியானால் கனத்த பொருள் போகுந் துன்பம் மகளே!

பொருள் :- மேஷம், ரிஷபம், கும்பம் முதலிய இராசிகள், இலக்கனமாக அமைந்த குழவிக்கு, கோட்கள் செய்யும் பலன் யாதெனில், கருவது கலைந்து போகும்; ஆனால், நல்ல யோக முண்டாகும். அதே சமயம் கருவது விருத்தியானால், கைப் பொருள் அனைத்தும் நாசமாய் போய்விடும் மகளே!

விளக்கம் :- 'ஆடெருது' என்பது 'ஆட்டை' சின்னமாக கொண்டுள்ள மேஷ இராசியையும், 'எருதுவை' சின்னமாக கொண்டுள்ள ரிஷப ராசியையும் குறிப்பிடும்! இப்பாடலில் கொடுக்கப்பட்டுள்ள கருத்தைச் சிறப்பு விதியாக கொள்க. முனிவர் தமது ஞான திருஷ்டியில் கண்டு பிடித்த தெனலாம்! காரணம் கூற இயலாது!!

3 பதிக் கிரண்டில் பாவரேற பாவர்களும் வலுத்து பாவர் நோக்க, சென்மன் - பாம்பாலும் விஷத்தாலும் பாலனுயிர் போகுமடி தாயே, அதுகேள் - விதிகள் நிலை பிசகாது வீற்றிருந்த பதியோனுமோங்க,

சேய்க்கு - விஷங்கள் பயன்கிட்டாது விஷந்தீண்டிப்
பிழைத்திடுவன் மகளே!

பொருள் :- லக்னத்துக்கு இரண்டில் பாவக் கோட்கள் நிற்க, அந்த பாவர்கள் வலுவாய் இருக்க, அவர்களை மற்ற பாவக் கோட்கள் பார்த்தால், அந்தக் குழவியின் உயிர் பாம்பாலும், விஷத்தாலும் போகுமடி தாயே! ஆனால், மேற்படி பாவக்கோட்கள் இருந்த இராசி நாதர்கள் வலுவாக இருந்தால், மேற்படி குழவியின் உயிர் போகாது! விஷம் தீண்டி பிழைத்திடுவன் மகளே!

27 சர, ஸ்திர, உபய லக்ன பலன்கள்

சரம்

சூடப்பா சரராசி செனித்த பேர்க்கு
சுகமில்லை லாபாதி பதியினாலே
ஆடப்பா அகம் பொருளும் நிலமும் சேதம்
அப்பனே அரசரிட தோஷமுண்டாம்
தேடப்பா திரவியமு மளித்தாரானால்
திடமான அரிட்டமடா தேடமாட்டான்
வீடப்பா கோணத்திலிருக்க நன்று
விளம்பினேன் புலிப்பாணி வினையைப்பாரே

பொருள் :- சர இராசியில் பிறந்தவர்களுக்கு லாபஸ்தானாதிபதியாலே நற்பலன்கள் ஏற்படாது! பொருள் நஷ்டம் உண்டாகும். நிலங்கள் அனைத்தும் நாசமாய் போகும். அரசர்களின் விரோதத்தைச் சம்பாதிக்க நேரிடும்! அதேசமயம், திரவியத்தைக் கொடுத்தால், தேகத்தில் பிணிகள் உண்டாகி அரிட்டம் ஏற்படும். ஆனால், லாபாதிபதி கோண இராசிகளில் இருந்தால், தோஷமில்லை! நற்பலன்கள் உண்டாகும். புலிப்பாணி நூல் பார்த்து கூறுவாய் கொற்றவனே!

ஸ்திரம்

பாரப்பா திரராசி செனித்த பேர்க்கு
பாங்கான பாக்கியாதி பதியுமாகா
கூறப்பா கோணத்தில் மேவினாலும்
கொற்றவனே பலனளிப்பன் அரசன் லாபம்
வீரப்பா மற்ற யெடந் தனிலே நிற்க
வெகுபயமாம் பலனில்லை வினையில் துன்பம்
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாக புலிப்பாணி செப்பினேனே!

பொருள் :- ஸ்திர ராசியில் பிறந்தவர்களுக்கு, சிறப்பு வாய்ந்த பாக்கியாதிபதியும் நன்மை செய்ய மாட்டார்; ஆனால், அவர் கோணத்தில் இருந்தால் நன்மை செய்ய இடம் உண்டு; அரசர்களால் லாபம் உண்டாகும். மற்ற இடங்களில் பாக்கியாதிபதி இருந்தால் நன்மை ஏற்படாது! வெகுபயம் உண்டாகும். செய்யும் செயல்களிலெல்லாம் மிகுந்த துன்பம் உண்டாகும். போகர் நூல் பார்த்து, புலிப்பானி கூறினேனப்பா!

உபயம்

செப்புவாய் உபயத்தில் செனித்த பேர்க்கு
சிறந்த தொரு சப்தமனு மாகாதப்பா
ஒப்புவாய் உலகத்தில் அவதி மெத்த
ஊழ் வினையைத் தடுப்பாரு முலகிலுண்டோ
தப்புவாய் திடல்நாசம் தனமும் நாசம்
தார் வேந்தர் பகையுமுண்டு தேக துன்பம்
இப்புவியில் போகருட கடாக்ஷத்தாலே
இடமறிந்து திசையறிந்து யியம்புவாயே

பொருள் :- உபய லக்னத்தில் பிறந்தவர்களுக்கு, சிறப்பு வாய்ந்த சப்தமாதிபதியுமாகாது! இப்பூவுலகில் மிகப் பெரிய துன்பத்தை, மேற்படி சப்தமாதிபதி கொடுப்பார். இதைத் தடுக்க உலகில் யாருமில்லை! தாம் இருக்கும் மனையும், பொன் பொருளும் நாசமாகும். பாராளும் மன்னராலே பகையுமுண்டாகும். தேகத்தில் பல்வித பீடைகள் பற்றிக் கொள்ளும். போகர் நூல் பார்த்து, கிரகம் இருக்கும் இடமறிந்து, திசாநாதர் நிலையறிந்து பலன் கூறுவாய் மகனே!

விளக்கம் :- மேஷம், கடகம், துலாம், மகரம் - இவை நான்கும் சர ராசிகள் எனப்படும். இந்த இராசிகளுக்குப் 11மிடம் பாதகஸ்தானமாகும். எனவே, 11மிடத்தில் இருப்பவர்களும், 11மிடத்ததிபதியும், மேற்படி லக்ன காரர்களுக்கு தீமை செய்வார்கள் என்பது புலிப்பாணி கருத்து!

ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் - இவை நான்கும் ஸ்திர ராசிகளாகும். இவர்களுக்கு 9மிடம் பாதகஸ்தானமாகும். எனவே, 9ம் வீட்டில் இருப்பவர்களும், 9ம் அதிபதியும் ஸ்திரலக்னகாரர்களுக்கு நன்மை செய்ய மாட்டார்கள் என முனிவர் கூறுகிறார்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் - இவை நான்கும் உபய இராசிகளாகும். இவர்களும் 7மிடம் பாதகஸ்தானமாகும். எனவே, 7ம் இடத்தில் இருப்பவர்களும், 7ம் இடத்ததிபதியும் உப:ய லக்னகாரர்களுக்கு நன்மை செய்ய மாட்டார்கள் எனக் கொள்க.

28 அட்டமன் நிலைமை

(i)

பாரப்பா அட்டமனு மெவரானாலும்
பலமுள்ளோர் அப்பலனை பணிந்து கேளு
சீரப்பா சிறை மரணம் கிரிமேலேறி
சிவசிவா வீழ்ந்திடுவன் தேசம் செல்வன்
கூறப்பா கொடும்பகையும் கொடுவாள் காயம்
குடிமன்னுஞ் சீவனும் மோசக் கேடு
வீரப்பா விஷபயமும் அம்மை பேதி
விளையுமடா பலதுன்பம் வினையைக் கேளே!

பொருள் :- அஷ்டமஸ்தானாதிபதி. எந்தக் கிரகமாக இருந்தாலும், நீங்கள் பலமுள்ளவராக இருந்தாலும் கொஞ்சம் பணிந்து அதன் பலனைக்

கேளுங்கள்; சிறைச் சாலையில் மரணமடையச் செய்வான்; மலைமேலேறி கீழே விழச் செய்வான், நாடு பூராவும் அலைய வைப்பான். கொடுமையான விரோதங்கள் உண்டாகும். கொடுவாள் காயம் ஏற்படும். குடிமன்னராலும் மோஷக் கேடுகள் உண்டாகும். மேலும், விஷப் பயம், அம்மை பேதி வந்து பல்வித துன்பங்களை அனுபவிக்க வைப்பான் என்பதாம்!

(ii) இதுவு மது

கேளப்பா பீசத்தில் நோயுண்டாகும்
கெதியுள்ள குழவிக்கு ரோகங்காட்டும்
வீளப்பா தொங்கிடுவன் வெகுபேர் காண
விளங்குகின்ற தூக்கும்ரக் கோளில் தானும்
பாரப்பா பீரங்கி வெடியால் கேடு
பலதுன்பம் விளையுமடா பொருளும் நஷ்டம்
நீளப்பா நீர் பயமும் தீயால் வேதை
நீரிடியும் விழுகுமடா நிசஞ் சொன்னோமே

பொருள் :- மேலும், மர்மக்குறி பீசத்தில் நோயுண்டாகும். திடகாத்திர முள்ள குழந்தைக்கு நோய் உண்டாகும். ஊர்மக்கள் பல பேர் காண தூக்குமரத்தில் தொங்கிடுவான். பீரங்கிவெடியால் கேடுண்டாகும். இதுபோல், பல துன்பங்கள் ஏற்படும். பொன், பொருள் சேதமுண்டாகும். ஜலத்தால் பயமும், தியால் துன்பமும், மின்னல் இடியும் விழும்! சொன்னது யாவும் உண்மை தாமே!

(iii) இதுவு மது

பாரப்பா இன்ன மொன்று பகரக் கேளு
பலமுள்ள அட்டமனுமட்ட மத்தில்
கூறப்பா குழவிக்கு ஆண்டு நூறு
கொற்றவனே சத்துருவும் கூடிநோக்க
ஆறப்பா அயன் விதியும் அற்பமாகும்
அம்புலியும் உச்ச கேந்திரத்தில் நிற்க
சீரப்பா ஜென்மனுமே ஐம்பதுக்குள்
சிவலோகஞ் சேர்வனென்று தெளிந்து செப்பே!

பொருள் :- இன்னொரு விஷயம் சொல்கிறேன், கேளப்பா! அஷ்டம ஸ்தானாதிபதி அஷ்டமத்திலேயே ஆட்சியாக இருக்க, ஜென்மனுக்கு தீர்க்காயுள் நூறு வரை உண்டு; ஆனால், சத்துரு கோட்கள் ஒன்றாக கூடி பார்த்தால், ஆயுள் பங்கம் ஏற்படும்; அற்பாயுள் எனலாம்! அதே சமயம், சந்திரன் கேந்திரமேறி தன் உச்ச இராசியில் இருக்க ஜென்மன் தனது 50 வயது முடிவதற்குள் சிவலோக பதவி அடைவான் என்பதாம்!

(iv)

அறைந்திட்டேன் யின்னமொன்று அன்பாய்க் கேளு
அட்டமத்தோன் மூன்றினிலே யமர்ந்த வாறும்
கரந்திட்டேன் கருவூரிலிருந்து வந்த
காளையவன் நூறாண்டு வசிப்பனப்பா

பரைத்திட்டேன் பகைவர்களு மெதிர்த்தாரானால்
பாலனுமே போர்புரிவன் நிதியுமுள்ளோன்
சிறந்திட்டேன் போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாக புலிப்பாணி சொன்னேன் பாரே!

பொருள் :- இன்னு மொன்று சொல்வேன்! கேளப்பா! அஷ்டமத்தோன் மூன்றில் இருக்க, ஜென்மன் நூறாண்டு வாழ்வான். பகைவர்கள் எதிர்த்தால், அவர்களுடன் எதிர்த்து போர் புரிவான் இந்த பாலகன்! நல்ல பொன் பொருளும் இவனை வந்தடையும்! போகர் அருளினாலே புலிப்பாணி ஆய்ந்து கூறினேனப்பா!

விளக்கம் :- 8ம் அதிபதி 3ல் இருப்பது நல்லது என்பது இப் பாடலின் கருத்து! ஆயுள் பலம் தீர்க்கம் உண்டாவதுடன், பொன் பொருள் சேர்க்கை யும் உண்டாகுமாம்! "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்" என்ற யோக விதியின்படி இப்பாடலின் கருத்து அமைந்திருப்பதைக் காண்க.

(v)

பாரப்பா யின்னமொரு புதுமை கேளு
படவரவு சனி செவ்வாய் வெய்யோனேழில்
வாரப்பா வந்ததொரு தாரமெல்லாம்
வையகத்தில் மாண்டிடுவர் வரிசையாக
ஆரப்பா அட்டமத்திலிவர்கள் குக்க
அப்பெண்ணின் கணவனுமோ முந்திசாவன்
சீரப்பா போகருட கடாஷத்தாலே
சிறப்பாகப் புலிப்பாணி நூலைப் பாரே.

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! கெடுதியுள்ள ராகு, சனி, செவ்வாய், சூரியன் முதலானோர் 7ம் இடத்தில் இருக்க, ஜென்மனுக்கு வரும் தாரமெல்லாம் வரிசைக் கிரமமாக இறந்துவிடுவர்! இந்த தீக் கோட்கள் அனைவரும் 8ம் வீட்டில் கூடியிருந்தால், அந்தப் பெண்ணின் கணவனே முந்தி மரணமடைவான். போகர் நூல் ஆய்ந்து கூறினேனப்பா! புலிப்பாணி நூல் பார்த்துப் பலன் கூறுவாய் மகனே!

(vi)

சொல்லப்பா சுடர் வெள்ளி எட்டில் நிற்க
சுகமான கட்டில் மெத்தை மாடகூடம்
அல்லப்பா அகம் பொருளும் நிலமுங் கிட்டும்
அரண்மனையில் சேவகமும் செய்வன் காளை
தள்ளப்பா தரைபொருளும் நிலமுமெல்லாம்
தந்த சுக்கிரன் வாங்கிடுவன் பின்னால் கேடு
வல்லப்பா போகருட கடாக்ஷத்தாலே
வளமான புலிப்பாணி பாடினேனே

பொருள் :- பிரகாசம் பொருந்திய சுக்கிரன் எட்டாமிடத்தில் நிற்க, சுகமான கட்டில், மெத்தை, அரங்கு மாளிகை வீடு, பொன்பொருள் சேர்க்கை, நிலவசதி அனைத்தும் கிடைக்கும். ஜென்மனுக்கு அரண்மனை யில் வேலை பார்க்கும் பாக்கியம் கிட்டும். இவ்வளவு தூரம் அளவிலா

பொன் பொருள் கொடுத்த சுக்கிரன், பின்பு அவ்வளவு தூரம் கெடுதியையும் செய்வான். போகர் அருளாலே, வளம் நிறைந்த புலிப்பாணி பாடினேன் அப்பா!

(vii)

ஆரடாஇன்னமொரு சேதிகேளு
அட்டமத்தில் கருநாக மமைந்தவாறும்
சீரடா செல்வனையும் அரவந்தீண்டி
செத்திறந்து போய் மடிவன் செகத்திலேதான்
பாரடா பரமகுரு வேந்தன் நோக்க
படவரவு தீண்டாது பாலனைத்தான்
ஊரடா உண்ணுதலால் கேடுமுண்டு
உத்தமனே ஆறோனைக் கூர்ந்து சொல்லே

பொருள் :- இன்னுமோர் சேதி செல்வேன்; கேளப்பா! அஷ்டமத்தில் ராகு இருந்தால், ஜென்மன் பாம்பு தீண்டி மரணமடைவான். ஆனால், ராகுவை குரு பார்த்தால், பாம்பு தீண்டாது; பாலனுக்குத் தோஷமில்லை! அதே சமயம், சாப்பிடுவதால் கேடு முண்டு. ஆறாம் அதிபதி பலம் பார்த்துக் கூற வேண்டும் மகனே!

விளக்கம் :- 8ல் ராகு இருந்தால், விஷத்தால் மரணம் உண்டு. குரு பார்க்க அது நிவர்த்தியென்பது ஜோதிட ரீதியான விளக்கமாகும்! 8ல் இருக்கும் ராகுவுக்கு குரு பார்வை கிடைக்கும் போது, அந்தப் பாவம் சமநிலையை பெறுகிறது! எனவே, ஜாதகர் சாப்பிடும் போது, உண்ணும் உணவு சரியாக ஜீரணமாகாமல் ராகு தடை செய்வார்; உடலில் புண், பொடிகளை உருவாக்குவார்! குரு பார்ப்பதால் இந்த தோஷம் வைத்தியச் செலவு செய்வதன் மூலம் நிவாரணமாகும் எனக் கொள்ள வேண்டும். ஆனால், 6ம் அதிபதி ஆட்சி, உச்சமாக இருந்தால், வைத்தியச் செலவு இல்லாமல் தானாகவே மேற்படி அஜீர்ண கோளாறு நீங்கி விடுமென அறிக. இந்தக் கருத்தையே முனிவர் மறைமுகமாக உணர்த்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது!

(viii)

பறந்திட்டே னின்னமொன்று பகரக் கேளு
பானுமந்தன் பால்மதிக்கு எட்டில் நிற்க
சிறந்திட்டேன் ஜென்மனுக்கு அநேக துன்பம்
செத்திறந்து போவதற்கு எண்ணங்கொள்வன்
அறைந்திட்டேன் அகம் பொருளும் நிலமும் நஷ்டம்
அப்பனே அரசனிட தோஷமுண்டாம்
குறைந்திட்டேன் குடிநாதன் கேந்திரிக்க
குற்றமில்லை புலிப்பாணி கூறக்கேளே!

பொருள் :- இன்னுமொன்று சொல்வேன்; கேளப்பா! 'பானுமந்தன்' என்று அழைக்கப்படுகிற சனீஸ்வரன் வளர்பிறை சந்திரனுக்கு எட்டில் நிற்க ஜென்மனுக்கு அநேக தொல்லைகள் வந்து சேரும். தற்கொலை செய்து கொள்ளும்படி மனம் தூண்டும்! கைப்பொருள் அனைத்தும், நிலமும் நஷ்டமாகும். அரசனின் கோபத்துக்குள்ளாக நேரிடும்! ஆனால், அஷ்டமாதிபதி கேந்திரத்திலிருக்க குற்றமில்லை! மேற்படி தோஷம் விலகிவிடுமப்பா! புலிப்பாணி சொல்வதைக் கேளப்பா!

விளக்கம் :- சந்திரனுக்கு அஷ்டமத்தில் சனி இருப்பது தோஷமாகும். ஆயுள் காரகனாகிய சனி, ஆயுள் ஸ்தானத்தில் இருந்தால் 'காரகாதி' தோஷமாகும். எனவே, ஜென்மனுக்குப் பல வித கஷ்டங்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது! ஆனால், சனி நின்ற இராசிநாதன் கேந்திர மேறி நின்றால், தோஷமில்லை! தோஷ நிவாரணம் பெற வழி வகுக்குமென முனிவர் கூறுகிறார்! உண்மையும் கூட! ஆனால், கேந்திரஸ்தானம் பெற்ற சனி நின்ற இராசிநாதன் பலமிழந்து பகை, நீசமாய் இருந்தால், ஜென்மனுக்கு ஆயுள் பங்கம் உண்டாகி, அற்வாயுசுவாய் மடிவான் என்பதை நினைவில் கொள்க.

(ix)

நன்றாகப் பாம்புதான் நாலிலேனும்
நலமாக ஈராறும் இரு நான்கிலேனும்
சென்றிட்ட தீயர் பலர் செய்யாரப்பா
திரமான நாலில் நின்றால் மாதர் தோஷம்
குன்றி விடும் ஈராறில் பாதரோகம்
குணமான விருநான்கில் கூறும் பாம்பால்
நன்றாக மிகு பயமா மற்ற ராசி
நலமென்றே புலிப்பாணி நவின்றிட்டேனே!

பொருள் :- ராகு, கேதுக்கள் நாலாமிடத்தில் வலுவாக இருந்தாலும், தீக்கோட்கள் 8, 12ல் பலமாக இருந்தாலும், தோஷமில்லையப்பா! நற்பலன்கள் செய்ய வாய்ப்பு உண்டு. ஆனால், ஸ்திரமான நாலில் பலவீனமாக இருந்தால், மாதாவுக்கு தோஷமுண்டாகும். 12ல் பலவீனமாக தீக் கோட்கள் நின்றால் பாதரோகம் உண்டாகும் எட்டாமிடத்தில் ராகு இருந்தால் (பலமாக இருந்தாலும்) நற்பலன்கள் ஏற்படாது! பதிலாக, தீய பலன்களே உண்டாகும். ஆனால், மற்ற ராசிகளில் ராகு இருந்தால் நற்பலன்களே செய்வார் எனலாம்!

விளக்கம் :- தீக்கோட்கள் எந்த விட்டில் இருந்தாலும், அந்த வீட்டின் வர்க்கத்தையே நாசம் செய்வர் என்பது பொது விதி. ஆனால் இவர்கள் 8, 12ல் இருந்தால் அதிக தீமை செய்ய மாட்டார்கள்! "கெட்டவன் கெட்டில் கிட்டிடும் இராஜயோகம்!" என்ற விதியினபடி. 8, 12ல் உள்ள தீக்கோட்கள் நன்மையே செய்வார்கள். ஆனால், ராகு கேந்திர கோணங்களில் இருந்தால் இராஜயோகத்தைச் செய்வார். மேலும் 3, 6, 11ல் இருந்தாலும் அவர் நன்மையே செய்வார். 2, 12ல் சம பலனாக செய்வார். 8 மிடம் மட்டும் அவர்க்கு ஆகாது! இதுதான் புலிப்பாணி முனிவர் கருத்து!

29 பிதுரு கண்டம்

1

ஆரப்பா அஞ்சுக்கு அஞ்சாம் வீட்டில்
அப்பனே அசுபர்களும் அமர்ந்து நிற்க
பாரப்பா பிதுருக்கு கண்டம் தெண்டம்
பலமாக செப்புவாய் அரசர் தோஷம்
சீரப்பா சுபர் நிற்க செல்வமுண்டு
சிவசிவா பிதுருக்கு விதியும் தீர்க்கம்

கூறப்பா குடிநாதன் கேந்திர கோணம்
கொற்றவனே புலிப்பாணி குறித்திட்டேனே!

பொருள் :- ஐந்துக்கு ஐந்தாம் வீட்டில் அசுப கோட்கள் சூழ்ந்து நிற்க, பிதுருக்குக் கெண்டாதி பீடைகள் உண்டாகும் அரசர்களால் தொல்லைகள் உண்டாகும். ஆனால், மேற்படி வீட்டில் சுபக் கோட்கள் நின்றால், பொருள் சேர்க்கை உண்டாகும். பிதுருக்கு ஆயுள் பலம் தீர்க்கமாகும். 9ம் அதிபதி கேந்திர கோணங்களில் இருந்தால், மேற்படி சுப பலன்கள் உறுதியாக பலிதமாகும் மகனே!

விளக்கம் :- 'ஐந்துக்கு ஐந்தாமிடம்' என்பது ஒன்பதாமிடமான பிதுருஸ்தானத்தைக் குறிப்பிடும். எனவே, இந்த வீட்டில் தீக் கோட்கள் இருந்தால், பிதுருக்கு கண்டம் சம்பவிக்கும் எனக் கூறப்பட்டது. ஆனால், தீக் கோட்கள் ஆட்சி, உச்சமாக இருந்தால் தோஷமில்லை யென கூறுக. 9ல் சுபக் கோட்கள் இருந்தால், செல்வ பாக்கியம் பெருகும். பிதுருக்கு ஆயுள் விருத்தி உண்டாகும். 9ம் அதிபதியும் பலவானாக கேந்திர கோணங்களில் நின்றால், மேற்படி சுப பலன் உறுதியாகும். ஆனால், பலவீனமாக இருந்தால் ஆயுள் பலம் குன்றிப் போக வாய்ப்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது!

2

பாரப்பா இன்னமொரு புதுமை கேளு
பகலவனுஞ் சனியோடு பாம்பு சேர
கூறப்பா குமரனவ னுதிக்கு முன்னே
கொற்றவனே பிதுருக்கு கண்டஞ்சொல்லு
ஆரப்பா அத்தலத்தோன் சுபனைக் கூடி
அப்பனே கண்ணுற்று நோக்கினாலும்
சீரப்பா சில காலம் பிதுரிருந்து
சிவலோகமடைவனடா செயலைக்கூறே

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்! கேளப்பா! சூரியனுடன் சனி, ராகு கூடியிருக்க, குழந்தை பிறக்கும் முன்னே பிதுருக்கு கண்டாதி' தோஷங்கள் உண்டாகும் ஆனால், சூரியன் நின்ற இராசிநாதன் சுபர்களுடன் கூடியிருந்தாலும் (அ) சுபர்களால் பார்க்கப்பட்டு இருந்தாலும், அக்குழவியின் தந்தை சில காலம் உயிருடன் இருந்து, பின்பு சிவலோக பதவியை அடைவார் எனக் கூறுவாய் மகனே!

3

ஆச்சப்பா பத்தெட்டில் கோள்கள் நிற்க
அப்பனே அவரவர்கள் பொசிப்பு நாளில்
கூச்சப்பா குழவியிட பிதுரைத் தேடி
கொற்றவனே சண்டனுமே வருவான் கூறு
மூச்சப்பா மேதினியில் செம்பொன் தேடி
முகமினுக்கி மாதருடன் கூடி வாழ்வன்
ஏச்சப்பா போகருட கடாக்ஷத்தாலே
இடமறிந்து நிலை கூர்ந்து இயம்புவாயே

பொருள் :- பத்து, எட்டாமிடங்களில் கோள்கள் நிற்க, அவரவர் புத்தி காலங்களில் குழவியுடன், பிதுருவையும் தேடி - சண்டாளனாகிய எமன் வருவான். மேலும் இவ்வாறு கிரகம் அமையப்பெற்ற ஜாதகன் இவ்வுலகில் செம்பொன் தேடி, முகமினுக்கி வேசியுடன் கலந்து வாழ்வான். இருப்பினும், இடமறிந்து சரியான பலன் கூறுவாய் மகளே!

விளக்கம் :- "பத்து, எட்டாமிடங்களில் கோள்கள் இருந்தால்" என்பது "9ம் வீட்டுக்கு இருபுறமும் தீக்கோட்கள் இருந்தால்" என அர்த்தம் எடுத்துக் கொள்க. எட்டாமிடமென்பது ஆயுள் ஸ்தானமாகவும், பத்தாமிட மென்பது உயிர் ஸ்தானமாகவும் ஜோதிட சாஸ்திரம் குறிப்பிடுகிறது. எனவே, இவ்வீடுகளில் தீக்கோட்கள் இருந்தால், குழவிக்கு அரிஷ்டம் உண்டாகும் எனக் கூறப்பட்டது. இதுபோல், 9மிடமென்பது பிதுருஸ்தானம் என்பதால், அதற்கு இருபுறமும் பாவிகள் இருந்தால் பிதுருக்குக் கண்டம் உண்டாகும் எனக் கூறப்பட்டது! அதே சமயம் 8, 10ம் வீடுகளில் இருக்கும் தீக் கோட்கள் கொஞ்சம் நன்மையும் செய்யும். எனவே, இந்த ஜாதகர் உழைத்த பணத்தை வேசிக்குக் கொடுத்து மகிழ்வர் என முனிவர் கூறுகிறார். கிரகங்கள் இவ்வாறு மோஷமான நிலையில் இருந்தாலும் - அந்தக் கிரகங்களின் வலிமையை அறிந்து கூறுவது மிகவும் அவசியம் என்பதை நினைவில் கொள்க.

30. யோகக் காண்டம்

தாரையோகம்

பாரப்பா பால் மதிக்கு நான்கில் வெள்ளி
    பாங்குள்ள வெள்ளிக்கு நான்கில் இந்து
ஈரப்பா இல்லுக்கு இவர்கள் நான்கில்
    இடிபோலே குமுறுமடா தாரையோகம்
சீரப்பா சென்மனுக்கு சிவிகை நாடி
    சிறப்பான வாகனமும் நிலமும் செம்பொன்
கூறப்பா போகருட கடாக்ஷத்தாலே
    குடிநாதன் பெலமறிந்து கூறுவாயே

பொருள் :- வளர்பிறை சந்திரனுக்கு நான்கில் சுக்கிரன் (அ) சுக்கிரனுக்கு நான்கில் சந்திரன் இருக்க, இவர்கள் லக்கனத்துக்கு நாலில் இருந்தால், இடிபோல் முழங்கும் தாரையோகம் உண்டாகும். மேலும், ஜென்மனுக்கு சிவிகை யோகமும், சிறப்பான வாகன யோகம் கூடிய நிலம், பொன் பொருள் சேர்க்கையுமுண்டாகுமென்று போகர் நூல் ஆய்ந்து கூறினேன் அப்பா! மேற்படி கோட்கள் நின்ற இராசிநாதன் வலிவறிந்து கூறுவாயப்பா!

விளக்கம் :- சந்திரனுக்கு நாலில் சுக்கிரன் இருந்தாலோ (அ) சுக்கிரனுக்கு நாலில் சந்திரன் இருந்தாலோ தாரையோகம் உண்டாகுமென்று கொள்க. இந்தக் கோட்கள் லக்னத்துக்கு நாலில் இருந்தால், இந்த தாரை யோகத்தின் வலிமை இன்னும் அதிகரிக்கும் எனலாம்.

இம்மாதிரி தாரையோகம் ஒரு ஜாதகத்தில் அமைந்திருப்பதால், அந்த யோகக் கிரகத்தின் இயற்கையான வலிமையுடன் 'கால் பலன்' அதிகமாகச் சேர்த்துக் கணக்கிடவும்.

உதாரணமாக சந்திரனுக்கு நாலில் சுக்கிரன் இருந்து, சந்திரன் நட்பு வீட்டிலும், சுக்கிரன் தனது நீச்ச வீட்டிலுமிருந்தால், சந்திரன் இந்த யோக பலத்தால் 'ஆட்சி' பலனையும், சுக்கிரன் 'பகை' வீட்டுப் பலனையும் கொடுக்குமென அறிக.

தேவன் முனி

பாரப்பா இரு மூன்றில் புந்தி நிற்க
பகருகின்ற பரமகுரு எழில் நிற்க
ஆரப்பா அசுரகுரு எட்டில் நிற்க
அப்பனே மீனத்தில் அருக்கன் பிள்ளை
வீரப்பா வில்வளவில் சேயும் நிற்க
விளங்குகின்ற மற்றோர்கள் எங்கும் நிற்க
கூறப்பா குமரனையுங் கண்டுங்காணார்
குவலயத்தில் தேவனென்று கூறினேனே!

பொருள் :- ஆறாமிடத்தில் புதன் நிற்க, சிறப்பு வாய்ந்த குரு ஏழில் நிற்க, சுக்கிரன் எட்டாமிடத்தில் நிற்க, மீன ராசியில் சனி நிற்க, தனுசு இராசியில் செவ்வாய் நிற்க, மற்ற கோட்கள் எந்த விடத்திலாவது நிற்க அந்தக் குழவி தெய்வீக அம்சம் பொருந்தியதாக இருக்கும். இப்புவியில், அவன் 'தேவன்' என்றே அழைக்கப்படுவானப்பா!

விளக்கம் :- லக்னத்துக்கு 6ல் புதன், 7ல் குரு, 8ல் சுக்கிரன் இருப்பது ஒரு நல்ல யோகமாகும். இந்த யோகத்துக்கு அதன் இயற்கையான வலிமையுடன் 'கால்பலன்' கூட்டிக் கணக்கிடவும், இந்த யோகத்தோடு மீனத்தில் சனியும், தனுசில் செவ்வாயும் இருந்தால், இதை 'தேவன் முனி' யோகம் என்று கூறவும். இதற்கு 'அரை பலன்' கூட்டிக் கணக்கிடவும்.

உதாரணமாக, புதன் நட்பு வீட்டில் இருந்தால், அது உச்சப் பலனைக் கொடுக்கும் என அறிக.

புதையல் தோன்றும் யோகம்

கூறப்பா கருமாதி நாலில் தோன்ற
கொற்றவனே குடிநாதன் கோணம் ரெண்டில்
சீரப்பா சென்மனுக்கு புதையல் கிட்டும்
செகத்தில் நல்ல பேர் விளங்கும் செய்யுள் வல்லோன்
ஆரப்பா அஸ்வங்கள் காடியுண்டு
அப்பனே அன்ன சத்திரமுங்கட்டி
வீரப்பா வெகுபேர்க்கு அமுதளிப்பன்
விதமான புலிப்பாணி விளம்பினேனே

பொருள் :- கர்மாதிபதி என்னும் 10ம் இடத்ததிபதி நாலா மிடத்தில் இருக்க. நாலாமிடத்ததிபதி கோண இராசிகளிலோ (அ) இரண்டாம் வீட்டிலோ இருந்தால், அந்த ஜாதகர்க்கு 'புதையல்' தென்படும். மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கும், கௌரவமும் உண்டாகும். கவி எழுதும் ஆற்றல்

நிறைந்தவன்; பலவித புண்ணிய சந்திரங்கள் கட்டி பலபேர்க்கு அமுதமளித்து கொடை வள்ளல் என்று பெயரெடுக்கும்படியாக வாழ்வான் என்பதாம்!

விளக்கம் :- நாலாமிடம் என்பது "நிலம், பூமி" ஸ்தானம் என்று அழைக்கப்டும். இந்த நிலம், பூமியிலிருந்து பொருள்கள் கிடைக்க வேண்டுமானால், நாலாமிடம் (அ) நாலாமிடத்ததிபதி வலுத்திருக்க வேண்டும். கர்மஸ்தானம் என்பது ஒரு செயலை செய்யக் கூடிய தைரியத்தையும், ஆற்றலையும் கொடுக்குமென்பதால், கர்மாதிபதி நாலில் இருக்க வேண்டுமென்று முனிவர் கூறிகிறார். இதுபோக, நாலாம் அதிபதி கேந்திர கோணங்களில் இருந்தால், அந்த ஜாதகர்க்கு புதையல். யோகம் கிட்டும் என்பது முனிவர் கருத்து; உண்மையுங் கூட!

கிரகமாறி யோகம்

தானென்ற கோள்களது மாறி நிற்க
தரணிதனில் பேர் விளங்குந் தனமு முள்ளோன்
ஊனென்ற உடல் நாதன் பாம்பு கூடில்
உத்தமனாம் யோக்கியனாம் புனிதன் சேயன்
கோனென்ற குமரியுட பூசை செய்து
கொற்றவனே குவலயத்தில் வாழ்ந்திருப்பன்
மானென்ற மறலி பயமில்லையில்லை
மைந்தனே விடமறிந்து வழுத்துவாயே.

பொருள் :- இரண்டு கோட்கள் ஒருவர் வீட்டில் மற்றொருவராக மாறி நிற்க (அதாவது, இவன் வீட்டில் அவனும், அவன் வீட்டில் இவனுமாக), அந்த ஜாதகன் இப்புவியெல்லாம் புகழும் வண்ணம் தனவந்தனாக இருப்பான். உடல்நாதன் என்று அழைக்கப்படும் சந்திரனுடன் ராகு, கேது கூடியிருந்தால் அந்த ஜாதகர் யோக்கியனாகவும், உத்தமனாகவும் இருப்பான். இப்புவிக்கெல்லாம் தலைவியாக விளங்கும் பார்வதி தேவிக்குப் பூஜை செய்து மிகச் சிறப்புடன் வாழ்வான். எந்த வித தீய சக்தியும் ஒன்றும் செய்துவிட முடியாது! கிரக வலிவறிந்து சரியான பலன் கூறுவாய் மகனே!

விளக்கம் :- இரண்டு கிரகங்கள் தங்கள் வீடு மாறி பரிவர்த்தனையாக இருப்பது கிரக மாறி யோகம் எனப்படும். (உ-ம்) சூரியன் வீடான சிம்மத்தில் சந்திரன் நிற்பதும், சந்திரன் வீடான கடகத்தில் சூரியன் நிற்பதும் கிரகமாறி யோகம் எனப்படும். இந்த கோட்கள் நட்பு, உச்சமாக இருந்தால், விசேஷமான யோகமும். பகை நீசமாக இருந்தால் சாதாரண யோகமும் கிட்டு மெனக் கொள்ள வேண்டும்!

தர்ம கர்மாதிபதி யோகம்

செய்யப்பா இன்னமொரு சேதி கேளு
செயலாக நிதிகருமனிருவர் கூடி
கையப்பா கண்ணுற்று நோக்கினாலும்
கனமுள்ளோரிருவருமே மாறினாலும்
அய்யப்பா அகம் பொருளும் நிலமும் செம்பொன்
அப்பனே கிட்டுமடா ஜென்மனுக்கு
உய்யப்பா போகருட கடாக்ஷத்தாலே

உத்தமனே புலிப்பாணி உரைத்தோம் நாமே

பொருள் :- இன்னுமோர் செய்தி சொல்வேன் கேளப்பா! தர்ம, கர்ம ஸ்தானாதிபதிகள் கூடினாலும் ஒருவரை யொருவர் நோக்கினாலும், (அ) பலம் வாய்ந்த இருவரும் பரிவர்த்தனையாக கிரகமாறி யோகம் பெற்றிருந்தாலும் தர்மகர்மாதிபதி யோகம் உண்டாகும். அளவுக்கு மீறிய பொன், பொருள், செல்வம் கிட்டும். போகர் சொன்ன நூல் பார்த்து கூறினேன் அப்பா! புலிப்பாணி வாக்கு பொய்க்காது அப்பா!

விளக்கம் :- *9-10*ம் வீட்டுக்கதிபர்கள் ஒருவரோடொருவர் கூடினாலும் (அ) ஒருவரையொருவர் பார்த்தாலும் (அ) வீடு மாறி நின்றாலும் தர்ம கர்ம இராஜயோகமாம்! மிகவும் சிறப்பான யோக பலன்கள் கிட்டுமென கொள்க. இவர்கள் பகை, நீசமாக இருந்தால் சாதாரண இராஜயோக மென்றும், ஆட்சி, உச்சமாக இருந்தால் மிகவும் சிறப்பான இராஜயோகமென்றும் கூறுக.

மந்திரவாதியாகும் யோகம்

பாரப்பா இன்னமொரு புதுமை கேளு
பால்மதிக்கு நாலோனும் சுங்கன் கூடில்
கூறப்பா யெவ்விடத்தில் கூடிட்டாலும்
கொற்றவனே ஜென்மனுமோ மந்திரவாதி
வீரப்பா வராகிதுர்க்கை தேவி அம்மன்
விதமான பூசைதனை மண்ணோர் போற்ற
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
செப்பினேன் புலிப்பாணி செயலைத்தானே!

பொருள் :- இன்னுமொரு புதுமை சொல்வேன் கேளப்பா! வளர்பிறை சந்திரனுக்கு நாலாமிடத்ததிபதியும், சுக்கிரனும் கூடி, எந்த விடத்தில் இருந்தாலும் ஜென்மன் மந்திரவாதி என்று உரைத்தேன். வராகி, துர்க்கை தேவி, அம்மன் பூஜைகளை வித விதமாக செய்து, புவியிலுள்ளோர் வாழ்த்தும் பெரிய மந்திரவாதியாக பிரகாசிப்பான்! போகர் சொன்ன நூலின் வாயிலாகவே புலிப்பாணி உரைத்தேன் அப்பா!

விளக்கம் :- சந்திரனுக்கு 4ம் அதிபதியும், சுக்கிரனும் கூடியிருப்பது ஒரு நல்ல யோகமாகும். மந்திரவாதி என்று புலிப்பாணி பாடல் தெரிவிக்கிறது! கிரகவலி வறிந்து இப்பலனைக் கூற வேண்டும். பகை, நீசமாக இருந்தால், பலன் விசேஷமாக பலிதமாகாது என்பதை நினைவில் கொள்க.

சூரியனுக்கு முன்பின் புந்தி நிற்க

தானென்ற இரவிக்கு முன்னே புந்தி
தனித்திருக்கப் புனிதனடா தரித்திர தோஷம்
தானென்ற இரவிக்கு பின்னே புந்தி
தரணிதனில் பேர்விளங்கும் தனமுமுள்ளோன்
தானென்ற இரவிக்கு பின்னே சேயும்
தங்கிடவே புத்திரர்கள் மெத்தவுண்டாம்
தானென்ற குருவோடு நீலன் மேவ
தரணிதனில் செவிடனடா முடவன் பாரே

பொருள் :- சூரியனுக்கு முன்னால் புதன் தனியாக இருந்தால், ஜென்மன் நற்குணமுள்ளவன்; ஆனால், தரித்திர தோஷமுண்டாகும். சூரியனுக்கு

பின்னால் புதன் இருந்தால், இப்புவியில் சிறப்புற்று வாழும் தனவந்தனாக இருப்பான். சூரியனுக்குப் பின்னால் செவ்வாய் இருந்தால் வெகு புத்திரர்கள் உண்டாகும். சூரியனுக்குப் பின் குரு, சனி கூடியிருந்தால், ஜென்மன் இப்புவியில் செவிடனாயிருப்பான்; முடவன் என்றேனப்பா!

குறிப்பு :- "சூரியனுக்கு முன்னால் புந்தி" என்பதை சூரியனுக்கு 2ல் புதன் இருப்பதாகக் கொள்க. அதுபோல், "சூரியனுக்குப் பின் புந்தி" என்றால், சூரியனுக்கு 12ல் புதன் இருப்பதாக கொள்க.

சூரியனுக்குப் பின் சனி

அறைந்திட்டே னின்னமொன்று செப்பக்கேளு
அனலனுக்கு பின்னாலே அலரி மைந்தன்
பறைந்திட்டேன் பண்டுபொருள் அகமுங்கிட்டும்
பார்தனிலே பரதார விசையனப்பா
குரைந்திட்டேன் குமரனுக்கு எட்டுபத்தில்
குலவையிட்டு வருவனடா சண்டன் தானும்
சிறந்திட்டேன் ஜென்மனுக்கு யோகஞ்செப்பு
சிறப்பாகப் புலிப்பாணி செப்பினேனே!

பொருள் :- இன்னு மொன்று சொல்லிவிட்டேன், கேளப்பா! சூரியனுக்குப் பின் சனி நிற்க, பல்வகை பொருளும், நிலமும் கிட்டும். பார்தனிலே பரஸ்திரீ நேசனப்பா! குமரனுக்கு தன் எட்டு (அ) பத்தாவது வயதில் சொல்லவொண்ணா யோகம் வருமப்பா! ஆய்ந்துணர்ந்து சிறப்பாக கூறினேன் புலிப்பாணியப்பா!

குறிப்பு :- 'அனலன்' என்றால் அனல் போல் பிரகாசிக்கும் சூரியனை குறிப்பிடும்! 'அலரிமைந்தன்' என்பது பானு மைந்தனாகிய திரு. சனிபகவானைக் குறிப்பிடும்!

மாட கூட இராஜயோகம்

பாடிடுவாய் புந்தி வெள்ளி நாலில் நிற்க
பகருகின்ற பதியொனும் கேந்திர மேற
நாடிடுவாய் நாலிலுள்ளோன் சுபர்கள் நோக்க
நற்சுகமும் மேடையுண்டு நாடு முள்ளோன்
கூடிடுவாய் குமரனுக்கு யோகம் மெத்த
குவலயத்தில் பேர்விளங்கோன் நிதியுமுள்ளோன்
ஆடிடுவாய் ஆரல் நிற்கும் நிலையைப் பார்த்து
அப்பனே புவியோர்க்கு கூறுவீரே

பொருள் :- புதனும் சுக்கிரனும் நாலாமிடத்தில் நிற்க நாலாமிடத்ததிபதியும் கேந்திர மேற, நாலாமிடத்தில் நின்ற கோட்களைச் சுபர்கள் நோக்க, அந்த ஜென்மனுக்கு நற்சுகமும், மேடையும், நாடுமுண்டு அப்பனே! மேலும், நல்ல யோகங்கள் உண்டாகும். குவலயத்தில் சிறந்து பேர் புகழோடு வாழ்வான். பாக்கியங்களும் உண்டு. செவ்வாய் நிற்கும் நிலையும் பார்த்து, செம்மையாய் புவியோர்க்குக் கூறுவாயப்பனே!

குறிப்பு :- நாலாமிடமென்பது வீடு, மனை, சொத்து முதலியவைகளைப் பற்றி அறிவிக்கும் இடமாகும். எனவே, இந்த வீட்டில் சுபர்கள் இருந்தாலும் (அ) சுபர்கள் பார்த்தாலும் (அ) நாலாம் அதிபதி வலுவாக கேந்திர கோணங்களில் இருந்தாலும், அந்த ஜாதகர்க்கு தனயோகமும், வாகனயோகமும் கிட்டுமென்பதை இப்பாடலில் மறைமுகமாக முனிவர் கூறுகிறார்!

வாகன யோகம்

ஆரப்பா இன்ன மொன்று அறையக் கேளு
அப்பனே அசுர குரு நாலிலேற
சீரப்பா செழுமதியும் ஜென்மம் ஜென்மம்
செல்வனுக்கு யோகங்கள் கூறக் கேளு
வாரப்பா வாகனங்கள் பூமியுள்ளோன்
வளமான யோகனடா வையகத்தில்
கூறப்பா கொடுஞ்சனியும் பத்தில் நிற்க
கூறுவாய் குழவிக்கு யோகங் கூறே!

பொருள் :- இன்னுமொன்று சொல்வேன், கேளப்பா! அசுரகுருவாகிய சுக்கிரன் நாலாமிடத்தில் நிற்க, வளர்பிறை சந்திரன் ஜென்ம லக்கனத்தில் நிற்க, ஜென்மனுக்குச் சிறப்பான யோகங்கள் உண்டு; சொல்கிறேன் கேளப்பா! வகை வகையான வாகனயோகங்களும், நல்ல செழுமையான பூமிகளும் உண்டாகும். குவலயத்தில் செல்வன் சீரும், சிறப்போடும் வாழ்வான். கொடிய சனி பத்தில் இருந்தாலும், குற்றமில்லையப்பா! குழவிக்கு யோகம் உண்டு என்றேன்!

குறிப்பு :- சுக்கிரன் 4ல் இருந்தால், ஜென்மனுக்கு வாகனம், பூமியோகம் உண்டு என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து! 10ல் சனியிருந்து 4ம் வீட்டை பார்த்தாலும் குற்றமில்லை; யோகமுண்டு! காரணம், 10மிடமென்பது பாவிகளுக்கு நல்ல இடமென்பது பொதுவான அபிப்பிராயமாகும்!

மதிக்கு 6-7-8ல் சுபர்

ஆரப்பா இன்ன மொன்று அறையக் கேளு
அப்பனே அம்புலிக்கு ஆறேழெட்டில்
சீரப்பா சுபர் நிற்க ஜென்மன் தானும்
சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வன்
பூரப்பா பேய் பூதம் வசியமாகும்
பூதலத்தில் அரசனிடம் சேனைகாப்பன்
கூறப்பா குடிநாதன் கெட்டானானால்
குமரனுக்கு யோகங்கள் குலைந்து போச்சே

பொருள் :- இன்னுமொன்று அறைந்து சொல்வேன் கேளப்பா! சந்திரனுக்கு 6, 7, 8ல் சுபர்கள் நிற்க, ஜென்மன் இப்புவியில் சீரும் சிறப்புமாய் வாழ்வான். பேய், பூதமெல்லாம் இவன் வலையில் வசியமாகும், அரசரிடத்தில் சேவை செய்வான்; சேனை பரிவாரங்களைக் கவனிப்பானப்பா! ஆனால், மேற்படி கோட்கள் நின்ற இராசிநாதன் பலமிழந்து நின்றால், மேற்படி சுபயோகங்கள் யாவும் குலைந்து போகுமப்பா!

விளக்கம் :- 'அம்புலி' என்றால் 'சந்திரன்' என்று பொருள்படும். சந்திரனுக்கு 6-7-8ல் சுபர்கள் கூடியிருந்தாலும் (அ) தனித்தனியாக இருந்தாலும் யோக முண்டு. இவர்கள் நின்ற ராசி நாதர்கள் பலமிழந்து இருந்தால், மேற்படி யோகத்தின் வலிமை சற்று குறையுமென கணக்கிட்டுக் கொள்க.

குரு சந்திர யோகம்

கூறப்பாயின்ன மொரு புதுமை சொல்வேன்
குமரனுக்கு குரு சந்திர பலனைக் கேளு
சீரப்பா செம்பொன்னும் மனையுங்கிட்டும்
ஜெனித்த தொரு மனைதனிலே தெய்வங்காக்கும்
கூறப்பா கோதையரால் பொருளும் சேரும்
குவலயத்தில் பேர் விளங்கோன் கடாக்ஷமுள்ளோன்
ஆரப்பா அத்தலத்தோன் மறைந்தானானால்
அப்பலனையறையாதே புவியுளோர்க்கே!

பொருள் :- இன்னுமொரு புதுமை சொல்வேன்; கேளப்பா! குமரனுக்கு குரு சந்திரயோக மிருந்தால், அநேக சிவந்த நிற தங்க கட்டிகளும், மனையும் கிட்டும். அவனது மனையை தெய்வம் நின்று காக்கும். பெண்களால் பொருளும் சேரும். இந்த பூலோகம் முழுவதும் புகழ்பெற்று வாழ்வான். ஆனால், குரு சந்திரன் நின்ற ராசிநாதர்கள் 6, 8, 12ம் இடங்களில் மறைந்து நின்றால் மேற்படி சுப பலன்கள் கிட்டாது என கூறுவாய் அப்பா!

குறிப்பு :- குரு, சந்திரன் ஆகிய இரு கோட்களும் ஒருவரையொருவர் பார்த்தாலும் (அ) கூடினாலும் (அ) ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருந்தாலும் குரு சந்திர யோகம் எனக் கூறப்படும். ஆனால், இவர்கள் நின்ற ராசி நாதர்கள் வலுவிழந்து, மறைந்து காணப்பட்டால், மேற்படி யோகம் சற்று குறைந்து போகுமென கொள்க. எமது ஆய்வின் படி 1/4 பங்கு யோகம் குறைந்து போகும்!

பாக்கியாதிபதி திரிகோணம்

அறிவித்தேன் ஐந்துக்கு ஐந்தோன்தானும்
அப்பனே அப்பதிக்கு கோணந் தன்னில்
தெறிவித்தேன் திரவியமும் காடியுண்டு
திடமான மனைகட்டி ஆளுவானாம்
குறிவித்தேன் ஆலயமும் பழுது பார்ப்பன்
கொற்றவனே ரஜித பாத்திரமுங் கொள்வன்
புரிவித்தேன் பதியோனும் வியமாறெட்டில்
பதறாதே பண்டு பொருள் விரயமாமே

பொருள் :- ஐந்துக்கு ஐந்தோனாகிய பாக்கியாதிபதி, அப்பதிக்கு கோணத்தில் இருக்க; அந்த ஜாதகனுக்கு திரவியமும், பொன் பொருளும் உண்டு. திடமான வீடுகட்டி வாழ்வான். மேலும், ஆலங்களைப் பழுது பார்க்கும் வேலையிலும் ஈடுபடுவான். ரஜித பாத்திரமும் கொள்வான். ஆனால்,

பாக்கியாதிபதி நின்ற ராசிநாதன், அவர்க்கு 6, 8, 12ல் இருக்க ஜாதகரின் பொன் பொருள் அனைத்தும் சிதறிப் போய் விடும் மகனே!

விளக்கம் :- "ஐந்துக்கு ஐந்தோன்" என்பது 9ம் அதிபதியாகிய பாக்கியாதிபதியை குறிப்பிடும். 9ம் அதிபதி 9ம் வீட்டுக்கு கோணங்களாகிய 1, 5, 9ம் ஸ்தானங்களில் இருந்தால் மிகவும் நல்ல தனயோகம் உண்டாகும் என்பது இப்பாடலின் கருத்து! அதே சமயம் 9ம் அதிபதி நின்ற ராசிநாதன், அவர் நின்ற வீட்டுக்கு மறைவுஸ்தானங்களாகிய 6-8-12ம் வீடுகளில் இருக்கக் கூடாது; இருந்தால் மேற்படி நற்பலன்கள் சிதறிப் போக வாய்ப்பு உண்டு என்பது முனிவர் தரும் விளக்கமாகும். இருப்பினும், மறைவுஸ்தானத்தில் நிற்பவர் ஆட்சி, உச்சமாக இருந்தால் தோஷமில்லை யென அறிக.

நாலு நல்லவர்கள் மறைந்தும் யோகம் வருவது

வீரப்பாயின்னமொரு வினையைக் கேளு
விளம்புகிறேன் நிதிகருமன் தனமும் நாலோன்
நாரப்பா நால்வர்களும் மூடமானால்
நரபதி போலிருப்பதற்கு வகையைக் கேளு
ஆரப்பா அருக்கன் பின் புத்தி சேயும்
அப்பனே அடைவாகத் தனித்திருக்க
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாக மேதினியிலிருப்பன் பாரே

பொருள் :- வீரம் நிறைந்தவனே! இன்னுமொரு மொழி கூறுகிறேன், கேளப்பா! பாக்கியாதிபதி, கர்மஸ்தானாதிபதி, தனாதிபதி, நாலாம் அதிபதி ஆகிய இந்த நால்வர்களும், பகை நீசமடைந்து மூடமாக இருந்தாலும், சூரியனுக்குப் பின் புதன், செவ்வாய் இருந்தால் போதும்; அந்த ஜாதகர் நரபதி போல், சீமானாய், சிறப்பாக வாழ்வான். போகர் நூல் பார்த்து கூறினேனப்பா!

குறிப்பு :- 9, 10, 2, 4ம் அதிபதிகள் நல்ல சுபஸ்தானாதிபதிகள் என ஜோதிடம் கூறுகிறது. இவர்கள் பலவீனமாக இருந்தால், கைப்பொருள் யாவும் இழந்து கஷ்ட ஜீவனாக வாழ வாய்ப்பு உண்டு. ஆனால், சூரியனுக்கு 12ல் புதனும், செவ்வாயும் இருந்தால், மேற்படி தோஷம் நீங்கி, சீமானாய் வாழ வாய்ப்புகள் உருவாகும் என்பது முனிவர் தரும் விளக்கமாகும்!

ஆறில் தீயர் நிற்கும் யோகம்

பாரப்பா பகலவனும் சனிசேய்பாம்பு
பகருகின்ற இக்கோள்களாறில் நிற்க
கூறப்பா குமரனையும் சத்துரு கண்டால்
குவல்யத்தில் புலிகண்ட பசு போலாவார்
சீறப்பா செம்பொன்னும் செந்நாடுண்டு
செயலாக வாழ்ந்திருப்பன் விதியுந்தீர்க்கம்
ஆரப்பா அத்தலத்தோன் விழுந்து கெட்டால்
அப்பனே அரியைப் போலிருப்பன் பாரே

பொருள் :- சூரியனும், சனி, செவ்வாய், ராகு, கேதுக்களும் ஆறாமிடமாகிய சத்துரு ஸ்தானத்தில் இருந்தால், அந்த ஜாதகரைக் கண்டவுடன் அவனுடைய

சத்துருக்களெல்லாம் புலிகண்ட பசு போல் அடங்கி விடுவர். மேலும், அவனுக்கு பொன் பொருள் சேர்க்கையும், நாடு நகர சேர்க்கையுமுண்டு; நல்ல செயல் வீரனாக வாழ்ந்திருப்பான். ஆயுள் பலம் தீர்க்க முண்டு. மேலும் 6ம் அதிபதி பலமிழந்து கெட்டு விட்டால், அந்த ஜாதகனுக்கு இன்னும் பலமான யோகமுண்டு; அதாவது, உலகத்தையே ரக்ஷித்துக் காப்பவனாகிய திருமால் போல் இப்புவியில் புகழோடு வாழ்ந்திருப்பான் மகனே!

விளக்கம் :- தீக்கோட்கள் 6, 8, 12ம் இடங்களில் இருந்தாலோ (அ) 6, 8, 12ம் அதிபதிகள் 6, 8, 12 என்னும் மறைவுஸ்தானங்களில் இருந்தாலோ, அந்த ஜாதகர்க்கு இராஜயோகம் சித்திக்கும் என்பது ஜோதிட சாஸ்திரத்தில் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு சிறப்பு விதியாகும்! இந்த விதியில் அடிப்படையில், மேற்படி பாடலின் பொருள் அமைந்திருப்பதைக் காண்க.

சூரியனுக்கு 5-8-9ல் சுபர் நிற்கும் யோகம்

பாரப்பா பகலவனுக் கைந்து எட்டு
பாக்கியத்தில் சுபர் நிற்க அதனுள்ளோர்கள்
சீரப்பா திரிகோண கேந்திரமேற
சிவசிவா பிதுருக்கு தனமுஞ் செல்வம்
வீரப்பா விதியுண்டு வெள்ளி புந்தி
வீடானால் அமடில்லை ராஜயோகம்
கூறப்பா போகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனே புலிப்பாணி கூறினேனே

பொருள் :- கொஞ்சம் கவனியப்பா! சூரியனுக்கு ஐந்து, எட்டு, ஒன்பதாம் வீடுகளில் சுபக்கோட்கள் நிற்க, அந்த வீட்டில் இருப்பவர்கள் இலக்கனம் (அ) இராசிக்கு கேந்திர கோணங்களில் இருக்க, அந்த ஜாதகரின் பிதாவுக்கு தனமும், செல்வமும் உண்டாகும். ஆயுள் பலமும் தீர்க்கமாகும். இந்தக் கோட்கள் நிற்கும் வீடுகள் புதன், சுக்கிரன் வீடுகளாகில், அந்த ஜாதகர்க்கு எவ்வித குறைபாடும் இல்லாமல் இராஜயோகம் சித்திக்கும் என்பதாம்! போகர் நூல் பார்த்து புலிப்பாணி கூறினேன்; பலன் தவறாதப்பா!

விளக்கம் :- சூரியனுக்கு 5, 8, 9ல் சுபர் நிற்பது ஒரு நல்ல யோகமாகும். இந்த வீடுகள் இலக்கனம் (அ) இராசிக்கு கேந்திர கோணமாக இருந்தால், மேற்படி யோகபலன் இன்னும் அதிகரிக்கும். மேற்படி கோட்கள் புதன், சுக்கிரன் வீடுகளில் இருந்தால், அந்த ஜாதகனது யோகம் இன்னும் அதிகரித்து இராஜயோகம் ஏற்பட வழிவகைகள் உண்டாகுமென்பது இப்பாடல் தரும் விளக்கமாகும்.

சூரியனுக்கு 5-9ல் சுபர் நிற்கும் யோகம்

பாரப்பா யின்ன மொன்று பகரக் கேளு
பகலவனுக் கலைமதியும் கோண மேற
சேரப்பா பல விதத்தால் திரவியம் சேரும்
செல்வனுக்கு வேட்டலுண்டு கிரகமுண்டு

ஆரப்பா அமடுபயமில்லையில்லை
அர்த்த ராத்திரிதனிலே சப்தம் கேட்பன்
கூறப்பா குமரனுக்கு எழுபத்தெட்டில்
கூற்றுவனார் வருங்குறியை குறிப்பாய் சொல்லே.

பொருள் :- சூரியனுக்கு 5-9ம் வீடுகளில் சந்திரன் இருக்க, அந்த ஜாதகனுக்குப் பல வகையிலும் திரவியம் வந்து சேரும். மேலும், அவனுக்கு பல்வித நல்ல யோகங்கள் உண்டாகும். எந்தவித கெட்ட பலனும் ஏற்படாது! அர்த்த ராத்திரியில் ஏதாவது சப்தம் கேட்டாலும். இவன் எழுந்து நின்று உஷாராக கேள்வி கேட்பான். 78வது வயதில் இவனுக்கு எம பயமுண்டாகு மென்று கூறுவாயப்பா!

குறிப்பு :- சூரியனுக்கு 5, 9ல் சந்திரன் இருப்பது ஒரு நல்ல யோகமாகும். இவ்வாறு கிரக அடைவு அமைந்திருந்தால், அதன் இயற்கையான வலிமையுடன் கால் பலன் கூட்டிக் கொள்ளவும். அதாவது, சூரியன் நட்பு வீட்டில் இருந்து, அதற்கு 5, 9ல் சந்திரன் இருந்தால், சூரியன் 'ஆட்சி' பலன் கொடுக்குமென கொள்க.

12க்குடையவனும் குடும்பியும் 7ல் நிற்க

வீரப்பா யின்னமொரு வினையைக் கேளு
விரையாதி குடும்பியுமோ ரேழில் நிற்க
சீரப்பா ஜென்மனும் வேடதாரி
சிவசிவா பாடகனாம் செய்யுளுள்ளோன்
கூறப்பா குமரியினால் லாபமுண்டு
கொற்றவனே செப்படி வித்தைகளும் செய்வன்.
ஆரப்பா அரவத்தை பிடித்து வந்து
ஆட்டி வைப்பன் அனைவோரும் பார்க்கத்தானே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! விரயஸ்தானாதிபதியும், குடும்பஸ்தானாதிபதியும் 7ல் நிற்க, அந்த ஜாதகர் ஒரு வேடதாரி; அதாவது, பல வேடங்களில் நடிக்கக் கூடியவன்; பாடும் ஆற்றல் நிறைந்தவன்; கவிஞானமுள்ளவன்; கன்னிப் பெண்களால லாபமுண்டு; செப்படி வித்தைகளும் தெரிந்தவன். பாம்பை பிடித்து வந்து அனைவரும் காணும் வண்ணம் ஆட்டி வைப்பானப்பா!

விளக்கம் :- இரண்டாமிடமென்பது கலை, வித்தை ஸ்தானம் என்று அழைக்கப்படும். 7மிடமென்பது நடிப்பு, பாடல் ஆடல் திறமையை வெளிப்படுத்தும் ஒரு ஸ்தானமாகும். 12 மிடமென்பது என்பது மானம், ரோஷம் பாராது கண்ட விடத்திலும் தனது கலைத் திறமையை வெளிப் படுத்தும் குணத்தைக் குறிப்பிடும். எனவே 2-12க்கதிபர்கள் கூடி 7 மிடத்தில் இருக்கும் ஜாதகர் ஒரு வேடதாரியாக இருப்பார் என்பது உண்மையே! இது ஒரு யோக அம்சமாகும். கிரக வலிமை நிர்ணயம் செய்யும் போது, மேற்படி யோகம் அமைந்திருந்தால், 'கால்' பலன் மட்டும் மேற்படி யோகம் அமைய பெற்ற கிரகங்களுக்குக் கூட்டிக் கொள்ளவும்.

சந்திரனும் 12-5க்குடையவர்களும் சேர

செப்புவாய் சந்திரனும் ஈராறோனும்
சிவசிவா பஞ்சமத்தோன் மூவர் சேர்ந்து
அப்புவாய் ஆகாசங் கோபுரத்தில்
அப்பனே கம்பத்தை கட்டித் தானும்
ஒப்புவாய் உலகத்தோர் மதிமயங்க
ஓகோகோ ஆகாசகரணம் போட்டு
தப்புவாய் தரணிதனில் கீழே வந்து
தார் வேந்தர் மனமகிழ பணிவன் பாரே.

பொருள் :- *சந்திரனும், பன்னிரண்டாமிடத்ததிபதியும், ஐந்தாமிடத்ததிபதியும் கூடி எந்த இராசியில் இருந்தாலும், அந்த ஜாதகர் ஆகாசங் கோபுரத்தில் கம்பத்தைக் கட்டி, உலகத்தார் யாவரும் வியக்கும் வண்ணம் ஆகாச கரணம் போட்டு, கீழே தரணிதனில் வந்து நாடாளும் மன்னர் மன மகிழும் வண்ணம் பணிந்து நிற்பான் என்பதாம்!*

குறிப்பு :- *சந்திரன் 12-5ம் அதிபதிகளுடன் கூடி யிருப்பது ஒரு விசித்திரமான வித்தை யோகமாகும். இவ்விதமாக கிரக அடைவு பெற்ற கிரகங்கள் பலவீனமாக இருந்தாலும் ஓரளவு சுப பலன் தருமென கொள்க.*

31. இராஜயோகம்

6-9ல் சனி சூரியன் சேர

பாரப்பா பாக்கியமும் ஆறோன வீட்டில்
பகருகின்ற சனியோடு வெய்யோன் மேவ
கூறப்பா குழவிக்கு பாக்கியமுண்டு
குவலயத்தில் பிரசங்கி செய்யுளுள்ளோன்
வீறப்பா மற்ற விடந்தனிலே நிற்க
வினோதகனாம் கூத்தாடி வேடக்காரன்
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
செயலறிந்து புவியோர்க்கு செப்புவாயே!

பொருள் :- *சனியும், சூரியனும் கூடி 6-9ம் வீடுகளில் இருக்க, குழவிக்கு நிறைய பாக்கியங்கள் உண்டாகும். குவலயத்தில் அதிபிரசங்கியாகவும், கவிஞானமுள்ளவனாகவும் இருப்பான். ஆனால், மற்ற இடங்களில் மேற்படி இருவரும் கூடியிருந்தால் நற்பலன்கள் கிட்டாது! வினோதகனாகவும், கூத்தாடி, வேஷக்காரனாகவும் இருப்பான். போகர் நூல் பார்த்து கிரக நிலையறிந்து சரியாக கூறுவாய் மகனே!*

விளக்கம் :- *சனி, சூரியன் இருவரும் கூடி ஆறு (அ) ஒன்பதாம் ஸ்தானங்களில் இருந்தால் இராஜயோகம் உண்டாகும்; இது அனைவரும் ஒப்பு கொண்ட உண்மை! கிரக வலிவறியும் போது இந்த யோகம் பெற்ற கிரகங்களுக்கு அரை பலன் கூட்டிக் கொள்ளவும், அதாவது, சனி பகை வீட்டில் இருந்தால், நட்பு பலன் கொடுக்குமென அறிக.*

1, 4, 8,ல் சூரியன், புதன் கூட

பாரப்பா ஈறிரண்டு தனில் இருநான் கொன்றில்
பகருகின்ற பகலவனும் புந்தி கூடில்
நீரப்பா நிதி கருமன் கண்ணுற்றாலும்
நிலத்தில் நல்ல பூபதி போலிருப்பன் காளை
கூறப்பா குதிரைகளுங் காடியுண்டு
கொற்றவனே ஏவலாள் மெத்தவுண்டு
ஆரப்பா அயிஸ்வரியம் மெத்த வாழும்
அப்பனே ராசியுட பலத்தால் கூறே

பொருள் :- இலக்கனம், சுகஸ்தானம், அஷ்டமஸ்தானம் ஆகிய மூன்று வீடுகளில் சூரியனும், புதனும் கூடியிருந்தாலும், இவர்களை தர்ம, கர்மாதிபதிகள் பார்த்தாலும், அந்தக் குழவி இப்புவியில் பூபதி போல் செல்வ சீமானாய் இருக்கும். குதிரை, வாகன யோகங்களுமுண்டு. அநேக வேலையாட்களுமுண்டு. திரண்ட ஐஸ்வர்யமும் வந்து சேரும். ராசியின் பலத்தையும் பார்த்துச் சரியாக கூறுவாயப்பா!

விளக்கம் :- *1, 4, 8*ல் சூரியன், புதன் கூடியிருப்பது மிகவும் பிரபலமான இராஜயோகத்தைக் கொடுக்கு மென்பது யாவரும் ஒப்பு கொண்ட உண்மை! இவர்கள் நின்ற இராசி நாதர்களும் பலமாக இருந்தால், மேற்படி இராஜயோக பலம் இன்னும் அதிகரிக்கும் என்று கூற வேண்டும். இதுபோக, தர்ம, கர்மாதிபதிகளும் இந்தக் கோட்களைப் பார்த்தால், மேற்படி இராஜயோக பலம் பன் மடங்கு அதிகரிக்கு மென அறிக.

விரையாதி இரண்டாமிடமேற

தானப்பா யின்ன மொரு புதுமை கேளு
தனமென்ற இரண்டதனில் விரையன் நிற்க
ஊனப்பா உப்பரிகை மாடகூடம்
உத்தமனே கட்டிடுவன் உதையம் பாரு
ஏனப்பா எங்கோணும் இந்து புந்தி
இதமுள்ள சுக்கிரனு மில்லுமாகில்
சீனப்பா செம்பொன்னும் சென்றாருண்டு
சிவசிவா சித்திரமும் திசையில் சொல்லே

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! தனஸ்தான மென்னும் இரண்டாமிடத்தில், விரயாதிபதி நிற்க, அந்த ஜாதகர் பெரிய உப்பரிகை, மாட கூட மாளிகை கட்டி சிறப்பாக வாழ்ந்திடுவான்! ஜென்ம லக்கனம், சுக்கிரன், புதன், சந்திரன் வீடுகளில் ஒன்றாக இருந்தால், அந்தக் குமரனுக்கு அளவுக்கு மீறிய பொன் பொருள் சேர்க்கையுண்டாகும். இந்தப் பலன்களை அவரவர் திசா, புத்தி சித்திரங்களில் தருவார்களென கூறுவாயப்பா!

குறிப்பு :- இரண்டாமிடத்தில், பன்னிரண்டாமிடத்ததிபதி இருப்பது ஒரு நல்ல இராஜயோகமாகும். இவ்வாறு அடைவு பெற்ற ஜாதகர்க்கு, ஜென்ம லக்கனம் சுபர்களுடைய வீடாக இருந்தால் மேற்படி இராஜயோகம் நிச்சயமாக சித்திக்குமென கூறவேண்டும்; இதுவே, இப்பாடல் தரும் விளக்கமாகும்!

32. மகா ராஜயோகம்

1

பாரப்பா பதிக்கேழு நாலே ழெட்டில்
பாங்கான கோள்களது சேர்ந்து நிற்க
சீரப்பா சென்மனுந் தனித்து நில்லான்
செம்பொன்னும் கோடியுண்டு சிறப்பாய் வாழ்வன்
வீரப்பா வெகு பூமிக் கரசனாகி
வீரர் படை கரிமாவும் ரதங்களுள்ளோன்
கூறப்பா குவலயத்தில் என்னூல் பாரு
குணமாக புலிப்பாணி குறித்திட்டேனே!

பொருள் :- இலக்கனம் *(அ)* இராசிக்கு நான்கு, ஏழு, எட்டு ஆகிய மூன்று ஸ்தானங்களிலும் கோட்களெல்லாம் கூடி நிற்க, இலக்கினாதிபதி தனித்து நில்லாது, மற்ற கோட்களுடன் சேர்ந்து நிற்க, அந்த ஜாதகனுக்கு கோடிக்கணக்கில் செம்பொன்னும், பொருளும் வந்து சேரும். பல பூமிகளுக்கு அரசனாகி, ஆனை, சேனை பரிவாரங்களுடன், பல் வகை ரதங்களோடு சீரும், சிறப்புமாய் வாழ்வான் என்பதாம். புலிப்பாணி குறிப்பு பார்த்து பலன் கூறப்பா!

விளக்கம் :- இலக்கனம் *(அ)* இராசிக்கு *4, 7, 8*ல் மற்ற கோட்கள் நிற்பது ஒரு பெரிய இராஜயோகமாகும். இலக்கினாதிபதியும் மற்றக் கோட்களுடன் சேர்ந்து நின்றால், பெரிய சாம்ராஜ்ய யோகம் சித்திக்கும் என்பது இப்பாடல் தரும் விளக்கமாகும்.

2

சூடினேன்யின்னமொரு சேதி கேளு
சுபருடனே நாலுபேர் கூடி நிற்க
ஆடினேன் அதற்கு நால் மற்றோரெல்லாம்
அப்பனே அவனிதனில் முழுதுவாழ்வன்
கூடினேன் கோவேறு கழுதை கோடி
கொற்றவனே துரகங்கள் கோடா கோடி
தேடினேன் தேர்வீரர் படையுமெத்த
திக்கெட்டுமாளு மன்னன் தெரிந்து கொள்ளே!

பொருள் :- இன்னுமோர் சேதி கூறுவேன்; கேளப்பா! சுபருடனே, நான்கு கோட்கள் கூடி நிற்க, இவர்களுக்கு நாலில் மற்ற கோட்கள் நிற்க, அந்த ஜாதகனுக்கு நல்ல வாழ்க்கை யம்சம் உண்டாகும். கோடிக் கணக்கான கோவேறு கழுதைகளுடன், ஆனை, சேனை பரிவாரங்களுடன் சிறப்பு வாய்ந்த படை பலத்துடன் எட்டுத் திக்கும் இவன் புகழ் பரவும் வண்ணம் மன்னனாக வாழ்வான் என்பதாம்!

விளக்கம் :- எதாவது ஒன்றிரண்டு சுபருடன், நான்கு கோட்கள் கூடி, அதற்கு நாலில் மற்ற கோட்கள் இருப்பது ஒரு பெரிய இராஜயோகம் என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து!

இந்தக் கோட்கள் நட்பு, ஆட்சி, உச்சமாய் ஒருவருக்கொருவர் நட்பாக இருந்தால், மேற்படி இராஜயோகம் சந்தேகமின்றி சித்திக்குமெனலாம். ஆனால், மேற்படி கோட்கள் பகை, நீசமாக இருந்து, ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தால், ஆரம்பத்தில் பெரிய நற்பலன்களை தருவது போல் காண்பித்து, இறுதியில் படுகுழியில் தள்ளி விடுமென்பது அகஸ்தியர் வாக்கு! மனதில் கொள்ளவும். எனவே, கிரக சத்துருத்துவம் அறிந்து பலன் கூற வேண்டு மென்பது குறிப்பிடத்தக்கது!

3

ஆரப்பா அஞ்சுபே ரொன்று கூடி
அப்பனே மற்றவர்கள் ஒற்றிராமல்
கூறப்பா குன்றிகளில் தனித்திருக்க
கொற்றவனே குவலயங்களெல்லாமாள்வன்
பாரப்பா படைவீரர் ஜனங்கள் மெத்த
பறக்குமடா கொடித்திரையும் கடலுக் கப்பால்
சீரப்பா செம்பொன்னும் விளையும்பூமி
சிக்குமடா புலிப்பாணி செப்பினேனே!

பொருள் :- ஐந்து கோட்கள் ஒன்று கூடிநிற்க, மற்ற கோட்களெல்லாம் தனித்தனியாக துவாதச இராசிக்குள்ளாக இருக்க, அந்த ஜாதகன் இப்புவிக்கெல்லாம் அரசனாவான். அநேக படைவீரர்களுடனும், ஜனக் கூட்டத்துடன் இவனது கொடி பறக்கும். கடல் தாண்டி இவன் புகழ் பரவி, தன் கொடியை நிலை நாட்டுவான். இவனது பூமியில் பொன் விளையும்; அந்தப் பொன்னும் இவன் கையில் சிக்கிவிடும்! புலிப்பாணி வாக்கு பொய்க்காதப்பா!

விளக்கம் :- ஏதாவது ஒரு இராசியில் 5 கோட்கள் கூடியிருக்க, மற்ற கோட்கள் தனித் தனியாக இருந்தால், சிறந்த இராஜயோகம் உண்டாகுமென்பது இப்பாடலின் கருத்து!

இந்த 5 கோட்கள் கேந்திர கோணங்களில் இருந்தால், மிகச் சிறந்த இராஜயோகம் என்றும், 3, 6, 8, 12ம் இராசிகளில் இருந்தால் மந்த இராஜயோக மென்றும் கொள்க.

4

பாடினே னின்னமொன்று பகரக் கேளு
படவரவு பரமகுரு சேர்ந்து நிற்க
கூடினேன் குளிர்ந்த மதி அருகில் நிற்க்
கொற்றவனே குவலயமும் ஆளும் வல்லன்
தேடினேன் தேர்வீரர் கோடா கோடி
திடமுள்ள துரகங்கள் ரதங்கள் மெத்த
நாடினேன் போகருட கடாக்ஷத்தாலே
நாடெல்லா மாளு மன்னன் நயந்து பாரே

பொருள் :- இன்னுமொன்று சொல்வேன், கேளப்பா! ராகு - கேதுக்களுடன், பரம குரு கூடி நிற்க, இவர்க்கு பக்கத்து வீட்டில் வளர்பிறை சந்திரன் நிற்க, இந்த ஜாதகன் குவலயமெல்லாம் ஆளும் திறம் படைத்தவன். கோடிக்கணக்கான தேர், வீரர்களுடன், திடமான அழகான ரதங்களுடன் இப்புவியெல்லாம் ஆளும் மன்னனாவான். போகர் நூல் பார்த்து கூறினேனப்பா!

விளக்கம் :- குருவும், ராகுவும் கூடி ஏதாவது ஒரு இராசியில் இருக்க, அவர்க்குப் பக்கத்து வீட்டில் சந்திரன் இருக்க, மாபெரும் இராஜயோகம் உண்டாகும் என்பது இப்பாடல் தரும் விளக்கமாகும்.

இந்த யோகம் அமைந்த கோட்களுக்கு, அவற்றின் இயற்கையான வலிமையுடன் 'அரை' பலன் கூட்டி, அதன் வலிமையைக் கண்டுபிடிக்கவும். உதாரணமாக, குரு நட்பு வீட்டில் இருந்து, மேற்படி யோக பலம் பெற்றிருந்தால், அது 'உச்ச' பலம் கொடுக்கும் எனக் கணக்கிட்டுக் கொள்ளவும். மற்றப்படி பாடலில் கூறியுள்ளதைப் போல், கோடிக்கணக்கான ரதங்கள் சேனைபரிவாரங்கள் வரும் என்று 'கனவு' காண வேண்டாம்! அந்த மாதிரி வரவேண்டுமென்றால், குறைந்த பட்சம் *20* to *30* இராஜயோகங்கள் ஒரு ஜாதகத்தில் அமைய வேண்டுமென்பதை நினைவில் கொள்ளவும்! இதுவே, எமது ஆய்வில் கண்ட உண்மை!

5

பாரப்பா மேடமுதல் கடகம் மற்றும்
பகருகின்ற கிரகங்களிருவராக
ஆரப்பா அகங்கள் தனிலமர்ந்திருக்க
அப்பனே ஐஸ்வர்யம் மெத்தவுண்டு
தீரப்பா செம்பொன்னும் ரகங்கள் மெத்த
சிறந்த தொரு படைவீரர் கரிமாவுண்டு
தூரப்பா தொலை பூமிக் கரசனாகி
தொல்புவியில் வாழ்ந்திருப்பன் சூழ்ந்து பாரே!

பொருள் :- மேஷம் முதல் கடகம் வரையுள்ள ஒவ்வொரு இராசியிலும் இரண்டிரண்டு கிரகங்களாக அமர்ந்திருக்க, அந்த ஜாதகனுக்கு ஐஸ்வர்யம் மெத்தவுண்டு. நல்ல செம்பொன் கட்டிகளும், திரண்ட படைவீரர்கூட்டமும், ஆனை, சேனை பரிவாரங்களும் உண்டு. மிகவும் தொலைவில் உள்ள பூமிக்கெல்லாம் இவன் அரசனாகி, இப்புவியில் சிறப்பாக வாழ்ந்திருப்பான் என்பதாம்!

விளக்கம் :- மேஷம் முதல் கடகம் வரை, இரண்டிரண்டு கிரகங்களாக ஒவ்வொரு இராசியிலும் அமர்ந்திருப்பது ஒரு சிறந்த இராஜயோகமாகும். இக்கோட்கள் ஆட்சி, உச்சமாக இருந்தால் பெரிய இராஜயோக மென்றும், பகை, நீசமாக இருந்தால் சிறிய இராஜயோக மென்றும் கொள்க.

6

பாரப்பா பனிரெண்டில் வெள்ளி நிற்க
பாங்கான ரெண்டதனில் குருவுமேற

கூறப்பா லக்னாதி கேந்திர கோணம்
கொற்றவனே பாக்கியாதி லாபத்தோடு
வீரப்பா விவர் நோக்க மிகு பொன் சேரும்
விதமான முப்பதினாயிரந் தானாகும்
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாகப் புலிப்பாணி செப்பினேனே

பொருள் :- பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் இருக்க, சிறப்பு வாய்ந்த இரண்டாம் வீட்டில் குரு நிற்க, லக்னாதிபதி கேந்திர கோணங்களில் இருக்க, பாக்கிய ஸ்தானாதிபதி லாபஸ்தானத்தில் இருந்து, மேற்படி கோட்களை நோக்க, அளவுக்கு மீறிய பொன் பொருள் சேரும். வித விதமான முப்பதாயிரம் பொன் பொருள் சேருமாம்! போகர் நூல் பார்த்து, புலிப்பாணி கூறினேனப்பா!

விளக்கம் :- இப்பாடலில் மூன்று யோகங்கள் உள்ளது.

1. லக்னத்துக்கு இருபுறமும் சுபர்கள் இருப்பது ஒரு இராஜயோகமாகும்!

2. லக்னாதிபதி கேந்திர, கோணங்களில் இருப்பதும் ஒரு நல்ல தனயோகத்தைக் குறிப்பிடும்.

3. பாக்கியஸ்தானாதிபதி லாபத்தில் இருப்பதும் ஒரு நல்ல யோகமாகும்.

இந்த யோகங்களில் எந்த யோகம் அமைந்திருந்தாலும், அந்த யோகம் பெற்ற கிரகங்களின் இயற்கையான வலிமையுடன் *1/4* பலன் கூட்டிக் கணக்கிடவும். அதாவது, நட்பு வீட்டில் இருக்கும் கிரகம் மேற்படி யோகம் பெற்றிருந்தால், ஆட்சி பலன் கொடுக்குமென கணக்கிட்டுக் கொள்க.

7

ஆரப்பா கரும் பாம்பு ஆறிலேற
அப்பனே செம்பாம்பு யீராறேற
சீரப்பா சிறந்த குரு கேந்திர மேற
சிவசிவா அஷ்டலெட்சுமியாள் யோகம்
கூறப்பா கெணங்களுக்கு பலி கொடுத்து
கெணத்திலுள்ள திரவியமும் வெளியெடுத்து
பாரப்பா பாக்கியங்கள் கண்ணால் பார்ப்பன்
பண்பாக புலிப்பாணி பகர்ந்தேன் பாரே

பொருள் :- கரும்பாம்பாகிய ராகு 6ம் இடத்தில் இருக்க, செம்பாம்பாகிய கேது 12ம் இடத்தில் இருக்க, சிறப்பு வாய்ந்த குரு கேந்திரமேற, அஷ்டலட்சுமி யோகம் உண்டாகும். கிணறுகளுக்குப் பலிதானம் செய்து, கிணற்றிலுள்ள திரவியங்களைத் தோண்டி எடுத்திடுவான். பாக்கியங்கள் யாவும் கண்ணால் பார்த்து மகிழ்வான் அப்பனே! பண்பாக புலிப்பாணி கூறினேன் அப்பா!

விளக்கம் :- ராகு 6லும், கேது 12லும் இருக்க, குரு கேந்திர மேறினால், புதையல், தன யோகம் என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து! கிரகவலி நிர்ணயம் செய்யும் பொழுது, இக்கோட்களுக்கு *1/2* பலன் கூட்டிக் கணக்கிடவும்; அதாவது. குரு நட்பு வீட்டில் இருந்தால், அது உச்சப் பலன் கொடுக்கு மென கணக்கிட்டுக் கொள்க.

8

பாரப்பா மகரமுதல் நண்டுக்குள்ளே
பகருகின்ற பானுமைந்தன் அதிலே தோன்ற
சீரப்பா செழுமதியும் கேந்திர மேற
சிவ சிவா யென்ன சொல்வேன் அரசன் ஜென்மம்
ஆரப்பா அகிலங்களெல்லா மாறாம்
அப்பனே அரசனுட கொடியைப் பார்த்து
நாரப்பா நகைக்குதடா சீமான் சோலை
நன்றாக புலிப்பாணி நவின்றிட்டேனே.

பொருள் :- *மகரம் முதல் கடகம் வரையுள்ள ஏழு இராசிதனிலே, ஏதாவது ஒன்றில் சனீஸ்வரன் இருக்க. வளர்பிறை சந்திரனும் கேந்திரமேற, குரு ஜென்மத்தில் இருக்க, இவன் யோகங்கள் எப்படி சொல்வனப்பா? அகில மெல்லாம் இவன் கொடி பறக்கும். மற்ற சீமான்களெல்லாம் பரிகசிக்கும் தன்மையில் வாழ்வாராம்! நன்றாக புலிப்பாணி கூறினேனப்பா!*

விளக்கம் :- மகரம் முதல் கடகம் வரையுள்ள இராசிகளில் சனியிருந்து, வளர்பிறை சந்திரன் கேந்திரம் ஏறுவது ஒரு நல்ல யோகமாகும். அத்துடன் குருவும் ஜென்மத்தில் இருந்தால் பயங்கரமான இராஜயோகம் உண்டாகும் என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து!

வளர்பிறை சந்திரன் கேந்திரம் ஏறியிருக்க, குரு ஜென்மம் ஏறுவதால், கருகருகேஷரி யோகம் உண்டாகியிருப்பதைக் காணவும்.

9

கூறினேன் கலைமதியும் ஒன்றில் நிற்க
குரு வெள்ளி தேர்பாகன் ஆறேழெட்டில்
மாறினேன் மற்றோர்கள் மூன்று பத்து
மைந்தனே லாபத்தி லமர நன்று
சீறினேன் செம்பொன்னும் கோடியுண்டு
சிவசிவா சீர் பெருகும் செல்வமுள்ளோன்
தேறினேன் காலாள்கள் மெத்தவுண்டு
திடமாகப் புலிப்பாணி தெரிவித்தேனே!

பொருள் :- *வளர்பிறை சந்திரன் ஜென்ம லக்கனத்தில் இருக்க, குரு, சுக்கிரன், புதன் 6, 7, 8ம் இடங்களில் இருக்க, மற்றவர்கள் 3, 10, 11ஆம் வீடுகளில் இருக்க, மிகவும் சிறப்பான இராஜயோகம் உண்டாகும். கோடிக்கணக்கான செம்பொன்னும், சீர் பெருகும் செல்வ வளமும் உண்டு. சேவை செய்ய காலாட்கள் அநேக பேர் உண்டு. திடமாக புலிப்பாணி கூறினேனப்பா!*

விளக்கம் :- இப்பாடலில் *3* யோகங்கள் உள்ளன.

1. ஜென்ம லக்கனத்தில் சந்திரன் இருப்பது சாமரை யோகம் எனக் கூறப்படும். அறிவு, ஆற்றல் நிறைந்தவராகவும், கலை ஞானமுள்ளவராகவும் இவர்கள் இருப்பர்.

2. ஜென்ம லக்கனம் (அ) சந்திரனுக்கு *6-7-8*ல் சுபர்கள் இருப்பது ஒரு நல்ல இராஜயோகமாகும்.

3. மற்றக்கோட்கள் *3-10-11*ல் இருப்பது ஒரு நல்ல தனயோகத்தைக் குறிப்பிடும்.

இந்த மூன்று யோகங்களும் அமையப் பெற்ற ஜாதகர் ஒரு பெரிய கோடீஸ்வரனாக வாழமுடியும் என்பது முனிவர் கருத்து!

10

ஆமப்பா யின்ன மொரு சேதிகேளு
அப்பனே தன நிதியன் கருமன் லாபன்
தாமப்பா தனம் குவியும் நால்வர் மாற
தரணிதனில் பேர் விளங்கோன் சிவிகையுள்ளோன்
வேமப்பா பகைவருடன் சேர்ந்து கெட்டால்
வீதிகளில் அமடுபிச்சை எடுப்பன் காளை
போமப்பா போகருட கடாக்ஷத்தாலே
பூதலத்தில் புலிப்பாணி அறைந்திட்டேனே!

பொருள் :- இன்னுமோர் சேதி சொல்வேன் கேளப்பா! *2-9-10-11*ம் அதிபதிகள் தனத்தையும், பொருளையும் தருபவர்கள். இவர்கள் கூடியிருந்தால் பிரபலமான இராஜயோகம் உண்டாகும். இவர்கள் ஒருவர் வீட்டில் ஒருவராக மாறி நின்றாலும் விசேஷமான யோகமே உண்டாகும். தரணிதனில் மக்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம் வாழ்வார்கள். சிவிகை யோகமுண்டு. ஆனால், 'பகை' கோட்களுடன் கூடி வலுவிழந்துபோனால், மேற்படி ஸ்தானாதிபதிகள் நன்மை செய்யமாட்டார்கள். தெருத் தெருவாய் அலைந்து பிச்சையெடுத்து வாழ்வான் என்பதாம். போகர் நூல் பார்த்து புலிப்பாணி உரைத்தேனப்பா!

விளக்கம் :- *2-9-10-11*ம் அதிபதிகளின் சேர்க்கையோ (அ) பரிவர்த்தனை யாக கிரக மாறியிருந்தாலோ, இராஜயோகம் சித்திக்கும் என்பது இப்பாடலின் கருத்து! ஆனால், இவர்கள் பாவர் சேர்க்கையுடன் வலுவிழந்து போனால், மேற்படி இராஜயோகம் சிதறிப் போகும்; தரித்திரமே சம்பவிக்கும் என்பதை மனதில் கொள்க.

11

பாரப்பா யின்னமொன்று பகரக் கேளு
பரம குரு பால் மதியும் வெள்ளி மூவர்
சீரப்பா ஜென்மனுக்கு அஞ்சில் தோன்ற
சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வன்
கூறப்பா குருவிருந்தால் புத்திரரற்பம்
குளிர்ந்தமதி தானிருந்தால் பெண்ணதாகும்
வீரப்பா வெள்ளி நின்றால் யோகம் மெத்த
விளம்புவாய் புவியோர்க்கு உலகின் கண்ணே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! பரமகுருவும், வளர்பிறை சந்திரனும், சுக்கிரனும் கூடி ஜென்மனுக்கு ஐந்தாம் வீட்டில் குலாவி, சிறப்பாய் நிற்க, அவன் இப்புவியில் சிறப்பாக, சகல வித யோக பாக்கியங்களும் பெற்று வாழ்வான். மேலும் கூறப்பா 5ல் குரு இருந்தால் புத்திர தோஷம். குளிர்ந்த சந்திரன் இருந்தால், பெண்குழந்தை விருத்தியாகும். 5ல் சுக்கிரன் இருந்தால், மிகவும் சிறப்பான யோகம் உண்டாகுமென்று புவியோர்க்குக் கூறுவாயப்பா!

விளக்கம் :- ஐந்தாமிடத்தில் குரு, சுக்கிரன், வளர்பிறை சந்திரன் என்னும் மூன்று கோட்களும் கூடியிருந்தால், மிகவும் சிறப்பான இராஜயோகம் உண்டாகுமென்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. இவர்கள் தனி, தனியாக இருந்தாலும் யோகம் உண்டு. ஆனால், சாதாரண தன யோகம் உண்டு என கொள்ள வேண்டும்! 5ல் குரு இருப்பது புத்திர தோஷமாகும்; காரணம், புத்திரகாரகன் அவனது ஸ்தானத்தில் இருக்கக் கூடாது என்பது ஓர் சிறப்பு விதி! அதுபோல், 4ல் சந்திரன், 7ல் சுக்கிரன், 9ல் சூரியன், 8ல் சனி இருக்கக் கூடாது! காரகர்கள் தங்களது பாவங்களை நாசம் செய்வர் என்பது ஓர் சிறப்பு விதியாக சாஸ்திரம் கூறுகிறது!

11. இதுவுமது (மேற்கூறிய பாடலின் தொடர்ச்சி)

கண்ணப்பா யின்னமொரு கருத்தைக் கேளு
கனத்ததொரு லாபத்தில் நிதியில் தோன்ற
உண்ணப்பா உயர்நிதியோன் நிதியில் தோன்ற
உத்தமனாந் தண்டிகையும் துரகமுள்ளோன்
பண்ணப்பா புதைபொருளும் கிட்டுங்கிட்டும்
பலமான வித்தையடா யிருக்கும் பாரு
திண்ணப்பா போகருட கடாக்ஷத்தாலே
திடமான புலிப்பாணி சாற்றினேனே!

பொருள் :- கண்ணப்பா இன்னும் ஓர் விபரம் சொல்வேன்; கேளப்பா! சிறப்பு வாய்ந்த லாபஸ்தானத்திலும், பாக்கியஸ்தானத்திலும், மேற்படி குரு, சுக்கிரன், வளர்பிறை சந்திரன் இருக்க, பாக்கியஸ்தானாதிபதி. பாக்கிய ஸ்தானத்திலேயே இருக்க, ஜென்மனுக்கு நல்ல யோகமுண்டாகும். தண்டிகை, வாகன யோகம் கிட்டும். நல்ல நல்ல புதைபொருளும் இவன் கண்களுக்குத் தென்படும். பலமான வித்தை ஞானமும் உண்டாகும். நல்ல போகர் நூல் பார்த்து, புலிப்பாணி உரைத்தேனப்பா!

விளக்கம் :- 'நிதி' என்றால் ஒன்பதாம் இடத்தைக் குறிப்பிடும். குரு, சுக்கிரன், வளர்பிறை சந்திரன் - இம்மூவரும் கூடி, 9(அ) 11ம் இடத்தில் இருந்தால் இராஜயோகம் உண்டாகும் என்பது இதன் பொருளாகும். அத்துடன் 9ம் அதிபதி ஒன்பதிலேயே ஆட்சியாக இருந்தால், மேற்படி யோகம் இன்னும் அதிகரிக்கும் என்பது இப்பாடல் தரும் விளக்கமாகும்!

12

ஆரடா குரு புந்தி வெய்யோன் வெள்ளி
அப்பனே நால்வர்களும் சேர்ந்து நிற்க
சீரடா ஜென்மனும் செம்பொன்னுள்ளோன்
திடமான போகனடா வையகத்தில்

கூறடா குருவெள்ளி ரவியும் சேயும்
கொற்றவனே சேர்ந்திருக்க குடும்பி மெத்த
வீரடா பணையுண்டு நிதியுமுண்டு
வேட்டல்களும் மெத்தவுண்டு விளம்பினேனே!

பொருள் :- குரு, புதன், சூரியன், சுக்கிரன் - இந்நான்கு கோட்களும் கூடி ஏதாவது ஒரு இராசியில் இருக்க ஜென்மனுக்கு அநேக செம்பொன் கட்டிகள் கிட்டும். திடமான போக சுகம் அனுபவிப்பான்.

குரு, சுக்கிரன், சூரியன், செவ்வாய் ஆகிய இந்நான்கு கோட்களும் கூடி நிற்க, ஜென்மன் ஒரு நல்ல குடும்பஸ்தன்; வீரன்; பொன் பொருள் சேர்க்கையும், வித்தை ஞானமும் உண்டு என்பதாம்!

விளக்கம் :- இப்பாடலில் இருவகையான யோகங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

1. குரு, சுக்கிரன், சூரியன், புதன் - இந்நால்வரும் கூடி ஏதாவது ஓர் ராசியில் இருப்பது, ஒரு நல்ல இராஜயோக மாகும்.

2. குரு, சுக்கிரன், சூரியன், செவ்வாய் - இந்நால்வரும் கூடியிருப்பது, ஒரு சாதாரண தனயோகமாகும்! கிரகவலி நிர்ணயம் செய்யும் பொழுது, முதல் யோகம் பெற்ற கோட்களுக்கு *1/2* பலனும், 2வது யோகம் பெற்ற கோட்களுக்கு *1/4* பலனும் கூட்டிக் கணக்கிடவும்.

13

படித்திட்டே னின்னமொன்று பகரக் கேளு
பரமகுரு சனி செவ்வாய் புந்தியோடு
அடித்திட்டே னம்புலியும் வெள்ளி மேவ
அப்பனே அண்டங்கள் அளவெடுப்பன்
குடித்திட்டேன் குரு புந்தி சனி சேய் இந்து
கொற்றவனே சேர்ந்திருக்க தரித்திர தோஷம்
இடித்திட்டேன் போகருட கடாக்ஷத்தாலே
இதமான புலிப்பாணி சாற்றினேனே

பொருள் :- இன்னுமொன்று படித்துச் சொல்வேன்; கேளப்பா! குரு, சனி, செவ்வாய், புதன், சந்திரன், சுக்கிரன் ஆகிய ஆறு கோட்களும் கூடி, ஏதாவது ஓர் இராசியில் இருக்க, இப்புவியிலுள்ள அண்டங்கள் அனைத்தையும் அளவெடுத்துச் சமர்த்து சொல்பவனாக இருப்பான். ஆனால், குரு, புதன், சனி, செவ்வாய், சந்திரன் ஆகிய ஐந்து கோட்களும் மட்டும் கூடியிருந்தால் நல்லதன்று! தரித்திர தோஷமுண்டாகும்! போகர் நூல் ஆய்ந்து, விபரமாக புலிப்பாணி உரைத்தேனப்பா!

விளக்கம் :- புந்தி-புதன்; அம்புலி, இந்து-சந்திரன்; சேய்-செவ்வாய் என பொருள் படும். இப்பாடலில் இரு யோகங்கள் கூறப்பட்டுள்ளன.

1. குரு, சனி, புதன், செவ்வாய், சந்திரன், சுக்கிரன் இந்த ஆறு கோட்களும் கூடியிருப்பது ஒரு நல்ல யோகமாகும்.

2. சுக்கிரன் தவிர, மற்ற ஐந்து கோட்களும் கூடியிருப்பது தரித்திர யோகமாகும்!

14

கூறினேன் குரு வெள்ளி சனிமால் இந்து
கொற்றவனே சேர்ந்திருக்க அங்கயீனம்
தேறினேன் தேவகுரு புந்தியோடு
திடமாக மதிவெள்ளி சேர்ந்து நிற்க
ஆறினே னகம் பொருளும் நிலமுஞ்செம்பொன்
அப்பனே கிட்டுமடா அவனியில் வாழ்வன்
சீரினேன் போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாக புலிப்பாணி செப்பினேனே!

பொருள் :- குரு, சுக்கிரன், சனி, புதன், சந்திரன் இவ்வைந்து கோட்களும் கூடி, ஏதாவது ஓர் இராசியில் இருக்க, ஜென்மனுக்கு அங்கவீனக் கோளாறு உண்டாகும்; ஆனால், தேவகுரு, புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய இந்நான்கு கோட்களும் கூடியிருக்க, அகம் பொருளும், நிலமும், செம்பொன்னும் கிட்டும். அவனியில் சீரும் சிறப்புமாய் வாழ்வான். போகர் நூல் பார்த்து புலிப்பாணி கூறினேனப்பா!

விளக்கம் :- மால் - புதன்; இந்து - சந்திரன் என பொருள்படும்.

இப்பாடலில் இரு யோகங்கள் உள்ளன.

1. நான்கு சுபக்கோட்களுடன், சனி கூடியிருந்தால், அது ஒரு அவயோகமாகும்; அங்கவீனக் கோளாறு உண்டாகும்.

2. நான்கு சுபக் கோட்களும் கூடி, எந்த இராசியில் இருந்தாலும், ஜென்மனுக்கு யோகமுண்டு! இராஜயோகம் என்றே கூறலாம்!

'சனி' என்ற ஒரு கோளின் தொடர்பால் ஏற்படும் யோக விளைவுகளை காணவும்!

15

ஆச்சப்பா அம்புலியும் வெள்ளியோடு
அடைவாக குரு, புந்தி சேயும் சேர
கூச்சப்பா குலவானாம் கிரகமுண்டு
குவலயத்தில் நிதிபணையும் மெத்தவுண்டு
பேச்சப்பா வெகுபேரை ஆதரிப்பன்
பிரபலமாய் வாழ்ந்திருப்பன் அவனிதன்னில்
வீச்சப்பா போகருட கடாக்ஷத்தாலே
விதமாக புலிப்பாணி விளம்பினேனே!

பொருள் :- குரு, புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய நான்கு சுபக் கோட்களுடன், செவ்வாயும் கூடியிருந்தால் பிரபலமான இராஜயோகமுண்டாகும். குவலயத்தில் இவன் வெகு பேரை ஆதரிக்கும் அளவுக்கு, பொன் பொருள் சேர்க்கையுண்டாகும். தன் குலத்திற் கெல்லாம் அதிகாரியாக விளங்குவான். அவனிதன்னில் இவன் புகழ் எட்டு திக்கும் பரவும்! போகர் நூல் ஆய்ந்து, நுட்பமாய் புலிப்பாணி குறித்தேனப்பா!

விளக்கம் :- அம்புலி - சந்திரன்; புந்தி - புதன்; சேய் - 'செவ்வாய்' என பொருள் கொள்க.

நான்கு சுபர்களும் கூடியிருந்தால் இராஜயோகம் சித்திக்கும் என்பது ஏற்கெனவே முந்தைய பாடல்களில் கூறப்பட்டுள்ளது! அத்துடன் செவ்வாய் கூடினால், இன்னும் விசேஷமான இராஜயோகம் உண்டாகும் என்பது இப்பாடலின் கருத்து!

16

கேளப்பா இன்னமொரு புதுமை கேளு
கனமான கரும்பாம்பு கேந்திரகோணம்
ஆளப்பா அத்தலத்தோன் சுபரைக் கூட
அப்பனே சேர்ந்தாலும் கண்ணுற்றாலும்
சீரப்பா ஜென்மனுக்கு யோகம் மெத்த
சிவசிவா கிளர்யோகம் இடமாய் செப்பு
கூறப்பா குடிநாதன் சேர்ந்து நிற்க
குமரனுக்கு அனுதினமும் பலனைக் கூறே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! வல்லமை பொருந்திய கரும்பாம்பாகிய ராகு கேந்திர கோணங்களில் இருக்க, அந்த வீட்டுக்காரன் சுபர்களுடன் கூடியிருக்க (அ) சுபர்களால் பார்க்கப் பட்டிருந்தாலும், ஜென்மனுக்கு மிகவும் பிரபலமான இராஜயோக முண்டாகும். ராகுவுடன், அவர் இருக்கும் இராசிநாதனும் கூடியிருந்தாலும் ஜென்மனுக்கு நல்ல யோகமுண்டு! தினமும் வருமானம் வந்த வண்ணமாக இருக்கும்!

விளக்கம் :- ராகு கேந்திர, கோணங்களில் இருந்தால் இராஜயோகம் தருவார் என்பது யாவரும் அறிந்ததே! ஆனால், அவர் இருக்கும் வீட்டுக்காரன் சுபர் பார்வை (அ) சம்பந்தத்துடன் இருந்தால், மேற்படி யோகம் இன்னும் அதிகரிக்கும் என கொள்ள வேண்டும். ராகுவுடன், அவர் இருந்த வீட்டுக்காரன் கூடியிருந்தாலும், மேற்படி இராஜயோகம் இன்னும் அதிகரிக்கும் எனக் கொள்க.

இவ்வாறு அமையப் பெற்ற கோட்களுக்குக் கிரக வலி நிர்ணயம் செய்யும் பொழுது, அதன் இயற்கையான வலிமையுடன் 1/2 பலன் கூட்டிக் கணக்கிடவும். அதாவது 'நட்பு' பலம் பெற்ற கிரகம், 'உச்ச'ப் பலம் கொடுக்கு மெனக் கொள்க.

17

பாரப்பா யின்னமொரு புதுமை கேளு
பகருகின்ற பாம்புடனே ஒருவன் சேர
வீரப்பா விருபுறமும் மற்றோர் நிற்க
வேந்தனுக்கு வேந்தனாம் கொடிய வீரன்
கூறப்பா ஜெகமதனில் கெஜமுமுள்ளோன்
கொற்றவனே துரகமது மெத்தவுண்டு
வீரப்பா வேடர் படை கோடியுள்ளோன்
விதமான புலிப்பாணி சொன்னோம் நாமே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! முன்பு கூறிய பாம்பாகிய ராகுவுடன் ஏதாவது ஒரு கிரகம் சேர்ந்திருக்க, இவர்களுக்கு இருபுறமும் மற்றக் கோட்கள் நிற்க, ஜென்மன் அரசர்க்கெல்லாம் அரசனாகி புவியெல்லாம் ஆள்வன்; கொடிய வீரன்; ஜெகமெல்லாம் இவன் புகழ்

பரவும். அநேக ரதங்கள், வாகன சேர்க்கையுடன், வேடர் படையும் கோடிக் கணக்கில் உண்டு. நன்றாக ஆய்ந்து புலிப்பாணி கூறினேன் அப்பா!

விளக்கம் :- ராகுவுடன் இன்னுமோர் கோள் சேர்ந்திருக்க, அவர்க்கு இருபுறமும் மற்றக் கோட்கள் இருக்க, ஜென்மனுக்குப் பயங்கரமான இராஜயோக முண்டாகு மென்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து!

18

பூட்டுகிறேன் இன்னமொன்று புதுமை கேளு
புகழ்பெரிய ஈறிரண்டுக் குடையோனின்ற
ஆட்டுகிறேன் அப்பதிக்கு பத்தோன் தானும்
அப்பனே இறையோனைக் கூடிட்டாலும்
கூட்டுகிறேன் குழவிக்கு பூமி மெத்த
குவலயத்தில் பேர் விளங்கும் போகவானாய்
பூட்டுகிறேன் போகருட கடாக்ஷத்தாலே
பூதலத்தில் இறையோனைப் பார்த்துச் சொல்லே!

பொருள் :- இன்னுமோர் உண்மை சொல்வேன்; கேளப்பா! புகழ் வாய்ந்த 4ம் வீட்டுக்குடையவன் தான் நின்ற வீட்டுக்கு 10ம் அதிபதியுடன் கூடியிருந்தாலும் (அ) குருவுடன் கூடியிருந்தாலும், ஜென்மனுக்கு பூமி நிறைய உண்டு. இப்புவியில் பேர் விளங்கும் போகவானாக இருப்பான். போகர் நூல் பார்த்து கூறினேன் அப்பா! குரு நிலை அறிந்து சரியாகக் கூறுவாயப்பா!

விளக்கம் :- 4ம் அதிபதி தான் நின்ற வீட்டுக்கு 10ம் வீட்டு அதிபதியுடன் கூடியிருந்தாலும் (அ) குருவுடன் கூடியிருந்தாலும், குழவிக்கு நல்ல வாகன சேர்க்கையும், பூமி பொன் சேர்க்கையும் உண்டாகும். கிரகங்களுக்கு, அதன் இயற்கையான வலிமையுடன் 'கால்' பலன் கூட்டிக் கணக்கிடவும்.

19

பாரப்பா பவுமனுக்கு நாலேழ் வெள்ளி
பகருகின்ற வெள்ளிக்கு ஐந்தேழ் லாபம்
சீரப்பா சேய் நிற்க ஜென்மன் தானும்
சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வன்
கூறப்பா குடிநாதன் கேந்திர கோணம்
கொற்றவனே வாகனமும் தொழிலுமுள்ளோன்
பாரப்பா பாக்கியமும் நிலமுங் கிட்டும்
பகருவாய் திசை புத்தியில் பலிக்குந்தானே!

பொருள் :- செவ்வாய்க்கு நான்கு, ஏழாம் வீடுகளில் சுக்கிரன் நிற்க, (அ) சுக்கிரனுக்கு ஐந்து, ஏழு, லாபஸ் தானங்களில் செவ்வாய் நிற்க, ஜென்மன் இப்புவியில் எல்லா நலமும் பெற்று சீரும் சிறப்புமாய் வாழ்வான். மேற்படி கோட்கள் நின்ற இராசிநாதன் கேந்திர கோணங்களில் இருந்தால், அந்த ஜாதகனுக்கு வாகன யோகமும், நல்ல தொழில் யோகமும் உண்டாகும். மேலும், சகல வித பாக்கியங்களும், நிலமும் கிட்டும். இந்தப் பலன்களை அவரவர் திசா புத்திகளில் தருவார் அப்பனே!

விளக்கம் :- இப்பாடலில் இரு யோகங்கள் உள்ளன.

1. செவ்வாய்க்கு 4-7ல் சுக்கிரன் நிற்பது; இதை பிருகு மங்கள யோகமென்றும் கூறுவர்! நல்ல யோகமாகும்.

2. சுக்கிரனுக்கு ஐந்து, ஏழு, லாபஸ்தானங்களில் செவ்வாய் நிற்பது; நல்ல வாகன சேர்க்கையுண்டாகும்.

இந்த இரண்டு யோகங்களும் சாதாரண தன யோகத்துக்குச் சமமானது. எனவே, இந்த யோகம் பெற்ற கிரகங்களுக்குக் 'கால் பலன்' கூட்டிக் கணக்கிடவும்!

20. தேவதை வசியன்

ஆமென்ற செவ்வாயும் ராகு மாந்தி
அப்பனே ரெண்டோனைக் கூடி நிற்கில்
போமென்ற பூதலத்தில் பரமன் பூசை
புகழ் பெரிய அய்யனோடு ருத்திரன் ருத்திரி
ஓமென்ற ஓங்காளி வீரபத்திரன்
ஓதிடுவன் ஆகாச மாடன் தானும்
தாமென்ற போகருட கடாக்ஷத்தாலே
தப்பாமல் செய்திடுவன் சென்மன் தானே!

பொருள் :- இரண்டாம் வீட்டதிபதியுடன் செவ்வாய், ராகு, மாந்தி முதலிய கிரகங்கள் கூடி நின்றால், அந்த ஜாதகன் இந்த வையகத்தில் பரமசிவன் பூஜை, மேலும் ருத்திரன் ருத்திரி பூஜை, ஓமென்ற ஓங்காளி பூஜை, வீரபத்திரன் பூஜை முதலிய பூஜைகளை ஓதிடுவான்; இந்த பூஜைகளின் வலிமையால் மேற்படி தேவதைகளை தப்பாமல் வசியம் பண்ணி, தம் பக்கம் இழுத்திடுவான்! போகர் நூல் பார்த்துக் கூறினேனப்பா!

விளக்கம் :- 2ம் அதிபதியுடன் செவ்வாய், ராகு, மாந்தி கூடியிருந்தால், தேவதைகளை வசியம் செய்யும் ஆற்றல் அந்த ஜாதகனுக்கு உண்டாகும் என்பது இப்பாடலின் கருத்து! இந்தக் கோட்களுக்கும், கிரக வலி நிர்ணயம் செய்யும் பொழுது, அதன் இயற்கையான வலிமையுடன் 'கால் பலன்' கூட்டிக் கணக்கிடவும்!

21. இதுவுமது

தானென்ற அம்புலிக்கு நாலாமாதி
தயவாக லக்கினத்து நாலோன் தானும்
ஏனென்ற எவ்விடத்தில் கூடிட்டாலும்
இதமாக அசுரகுரு இணங்கி நிற்க
தேனென்ற தேவிபரா துர்க்கை பூஜை
திடமாகச் செய்திடுவன் வராகியோடு
கோனென்ற கொடியோர்கள் எதிர்நில்லார்கள்
கொற்றவனே வசியனடா கூறு கூறே!

பொருள் :- சந்திரனுக்கு நாலாம் அதிபதியும், லக்கனத்துக்கு நாலாம் அதிபதியும் கூடி, ஏதாவது ஓர் இராசியில் இருக்க, அவர்களுடன் அசுரகுருவாகிய சுக்கிரனும் சுபமாக கூடி நிற்க அந்த ஜென்மன் துர்க்கை பூஜையைத் திடமாகச் செய்திடுவான். இவன் பூஜையைத் தடைசெய்யக் கூடிய கொடியவர்கள் எதிர் நில்லாமல் பயந்து ஓடிவிடுவர். கொற்றவனே! இவன் சிறப்பு வாய்ந்த வசியன் என்று புவியோர்க்குக் கூறுவாய்!

விளக்கம் :- இலக்கனம் - இராசிபடி 4ம் அதிபதிகள் இருவரும் கூடி, ஏதாவது ஓர் இராசியில் இருக்க, அவர்களுடன் சுக்கிரனும் கூடியிருந்தால், அந்த ஜாதகன் துர்க்கை பூஜை செய்து, தேவியை வசியம் செய்துவிடுவான் என்பது இப்பாடலின் சுருக்கமான கருத்து!

22. இதுவுமது

கேளப்பா ஈரைந்தில் முக்கோள் நிற்க
கெதியுள்ள சன்னியாசி யோகம் யோகம்
ஆளப்பா அத்தலத்தில் இருகோள் நிற்கில்
அப்பனே தபசியடா யோகி ஞானி
கூளப்பா ஒரு கோளும் குணமாய் நிற்கில்
குவலயத்தில் புனிதனடா ஞானியாகி
வீளப்பா விண்ணுலகத் தேவரோடு
விதமாக வீற்றிருப்பன் ரிஷிகளோடே

பொருள் :- பத்தாமிடமாகிய ஜீவனஸ்தானத்தில் மூன்று கோட்கள் நிற்ச நல்ல சந்நியாசி யோகம் உண்டாகும். அதே வீட்டில் இரண்டு கோட்கள் நிற்க, ஜென்மன் ஒரு தபசி; யோகி; ஞானியடா! அதே வீட்டில் ஒரு கோள் மட்டும் சுபபலம் பெற்று நின்றால், ஜென்மன் புவியில் புனிதமானவன்; பெரிய ஞானி எனலாம். விண்ணுலக தேவர்களோடும், ரிஷிகளோடும் சமமாக வீற்றிருப்பான் என்பதாம்!

விளக்கம் :- பத்தாமிடத்தில் மூன்று (அ) இரண்டு (அ) ஒரு கோள் மட்டும் இருந்தால், அந்த ஜாதகர்க்கு விண்ணுலக தேவர்களுடன் சமமாக உட்காரக் கூடிய அளவுக்கு நல்ல சந்நியாசி யோகம் உண்டாகும்!

33. தரித்திர யோகம்

1. சகட யோகம்

சீரேநீ குருவுக்கு வியமாறெட்டில்
செழுமதியு மதிலிருக்க சகடயோகம்
ஆரே நீ அமடு பயம் பொருளும் நஷ்டம்
அப்பனே பேர் விளங்கும் நிதியுமுள்ளோன்
கூறே நீ குருவுக்கு கேந்திர கோணம்
குழவிக்கு நிதிகல்வி மெத்தவுண்டு
பாரே நீ போகருட கடாக்ஷத் தாலே
பாடினேன் புலிப்பாணி பதமாய்த் தானே

பொருள் :- குரு நின்ற வீட்டுக்கு 6-8-12ம் வீடுகளில் சந்திரன் இருந்தால், சகடயோகம் உண்டாகும். மனக்கிலேஷம், பீதி, பயம் உண்டாகும். பொன் பொருள் நஷ்டம் ஏற்படும். ஆனால், குருவுக்குக் கேந்திர, கோணங்களில் சந்திரன் இருந்தால், நல்ல புகழும், செல்வாக்கும் உண்டாக்கும். குழவிக்கு நல்ல கல்வியும், பொருள் சேர்க்கையுமுண்டு. போகர் நூல் பார்த்துப் பதமாகப் பாடினேனப்பா!

விளக்கம் :- குருவுக்கு 6-8-12ல் சந்திரன் இருந்தால், 'சகடயோகம்' என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது! இந்த யோகம் மிகுந்த துன்பத்தையும், துயரத்தையும் தரும் என்பது யாவரும் ஒப்புக் கொண்ட உண்மை! இவர்கள் உச்ச வீட்டில் இருந்தால், 'நட்பு' பலன் கொடுப்பார்கள் என கணக்கிட்டுக் கொள்ளவும்.

ஆனால், குருவுக்குக் கேந்திர, கோணங்களில் சந்திரன் இருந்தால், குரு, சந்திரயோகம் எனக் கூறுவர். இந்த யோகம் மிகுந்த நன்மையை செய்யும். இந்தக் கோட்கள் பகை, நீசமாக இருந்தால், கஷ்டங்கள் வந்து விலகும் எனக் கூற வேண்டும்!

2

பாரப்பா பதினைந்து நாளிலேயும்
பகருகின்ற பால்மதியும் வெய்யோனைத் தான்
சீரப்பா சீறியே அரவந்தீண்டில்
செத்திடுவர் போர்முகத்தில் அனந்தம் மன்னர்
ஊரப்பா ஊரெங்கும் பேதி அம்மை
உத்தமனே கவுமாரி யாலேசீக்கு
பாரப்பா மன்னர்களு மடியா விட்டால்
மகத்தான அன்னமது அரிதாய் போமே!

பொருள் :- வளர்பிறையில் பால் போல் பிரகாசிக்கும் சந்திரனுடன், சூரியனும் கூடி நிற்க, இவர்களுடன் ராகுவும் கூடியிருந்தால், அந்த ஜாதகர் ஒரு மன்னனாக இருந்தால், அவர் போர் முகத்தில் உயிரைப் போக்கிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். ஊர் முழுவதும், பேதி, அம்மை நோய் வந்து தொல்லை கொடுக்கும். மன்னர்களுக்கு சீக்கு உண்டாகும். மன்னர்கள் மடியா விட்டால், மக்களுக்கு அன்னமது கிடைப்பதும் சிரமமே!

விளக்கம் :- இந்தக் கிரக நிலைகள் ஒரு அரச குடும்பத்தில் பிறந்த பிள்ளைக்குப் பொருந்தும். சூரியன், சந்திரன், ராகு கூடியிருந்தால், அதை கிரகண தோஷ மென்பர்! இந்த அமைப்பால், அந்தக் குழவி பெரியவனாக வளர்ந்து போர் புரியும் போது, அதன் உயிர்க்கு ஆபத்து ஏற்படும் என்பது இப்பாடலின கருத்து! மேலும், மன்னர் ஜாதகத்தில் ஏற்படும் தோஷம், அவரது மக்களுக்கும் ஏற்படும். எனவே, அவரது குடிமக்கள் பேதி, அம்மை நோயால் கஷ்டப்படுவார்கள் எனக் கூறப்பட்டது! அதுபோக, பக்கத்து நாட்டு அரசர்களுக்கும் தோஷமுண்டாகும். அப்படி அவர்கள் மடியா விட்டால், மக்களுக்கு வயிறார அன்னம் கிடைப்பது அரிதாய் போகுமாம்! இதற்கெல்லாம் காரணம், அந்த ஜாதகத்தில் ஏற்படும் கிரகண தோஷமே என்பதை உணரவும்!

3. தேசாந்திரம் போகுதல்

பாரப்பா பரமகுரு சனியும் பாம்பு
பலமாக சர உபயமமர்ந்து நிற்க
சீரப்பா சென்மனுமே ஊரை விட்டு
சிவசிவா சிலகாலந் தேசஞ் செல்வன்
கூறப்பா குடிநாதன் வலுத்திருக்க
கொற்றவனே குமரனுந்தான் குடியில் வந்து
வீறப்பா வெகுகாலம் வாசஞ்செய்வன்
விளம்பினேன் புலிப்பாணி விளம்பக் கேளே!

பொருள் :- குரு, சனி, ராகு முதலிய கோட்கள் பலமாக ஆட்சி, உச்சம் பெற்று சர, உபய இராசிகளில் நிற்க, அந்த ஜாதகன் சிலகாலம், தன் ஊரை விட்டு வெளி தேசம் சென்று வருவான். இவர்கள் நின்ற இராசி நாதர்கள் வலுத்திருந்தால், வெளியிடம் சென்றவன், திரும்பவும் தன் ஊர் வந்து வெகுகாலம் சிறப்பாக வாழ்வான். புலிப்பாணி குறி தவறாது மகனே!

விளக்கம் :- சரம், உபய இராசிகளில் இருக்கும் கோட்கள் நிலையான மன உறுதியற்றவை. எனவே, இந்த இராசிகளில் குரு, சனி, ராகு இருந்தால், ஜாதகர்க்கு வெளியிடம் செல்லும் ஆர்வம் உண்டாகுமெனக் கூறப்பட்டது! ஆனால், இவர்கள் நின்ற இராசி நாதர்கள் பலமாக இருந்தால், வெளியூர் சென்றாலும், மறுபடியும் திரும்பி வரும் ஆர்வம் உண்டாகிவிடும். பொதுவாக, ஒரு கோள், அவர் நின்ற இராசிநாதன் எங்கு இருக்கிறாரோ அங்கேயே அது இருக்க முயற்சி செய்யும். நின்ற இராசிநாதனுடன் இரண்டு, மூன்று கோட்கள் இருந்தால், இந்த வாக்கு பொய்க்காது பலிதமாகும் என்பது என் அனுபவத்தில் கண்ட உண்மை!

4. இதுவுமது

பாரப்பா ஈராறோன் இருநான் கோனும்
பகருகின்ற செவ்வாயும் மூவர் சேர்ந்து
கூறப்பா யெவ்விடத்தில் கூடிட்டாலும்
கொற்றவனே பரதேசம் போவன் காளை
சீரே நீ சுந்திரனும் கண்ணுற்றாலும்
சிலகாலந் தங்கியிருந்து செம்பொன் தேடி
ஆறப்பா அவன் பதியில் வந்து வாழ்வன்
அப்பனே புலிப்பாணி அறைந்திட்டேனே!

பொருள் :- பன்னிரண்டாம் வீட்டுக் குரியவனும், அஷ்ட மாதிபதியும், செவ்வாயும் கூடி எந்த வீட்டில் இருந்தாலும், அவன் தன் மனையை விட்டு வெளியிடம் சென்று விடுவான். ஆனால், இவர்களை சுபர்கள் நோக்கினால், சிறிது காலம் வெளியிடம் தங்கி, பின் தன் ஊருக்கே வந்து சிறப்பாக வாழ்வான்.

விளக்கம் :- 8, 12க்குரியவர்கள் வெளியிடம், தேச சஞ்சாரம் முதலியவற்றுக்கு அதிபதி என்பதால், இவர்கள் எந்த வீட்டில் இருந்தாலும் வெளியிடம் செல்வதிலேயே அதிக ஆர்வம் காட்டுவர். இவர்களுடன் செவ்வாயும் சேர்ந்திருந்தால், மேற்கூறிய வார்த்தை உண்மை என்பது புலப்படும். ஆனால், இவர்களை சுபர்கள் பார்த்தால், மேற்கூறிய தோஷம் நிவர்த்தியாகி, வெளியிடம் சென்றவன் திரும்பவும் தன் ஊர் வந்து சிறப்பாக வாழ்வான். பாவிகள் கேந்திர, கோணங்களில் இருந்தால் வெளியிட சஞ்சாரமும், சுபர்கள் இவர்களை நோக்கினால் உள்ளூர் வாசமும் உண்டு என்பது இப்பாடலின் கருத்து!

5. மருந்தால் கண்டம்

சொல்கிறேன் இரு நாலில் செவ்வாய் தோன்ற
சூரியனாராவுடனே சேர்ந்து நிற்க
வில்லவே விஷந்தீண்டி சாவான் ஜென்மம்
விதமான கனத்திரத்தால் வேதைமெத்த
நல்லவே லக்கினேச னாறாமாதி
நஞ்சுள்ள கரும்பாம்பு சேர்ந்திட்டாலும்
புல்லவே மருந்தாலே கண்டம் சொல்லு
பூதலத்தில் புலிப்பாணி கழறிட்டேனே!

பொருள் :- அஷ்டமஸ்தானத்தில் செவ்வாய் நிற்க, சூரியனுடன் ராகு கூடி நிற்க, ஜென்மனுக்கு விஷத்தாலே மரணமுண்டு. அதுபோக, பலவித பகையும், தொல்லைகளும் வந்து சேரும். லக்கினாதிபதி, 6ம் அதிபதி,

நஞ்சுள்ள கரும்பாம்பாகிய ராகுவும் கூடியிருந்தால், ஜென்மனுக்கு மருந் தாலே கண்டம் உண்டு. புவியோர்க்கு புலிப்பாணி நயமாக உரைத்தேனப்பா!

குறிப்பு :- அஷ்டமஸ்தானம் என்பது ஆயுள் ஸ்தானமாகும். எனவே, இதில் தீக் கோளாகிய செவ்வாய் நிற்பது தோஷமாகும். அதாவது உயிர்க்கு ஆபத்தான கண்டங்கள் உண்டாகும் என்பதை குறிப்பிடுகிறது! உயிர்காரகனாகிய சூரியனுடன் ராகு கூடுவது தோஷமாகும். அதாவது, விஷத்தால் இவனுக்கு மரணமுண்டாகும் என்பதை குறிப்பிடுகிறது!

ஆறாம் இடம் என்பது நோய் ஸ்தானமாகவும், அதை தீர்க்கும் மருந்து ஸ்தானமாகவும் ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. எனவே, லக்கினாதிபதி, 6ம் அதிபதியுடன் கூடினால், ஜாதகர்க்கு நோய் உண்டாகும் என்பது யாவரும் அறிந்ததே! ஆனால், இவர்களுடன் ராகுவும் கூடிவிட்டால், இவர்க்குக் கொடுக்கும் மருந்தே விஷமாக மாறி, இவரது உயிரை குடித்து விடு மென்பது முனிவரின் கருத்து! உண்மையும் கூட!

6. திருடர்களை நாசம் செய்யும் யோகம்

அறைந்திட்டே னின்னமொரு சேதி கேளு
அப்பனே ஆறோனும் மூன்றோன் மேவ
திறந்திட்டேன் தேசத்து கள்ளர் நாட்டை
தீயாலே கொளுத்திடுவன் சினமுமுள்ளோன்
உரைத்திட்டேன் உள்நாட்டு கள்ளர் கண்டால்
உள்ளபடி ஆக்கினையை விதிப்பன் காளை
பரைந்திட்டேன் படையாட்சி ஆள்கள் மெத்த
பண்பாக புலிப்பாணி அறைந்திட்டேனே!

பொருள் :- இன்னுமோர் சேதி சொல்வேன்! கேளப்பா! ஆறாம் வீட்டுக்குடைய வனும், 3-ம் வீட்டுக்குடையவனும் கூடி, ஏதாவது ஒரு வீட்டில் நிற்க, இவனது தேசத்தில் கள்ளர் தொல்லை அதிகமாக இருக்கும். ஆனால், இந்தக் கள்ளர்களைக் கண்டுபிடித்து, தீயால் கொளுத்தும் அளவுக்கு கோபமுடையவன், இந்த ஜென்மன்! உள்நாட்டு கள்ளர்களைக் கண்டால், அதற்குரிய தண்டனையை விதிக்கக் கூடியவன், இந்த ஜாதகன்! இவனுக்கு ஆள் அடிமை, படையாட்சி மெத்தவுண்டு! பண்பாக புலிப்பாணி கூறினேன் அப்பா!

விளக்கம் :- இந்தப் பாடலின் கருத்து, ஒரு அரச குமாரனுக்குப் பொருந்தும். அதாவது, இவனது ஜாதகத்தில் 3ம் அதிபதியும், 6ம் அதிபதியும் கூடியிருந்தால், திருடர்களைக் கண்டுபிடித்து, தீயினில் அவர்களை இட்டுக் கொளுத்துவான். உள்நாட்டு திருடனாக இருந்தாலும், அதற்கேற்றாற் போல் தகுந்த தண்டனையை கொடுக்கும் குணமுடையவன் இந்த அரசகுமாரன் என்பது இப்பாடலின் கருத்து! பொதுவாக, 3-6ம் அதிபதிகள் கூடுவது விபரீத இராஜயோகத்தைக் குறிப்பிடும்! அதாவது, அடாபிடி தில்லு முல்லு செய்து, வாழ்வில் முன்னேறுவார் என்ற பொருளில் எடுத்துப் பலாபலன் கூறினால், சரியாக இருக்கும்!

7. 2ல் செவ்வாய் நிற்க

பாடினே னின்னமொரு புதுமை கேளு
பலமான செவ்வாயும் துதியில் நிற்க
கூடினேன் கிரகத்தில் வழக்கும் போகும்
குமரியவள் கணவனையும் கருதிப் பாராள்

தேடினேன் தையலுமே மாண்டாளா னால்
தனம் விரயம் சஞ்சலமும் அழுது மாய்வன்
ஆடினேன் ஆடவர்கள் அழுத கூலி
அவல் கடலை அவர் மடியில் போடுவாரே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்! கேளப்பா! பலமான செவ்வாயும் இரண்டாம் இடமென்னும் வாக்கு ஸ்தானத்தில் நிற்க, ஜென்மன் வழக்கு விவகாரங்களில் ஈடுபட்டு அல்லலுறுவான், இவனது மனைவியோ இவனைச் சுத்தமாக மதிக்க மாட்டாள்! இவனது மனைவி இறக்க நேரிடும்! வீண் பொருள் விரயமும், சஞ்சலமும் ஏற்பட்டு, மனம் உழன்று அழுது மாய்வான். இவனது அழுகையைப் பார்த்து, ஆடவர்கள் இவன் மடியில், அவல், கடலை போட்டு விட்டு செல்வர் என்பதாம்!

விளக்கம் :- இரண்டாம் இடமென்னும் வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பது செவ்வாய் தோஷமாகும். மேலும், 2ல் செவ்வாய் இருந்தால், பாவ கர்த்தாரி தோஷமும் ஏற்படுகிறது! இந்த இருவகை பாவயோகங்களால், இவனது குடும்பத்தில் பலவித தொல்லைகளும், பணக் கஷ்டமும் வருவதோடு, இவனது மனைவியும் இறந்து போவாள் எனக் கூறப்பட்டது! மேலும், தனஸ்தானத்தில் *2, 9, 11*ம் அதிபதிகள் தவிர, மற்ற எந்தக் கிரகம் இருந்தாலும், தரித்திர யோகம் உண்டு என்பது அகஸ்தியர் வாக்கு!

8. 4ல் பாவர் நிற்க

குறித்திட்டேனின்ன மொன்று கூறக் கேளு
குற்ற முள்ளோர் நான்கதனி லமைந்த வாறும்
அருத்திட்டேனத் தலத்தோன் கேந்திரிக்க
அமடுவந்து தீருமடா அகமுமுள்ளோன்
சிரித்திட்டேன் ஜென்மனுக்கு வாகனங்களுண்டு
சிறப்பாக மேதினியில் நலமாய் வாழ்வன்
பரிந்திட்டேன் பெற்றவட்கு ரோகஞ் சொன்னேன்
பரமகுரு பதியமா யோகந் தானே!

பொருள் :- இன்னு மொன்று சொல்வேன்; கேளப்பா! தீக்கோட்களாகிய பாவிகள், நான்காமிடமென்னும் வாகனஸ்தானத்தில் நிற்க, அந்த வீட்டுக் குடையவன் கேந்திரம் ஏற, பலவித தொல்லைகள் வந்து தீரும். ஜென்மனுக்கு சொந்த வீடும் உண்டு; வாகன யோகமும் கிட்டும். இப்புவியினில் சிறப்பாய் வாழ்வான். ஆனால், இவனது மாதாவுக்குக் கண்டாதி பீடைகள் காண்பிக்கும் அப்பா! அந்த நாலாமிடம், குருவின் வீடானால், தோஷமில்லை! நல்ல யோகம் வரும் பாரே!

விளக்கம் :- 4ல் பாவிகள் இருந்தால், கேந்திர தோஷம் என ஜோதிட சாஸ்திம் கூறுகிறது! ஆனால், 4ம் அதிபதி கேந்திரமேறினால், மேற்கூறிய தோஷம் நீங்கி, நல்ல பலன்கள் உண்டாகும் என்பது இப்பாடலின் கருத்து! 'அமடு வந்து தீருமடா' என்று முனிவர் கூறுவதைக் காண்க. 4ல் பாவிகள் இருப்பதால், இவனது மாதாவுக்கு ரோக பயம் உண்டு எனக் கூறப்பட்டது! ஆனால், அந்த நாலாமிடம் குருவின் வீடானால், தாய்க்குகூட, ரோக பயமில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

9. 4ல் கேது நிற்க

கேளப்பாயின்னமொரு புதுமை கேளு
கெடுதி செய்யும் செம்பாம்பு நாலில் நிற்க

சீளப்பா ஜெனித்த மனை சுத்த பாழாம்
சென்மனுக்கு கிரகமுண்டு விதியும் கூறு
கூறப்பா குளிகனுமே சேர்ந்து நிற்க
குடியிருக்க குச்சில்லை கறவையில்லை
ஆளப்பா அன்னைக்கு தோஷம் தோஷம்
அத்திடலில் அரவுக்கு சாந்தி செய்யே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! தீமையே செய்யும் செம்பாம்பாகிய கேது 4ல் நிற்க, அவன் ஜெனித்த மனையே சுத்தமாய் பாழாய் போய் விடும்; அதேசமயம், அவனுக்கு யோகமுண்டு; விதியும் உண்டு! குளிகனும் இவனுடன் கூடியிருந்தால், குடியிருக்க, ஒரு சின்ன வீடுகூட இல்லாமல் அவதியுறுவான்; கறவை மாடும் கிடையாது! இவனது அன்னைக்கு கெண்டாதி பீடைகள் உண்டாகும். கேதுவுக்குச் சாந்தி செய்தால், இந்த தோஷம் ஓரளவு நிவர்த்தியாகுமப்பா!

விளக்கம் :- 'கேது' என்பது ஒரு கொடிய, பயங்கரமான தீக்கோளாகும். இவர் எந்த வீட்டில் இருந்தாலும், அந்த வீட்டையே நாசம் செய்து விடுவார். 4ல் இருந்தால், இவரது கொடூரத் தன்மையுடன் கேந்திர தோஷமும் சேர்ந்து விடுகிறது! இத்தகைய கேதுவுடன் குளிகனும் கூடிநின்றால் இந்த ஜாதகர் குடியிருக்க ஒரு குச்சின்றி, கறவை மாடின்றி, பெற்ற தாயை இழந்து அவதியுறுவார் எனக் கூறப்பட்டது! உண்மையுங் கூட!

10. கைம்பெண் சேர

வீரப்பா யின்னமொரு புதுமை கேளு
விளம்புகிறேன் வீரியன் வீட்டில் தானும்
ஆரப்பா அசுரர்குரு செவ்வாய் கூடில்
அப்பனே அமங்கலையை அணைந்து வாழ்வன்
கூறப்பா குமரனுக்கு வித்தை புத்தி
குவலயத்தில் நிதியுண்டு சிப்பிணூற் பார்ப்பன்
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
சிறப்பாக புலிப்பாணி செப்பினேனே!

பொருள் :- வீரப்பா! இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! பராக்கிரமும், வீரியம் நிறைந்த வீடாகிய 3ம் இடத்தில், அசுரகுருவாகிய சுக்கிரனும், செவ்வாயும் கூடி நின்றால், ஜென்மன் அமங்கலையை மணந்து வாழ்வான்; ஆனால், குமரனுக்கு வித்தை, புத்திஞானம், செல்வ சேர்க்கையுண்டு; நூலாராய்ச்சியுடையவன்! போகர் நூல் பார்த்து கூறினேனப்பா!

விளக்கம் :- 3ம் இட மென்பது மாரகஸ்தானமாகும். இதில், சுக்கிரன் இருந்தால் சுக்கிரன் தோஷமென சாஸ்திரம் கூறுகிறது. மேலும், அமங்கலிக்கு அதிபதியான செவ்வாயுடன், சுக்கிரன் கூடியுள்ளதால், ஜென்மனுக்கு ஒரு விதவையை மணக்கும் ஆர்வம் ஏற்படும் என்பது முனிவரது கருத்து! 3ம் இடம் என்பது ஒரு துர்ஸ்தானம் என்பதால், இவன் தோஷமுள்ள ஒரு மனைவியை மணக்க நேரிடும் என்பதை உணர்க. ஆனால், பாவிக்கு 3ம் இடம் சுப வீடு என்பதால், செவ்வாய் 3ல் இருப்பது நல்ல பலனைத் தரும். எனவே, இவனுக்கு வித்தை, புத்தி, கலைஞானம் முதலியவை உண்டு என முனிவர் கூறுகிறார்!

11. கஞ்சக்காரன்

தானேதா னின்னமொன்று செப்பக்கேளு
தயவாக தனபதியுந் தனத்திலேற
கோனேதான் குமரனுக்கு தனமிருந்தும்
குவலயத்திற் செட்டியடா காசுயீயான்
மானேதான் மக்கள் பெண்டீர் புஷ்டியாக
மடிரொம்ப உண்ணாமல் பதனஞ்செய்வான்
வீணேதான் போகருட கடாக்ஷத்தாலே
விதமாக புலிப்பாணி உரைக்கத் தானே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! த்னபதியுமான வாக்குஸ்தானாதிபதி 2ம் இடத்தில் ஆட்சி யாக இருக்க, குமரனுக்குத் தனம் இருந்தும், மிகுந்த கஞ்சக்காரனாக இருப்பான்; பிறர்க்கு ஒரு சல்லி காசு கூட ஈயமாட்டான். தன் மக்கள் மனைவிமார் நல்ல தேக புஷ்டியுடன் இருக்க, மடி நிறைய உண்ணாமல் பணத்தைச் சேர்த்து வைப்பான்! போகர் நூல் பார்த்து கூறினேன் அப்பா!

விளக்கம் :- 2ம் இடம் என்பது பொருள் வரும் வழியைக் குறிப்பிடும், இந்த வீட்டு அதிபதி ஆட்சி பலம்பெற்று, தன் வீட்டிலேயே இருக்கும்போது, இவனுக்கு குடும்ப பாசம் அதிகரித்து, தான் சம்பாதிக்கும் பொருள் அனைத்தையும், தன் குடும்பத்தார் அனுபவிக்கும்படி சேர்த்து வைக்கும் மனப்பான்மை ஏற்படுகிறது. இந்த இரண்டாம் வீட்டில், லக்னாதிபதி இல்லாததால், இந்தப் பணத்தைத் தனக்குக்கூட பயன்படுத்தாமல், உண்ணாமல், பிறர்க்குக் கொடுக்காமல், தன் குடும்பத்தாருக்காகச் சேர்த்து வைக்கிறான் என்ற பொருள்பட முனிவர் கூறுகிறார் என்பது உணர்தற் பாலது!

12. நேத்திர ஊனம்

பாடுவாய் பதியோனும் ரெண்டோன் கூடில்
பகருகின்ற அசுரகுரு பலத்து நிற்க
கூடுவாய் குழவிக்கு நேத்திர ஊனம்
கொற்றவனே மாந்தியுமே கூடி நிற்க
தேடுவாய் ஜென்ம நலனுதிக்கும் போது
திடமாகச் செப்புவாய் நேத்திரமில்லை
ஆடுவாய் போகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி அறிவித்தேனே!

பொருள் :- லக்கினாதிபதியும், 2ம் அதிபதியும் கூடியிருக்க, அசுரகுரு பலத்து நிற்க, குழவிக்கு நேத்திர ஊனமாகும். மாந்தியும் இவர்களுடன் கூடி நின்றால், ஜென்மன் உதிக்கும் போதே குருடனாய் பிறப்பான்! போகருட கடாக்ஷத்தாலே திடமாய் புலிப்பாணி உரைத்தேனப்பா!

விளக்கம் :- இரண்டாமிடமென்பது நேத்திரஸ்தான மென அழைக்கப்படும். லக்னாதிபதியும், 2ம் அதிபதியும் கூடி பலவீனமாக இருந்தால், ஜென்மனுக்கு நேத்திர ஊனமேற்படும். மாந்தியும் இவர்களுடன் கூடி விட்டால் போதும்; பிறவிக்குருடு என்பது தப்பாது பலிதமாகும்! ஆனால், லக்னாதிபதியும், 2ம் அதிபதியும் கூடி பலமாக, ஆட்சி, உச்சமாக இருந்தால், மேற்கூறிய தோஷமில்லை! கண்பார்வை மிகவும் தெளிவாக தெரியும் என்பதை உணர்க. மாந்தி கூடியிருந்தால்கூட, கண் பார்வை கெடாது என்பதை உணரவும். எனவே, கிரக வலிவறிந்து பேசவும்!

13. 7-ல் குரு சந்திரன்

பாரப்பா யின்ன மொரு புதுமை கேளு
பால்மதியும் பரமகுரு ஏழில் நிற்க
சீரப்பா ஜென்மனுக்கு வேட்டமில்லை
செந்திருமால் தேவியுமோ விலகிநிற்பள்
கூறப்பா குமரியவளில்லாமல் தான்
குமரனுட வங்கிஷமும் நாசமாச்சு
ஆரப்பா அயன்விதியை கூறலுற்றேன்
அப்பனே புலிப்பாணி பாடினேனே!

பொருள் :- *பாரப்பா! இன்னுமோர் புதுமை கேளு!* வளர்பிறை சந்திரனும், பரமகுருவும் கூடி, சப்தமஸ்தானத்தில் நிற்க, ஜென்மனுக்கு களத்திரம் கிடையாது! திருமாலின் பத்தினியான லட்சுமியே விலகிநிற்பாள். குமரியவள் இல்லாமல், குமரனின் வம்சமே நாசமாய் போகும். இறைவன் விதித்த விதியை கூறினேனப்பா; வளமாய் புலிப்பாணி பாடினேனப்பா!

விளக்கம் :- 7ல் குரு, சந்திரன் கூடி நிற்பது ஒரு கடுமையான தோஷமாகும். இவனது மனைவிக்கும், மனைவி வர்க்கத்தார்க்கும் தோஷம் உண்டாகும். இவர்கள் பலவீனமாக இருந்தால், களத்திர வர்க்கமே நாசமாய் போகும் என்பது இப்பாடலின் கருத்து! ஆனால், 7ம் அதிபதி (அ) சுக்கிரன் பலமாக இருந்தாலோ (அ) 7ம் வீட்டை மற்றக் கோட்கள் வலுவாக நின்று பார்த்தாலோ, மேற்படி தோஷம் நிவர்த்தியாகி விடும் என்பது குறிப்பிடத்தக்கது!

14. ஆறுக்குடையவன் கேந்திர மேற

ஆரப்பா யின்னமொரு சேதி கேளு
அப்பனே ஆறோனும் கேந்திர கோணம்
சீரப்பா ஜென்மனுக்கு இராஜதோஷம்
செப்புகிறேன் சோரர்பயம் சோரத்தால் துன்பம்
கூறப்பா குடும்பத்தில் களவும் போகும்
கூச்சலிட்டுவெளி வருவள் குமரிதானும்
வீரப்பா விஷபயமும் வெடியால் துன்பம்
விளையுமடா பலதுன்பம் இன்னம் கேளே!

பொருள் :- இன்னுமோர் சேதி சொல்வேன்; கேளப்பா! ஆறாமிடத்ததிபதியும் கேந்திர, கோணங்களில் இருக்க ஜென்மனுக்கு இராஜதோஷம் உண்டாகும். மேலும், சோரர் பயம், சோரத்தால் துன்பம் உண்டாகும்; குடும்பத்தில் களவும் போகும். கூச்சலிட்டு வெளிவருவாள் குமரியவள்; விஷபயமும், வெடியால் துன்பமும் விளையும்; இப்படியாக பல துன்பங்கள் உண்டாகும்.

விளக்கம் :- 6ம் இடம் என்பது களவு, சோரம், விஷபயம், வெடியால் துன்பம், இராஜதுரோகம், சத்ரு தொல்லை முதலிய துர்ப்பலன்களை அறிவிக்கும் இடமாகும். எனவே, 6-ம் அதிபதி கேந்திர, கோணங்களில் இருந்தால், ஜென்மனுக்கு மேலே கூறிய துர்ப் பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. ஆனால், 6ம் அதிபதி பலவீனமாக பகை, நீசமாக இருந்தால் தான், இந்த மாதிரி கெட்ட பலன்கள் உண்டாகும். ஆட்சி, உச்சமாக இருந்தால், மேற்கூறிய தோஷங்கள் வந்தாலும் விலகிவிடும். திருடன் வீட்டினுள் நுழைந்தாலும், கையும், களவுமாக பிடிபட்டு விடுவான். சோரபயம், விஷபயம் வந்தாலும், தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போனது போல விலகிவிடும். சத்துரு தொல்லை உண்டு என்றாலும்,

ஜென்மன் சத்துருவை விரட்டியடித்து வெற்றி பெறுவான் என்பது சொல்லாமலேயே விளங்கும்!

15. 4ல் மதி சேய், 6க்குடையவன் நின்ற பலன்

ஆமப்பா இன்ன மொன்று அறையக் கேளு
அம்புலியும் ஆறோனும் ஆரல்மூவர்
நாமப்பா நாலதனில் குடியிருக்க
நரசுகமு மில்லையடா ஜென்மனுக்கு
போமப்பா புதல்வனையும் பெற்றெடுத்த
பொற்கொடியாள் புக்கிடுவாள் சோரனோடே
வேமப்பா போகருட கட்டாக்ஷத்தாலே
வினைப் பயனைப் புலிப்பாணி பாடினேனே!

பொருள் :- இன்னுமொன்று சொல்வேன்; கேளப்பா! சந்திரனும், 6ம் வீட்டு அதிபதியும், செவ்வாயும் கூடி, நாலாம் வீட்டில் இருக்க, ஜென்மனுக்கு எந்த வித சுகமும் கிடைக்காது. தாய் சுகமும் கிட்டாதபடி, இவனது தாய், இவனைப் பெற்ற பிறகும், சோர புருஷனோடே ஓடி விடுவாள்! போகருட கடாக்ஷத்தாலே, விதியின் பலனை ஆராய்ந்து உரைத்தேனப்பா!

விளக்கம் :- 6ம் இடம் என்பது சோரஸ்தானமாகும். செவ்வாய் என்பது 'சோர' காரகன் ஆவார். எனவே, 6ம் அதிபதியும், செவ்வாயும் கூடியிருக்க இவர்களுடன் மாதுரு காரகனாகிய சந்திரனும் கூடியிருந்தால், இவனது மாதாவுக்கு சோர புத்தியுண்டாகும் என்பதை குறிப்பிடும். அத்துடன், இம்மூவரும் மாதுரு ஸ்தானமாகியற நாலாமிடத்தில் இருந்தால், இவனது மாதாவுக்கு சோர புருஷன் மேல் அளவு கடந்த மோகமும், வெறியும் உண்டாகி, தன் கணவன், குழந்தை குட்டிகளை விட்டு சோர புருஷனுடன் ஓடி விடுவாள் என்பது முனிவர் கருத்து! ஆனால், இந்தப் பலன் உண்மையாக பலிதமாக வேண்டுமானால், மேற்படி கிரகங்களில் சுபமும், பாவமும் கலந்து, பாவ வலிமை சற்று அதிகரித்து இருக்க வேண்டு மென்பதை உணர்க.

16. சேய்க்கு 6 - 8 - 12ல் சுக்கிரன்

தேரான செவ்வாய்க்கு வியமாறெட்டில்
திடமுள்ள சுக்கிரனு மதனில் மேவ
பாரான பண்டு பொருள் பணைபால் வாதம்
பகருகின்ற பங்காளி துணைவனாலும்
கூறான் குழவிக்கு யெதிரியாலே
கொற்றவனே யதிகாரியாலும் வெற்றி
சீரான செவ்வாயும் இது போல் செப்பு
சிவ சிவா சித்திரமும் திசையைப் பாரே!

பொருள் :- செவ்வாய்க்கு 6-8-12ல் வலுவான சுக்கிரன் இருக்க, இவனது பொன், பொருள், ஆஸ்தி யாவும் இவனது துணைவராலே சேதமாகும். அதே சமயம் எதிரியாலும், அதிகாரியாலும் வெற்றியுமுண்டு. செல்வனே! இவ்வாறு கூறு. திசா புத்தி நாதர் நிலையறிவாய் மகனே!

விளக்கம் :- செவ்வாய்க்கு 6-8-12ல் சுக்கிரன் நிற்பது தோஷமாகும். இவனது பொன், பொருள், ஆஸ்தியெல்லாம் சேதமாகும். ஆனால் இவர்கள் பலமாக இருந்தால் சத்ரு ஜெயம், அதிகாரிகளால் நன்மை போன்ற சுப பலன்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கிரக வலிவறிந்து, திசா புத்திநாதர்கள் நிலையறிந்து கூற வேண்டுமென்பது முனிவரின் கருத்து!

17. இராசியாதி கொடியோரை சேர்ந்தால்..?

கூறே நீ கொடியோர்கள் ராசியாதி
கொற்றவனே கூடினால் கொடுமை மெத்த
ஏரே நீரா ஜல பயம் பொருளுக்கு சேதம்
இடர் தோஷம் பிணி கண்டம் களவு போகும்
சீரே நீ சந்திரனும் கண்ணுற்றாலும்
செம் பொன்னும் கிட்டுமடா ஜென்மனுக்கு
வீரே நீ போகருட கடாக்ஷத்தாலே
வினைப் பயனைப் புலிப்பாணி விரித்தேன் பாரே!

பொருள் :- இராசியதிபதியுடன், கொடிய கோட்கள் கூடியிருந்தால், பலவித கொடிய துன்பங்கள் உண்டாகும். ஜலதோஷம், பொருள் சேதம், இடம் விட்டு மாறுதல் கெண்டாதி பீடைகள், பொருள் திருடு போகுதல் போன்ற துர்ப் பலன்கள் உண்டாகும். ஆனால், இவர்களை சந்திரன் பார்த்தால் செம்பொன்கூட ஜென்மனுக்குக் கிட்டும். போகர் நூல் பார்த்து, புலிப்பாணி நயமாக உரைத்தேன் அப்பா!

விளக்கம் :- இராசியதிபதியுடன், பாவர் கூடின், ஜாதகர்க்குப் பல துன்பங்கள் உண்டாகுமென்பது யாவரும் அறிந்ததே! காரணம், 'இராசியதிபதி' என்றால் 'ஜாதகர்' என்றே பொருள்படும். இராசியதிபதி யுடன், பாவிகள் கூடினால், "ஜாதகர்க்குப் பாவிகளால் தொல்லை" என்பதை உணர்த்தும். இந்த அமைப்பை சந்திரன் பார்த்தால், மேற்படி தோஷம் நீங்கி, செம்பொன் கிட்டும் என முனிவர் கூறுகிறார். இந்தப் பலன் பலிதமாக வேண்டுமானால், சந்திரன் தன் ஆட்சி (அ) உச்ச வீட்டிலிருந்து பார்க்க வேண்டும். இப்படியிருந்தால், ஓரளவு சுமாரான நற்பலன்கள் உண்டாகு மென கூறலாம். அத்துடன், மேற்கூறிய தீக்கோட்களை குரு, சுக்கிரன் போன்ற சுபர்கள் பார்த்தால், மேற்படி தோஷமெல்லாம் நிவர்த்தியாகி, ஜென்மனுக்கு நாலா வழியிலிருந்து பொன் பொருள் சேர்க்கை உண்டாகு மென்பது குறிப்பிடத்தக்கது!

18. சந்திரன் 1-6-8ல் நின்ற பலன்

அறைந்திட்டே னின்னமொன்று அன்பாய் கேளு
அம்புலியும் ஆறெட்டு லக்கினத்தில்
குறைந்திட்டேன் கொடியோர்கள் கூடிநோக்க
கூற்றுவனார் வந்திடுவர் சிசுவைப் பற்றி
திறந்திட்டேன் திங்க ளொரு மூன்றுக்குள்ளே
திடமான அரிட்டமடா பத்து நாளில்
பறைந்திட்டேன் பாலனுக்கு விதியே அற்பம்
பண்பாக புலிப்பாணி உரைத்தேன் பாரே

பொருள் :- இன்னுமொன்று சொல்வேன்; அன்பாய் கேளப்பா! சந்திரனும் 6-8-1ல் இருக்க, கொடியோர்கள் கூடி இவரை நோக்க, கூற்றுவனார் இவன் உயிரை பிடிக்க மூன்று மாத காலத்திற்குள் வந்து விடுவார். பத்து நாளில் அரிஷ்ட தோஷம் உண்டாகும். இப்பாலனுக்கு ஆயுள் பலம் அற்பம் என்றேன்; பண்பாக புலிப்பாணி பாடினேன் அப்பா!

விளக்கம் :- உடல் காரகனாகிய சந்திரன் 6-8ல் இருந்தால், உடலில் நோய் பீடைகள் தோன்றி, ஆயுள் பலத்தைப் பங்கம் செய்யும் கெண்டங்கள்

தோன்றும் என்பது உண்மைதான்! ஜென்மத்தில் சந்திரன் இருப்பது சாமரை யோக மன்றோ? முனிவர் துர்ப்பலன் கூறுகிறாரே என்று கேட்கிறீர்களா? ஜென்ம சந்திரன் சாமரை யோகத்தால் பலம் பெறுவார் என்றாலும், கொடியோர் பார்வையால் இவர்தம் வலுவை இழப்பதோடு, யோக பலத்திலும் குன்றி விடுவார். சந்திரனுக்கு ஏழில் பாவிகள் இருந்தால் தரித்திர யோகம் என்பது அகஸ்தியர் வாக்கு! சந்திரனுக்கு கேந்திரத்தில் பாவிகள் இருந்தால் கேமுத்திரிகா யோகம் என ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. இவ்வித காரணங்களை மனதில் வைத்தே ஜென்ம சந்திரனால், ஜாதகனது உயிர்க்கு ஆபத்து உண்டாகும் என்று முனிவர் கூறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது!

19. 6ம் அதிபதியும், லக்கினாதிபதியும் கூடினால்...

பகருவாய் ஆறோனும் லெக்கனாதி
பன்னிரெண்டெட்டாறில் தீய ரோடே
திகருவாய் தேகமது ஜென்மனுக்கு
இளைத்துவிடும் ரோகங்கள் கிட்டும் கிட்டும்
புகழுகின்ற அரவோடு ரெண்டோன் கூடி
பூங்குழலே ரெண்டதனிலமர்ந்து நிற்க
நிகழுகின்ற நீணிலத்தில் கல்வியாலே
நாலுவித பிரசங்க வித்வானாமே

பொருள் :- ஆறுக்குடையவனும், லக்னாதிபதியும் கூடி, 6-8-12ம் இடத்தில், தீக் கோட்களுடன் கூடியிருந்தால், ஜென்மனது தேகமது இளைத்துவிடும். பல்வித ரோகங்கள் வந்து தொல்லை கொடுக்கும். 2ம் அதிபதி ராகுவுடன் கூடி, 2ம் வீட்டில் நிற்க, இந்த ஜாதகனுக்கு கல்வி ஞானம் மிகுந்து நாலு வித பிரசங்கம் செய்யும் வித்வானாக இப்புவியில் திகழுவான் என்பதாம்!

விளக்கம் :- ஆறாமிடம் என்பது ரோகஸ்தானம் என்று அழைக்கப்படும். லக்னம் என்பது ஜாதகரை குறிப்பிடும். எனவே, லக்கினாதிபதியும், 6ம் அதிபதியும் கூடி 6-8-12ம் இடங்களில் இருந்தால், ஜாதகர்க்கு நோய் பீடைகள் உண்டாகி, தேகம் இளைத்துப் போகும் நிலை உண்டாகும். அத்துடன், தீக்கோட்களும் கூடிவிட்டால், இவரது தேகம் மிகவும் மெலிந்து, இளைத்து பார்ப்பதற்கு அவலக்ஷணமான தோற்றத்துடன் காட்சியளிக்கும். 2ம் அதிபதி என்பவர் கலை ஞானம், கல்வி விருத்தியைக் கொடுக்கக் கூடியவர். இவருடன் ஞானகாரகனாகிய பாம்பும் கூடிவிட்டால், இவன் சகல வித கலைகளில் தேர்ச்சி பெற்று சிறப்பாக வாழ்வான். 2ல் இருந்தால், இவர் ஆட்சி பலம் பெறுவார். எனவே, மேற்கூறிய சுப பலன் நடைபெற அதிக வாய்ப்பு உண்டு என்பதை நினைவில் கொள்க.

20. கூட்டுக் கிரக தோஷம்

ஆரப்பா நாலைந்து பேர்கள் கூட
அப்பனே ரெண்டொருவர் முன்பின் நிற்க
பாரப்பா பண்டு பொருள் பதியும் தீது
பதிகடந்து அலைவனடா பொருளுங் கொஞ்சம்
கூறப்பா குடிநாதன் சேர்ந்திருக்க
கொற்றவனே குழவிக்கு நிதியும் மெத்த
சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
செப்பினேன் புலிப்பாணி திறமாய்த் தானே!

பொருள் :- நாலைந்து கோட்கள் கூடி ஏதாவது ஒரு இராசியில் இருக்க, இவர்களுக்கு முன்னும், பின்னும் ஒன்றிரண்டு கோட்கள் இருக்க, இவன் சம்பாதிக்கும் பொருள் யாவும் சேதமாகும். இவர்கள் இருக்கும் மனையும் நாசமாய் போகும். தன் இருப்பிடம் கடந்து, வெளியிடம் சென்று, வீணாக அலைந்து பொருள் விரயம் பண்ணுவான். ஆனால், இவர்கள் நின்ற இராசி நாதனும் இவர்களுடன் சேர்ந்திருந்தால், குழவிக்கு தோஷமில்லை! பொன் பொருள் சேர்க்கையுண்டு! போகருட கடாக்ஷத்தாலே, நயமாக புலிப்பாணி உரைத்தேனப்பா!

விளக்கம் :- நான்கு (அ) ஐந்து கோட்கள் கூடி, ஏதாவது ஒரு இராசியில் இருப்பது தோஷமாகும். இவர்களுக்கு முன்னும், பின்னும் கோட்கள் இருந்தாலும் தோஷமாகும். இவர்கள் இருக்கும் மனையே பாழாய் போகும். அதாவது, இவர்கள் 7ம் வீட்டில் இருந்தால், களத்திர வர்க்கமே நாசமாய் போகும் என எடுத்துக் கொள்க. மேலும், இவரது கையில் உள்ள பொருள் யாவும் அழிந்து போகும். ஆனால், இவர்கள் பலமாய் இருந்தால், இந்த தோஷம் நிவர்த்தியாகி நல்ல பலன்கள் உண்டாகும். இவர்கள் நின்ற இராசிநாதன் பலமாக, இவர்களுடன் கூடியிருந்தாலும் இந்த தோஷம் நிவர்த்தியாகி விடும். காரணம், இந்தக் கோட்கள் யாவும் யோக பலத்தில் ஓங்கி விடுமென்பது உணரத்தக்கது!

21. 5-6க்குடையவர் சேர...

ஆரப்பா அயன்விதியை அறையக் கேளு
அப்பனே ஐந்துள்ளோன்ஆறோன்கூடில்
சீரப்பா ஜென்மனுக்கு புத்திர தோஷம்
சிவ சிவாயிது மூன்றில் சேர்ந்து நிற்க
கூறப்பா கொடியோர்கள் கண்ணுற்றாலும்
கொற்றவனே கொள்ளிக்குப் பிள்ளையில்லை
பாரப்பா பரமகுரு கண்ணுற்றாலும்
பலனுண்டு பலதீர்த்த மாடச் சொல்லே!

பொருள் :- பிரமன் விதியை கூறுவேன் கேளப்பா! 5க்குரியோன், ஆறோன் கூடியிருந்தால், ஜென்மனுக்கு புத்திர தோஷம் உண்டாகும். இவர்கள் மூன்றாமிடத்தில் சேர்ந்திருக்க, கொடியோர்கள் பார்த்தால், இவனுக்கு கொள்ளி வைக்கக்கூட பிள்ளைகள் இல்லாமல் போகும். ஆனால், பரமகுரு நோக்கினால் தோஷமில்லை; நல்ல பலனுண்டு. பல தீர்த்த மாடினால், புத்திர பாக்கியம் உண்டு என்று கூறுவாய்.

விளக்கம் :- 5ம் அதிபதியுடன், 6ம் அதிபதி கூடுவது நல்லதல்ல. காரணம், 6ம் அதிபதி நோய், பீடை, சத்துரு வாதையை கொடுக்கும் தீய குணம் உடையவர். இவர் 5ம் அதிபதியுடன் கூடினால், கெற்பம் வளராதபடி நாசம் செய்து கொண்டேயிருப்பார். மேலும், இவர்கள் மாரகஸ்தானமாகிய 3ம் வீட்டில் இருந்தால், இந்த தோஷம் இன்னும் அதிகரிக்கும். இவர்களை பாவிகள் பார்த்தால், கெற்பத்திலேயே எல்லா குழந்தைகளும் அழிந்து போகும். எனவே தான், முனிவர் இவனுக்குக் கொள்ளி வைக்கக்கூட பிள்ளைகள் கிடையாது என்று கூறினார். ஆனால், பூரண சுபக் கிரகமாகிய குரு இவர்களைப் பார்த்தால், மேற்கூறிய தோஷம் நீங்கி புத்திரன் பிறக்க வழி வகுக்கும். ஆனால், குருபரன் பலமாக இருக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது!

22. சந்திரன், புதன், சனி, செவ்வாய் சேர்ந்தால்...

கேளப்பா கலை புந்தி சனி சேய் சேர
கெட்டவனாம் துக்கி சதா நித்திரையுள்ளோன்
ஆளப்பா அகமில்லை தரித்தினாவன்
அப்பனே அயன்விதியும் மெத்தவுண்டு
சீளப்பா சேய் இந்து சனிமால் வெள்ளி
சேர்ந்து நிற்க அய்யமெடுத்துண்பன் காளை
கூளப்பா குரு பார்க்க வேதையில்லை
கொற்றவனே குசவன் விதி கூறினேனே!

பொருள் :- சந்திரன், புதன், சனி, செவ்வாய் ஆகிய நான்கு கோட்களும் கூடியிருக்க, ஜென்மன் மிகவும் துஷ்ட நடத்தையுடையவனாக இருப்பான். சதா துக்கியும், நித்திரையுமுடையவன். சொந்த வீடு கிடையாது. தரித்திரன் என்றேன். ஆனால், ஆயுள் பலம் நிறையவுண்டு அப்பா! செவ்வாய், சந்திரன், சனி, புதன், சுக்கிரன் ஆகிய 5 கோட்களும் கூடி நின்றால், இந்த ஜாதகன் பிச்சையெடுத்து உண்பான். குரு பார்க்க தோஷமில்லை. விதி தீர்க்கமுண்டு மகனே!

விளக்கம் :- சந்திரன், புதன், சனி, செவ்வாய், இந்நால்வரும் கூடியிருப்பது ஒரு கொடிய தரித்திர யோகமாகும். இவர்களுடன் சுக்கிரனும் கூடிவிட்டால், இந்த தோஷம் இன்னும் அதிகரித்து, பிச்சையெடுத்து உண்ணும் அளவுக்கு கோரத்தனம் செய்யும் என்பது இப்பாடலின் கருத்து. குரு பார்த்தால், இந்த தோஷம் நிவர்த்தியாக வழியுண்டு என முனிவர் கூறுகிறார். ஆனால், இவர்கள் ஆட்சி, உச்சம் பெற்று பலமாக இருந்தால், மேற்கூறிய தோஷம் வந்து விலகும் என கூற வேண்டும். அத்துடன், குரு பார்வையும் இருந்தால், மேற்படி தோஷம் விலகி நற்பலன்கள் ஏற்பட வழி வகுக்கும் எனக் கூறுக.

23. சந், சூ, வி, சு, சனி கூடினால்...

ஆரப்பா அம்புலியும் ரவியும் சேர
அப்பனே தனமுண்டு களத்திர நேசன்
ஆரப்பா அரசனுடன் அருக்கன் சேர
அரசனோடு அயிஸ்வரியம் மெத்தவுண்டு
ஆரப்பா அசுரகுரு வெய்யோன் மேவ
அப்பனே வசியனடா களத்திர போகி
ஆரப்பா அசுரகுரு நீலன் மேவ
அடங்காத களத்திரமா மறிந்து சொல்லே

பொருள் :- சந்திரனும், சூரியனும் கூடினால், இவனுக்கு தனமுண்டு. களத்திர நேசன் எனலாம். சூரியனுடன் குரு கூடினால், அரசன் என்றேன்; மெத்த ஐஸ்வர்ய சேர்க்கையுண்டப்பா! சுக்கிரனும், சூரியனும் கூடியிருந்தால், ஜென்மன் வசியன், களத்திர போகமுடையவன். சுக்கிரனும், சனியும் கூடினால், அடங்காத களத்திரம் வந்து சேருமப்பா! கிரக வலிவறிந்து கூறுவாயே!

விளக்கம் :- இப்பாடலில் நான்குவகை யோகங்கள் கூறப்பட்டுள்ளன.

1. சந்திரன், சூரியன் சேர்க்கை - நல்ல பலன் தரும். பொன் பொருள் சேர்க்கையுண்டு. களத்திரம் மேல் நல்ல பாசமுடையவன்.

2 சூரியன், குரு சேர்க்கை - இதுவும் ஒரு நல்ல யோகமாகும். ஐஸ்வர்யம் மெத்த சேரும்.

3. சுக்கிரன், சூரியன் சேர்க்கை இது அவ்வளவு நல்ல யோகமல்ல. களத்திர போகம் உடையவன்.

4. சுக்கிரன், சனி சேர்க்கை - இது ஒரு அவயோகமாகும். அடங்காத களத்திரம் வந்து சேருமாம்.

இந்தக் கிரகங்கள் நட்பு, ஆட்சி, உச்சமாக இருந்தால், முதலிரண்டு யோகங்களும் இராஜயோக பலனைத் தரும். மற்ற இரண்டு யோகங்களும், தங்கள் பாவத்தன்மையிலிருந்து விடுபட வழி வகுக்கும் என்று கணக்கிட்டுக் கொள்க.

24. செ-பு-வெள்ளி கூடினால்..?

பாரப்பா பவுமனும் புந்தி வெள்ளி
பாங்கான எத்திடத்திலமர்ந்திட்டாலும்
பாரப்பா பாலனுக்கு தேக பங்கம்
பதினெட்டு சித்தர்களும் செப்பலுற்றார்
பாரப்பா குருவோடு சேயும் வெள்ளி
பார் மன்னர் நேசனடா பாக்கியமெத்த
பாரப்பா பவுமனும் புந்தி மேவ
பண்டிதனாம் பாக்கியமு முண்டு பாரே!

பொருள் :- செவ்வாயும், புதனும், சுக்கிரனும் கூடி எந்த வீட்டில் இருந்தாலும், பாலனுக்கு தேக பங்கம் உண்டாகும். பதினெட்டு சித்தர்களும் சொன்ன வாக்கியமிது. ஆனால், குருவுடன் சுக்கிரன், செவ்வாய் கூடினால், பாராளும் மன்னர் நேசன். பாக்கியங்கள் நிறைய உண்டாகும். செவ்வாயும், புதனும் கூடியிருந்தால் ஜென்மன் பாக்கியவான். பண்டிதனாம்!

விளக்கம் :- இப்பாடலில் மூன்று யோகங்கள் உள்ளன.

1. செவ்வாய் - புதன் - சுக்கிரன் சேர்க்கை - இது ஒரு அவயோகமாகும். எந்த வீட்டிலிருந்தாலும் தீமை தரும்.

2. குரு, சுக்கிரன், செவ்வாய் சேர்க்கை - இது ஒரு நல்ல யோகம். பாராளும் மன்னர் நேசன். பாக்கியங்கள் நிறைய சேரும்.

3. செவ்வாய், புதன் சேர்க்கை - எங்கு கூடினாலும் நல்லது. கல்வி, வித்தையில் கெட்டிக்காரன். பாக்கியவான்.

முதல் யோக கிரகங்கள் நட்பு, ஆட்சி, உச்சமாக இருந்தால், பீடைகள் வந்து விலகும். பின்வரும் இரண்டு யோகங்களும் கிரக வலிமையுடன் இருந்தால், இராஜயோக பலனைத் தரும் எனக் கணக்கிட்டுக் கொள்க.

25. சூ-சந்-செ-பு-வி; சூ-செ-சு-சனி கூடினால்..?

விளம்பினேன் வெண்மதி சேய் புந்தியோடு
வெய்யவனும் வியாழனும் சேர்ந்து நிற்க
விளம்பினேன் வினையனடா சென்மன் தானும்
வெகுபேரைக் கெடுத்திடுவன் கோள்சமர்த்தன்
விளம்பினேன் வெய்யவனும் சேய்சுன் நீலன்
வீற்றிருக்க வீடுதோறும் பலியே கொள்வன்
விளம்பினேன் போகருட கடாக்ஷத்தாலே
விதமாக புலிப்பாணி விளம்பினேனே!

பொருள் :- சந்திரன், செவ்வாய், புதன், சூரியன், குரு ஆகிய ஐந்து கோட்களும் சேர்ந்து நிற்க, ஜென்மன் மிகுந்த துர்க்குணம் நிறைந்தவன்.

வெகு பேரைக் கெடுத்திடுவான். கோள் சொல்வதில் சமர்த்தனாகத் திகழ்வான். சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி ஆகிய நான்கு கோட்களும் கூடியிருக்க, அந்த ஜாதகன் வீடு தோறும் சென்று பலியிடும் தொழிலில் ஈடுபட்டு, ஏதோ காலத்தைத் தள்ளுவான் என்பதாம்! போகர் நூல் பார்த்து புலிப்பாணி பாடினேனப்பா!

விளக்கம் :- இந்தப் பாடலில் இரண்டு யோகங்கள் உள்ளன.

1. சந்திரன் செவ்வாய், புதன், குரு, சூரியன் சேர்வது ஒரு அவயோக மாகும். மிகுந்த கெட்டபுத்தியையும், துர்க்குணத்தையும் தரும். கோள் சொல்லும் புத்தியும் ஏற்படும்.

2. சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி சேர்க்கை - இதுவும் ஒரு அவயோகமாகும். இவன் வீடுதோறும் சென்று பலியிடும் தொழிலில் ஈடுபட்டு, தன் ஜீவனத்தை நடத்திச் செல்வான். மேற்படி கோட்கள் ஆட்சி உச்சமாக இருந்தால் தோஷ நிவர்த்தியெனக் கூறவும்.

26. சந், வி, பு சேர்க்கை; சந், பு, சு சேர்க்கை

ஆச்சப்பா அம்புலியும் வியாழன் புந்தி
அடைவாக சேர்ந்திருக்க சென்மன் தானும்
ஆச்சப்பா அழகனடா நிதியுமுள்ளோன்
அயன்விதியு மெத்தவுண்டு அறையக் கேளு
ஆச்சப்பா அம்புலியும் புந்தி வெள்ளி
அடைவாக மூவர்களும் சேர்ந்து நிற்க
ஆச்சப்பா அழும்பலனடா காமி துஷ்டன்
அப்பனே புலிப்பாணி அறைந்திட்டேனே!

பொருள் :- சந்திரன், வியாழன், புதன் ஆகிய மூன்று கோட்களும் சேர்ந்திருக்க, ஜென்மன் தானும் அழகன்; நிதி வசதியுண்டு. ஆயுள் பலமும் தீர்க்கமுண்டு. ஆனால், சந்திரன், புதன், சுக்கிரன் ஆகிய மூன்று கோட்களும் சேர்ந்திருக்க, நல்ல பலன் கிடையாதப்பா! ஜென்மன் வெகு காமியாகவும், துஷ்டனாகவும் இருப்பான்!

விளக்கம் :- இப்பாடலில் இரண்டு யோகங்கள் உள்ளன. 1. குரு, சந்திரன், புதன் ஆகிய மூன்று கோட்களும் கூடியிருப்பது நல்லதாகும். ஜென்மன் மிகவும் அழகாகவும், நிதி வசதி நிறைந்தவனாகவும், ஆயும் பலம் தீர்க்க முள்ளவனாகவும் இருப்பான்.

2. சந்திரன், புதன், சுக்கிரன் கூடியிருப்பது நல்லதல்ல. இவர்கள் சுபர்களாக இருந்தாலும் தீமை செய்வர். இதை ஒரு சிறப்பு விதியாகக் கொள்ள வேண்டும். இவன் ஒரு காமவெறி பிடித்தவனாகவும், துஷ்டனா கவும் இருப்பான் என்பது சரியான கருத்தாகும்.

இந்தக் கோட்களை மற்ற கோட்கள் பார்த்தாலோ (அ) இவர்கள் ஆட்சி உச்சமாக இருந்தாலோ தோஷ நிவர்த்தி எனக் கூறவும்!

27. வி-சு சேர்க்கை; வி-சனி சேர்க்கை; ராகு-சனி சேர்க்கை; பு-சனி சேர்க்கை

செப்புவாய் குருவோடு வெள்ளி கூடில்
ஜென்மனுக்கு யோக விதி செம்பொன்னுள்ளோன்
அப்புவாய் அந்தணனும் நீலன் கூடில்
அப்பனே புத்திரர்கள் ஈனமாகும்

ஒப்புவாய் உதயத்தில் சனியும் பாம்பும்
உத்தமனே நோயதுவே காத்திருக்கும்
தப்பு சனி புதனுதயம் தயவாய் சேர
தரணிதனில் கூனனடா தெரிந்து கொள்ளே!

பொருள் :- குரு, சுக்கிரன் கூடி நிற்பது மிகவும் நல்லது. செம்பொன்னும், நல்ல பொருள் சேர்க்கையும் உண்டாகும். குருவும் சனியும் கூடினால், புத்திர தோஷமாகும். ஜென்மத்தில் சனியும், பாம்பும் கூடியிருந்தால், நோய் தொல்லையால் அவதியுற நேரிடும். ஜென்மத்தில் சனி, புதன் கூடியிருந்தால் இவன் உடல் கூனிப் போகும். 'கூனன்' என அழைக்கப்பட நேரிடும்.

விளக்கம் :- இப்பாடலில் 4 வகை யோகங்கள் உள்ளன.

1. குரு, சுக்கிரன் சேர்க்கை - நல்ல பலன் தரும்.
2. சனி, குரு சேர்க்கை - புத்திர தோஷமாகும்.
3. ஜென்மத்தில் சனி, ராகு சேர்க்கை - தேக பிணியுண்டாகும்.
4. ஜென்மத்தில் சனி, புதன் சேர்க்கை - இவனது தேகம் கூனிப் போகும்.

இந்தத் தோஷங்கள் நிவர்த்தியாக வேண்டுமானால், மேற்கூறிய கிரகங்களைச் சுபர் பார்க்க வேண்டும். இல்லையெனில், இந்தக் கோட்கள் நட்பு, ஆட்சி, உச்சம் பெற வேண்டும்.

28. 6க்குரியவர் 2லும், 2க்குரியவர் 6லும் இருந்தால்..?

கூறினேன் ஆறோனும் மலைக் கிரண்டில்
கொற்றவனே எதிரினுட பொருளுஞ் சேரும்
நீரேநீ குடும்பாதி விழுந்து விட்டால்
நிலத்தில் நல்ல களவாளி வஞ்சன் பொய்யன்
ஆரே நீ தனபதியும் ஆறிலேற
அப்பனே யெதிரிக்கு அவைபோல் செப்பு
காரே நீ போகருட கடாக்ஷத்தாலே
பண்பாக புலிப்பாணி பகர்ந்தேன் பாரே!

பொருள் :- 6ம் அதிபதி லக்னத்துக்கு இரண்டாமிடமென்னும், வாக்கு ஸ்தானத்தில் இருக்க, எதிரியின் பொருளும் ஜாதகர்க்கு வந்து சேரும். ஆனால், குடும்பாதிபதி பலமிழந்து விட்டால், இவன் நிலத்தில் விளையும் தானியம், கிழங்கு வகைகளை திருடி கெட்ட பெயர் வாங்குவான். வஞ்சக குணம் நிறைந்தவன். பொய் பேசுவதில் வல்லவன். தனாதிபதி 6ம் இடத்தில் இருந்தால், நமது பொருளெல்லாம் எதிரி கையில் போய் மாட்டிக் கொள்ளும். 6ம் அதிபதி பலமிழந்து விட்டால் எதிரியால் அந்தப் பொருளை அனுபவிக்க முடியாதநிலை ஏற்படும்.

விளக்கம் :- 6ம் அதிபதி 2லும், 2ம் அதிபதி 6லும் இருப்பது கிரக மாறி யோகம் (அ) பரிவர்த்தனை யோகம் என அழைக்கப்படும். இந்த யோக பலத்தால், 6ம் அதிபதி 2ல் இருப்பதால், எதிரியின் பொருள் நமது கைக்கு வந்து சேருமெனக் கூறலாம். 2ம் அதிபதி 6ல் இருந்தால், நமது பொருள் எதிரியின் கையில் போய் மாட்டிக் கொள்ளுமெனக் கூற வேண்டும். இந்த அதிபதிகள் பலமிழந்து இருந்தால், இவ்விதமாக அந்நியர் பொருள் வந்தும், பிரயோஜன படாதபடி சூழ்நிலை அமைந்துவிடும்!

29. 5ல் கருநாகம்

பாரப்பா இன்னமொன்று பகரக் கேளு
பஞ்சமத்தில் கரு நாகம் அமைந்து நிற்க
சீரப்பா செங்கதிரோன் பார்த்திட்டாலும்
ஜென்மனவன் பிரதேச வாசஞ் செய்வன்
ஆரப்பா அகம் பொருளும் நிலமும் கிட்டும்
அப்பனே அவன் பிதா லச்சை பண்ணான்
கூறப்பா குமரனுக்கு அறுபத்தஞ்சில்
கூற்றுவனார் நிரியாணஞ் சாற்றினேனே!

பொருள் :- இன்னுமொரு புதுமை சொல்வேன் கேளப்பா! பஞ்சமஸ்தான மென்னும் ஐந்தாமிடத்தில் ராகு இருந்து செங்கதிரோன் என்று அழைக்கப் படும் சூரியனது பார்வை பட்டால் போதும். ஜென்மனவன் பிரதேச வாசம் செய்வன். அகம் பொருளும் நிலமும் இவனுக்குக் கிட்டும். தன்னுடைய தந்தையைப் பற்றி சிறிதும் சிந்திக்க மாட்டான். வயது 65ல் இவனுக்கு ஆயுள் முடியும் என்றேனப்பா!

விளக்கம் :- 5ல் ராகு இருப்பது நாக தோஷமாகும். இந்த தோஷத்தால், புத்திர வர்க்கமே நாசமாய் போகுமெனலாம். அதே சமயம், ராகு திரிகோணத்தில் இருந்தால், இராஜயோக பலனைத் தருவான் (சிறப்பு விதி). ராகுவை சூரியன் பார்ப்பது, ராகுவின் பலத்தை இன்னும் குறைக்கச் செய்யும். காரணம், சூரியனும், ராகுவும் பூர்வீக பகைவர்கள். எனவே, இவனுக்கு உயிர்க்கு ஆபத்தான கெண்டங்கள் விஷத்தால் ஏற்படும் எனலாம். சூரியன், கேது கூடியிருப்பதால், புத்திர பாவம் பாதிக்கப்படும் அளவுக்கு ஆயுள் பாவம் பாதிக்கப்படாது. எனவே, இவர்க்கு 65 வயது வரை ஆயுள் உண்டு எனக் கூறப்பட்டது.

30. இதுவுமது

பாரப்பா இன்ன மொன்று பகரக் கேளு
பஞ்சமத்தில் கருநாக மமைந்த வாறும்
சீரப்பா ஜென்மனுக்கு புத்திர தோஷம்
தீர்ப்பதற்கு வகை விவரம் சொல்வேன் மைந்தா
கூறப்பா கோதையுமோ அரசு சுத்தி
குற்றமில்லா கன்னியற்கு உத்தமஸ்நானம் செய்து
வீரப்பா விலகுமடா தோஷம் தோஷம்
விதியுள்ள ஜென்மனவன் ஜெனிப்பன் பாரே!

பொருள் :- இன்னுமொரு விபரம் சொல்வேன் கேளப்பா! பஞ்சமஸ் தான மென்னும் ஐந்தாமிடத்தில் கருநாகம் அமைந்திருந்தால், அந்த ஜாதகர் (அ) ஜாதகிக்கு புத்திர தோஷம் உண்டாகும். இதை தீர்க்கும் விபரம் கூறுவேன் கேளப்பா! இந்த தோஷம் பெற்ற ஜாதகர், தன் மனைவியை அரச மரத்தை சுற்றி வலம் வரச் செய்து, முறைப்படி தெய்வீக பூஜையுடன் உத்தமஸ்தானம் செய்தால், மேற்படி தோஷம் வெகு விரைவில் விலகிப் போகும். ஜென்மனுக்கு தீர்க்காயுள் புத்திரன் பிறப்பான் மகனே!

விளக்கம் :- 'கருநாகம்' என்பது ராகுவை குறிப்பிடும். 'ராகு' கருமை நிறமுள்ளதால், அதை கருநாகம் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. 'குற்றமில்லா கன்னி' எனக் குறிப்பிட்டுள்ள படியால், அந்த ஜாதகரின் மனைவி கற்பொழுக்கம் நிறைந்தவளாக இருக்க வேண்டுமென்பது முனிவரின் கருத்து! இவ்வாறு, கற்பொழுக்கம் நிறைந்த பெண், அரச மரத்தை சுற்றி,

தெய்வத்தை வழிபட்டு புத்திர பாக்கியம் வேண்டுமென்று கேட்டால், அவளுக்கு நாக தோஷம் விலகி, தீர்க்காயுள் புத்திரன் பிறப்பான் என்பது இப்பாடலின் கருத்து!

31. 5க்குடையவன் பாம்பைச் சேர

ஆச்சப்பா யின்னமொரு சேதி கேளு
அஞ்சுள்ளோன் தீயனாய் அரவைக்கூடி
கூச்சப்பா நாடியே மூன்றில் நிற்க
குமரனுட மனைவி யெண்ணங் கருத்தைக் கேளு
பாச்சப்பா புருஷனிடம் சண்டையிட்டு
பதறி விழுந் தோடிடுவன் கொடிய நீலி!
ஏச்சப்பா வெகு பேர்க்கு இவள்மேல் மோகம்
இவளாலே கெட்டவர்கள் அநேகம் பேரே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன் கேளப்பா! ஐந்தாமிடத் ததிபதி பாவியாகி, அவனுடன் ராகுவும் கூடி மூன்றாமிடத்தில் இருந்தால், அந்த ஜாதகனது மனைவியின் குணத்தைக் கேளப்பா! புருஷனிடம் வீணாக சண்டையிட்டு, பதறி வீட்டை விட்டே ஓடிவிடுவாள். கொடிய நீலி யென்றேன்! வெகுபேர்க்கு இவள் மேல் மோகம் உண்டாகும். இவளால் கெட்டுப் போனவர்கள் அநேக பேருண்டு, மகனே!

விளக்கம் :- ஐந்தாமிடமென்பது, 7க்கு லாபஸ்தானமாகும். அதாவது, இந்த ஜாதகரது மனைவிக்கு, 2வது கணவனைப் பற்றிக் குறிக்கும் ஸ்தான மாகும். இந்த ஸ்தானாதிபதி பாவியாகி, முழுப்பாவியாகிய ராகுவுடன் கூடி, 7க்கு 9மிடம் என்னும் மூன்றாமிடத்தில் இருக்கும் போது, இவளுக்கு தன் கணவனை விட்டு, மற்ற ஆடவர் மேல் மோகம் கொள்ளும் கெட்ட புத்தி உண்டாகிவிடும். எனவேதான், இவளால் கெட்டவர்கள் பலர் என்று துணிந்து கூறுகிறார்!

32. 3க்குடையவனும் பாம்பைச் சேர

பாரப்பா இன்னமொரு புதுமை கேளு
பாம்புடனே மூன்றோனும் தீயனாகில்
கூறப்பா யெத்திடத்தில் கூடிட்டாலும்
குமரி கள்ள புருடனையும் கூடுவாளாம்
ஆரப்பா அகந்தனிலே இவள் தான் மூப்பி
அக்கணவன் அவள் சொல்லை கடக்கமாட்டான்
ஊரப்பா வூரருகில் கடலுமுண்டு
உத்தமனே யிருக்குமடா ஆறும்பாரே

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன் கேளப்பா! பாம்புடனே, மூன்றாமிடத்ததிபதியும் பாவியாக, எந்த இடத்தில் கூடியிருந்தாலும், இந்த ஜாதகி கள்ள புருஷனுடன் கூடியிருப்பாள். மேலும், இவளது இல்லத்தில், இவள் கணவனை அடக்கி ஆள்பவளாக இருப்பாள். கணவன் சொல்லைக் கேட்க மாட்டாள். இவளது ஊர் அருகில் கடலும் உண்டு; ஒரு நல்ல ஆறும் இருக்குமாம்!

விளக்கம் :- ஒரு பெண் ஜாதகத்தில் 8மிடம் என்பது கற்பு ஸ்தானம் என அழைக்கப்படும். எனவே, 8க்கு எட்டாமிடமாகிய 3மிடமும் கற்பு

ஸ்தானமாகும். இதை வைத்துத்தான் 3ம் இடத்ததிபதி பாவியான ராகுவுடன் கூடினால், அந்தப் பெண் கற்பு நெறி தவற நேரிடும் என முனிவர் கூறுகிறார். மேலும், இவள் கணவனுக்கு அடங்காதவள் என்பதும் உண்மைதான். ஆனால், எமது ஆய்வுப்படி, 8ம் அதிபதியுடன் ராகு கூடியிருந்தால், மேற்படி பலன் உறுதியாக பலிதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது!

33. 6-8-12ல் பாம்பு நின்ற பலன்

பாரப்பா பனிரண்டு எட்டு ஆறில்
பலமுள்ள படவரவு அதிலே தோன்ற
வீரப்பா வேல் விழியாள் கலக மெத்த
விளங்குகின்ற கணவனுக்கு ரோகஞ் சொல்லு
கூறப்பா கொழுநனால் குமரியாலும்
கொற்றவனே குழவியினால் குடிக்கு கேடாம்
பாரப்பா படவரவு பொல்லாதப்பா
பலதுன்பம் வருகுமடா திசையை நோக்கே!

பொருள் :- *கேளப்பா! 6-8-12ல்* பலமுள்ள ராகு தோன்ற, இவனது மனைவி மிகவும் கலகக்காரியாக இருப்பாள். ஜென்மனுக்கு ரோகம் உண்டு. ஜென்மன், அவளது மனைவி, அவளது குழவி முதலியவர்களால், அந்தக் குடிக்கே கேடு உண்டாகும். சுருங்கச் சொன்னால், துர்ஸ்தானம் பொல்லா தப்பா! பல துன்பம் வருமப்பா! திசையை பார்த்து சரியான பலன் கூறப்பா!

விளக்கம் :- *6-8-12ம்* இடங்களில் ராகு இருந்தால், குடும்பத்திற்கே கேடு உண்டாகும் என்பது யாவரும் அறிந்த உண்மை. மனைவிக்கு கலகம் புரியும் குணமும், ஜென்மனுக்கு ரோக பயமும் உண்டாகும் என்பது முனிவரது கருத்து. அதுபோக, பல வகையான கஷ்டங்களும் வரும் என்று முனிவர் கூறுகிறார். இந்தப் பலன், ஜாதகரது திசாபுத்தி நிலைகளை அறிந்து கூற வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது!

34. சூரியனும், சந்திரனும் கூடினால்...

காணப்பா கதிரவனும் மதியும் கூடி
கனமுள்ள லக்கனத்தை கண்ணால் நோக்க
சீனப்பா சக்கிலியப் பெண்ணை ஜென்மன்
சிறப்பாகச் சேர்ந்தணைவன் ஜெகத்திலே தான்
ஊனப்பா உதயவனும் கண்ணுற்றாலும்
உத்தமனே உலகத்தில் ஒருவர் பாரார்
வீணப்பா போகருட கடாக்ஷத்தாலே
விதமாகப் புலிப்பாணி விளம்பினேனே!

பொருள் :- சூரியனும், சந்திரனும் கூடி, பலமுள்ள லக்கன கேந்திரத்தைக் கண்ணால் நோக்கினால், ஜென்மன் நீசப் பெண்ணுடன் கூடி இப்புவியில் அலைவான். லக்கினாதிபதியும் லக்கனத்தைப் பார்த்தால், இவர்கள் இவ்வாறு திரிந்தலைவதை இப்புவியில் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். போகர் நூல் பார்த்து, நுட்பமாக புலிப்பாணி கூறினேனப்பா!

விளக்கம் :- சூரியன், சந்திரன் கூடி லக்கனத்தைப் பார்த்தால், ஜென்மன் சக்கிலியப் பெண்ணுடன் கூடி அலைவான் என்பதைச் சிறப்பு விதியாகக் கொள்க. சூரியன் சத்திரிய சாதியை சார்ந்தவன். சந்திரன் வைசிய சாதியை சார்ந்தவன். எனவே, ஜென்மனுக்கு ஒரு நடுத்தர சாதி பெண் மேலேயே மோகம் உண்டாகும் என்பது சரியான கருத்தெனக் கொள்ளலாம். ஆனால்,

சூரியன், சந்திரன் கூடும் நாள் அமாவாசை என்பதால் இருவரும் தங்களது பலத்தை இழந்துவிடுவர். எனவே, ஜென்மனுக்கு தாழ்ந்த, தரக் குறைவான சாதி பெண் மேல் மோகம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

35. இதுவுமது

கூறே நீ உப்பரிகை மாட கூடம்
கொற்றவனே சயன சுகம் யோக முள்ளோன்
வாரே நீ வாகனமும் நிதியு முண்டு
வையகத்தில் விதியுண்டு வேசி நேசன்
ஆரே நீ அசுபர்களுஞ் சேர்ந்திருக்க
அப்பலன்கள் கெட்டாலும் அகமுமுண்டு
சீரே நீச்ச ராறில் உச்சமானால்
சிவ சிவா துன்பமோடு இன்பம் சொல்லே!

பொருள் :- சூரியன் சந்திரன் கூடியிருந்தால், அழகான மாட மாளிகை, உப்பரிகை, சயன சுகம் யோகமும் உண்டு. மேலும், வாகன விருத்தியும், நல்ல பொருள் சேர்க்கையும் உண்டு. இப்புவியில் நீண்ட காலம் தீர்க்காயுசுடன் வாழ்வான். வேசி நேசன். இவர்களுடன் அசுப கோட்களும் கூடியிருந்தால், மேற்படி சுப பலன்கள் கெட்டுப் போனாலும், குடியிருக்க ஒரு வீடாவது தங்கும். நீச்சர் ஆறில் உச்சப் பலம் பெற்றால், துர்ப்பலனோடு சுப பலனுமுண்டு மகனே!

விளக்கம் :- சூரியன், சந்திரன் கூடியிருந்தால் அமாவாசை யோகம் என சில ஜோதிட நூல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இருவரும் நண்பர்கள். எனவே, இவர்களது பலம் அதிகரிக்கும். இந்த விதிகளை மனதில் வைத்துக் கொண்டுதான், மேற்படி சுப பலன்களை இந்தக் கிரக அமைப்பிற்கு முனிவர் கூறுகிறார் என்பதை உணரவும். இவர்களுடன் அசுப கோட்கள் கூடியிருந் தால், இவர்களது யோக வலிமை குறையுமென்றாலும், குடியிருக்க ஒரு வீடாவது தங்கும் என்பது முனிவரின் வாதம். 'நீச்சர்' என்றால் பாவக் கோட்களை குறிப்பிடும். இவர்கள் 6ல் உச்சம் பெற்றால் சுப பலன், பாவ பலன் கலந்து நடைபெறும். காரணம், 6மிடமென்பது தீமையை தருகின்ற ஸ்தானம். அதே சமயம், உச்சம் பெற்ற கிரகம் நன்மையை செய்ய வேண்டும்.

36. ஐந்தில் தீயர் நின்ற பலன்

தானென்ற பஞ்சமத்தில் கொடியோர் நிற்கில்
தாரணியில் குடிவிளங்க புத்திரரில்லை
ஊனென்ற உதயாதி பெரியோர் சேர
உத்தமனே உதித்த தொரு பாலன் தானும்
தேனென்ற பிதுருக்கு உதவியுண்டோ
பறைச் சேரியில் வில்வக்கண் முளைத்தாப் போலே
சீனென்ற சிவனுக்கு உதவாதப்பா
சிவசிவா புலிப்பாணி செப்பினேனே!

பொருள் :- பஞ்சமஸ்தானம் என்னும் ஐந்தாமிடத்தில் தீக்கோட்கள் நின்றால், இப்புவியில் இவன் குலப்பேர் சொல்ல புத்திரர் இல்லாமல் போய்விடும். லக்னாதிபதித் குரு கூடியிருந்தால், ஜென்மனுக்கு ஒரே ஒரு பாலன் உண்டு. இவனால், பிதுருக்கு என்ன பலன்? சேரியில் வில்வக் கன்று முளைத்தாற் போல், ஜென்மனுக்கு இவன் உதவாமல் போவான். வகையான புலிப்பாணி நுட்பமாக கூறினேனப்பா!

விளக்கம் :- ஐந்தாமிடம் என்பது புத்திரஸ்தானம் என்று அழைக்கப்படும். இதில், தீக்கோட்கள் இருந்தால், புத்திர உற்பத்தியே நாசமாய் போய்விடும். காரணம், கொடியோர் தாம் இருக்கும் வீட்டையும், அதன் வம்சத்தையும் நாசம் செய்வர் என்பது ஜோதிட ரீதியான விளக்கமாகும். இந்தத் தோஷம் தீர, லக்னாதிபதியுடன், குரு கூடி சுபர் பார்வை பெற வேண்டும். சுபர் பார்வையில்லையெனில், ஒரே ஒரு புத்திரன் மட்டும் உண்டு. அவனால், இந்த ஜாதகர்க்கு எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது. காரணம், 5ல் பாவிகள் சூழ்ந்து விட்டனர்!

37. 6-8-12ல் நின்ற பலன்

விளம்பிடுவேன் வெண்மதியும் எட்டில் நிற்க
விதி குறைவு நிதிமனையும் வித்தையுள்ளோன்
களங்கமுள்ள நீர்ப்பயமும் குளிரும் காச்சல்
கனமுள்ள தாய் தந்தைக் கரிட்டஞ் சொல்லு
தளங் கொண்ட ஆறுக்கு கழிச்சல் போக்கு
தன விரையம் விதிகுறைவு கருமமாகும்
விளங்குகின்ற அன்னைக்கு தோஷஞ் சொல்லு
விரையமடா விளைவு கெடும் ஈராறுக்கே.

பொருள் :- வெண்மதி அஷ்டமஸ்தானம் என்னும் எட்டாமிடத்தில் நிற்க, குழவிக்கு ஆயுள் பலம் குன்றும். பொன், பொருள் உண்டு. வித்தையுண்டு. ஆனால், நீர்ப்பயம், குளிர்க் காய்ச்சல் உண்டு. தாய், தந்தையர்க்கு அரிஷ்டம் ஏற்படும். வெண்மதி ஆறாமிடத்தில் நிற்க, குழவிக்கு மலக் கழிச்சல் போக்கு உண்டாகும். வெண்மதி பன்னிரண்டாமிடத்தில் நிற்க, தன விரையமும், ஆயுள் பங்கமும் உண்டாகும். இவனது மாதாவுக்கும் தோஷம் உண்டாகும். பயிர் விளைச்சல் குறையும். வீண் செலவும் அதிகமாகும் பாரே!

விளக்கம் :- 6-8-12ம் இடங்கள் ஜோதிட சாஸ்திர நியதிப்படி, துர்ஸ் தானங்களாகும். இவ்வீடுகளில் நிற்கும் எந்தக் கிரகமும் தீமை செய்யும் என்பது யாவரும் அறிந்த உண்மை! எனவே, வெண்மதியாகிய சந்திரனும் இந்த ஸ்தானங்களில் இருந்தால், தீமை செய்வார் எனக் கூறப்பட்டது. ஆறாமிடம் ரோகஸ்தானம் என்பதால், குழவிக்கு மலக்கழிச்சல் நோயும், எட்டாமிடம் ஆயுள் ஸ்தானம் என்பதால் ஆயுள் பங்கமும், 12மிடம் விரையஸ்தானம் என்பதால், தன விரயமும் உண்டாகுமென முனிவர் கூறுகிறார். உண்மையுங் கூட!

38. ஐந்தில் சனி நின்ற பலன்

சொல்லுகிறேன் ஐந்துக்கு கிலேசனாவன்
சுயதேச பரதேச வாசம் ஜென்மன்
வில்லுகிறேன் விதிகுறைவு மெலிந்ததேகன்
விளங்குகின்ற புத்திரரும் பறந்து போகும்
புல்லுகிறேன் பெரியோர்கள் கண்ணுற்றாலும்
பூதலத்திலதிகாரி பெரியோர் நேசன்
நல்லதொரு திசை புத்தி பொருளுஞ் சேரும்
நலமறிந்து செப்புவாய் சனிக்கு தானே!

பொருள் :- ஐந்தாமிடமென்னும் புத்திரஸ்தானத்தில் சனி இருந்தால், மனக் கிலேசம் உண்டாகும். ஜென்மன் சுயதேச பரதேச வாசம் செல்வான். ஆயுள்

பங்கம் உண்டு. தேகம் மெலிந்து போகும். புத்திர நாசமும் உண்டு. ஆனால், சுபக் கோட்கள் கண்ணுற்று நோக்கினால், இப் புவியில் ஜென்மன் பெரிய அதிகாரியாவான். பெரிய மனிதர்களது அன்பும், ஆதரவும் உண்டாகும். நல்லதொரு திசாபுத்தி நடந்தால், நல்ல பொருள் சேர்க்கையும் உண்டாகும். கிரக வலிவறிந்து சரியாய் செப்புவாய், மகனே!

விளக்கம் :- சனி ஒரு முழுப் பாவ கிரகமாகும். இவர் எந்த வீட்டில் இருந்தாலும், அந்த வீட்டின் காரகத்துவ பலன்களை நாசம் செய்து விடுவார். 5-மிடமென்பது புத்திரஸ்தானமாகவும், புத்திஸ்தானமாகவும் கருதப்படுகிறது. எனவே, புத்திர நாசமும், மனக்கிலேஷமும் உண்டாகுமெனக் கூறப் பட்டதைக் காண்க. சனி ஆயுள் காரகன் என்பதால், ஆயுள் பங்கமும் உண்டு எனக் கூறப்பட்டது. இவை, சுபர்களின் பார்வையால் நிவர்த்தியாகி விடும். முனிவரும் அதைத்தான் கூறுகிறார். ஆனால், சுபர்கள் பார்வை யில்லையென்றாலும், சனி ஆட்சி உச்சமாக இருந்தால், நற்பலன்கள் உண்டாகும். எனவேதான், முனிவர் 'நலமறிந்து செப்பு' எனக் கூறுகிறார்.

39. இலக்கனத்தில் சனி

பாரப்பா யின்னமொரு புதுமை கேளு
பலமுள்ள கதிர்மைந்தன் பதியில் நிற்கில்
சீரப்பா யிளமயிலே மனோ வியாதி
செழுமையுள்ள பருவத்தில் செல்வமுண்டு
வீரப்பா வேந்தனுட பொருளும் சேரும்
விளங்குகின்ற கொடியோர்கள் சேரலாகா
கூறப்பா போகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனே பதியறிந்து பலனைக் கூறே!

பொருள் :- இன்னுமோர் புதுமை கேளப்பா! பலம் பொருந்திய கதிர் மைந்தனாகிய சனி, ஜென்ம லக்கனத்தில் நிற்க, ஜென்மனுக்கு இளம் வயதிலேயே மனோவியாதியுண்டாகும். நல்ல வாலிப பருவத்தில் செல்வ முண்டாகும். அரசனது பொருளும் சேரும். தீக்கோட்கள் இவரை பாராதிருந்தால், மேற்படி சுப பலன்கள் உண்மையாக நடந்தேறும். போகர் நூல் பார்த்துக் கூறினேனப்பா! பதிபலம் அறிந்து சரியான பலன் கூறுவாயே!

விளக்கம் :- சனி ஒரு முழுப்பாவி! அதே சமயம், ஸ்தானபலத்தில் லக்கனம்தான் முழுமையான சுபஸ்தமானமாகும். இதில் நிற்கும், எந்தக் கிரகமும் நன்மை செய்ய வேண்டுமென்பது பொது விதி. எனவே, லக்ன சனி நன்மை, தீமை கலந்து சம பலனாக செய்யும் என்றாலும், சுப பலனே அதிகமாக செய்யும் எனக் கொள்ள வேண்டும். "லக்னத்துக்கு ஒரு உச்சக் கிரகத்தின் பலன்" உண்டு என்பது எமது ஆய்வில் கண்ட உண்மை. அதாவது லக்ன சனி 'நட்பு' பலன் தரும் எனக் கொள்ளலாம். முனிவரும் எமது ஆய்வின் உண்மையை உணர்ந்து கூறியுள்ளதைக் காண்க. தீக் கோட்கள் பார்த்தால், சனி பலம் குன்றி, தீமை செய்ய இடமுண்டென அறிக.

40. 2-4-7-8-12ல் சனி

புகழ்கின்ற ஈராறு இருநான் கேழில்
புனிதமுள்ள சனிரெண்டு நான்கில் நிற்க
இகழ்கின்ற வாதநோய் நாய்கடிக்கும்
இதமுள்ள அன்னைக்கு கண்டம் நான்கில்

நிகழ்கின்ற ரெண்டேழில் மனைவி நஷ்டம்
நிஜம் சொன்னோம் எட்டுக்கு உயிர்க்கு சேதம்
மகிழ்கின்ற ஈராறில் விரையமாகும்
துலையுமடா மாடாடு துன்பஞ் சொல்லே.

பொருள் :- 12-4-7-8-2ல் சனி நிற்க, ஜென்மனுக்கு வாத நோய் உண்டாகும். நாய் கடிக்கும். கனிவான மாதாவுக்கு கண்டம் சம்பவிக்கும். சனி 2-7மிடங்களில் இருந்தால், மனைவிக்குக் கஷ்டப்பலன்கள் உண்டாகும். 8ல் சனி நிற்க, உயிர்ச் சேதமுண்டாகும். 12ல் சனி நிற்க, கைப்பொருள் அனைத்தும் விரயமாகும். ஆடு, மாடெல்லாம் காணாமற் போகும்.

விளக்கம் :- 2-7-8-12மிடங்கள் மாரகஸ்தானமென அழைக்கப்படும். 8-12 துர்ஸ்தானமாகவும் கருதப்படும். எனவே, இவ்வீடுகளில் சனி இருந்தால், அந்த ஸ்தான பலன்கள் பாதிக்கப்படும் என்பது உண்மையே. நாலாமிட மென்பது கேந்திரஸ்தானமாகும். இது ஒரு முக்கால் சுபர் ஸ்தானமாகும். இதில் முழுப் பாவியான சனி இருந்தால், கேந்திர பலத்தை முறியடித்து, தன் பாவ சக்தியை ஆட்டுவிப்பார். நாலாமிடம் மாதுருஸ்தானம் என்பதால், மாதாவுக்கு தோஷம் கூறப்பட்டதைக் காண்க. அதுபோல், 2-7மிடங்களில் சனியிருப்பது, மனைவியின் உடல் நலத்தைப் பாதிக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

41. புதன் நிலைமை

சொல்லுகிறேன் இருமூன்று ஈராறெட்டும்
சுகமில்லை ஜென்மனுக்கு குய்ய ரோகம்
சொல்லுகிறேன் செம்பொன்னும் கணைக்கால் துன்பம்
சுற்றத்தார் மனமுறிவர் அரிட்டஞ் செப்பு
சொல்லுகிறேன் கேந்திரமும் கோணம் நன்று
சுகமாக வாழ்ந்திருப்பன் காடியுள்ளோன்
சொல்லுகிறேன் சுயகவிதை மாமன் விருத்தி
செர்ர்ண நிலமுள்ளவனா மாலு கூறே.

பொருள் :- புதன் 6-8-12ம் இடங்களில் இருக்க, ஜென்மனுக்கு குய்ய ரோகம் உண்டாகும். செம்பொன் பறிபோகும். கணைக்காலில் புண் பொடிகள் உண்டாகும். உறவினர் பகைவராக மாறுவர். குழவிக்கு அரிஷ்டமும் உண்டு. ஆனால், புதன் கேந்திர, கோணங்களில் நின்றால், நற்பலன்கள் உண்டாகும். சுகமாக வாழ்ந்திருப்பான். குதிரை விருத்தியுண்டு. சுயமாக கவிதை பாடும் ஆற்றல் ஏற்படும். மாமன் விருத்தியுண்டு. நல்ல நில வசதியுண்டாகுமென கூறுவாயே!

விளக்கம் :- புதன் ஒரு சுபக் கோள். இவர் 6-8-12மிடங்களில் இருந்தால், நன்மை செய்ய இயலாது! எனவே, கொடிய பலன்கள் கூறப்பட்டன. 1-4-7-10-5-9 என்றும் கேந்திர, திரிகோண ஸ்தானங்கள் சுப ஸ்தானங்கள் என ஜோதிட. சாஸ்திரம் கூறுகிறது. எனவே, இவ்வீடுகளில் சுபராகிய புதன் இருந்தால், அதன் சுப பலம் மேலும் அதிகரித்து, இன்னும் அதிகமான சுப பலன்களைக் கொடுக்க முடியும் என்பது முனிவரது கருத்து. உண்மையுங் கூட!

42. கொடி மாலை மச்சம்

கூறப்பா குருவோடு வெய்யோன் பாம்பு
கொற்றவனே குரு மனையில் கூடி நிற்க
சீரப்பா ஜென்மனுக்கு தோஷமில்லை
செப்புகிறேன் கொடிமாலை விழுகாதப்பா
ஆரப்பா அங்கத்தில் மச்சமுண்டு
அப்பனே அரவோடு அனலன் சேர
கூறப்பா கொடி மாலை மச்சமுண்டு
கொற்றவனே குழவிக்குக் கூறுவாயே!

பொருள் :- குருவுடன் சூரியன், பாம்பு கூடி, குருவின் வீட்டில் நிற்க, ஜென்மனுக்கு தோஷம் ஏற்படாது. கொடி மாலை விழாது. அவனது அங்கத்தில் மச்சமுண்டு. ஆனால் பாம்புடன் செவ்வாய் கூடி நிற்க குழவிக்குக் கொடி மாலையும் மச்சமும் உண்டு.

விளக்கம் :- குருவின் வீட்டில் குரு, சூரியன், ராகு இருந்தால், குரு ஆட்சி வீட்டில் இருப்பதாக உணரப்படும். எனவே, சூரியன், ராகுவின் சேர்க்கையால் ஜென்மனுக்கு அதிக பாதிப்பு ஏற்படாது என்பது விளங்கும். இதன் விளைவாக, குழவிக்கு கொடி மாலை விழும் தோஷம் ஏற்படாது எனக் கூறப்பட்டது. ஆனால், சூரியனுக்கு பதிலாக, செவ்வாய் இருந்தால், அக்குழவிக்கு கொடி மாலை விழும் தோஷம் உண்டாகும். காரணம், குருவின் வீடுகளான தனுசுவும், மீனமும் செவ்வாய்க்குப் பகை வீடுகள். எனவே, குரு செவ்வாய், ராகு, சேர்க்கையால், குருவுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்பது முனிவரது கருத்து. உண்மையுங் கூட!

43. அவயோகம்

கேளப்பா குடிநாதன் ஆட்சி உச்சம்
கெட்டவர்கள் கண்ணுற்று நோக்கினாலும்
சூளப்பா சுகமில்லை களவு போகும்
சோற்றுதுணிக்கை யேந்தி நிற்கச் செய்யும்
ஆளப்பா அகத்திலே துன்பங் காணும்
அப்பனே அரண்மனையார் பகையுண்டாகும்
கூளப்பா கூட்டுறவு பிரிந்து போகும்
கொற்றவனே கொடுந்துன்பம் விளையும் பாரே!

பொருள் :- லக்னாதிபதி ஆட்சி, உச்சமாய் இருக்க, அவரை அசுப கோட்கள் கண்ணுற்று நோக்கினாலும் தீதே விளையும். களவு போகும். சோற்றுக்காகவும், துணிமணிகளுக்காகவும் கையேந்தி நிற்கச் செய்யும். வீட்டில் பலவித கஷ்டங்கள் வந்து சேரும். அரண்மனையார் பகை வந்து சேரும். கூட்டுறவு பிரிந்து போகும். கொடுந்துன்பம் உண்டாகும் பாரே!

விளக்கம் :- லக்னாதிபதி ஆட்சி, உச்சமாக இருந்தால், ஜென்மனுக்கு நல்ல தேக பலமும், எதையும் சாதிக்கும் மனோபலமும் உண்டாகும் என்பது பொது விதி. ஆனால், இவரை பல தீக்கோட்கள் நோக்கினால், இதனது யோக பலம் குன்றிப் போகும். முடிவில் சோற்றுக்கே கஷ்டப்படும் நிலைக்கு வந்து விடுமென்பது முனிவரது கருத்து. தனி ஒருவனால் எதையும் சாதிக்க

முடியாது என்பதற்கு இப்பாடல் ஒரு எடுத்துக் காட்டாகும். லக்னாதிபதி பலவானாக இருந்தாலும், மற்ற அனைவரும் பகையாக இருக்கும் போது, இவரது அபிலாஷைகள் யாவும் வெறும் கனவாகவே போய்விடுமென உணர்க.

34. ஆயுள் பாவம்

1

ஜென்மம் நாலுக்குள்ளாக சிறந்த குரு நின்றால் விதி
நூறாம், அன்றும் - ஜொலிக்கும் அங்கன் அறுபதாகும்
அப்பாதி கணக்கனுக்குத் தாயே, அதுகேள்-வெண்மதியும்
நின்றாலும் விதிதீர்க்கம் உரைத்திடுவாய், பின்னும் நல்ல
விதிகள் நிலையறிந்து மெள்ள விதரணையாய்ச் செப்பிடு
வாய் மகளே!

பொருள் :- ஜென்ம லக்கனம் முதல் நான்காம் வீடு வரையிலுள்ள நான்கு இராசிகளில், ஏதாவது ஒன்றில் குரு இருந்தால், அந்த ஜாதகனுக்கு நூறு வயது வரை ஆயுள் பலம் உண்டாகும். சுக்கிரன் இருந்தால் 60 வயது வரையிலும், புதன் இருந்தால் 30 வயது வரையிலும், வளர்பிறை சந்திரன் இருந்தால், தீர்க்காயுள் வரையிலும் ஆயுள் பலம் உண்டாகும். இதுபோக லக்கன பலம், ஆயுள் பாவ பலம் பார்த்து, ஆயுள் பலம் குறித்திடுவாய் மகளே!

விளக்கம் :- சுபர்களில் குரு முழுச் சுபராகவும், சுக்கிரன் முக்கால் சுபராகவும், புதன் அரை சுபராகவும் கொள்ளப்படுகிறது. சந்திரன் வளர்பிறையில் சுபராகவும், தேய்பிறையில் பாவியாகவும் கொள்ளப்படுகிறது. இவர்கள் லக்கனம் முதல் நான்கு இராசிக்குள் நின்றால், இவர்களுக்கு வலிமை அதிகமாம் (முனிவர் கருத்து). எனவே, குரு நின்றால் 100 வயது எனவும் சுக்கிரன் நின்றால் 60 வயது எனவும், புதன் நின்றால் 30 வயது எனவும் கூறுகிறார். இது ஒரு பொதுவான கணிதம்தான். உண்மையில், ஆயுள் பலம் அறிய லக்கனம் 8ம் இடம், 10மிடம் இம்மூன்றில் உள்ள கிரகங்களையும் அவற்றின் அதிபதிகளின் வலிமையையும் அறிவதோடு சனி, சூரியன் பலத்தையும் அறிந்துதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதுபோக, மாரகஸ்தான விபரங்களையும் அறிய வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

2. ஆயுத மரணம்

அஷ்டமத்தோன் சேய் கூடி ஆறெட்டு வியத்தில் நின்ற
விதியை, முன்னாள் - அயன் விதியை புவியார்க்கு அன்
பாக எடுத்துரைப்பாய் தாயே. அதுகேள் பொட்டெனவே
எதிரி அம்பால் போய்மடிவன் சென்மனவன் வினை
யால், அன்றும் பொன்னவன் வலுத்து நோக்க
பாலனுக்கு விதியுரைப்பாய் மகளே!

பொருள் :- அஷ்டமத்தோன், செவ்வாயுடன் கூடி 6-8-12ல் நின்ற விதியை, புவியில் உள்ளோர்க்கு அன்பாக எடுத்துரைப்பாய், மகளே! ஜென்மன் எதிரியின் அம்பினால் எய்தப்பட்டு பொட்டென எமலோகம் போய் விடுவான். இவர்களை குரு பார்த்தால், மேற்படி தோஷம் நீங்கி, ஆயுள் பலம் உண்டாகும் என்பதாம்.

விளக்கம் :- அஷ்டமஸ்தானம் என்பது ஆயுள் ஸ்தானமாகிய எட்டாமிடத்தைக் குறிப்பிடும். இதன் அதிபதியுடன் செவ்வாய் கூடினாலே ஆயுள் பங்கம் உண்டாகும். ஆனால், இவர்கள் கூடி 6-8-12 என்னும் துர்ஸ்தானங்களில் இருக்கும்போது, ஜென்மனுக்கு ஆயுள் பங்கம் நிச்சயம் உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது. செவ்வாய் எதிரிக்கும், அம்புக்கும் காரகன் என்பதால், ஜென்மனது உயிர், எதிரியினது அம்பால் போகுமெனக் கூறப்பட்டது!

3. மரம் விழுந்து மரணம்

இரண்டில் சேய் வந்திடவே ஈரைந்தில் தேய்ந்த மதி
நிற்கக் கூறும் - இரவி மைந்தன் மேல் நோக்க இறப்
பானது மரம் விழுந்து தாயே, அதுகேள் - கோலவிழி
மாது குறி குடும்ப நிலை ஆராய்ந்து நோக்கு, நல்ல
குருபரனால் மைந்தன் விதி கூட்டி வைக்க ஆகுமோ
சொல் மகளே!

பொருள் :- இரண்டாமிடத்தில் செவ்வாய் நிற்க, பத்தாமிடத்தில் தேய் பிறை சந்திரன் நிற்க, இவர் மேல் சனி பார்வை பட, ஜென்மனவன் மரம் விழுந்து இறப்பானாம். இருப்பினும், அழகிய விழிகளுடைய பெண்ணே! குடும்பஸ்தான நிலை அறிந்து சரியான பலன் கூறுவாய்! பலம் பொருந்திய குருபரனால் ஜென்மன் விதியைக் கூட்டி வைக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளே!

விளக்கம் :- 2மிடமென்பது மாரகஸ்தானமாகும். 10மிடமென்பது உயிர் ஸ்தானமாகும். எனவே, 2ல் உள்ள செவ்வாயால், மாரகம் ஏற்பட வாய்ப்பு உண்டு. 10ல் உள்ள சந்திரனால், அவனது ஜீவன் பிரிந்து போக இடமுண்டு. இவர்கள் மேல் சனி பார்வையும் விழும்போது, இவர்கள் பலவீனமடைந்து, ஜென்மனது உயிர்க்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய கெண்டத்தைக் கொடுக்க தயாராகி விடுகின்றனர். செவ்வாய், சனி ஆகிய கோட்கள் 'மரத்திற்கு' காரகர்கள் என்பதால், ஜென்மன் மரம் விழுந்து மரணம் அடைவான் எனக் கூறப்பட்டது. குரு பார்த்தால், இந்த தோஷம் நீங்கும் என்பது யாவரும் அறிந்ததே!

4. தீர்க்காயுள்

பதிக்குவியன் சுகத்திலேற பாலன் பிரதேச வாசன்
பிணியன், அன்றும் - பாக்கியவான் தருமமுள்ளோன்
மகத்தனென்றே தெளிந்தனடி தாயே, அதுகேள் -
பதியை மூன்று கோளும் நோக்க பாலனுக்கு யோகவிதி
தீர்க்கம், கூறும் - பார் மன்னரால் சேவையுள்ளோன்
பைங்கிளியே செப்பிடுவாய், மகளே!

பொருள் :- லக்னத்துக்கு 12ம் அதிபதி சுகஸ்தானம் என்னும் நான்காமிடத்தில் அமர, ஜென்மன் பிரதேசவாசன். பிணிகள் உடையவனாம். அதே சமயம், நல்ல தரும சிந்தனையும், பாக்கியங்கள் நிறைந்தவனுமாம். ஜென்ம லக்கனத்தை மூன்று கோட்கள் நோக்க, பாலனுக்கு தீர்க்காயுள் உண்டாம். நாடாளும் மன்னர் சேவையும் உண்டு. பைங்கிளியே பகர்ந்து செப்பிடுவாய் மகளே!

விளக்கம் :- பன்னிரண்டாம் அதிபதி என்பவர் ஒரு துஷ்டனாகக் கருதப்படுவார். இவன் 4ம் வீட்டில் அமரும் போது, பாலனுடைய மனசை மாற்றி வீட்டை விட்டு வெளியேற தூண்டுவான். ஆனால், 4மிடமென்பது

ஒரு சுபஸ்தானமாகும். எனவே, இந்த ஸ்தான பலத்தால், மேற்படி துஷ்டன் சுபனாக மாறி, நன்மை செய்வான் என்பதாம். எனவே, இந்த ஜாதகர் பாக்கியவனாகவும், தர்மவானாகவும் இருக்க இடமுண்டு.

லக்னம் என்பது ஒரு முழுமையான சுபஸ்தானமாகும். இதை எந்தக் கோள் பார்த்தாலும், அதை சுபராக மாற்றும் சக்தி லக்ன பாபத்துக்கு உண்டு. மூன்று கோட்கள் பதியை பார்க்க, அவர்களது யோக பலம் அதிகரித்து, பாலனது ஆயுள் பலம் தீர்க்கமாக துணை புரியும் என்பது முனிவரது கருத்து!

5. 2-11ம் அதிபதி நிலைமை

இரண்டு பதினொன்றாதிபன் இரண்டு பதினொன்றிலேற
பலனும், முன்னாள் இருந்த ரிஷி சொன்ன நூலை எடுத்து
ரைப்பாய் எனக்கறிய தாயே, அதுகேள் - கொன்றிடுவன்
திசை புத்தியிற் கூறிடுவாய் திசையறிந்து சேய்க்கு
அன்றும் - போகரடி பணிந்து சொன்னேன், புலிப்பாணி
யேசல் தூது மகளே!

பொருள் :- *2-11ம் அதிபதிகள் 2-11 என்னும் இடங்களில் ஏறுவது மிகவும் கொடியதாகும். முன்னாள் இருந்த ரிஷிகள் சொன்ன நூல் பார்த்து கூறினேன் மகளே! 2-11ம் அதிபதிகளின் திசா புத்திகளில் ஜென்மனது உயிர் எமலோகம் சென்று விடும். போகரடி பணிந்து, புலிப்பாணி பாடினேன் மகளே!*

விளக்கம் :- *2-11ம் இடங்கள் என்பது மாரகஸ்தானங்களாகும். சர லக்ன காரர்களுக்கு 11மிடம் பாதகஸ்தானமாகும். எனவே, இந்த இரு வீட்டதிபர் களும் மேற்படி 2-11ம் வீடுகளில் இருக்கும்போது, இவர்களுக்கு மாரகம் செய்யும் குணம் அதிகமாக, ஆணித்தரமாக ஏற்பட்டு விடுகிறது. எனவே, இவர்களது திசாபுத்திகளில், ஜென்மனுக்கு மாரகம் உண்டாகும் என்பது முனிவரது கருத்து.*

இந்த தோஷம் தீர வேண்டுமானால், 2-11ம் அதிபதிகள் ஆட்சி, உச்ச பலம் பெற வேண்டும். இல்லையெனில், இவர்களை சுபக் கோட்கள் பார்க்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

6. அஷ்டமன் நிலைமை

அஷ்டமத்தோன் சுபனாகி அஷ்டமத்திலுச்சம் பெற்
றால் சேயன், கூறும் - ஆண்டு நூறுவிதி தீர்க்கம்
அயனுரைத்தானென்று கண்டேன் தாயே, அதுகேள் -
அஷ்டமத்தோன், பாக்கியனாய் அய்யமில்லை பாக்கி
யத்திலேற, சென்மன் ஆண்டு விதி நூறுடையோன்
அயன் விதித்தானென்று செப்பு. மகளே!

பொருள் :- *அஷ்டமத்தோன் சுபராகி, அஷ்டமத்தில் உச்சம் பெற்று நின்றால், ஜென்மனுக்கு ஆயுள் பலம் நூறு வயது வரை உண்டு. அஷ்மத்தோன்; பாக்கியனாய், பாக்கிய ஸ்தானத்தில் இருந்தாலும், ஜென்மனுக்கு ஆயுள் பலம் தீர்க்கம். நூறு வயது வரை உண்டு! அயன் விதித்தான் எனக் கூறு, மகளே!*

விளக்கம் :- *அஷ்டமஸ்தானம் என்பது எட்டாமிடமாகிய ஆயுள் ஸ்தானத்தைக் குறிப்பிடும். இவர் சுபராகி அஷ்டமத்திலேயே உச்சம் பெற்றால், இவர்க்குப் பூண பலம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, ஜென்மனுக்கு ஆயுள் பலம் நூறு எனக் கூறப்பட்டது! மிதுனலக்ன ஜாதகர்க்கு அஷ்டமாதிபதியே,*

பாக்கியாதிபதியாக வருகிறார். இவர் பாக்கியஸ்தானத் தில் ஆட்சி பலத்துடன் இருந்தால், இவர்களுக்கும் ஆயுள் பலம் தீர்க்கம் நூறு வரை உண்டாம்!

ஆனால், உண்மையில், அஷ்டம ஸ்தானாதிபதி உச்சமாக இருந்தாலும், அஷ்டமஸ்தானத்தைப் பாவிகள் பார்த்தாலும், சனி, சூரியன் பலவீனமாக இருந்தாலும் ஆயுள் பலம் பங்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே, இவை யனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்துத்தான் ஆயுள் பலம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது!

7. சந்திரன், சேய், சனி சேர்க்கை

இந்து சனி சேய் பாம்பு இவர்கள் கூடி நின்றாக் கால் சேய்க்கு கண்டம் - இயமனைப் போல் பேயடித்து இறந்திடுவன் உதிரங்கக்க தாயே, அதுகேள் - இந்து சனி சேய் கூடி இதமாக யிரண்டிலேற, அன்று - இரு நான்கில் குளிகனேற இவன் மடிவன் கிணற்றில் வீழ்ந்து மகளே!

பொருள் :- சந்திரன், சனி, செவ்வாய், ராகு - இந்நால்வரும் கூடி நின்றால், பாலனுக்குக் கெண்டம் சம்பவிக்கும். இயமனைப் போல், பேயடித்து இறந்து போவான்,

சந்திரன், சனி, செவ்வாய் கூடி இரண்டாம் இடத்தில் ஏற, எட்டில் குளிகன் நிற்க, இவன் கிணற்றில் விழுந்து மடிவான், மகளே!

விளக்கம் :- ஆயுள் காரகனாகிய சனியுடன் செவ்வாய், ராகு கூடும் போது, ஜென்மனுக்கு பேய், பிசாசுகளால் மரணமுண்டாகும். காரணம், ராகு பிசாசுகளுக்கு அதிபதி. சனி கரிய பூதங்களுக்கு அதிபதி.

சனியுடன் சந்திரன் செவ்வாய் கூடினால், அவனுக்கு நீரால் மரணம் உண்டாகும். நீர்க்கு சந்திரனும் 'அகால மரணத்துக்கு' செவ்வாயும் காரகர்கள் என்பதால், ஜென்மன் கிணற்றில் விழுந்து மடிவான் எனக் கூறப்பட்டது!

ஆனால், 'மரணம்' இப்படித்தான் ஏற்படும் என்பதை யாவரும் சரியாகக் கூற முடியாது. சனியுடன் கூடிய கிரக நிலைகளை வைத்து ஓரளவு ஊகித்துக் கூறலாம் என்பதை உணரவும். உதாரணமாக, மேற்படி சுலோகத்தில் சனியுடன், செவ்வாய், ராகு, சந்திரன் கூடியிருந்தால், ஜென்மனுக்கு அக்னி, பிசாசு, நீர் முதலியவற்றால் மாரகம் ஏற்படும் எனக் கூற வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது!

8. அஷ்டமத்தில் பாம்பு

எட்டில் சிகி கொக்கரித்த இணைந்த ரெண்டில் பாவர் வந்து நோக்க, அவர் - என்ன பலனளித்திடுவர் எனக்கறிய செப்பவேணும் தாயே, அதுகேள் - பொட்டெவே அரவே தீண்டி போய் மடிவன் சிவலோகம்அய்யா, பொல்லா - பாம்பை தடை செய்வதற்குப் புண்ணியவான் நோக்க வேணும் மகளே!

பொருள் :- எட்டாமிடம் என்னும் ஆயுள் ஸ்தானத்தில் ராகு இருக்க, ரெண்டில் பாவர் இருந்து அதை நோக்க, பாம்பு தீண்டி ஜென்மன் மாண்டிடுவன். பொல்லா பாம்பை தடைசெய்வதற்கு நற்கோட்களாகிய குரு, சுக்கிரன், புதன் முதலானோர் பார்க்க வேணும் மகளே!

விளக்கம் :- 'சிகி' என்றால் ராகு, கேதுக்களைக் குறிப்பிடும். 'எட்டாமிடம்' என்பது ஆயுள்ஸ்தானம் என்பதால், அதில் ராகு இருந்தால், ஜென்மனுக்கு பாம்பு விஷத்தால் மரணம் உண்டாகும் எனக் கூறப்பட்டது. இதை சுபக்

கோட்கள் நோக்கினால், மேற்படி தோஷம் விலகிவிடும் என்பது முனிவரது கருத்து!

பொதுவாக, 8ம் அதிபதி 8ல் இருக்க, அவருடன் சனியும் கூடியிருக்க, ராகுவும் கூடியிருந்தால், அந்த ஜாதகர்க்கு விஷத்தால் மரணமுண்டாகும் எனக் கூறலாம். சனி, ராகு கறுப்பு கோட்கள் என்பதால், கரும்பாம்பு தீண்டி இவனது ஜீவன் பிரிந்து போகும் எனக் கூறலாம்! இது எமது ஆய்வில் கண்ட முடிவு!

35. தனயோகம்

1. கிரக மாறி யோகம்

ஒன்றுக் கொன்று கோள்கள் மாற ஊழ்வினையை இன்னதென்று
அறியேன் நல்ல - போகர் சொன்ன விதியறிந்து ஓதிடுவாய்
உலகின் கண் தாயே, அதுகேள் - பெண்டு பொருள் மனையும்
இன்னும் பாலன் பேரம் செய்ய லாபம் கூடும், நல்ல - படவரவை
பழிக்கும் பெண்ணே பதமறிந்தேன் புலிப்பாணி மகளே!

பொருள் :- கோள்கள் ஒன்றுக் கொன்று மாறி நிற்க, ஊழ்வினை பலன் இன்னதென்று அறியேன்! போகர் நூல் பார்த்து கூறுகிறேன்! கேள் மகளே! பொன் பொருள் விருத்தி, வீடு மனை பாக்கியம் அனைத்தும் பாலன் பேரம் செய்ய கை கூடி வரும். பெண்ணே! பதமறிந்து புலிப்பாணி பாடினேன்!

விளக்கம் :- கிரகங்கள் ஒன்றுக் கொன்று தங்கள் வீடுகளில் மாறி நிற்பது கிரகமாறி யோகம் (அ) பரிவர்த்தனை யோகம் எனப்படும். உதாரணமாக, தனுசுவில் புதனும், கன்னியில் குருவும் இருந்தால் கிரகமாறி யோகம் எனப்படும். இந்த யோகப் பலத்தால், இவர்களது இயற்கையான பலத்திலிருந்து 'கால்பலன்' கூடி விடும் எனக் கணக்கிட வேண்டும். அதாவது, புதன் நட்பு வீட்டில் இருந்தால், ஆட்சி பலம் கொடுக்கும் எனக் கொள்ள வேண்டும். இந்தக் கோட்கள் என்னென்ன ஆதிபத்தியம் பெற்றுள்ளதோ, அதனதன் காரகத்துவ அடிப்படையில், அதன் சுப பலன்களைக் கூற வேண்டும்!

2. சந்திரனுக்கு 4ல் சுக்கிரன்

நிலவுக்கு நாலில் வெள்ளி நின்றி விதி எனக்குரைக்க வேண்டும்.
இன்னம் - ஆக்ஷி உச்சம் பகை நீசம் அமர்ந்திருக்கும்
பலனுரைப்பாய் தாயே, அதுகேள் - கனவு நஷ்டம் வந்து போகும்
கனத்த பொருள் கிட்டும் விசுவாசன், அன்றும் - கன்று காலி
மெத்தவுண்டு ஆடை மேடை அழகனடி மகளே!

பொருள் :- சந்திரனுக்கு நாலில் சுக்கிரன் இருப்பது ஒரு நல்ல தன யோகமாகும். இவர்கள் ஆட்சி, உச்சம் பகை, நீசமாய் அமர்ந்திருக்கும் விதி உரைப்பாய் தாயே! பகை, நீசமாக இருந்தால் கனவு நஷ்டம் வந்து போகும். ஆட்சி, உச்சமாக இருந்தால், கனத்த பொருள் கிட்டும். கன்று காலி மெத்த வுண்டாகும். பல் வித ஆடை, ஆபரணங்களுடன் அழகாக இருப்பான்; விசுவாசம் நிறைந்த தாயே!

விளக்கம் :- சந்திரனுக்கு 4ல் சுக்கிரன் இருப்பது ஒரு நல்ல தனயோகம் என்பதால், இவற்றின் வலிமையுடன் 'கால் பலனைக்' கூட்டிக் கொள்ளவும்.

இவர்கள் பகை, நீசமாக இருந்தால் சம பலனாக நடைபெறும் எனக் கொள்க. ஆட்சி, உச்சமாக இருந்தால், மிகவும் சிறப்பான பலன்கள் நடைபெறுமெனக் கூறுக.

3. தீர்க்காயுள் யோகம்

அரசன் யேழில் சேய் ஆறில் அருக்கன் மைந்தன்
பதினொன்றில் ஏற, அன்றும் - அருக்கன் மூன்றில் அரவம்
நாலில் அமர்ந்திருந்த விதி கூறுவாய் தாயே, அதுகேள் -
சரச மொழி மாதழகி ஜென்மனுக்குச் சிறைநோயு
மகல, நல்ல - சதுர் முகனால் அமைந்த விதி ஜென்மன்
தீர்க்க ஆயுளுள்ளோன் மகளே!

பொருள் :- குரு ஏழில் நிற்க, செவ்வாய் ஆறில் அமர, சனி 11ல் ஏற, சூரியன் 3ல் இருக்க, பாம்பு நாலில் அமர்ந்திருக்க, ஜென்மனுக்குச் சிறை நோய் அகலும். நல்ல நான்முகன் விதிப்படி, இவனுக்குத் தீர்க்காயுள் உண்டு மகளே!

விளக்கம் :- பூரண சுபக் கிரகமான குரு 7ல் நிற்பது மிகவும் நல்லது. அத்துடன் ஜென்ம லக்கனத்தை இவர் முழுப் பார்வையுடன் பார்ப்பார். எனவே, ஜென்மனுக்கு நல்ல யோக பலமும், ஆயுள் பலமும் அதிகரிக்கும் என்பது உணரத்தக்கது!

3-6-11ல் பாவிகள் இருந்தால் விசேஷமான சுப பலன்களை வழங்குவார்கள் என்பது சிறப்பு விதி. இந்த விதிப்படி சூரியன் 3-லும், செவ்வாய் 6-லும், சனி 11-லும் இருப்பதால் மிகுந்த சுப பலனையும், ஆயுள் பலனையும் உருவாக்கும் என்பது அறிதற் பாலது!

4ல் ராகு இருப்பது இராஜயோக பலனைக் கொடுக்கும். காரணம், கேந்திர கோணங்களில் ராகு இருந்தால் இராஜயோகம் ஏற்படுமென. ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. எனவே, இந்த நாலாமிட ராகுவால், ஜென்ம னுக்கு வாகன விருத்தியும், தேக சௌக்கியமும் உண்டாகும் எனலாம். மேற்கூறிய அனைத்து அமைப்புகளும் ஒரு ஜாதகத்தில் இருந்தால், அவனுக்கு தீர்க்காயு சுடன் நல்ல சுகபோக வாழ்க்கை அமையும் என்பது முனிவரது கருத்து!

4

மதிக்கு பத்தில் மன்னனேற மைந்தன் சேனாதிபதி
யாவன் மவுடி, கூறும் - மாநிலத்தில் பேர் விளங்
கோன், மன்னராலே பொருளுமுண்டு தாயே, அதுகேள் -
மதிபெலமும் சேர்ந்தோன் விதி பாலனுட விதி
நிலையை நோக்கி, கூறும் - போகர் பாதம் தலை
வணங்கிப் புலிப்பாணி யேசல் சொன்னேன் மகளே.

பொருள் :- சந்திரனுக்கு 10ல் குரு இருந்தால், ஜென்மன் சேனாதிபதி யாவான். இப்புவியில் சிறந்து விளங்குவான். பாராளும் மன்னராலே பொருள் சேர்க்கையும் உருவாகும். மதி பலம் அறிந்து, அவருடன் கூடிய கிரகங்களின் பலம் அறிந்து, சமயோசிதமாய் பலன் கூறுவாய் மகளே! போகர் பாதம் தலை வணங்கி, புலிப்பாணி பாடினேன், மகளே!

விளக்கம் :- சந்திரனுக்கு 10ல் குரு இருப்பது ஒரு நல்ல தன யோகமாகும். அதே சமயம், இந்த யோக அமைப்பு, குருவுக்கு 4ல் சந்திரன் இருப்பதைக்

கவனிக்கவும். அதாவது, குருவுக்கு கேந்திரத்தில் சந்திரன் இருந்தால் 'கரு கரு கேசரி' என அழைக்கப்படும். எனவே, இப்பாடலில் உள்ள யோக அமைப்பில், இருவித யோகங்கள் அடங்கியுள்ளதால், இது இராஜயோக பலனைத் தரும் எனக் கொள்ள வேண்டும். சந்திரன், குரு பகையாக இருந்தால்கூட, இந்த யோகம் சுப பலனை தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

5

குருமதியும் சுங்கன் புந்தி குமரனுக்கு வியமா றெட்டில்
மேவ, சேயன் - குவலயத்தில் குபேரனைப் போல் குடி
களையு மாதரிப்பன் தாயே, அதுகேள் - இருப்பிடமும் நிலை
விதியும் எடுத்துரைப்பாய் புவியோர்க்கு பயனால், கூறும்
இருப்பிடமும் நல்ல மனையாகில் நன்று நீயுரைப்பாய் மகளே!

பொருள் :- லக்னத்துக்கு 6-8-12ம் வீடுகளில் சந்திரன், சுக்கிரன், புதன், குரு இருந்தால், ஜென்மன் இப்புவியில் குபேரனைப் போல் குடிகளையு மாதரிப்பன் தாயே, இக் கோட்கள் இருக்கும் நிலையறிந்து இவனது யோக நிலையை எடுத்துரைப்பாய். இருப்பிடம் நல்ல மனையானால் நற்பலன்கள் அதிகமாக நடைபெறுமென கூறுக.

விளக்கம் :- 6-8-12ல் சுபர்கள் இருந்தால், சுப பலன் பாவ பலன் இரண்டும் கலந்து நடைபெறும். 6-8-12ம் இடங்கள் கஷ்டப்படுபவர்களையும், ஏழைகளையும் குறிப்பிடும். எனவே, இந்த வீடுகளில் சுபக் கோட்கள் இருக்கும்போது, எளியவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை ஜாதகர்க்கு உண்டாகும். எனவேதான், முனிவர் "குபேரன் போல் குடிகளை ஆதரிப்பான்" எனக் கூறுவதைக் காண்க.

6

சாமி ஆக்ஷியுச்சம் கேந்திரம் சாமியுடன் சுபன் சேர
சென்மன், கூறும் - சவுபாக்கியன் சிவிகையுள்ளோன்
கீர்த்தி நிதி வல்லவனாம் தாயே, அதுகேள் - பதினொன்
றில் அசுபர் ஏற பாலனுக்கு மூத்த பிதா மாய்வன், சொல்லும்
மதிபெலமும் விதி கூர்ந்து பக்குவமாய் எடுத்துரைப்பாய்
மகளே!

பொருள் :- குரு ஆட்சி, உச்சம், கேந்திரம் முதலிய ஸ்தானங்களில் இருக்க, குருவுடன் சுபர் கூடியிருக்க, ஜென்மன் நல்ல சௌபாக்கியவானாகவும், சிவிகை யோகமுள்ளவனாகவும் இருப்பான். புகழ், செல்வம் நிறைந்தவனாம். 11ல் அசுப கோட்கள் நிற்க, பாலனுக்கு மூத்த பிதா மாய்வன். மதிபலம், லக்கன பலம் அறிந்து பக்குவமாய் கூறுவாய் மகளே!

விளக்கம் :- சாமி என்றால் குரு என்று பொருள். இந்தக் குரு தனது ஆட்சி, உச்ச வீடுகளில் கேந்திர பலத்துடன் நிற்கும் போது மிகுதியான சுப பலன்களை அளிக்க முடியும் என்பது முனிவரது கருத்து.

11-மிடம் என்பது மூத்த சகோதரஸ்தானம் என்பதால், அதில் பாவிகள் இருந்தால் மூத்த சகோதரர்களுக்கு ஆகாது என்பது பொதுவான கருத்து. இங்கு முனிவர் "மூத்த பிதாவுக்கு ஆகாது" என்றதைச் சிறப்பு விதியாகக் கொள்க.

7

தனத்தில் குரு மதியேக தனத்தை மெல்ல தேர்பாகன்
நோக்க, சேய்க்கு - தனமில்லை தரித்திரனாம் வாய்
குளறன் செப்பலுற்றேன் தாயே, அதுகேள் - சோமனுக்கு
ஆறெட்டில் சுருதிப்படி சுபக் கோள்கள் சேர சொல்லும்
சுகவானாம் நிதியுமுள்ளோன் சொல் தவறான் வெற்றி
யுளான் மகளே!

பொருள் :- தனஸ்தானத்தில் குரு சந்திரன் இருக்க, இவர்களைச் சுக்கிரன் மெதுவாக பார்க்க இவனுக்கு தனமில்லை, தரித்திரனாம், வாய் குளறன் என்றேன். சந்திரனுக்கு 6-8ல் சுபக் கோட்கள் நிற்க, ஜென்மன் சுகவானாம். நிதியமுள்ளவனாம். சொல் தவறான். வெற்றியுள்ளவனாம் மகளே!

விளக்கம் :- குரு, சந்திரன் கூடி எந்த வீட்டில் இருந்தாலும், அந்த இராசி வர்க்கமே நாசமாய் போய்விடும். இவர்களை தேர் பாகன் என அழைக்கப்படும் சுக்கிரன் நோக்கினாலும் இந்தத் தரித்திர நிலைமை மாறாது. காரணம், குரு, சந்திரனுக்கு சுக்கிரன் பகை. இந்த சத்துருத்துவத்தால் இவர்களுக்குள் தகராறு முற்றி எந்தப் பலனும் சிறப்பாக நடைபெறாதபடி போய் விடுமென அறிக.

8. கோடீஸ்வரன்

பாக்கியத்தில் தனன் சுகனும் பத்தோனும் தனத்தில்
பெலமாக அன்றும் - பதியோனும் லாபாதி இவர்கள்
உச்சம் பதமுரைப்பாய் தாயே, அதுகேள் - பாக்கியங்கள்
களஞ்சியத்தில் பந்தனமாய் வைத்திருப்பன் பயனாம்,
மிக்க பரமருள் பெற்ற மானே பாரில் கோடீஸ்வர
னென்றேன், மகளே!

பொருள் :- பாக்கியஸ்தானத்தில், தனாதிபதி இருக்க தனஸ்தானத்தில் சுகாதிபதியும், பத்தாம் அதிபதியும் பலமாக இருக்க, லக்னாதி, லாபாதிபதி இவர்கள் உச்சப் பலம் பெற்றிருக்க, இவன் அடையும் பலன் யாதெனில் கணக்கிலடங்கா பாக்கியங்கள் களஞ்சியத்தில் பத்திரமாக வைத்திருப்பான். சக்தி வாய்ந்த சிவபெருமானின் அருள் பெற்ற பெண்ணே, இவன் இப்புவியில் கோடீஸ்வரனாக இருப்பான்.

விளக்கம் :- பாக்கியஸ்தானம் என்பது 9ம் இடமாகும். 'தனன்' என்பது 2ம் வீட்டு அதிபதியை குறிப்பிடும். 'சுகாதிபதி' என்பது நாலாம் வீட்டு அதிபதியை குறிப்பிடும். 'லக்னாதிபதி' என்பது முதலாம் வீட்டு அதிபதியாகும். லாபாதிபதி என்பது 11ம் வீட்டு அதிபதியாகும்.

இவற்றில் லக்கினாதிபதிதான் ஜாதகர். மிகவும் சக்தி வாய்ந்தவர். இவர் உச்சம் பெற்றால், எதையும் சாதிக்கும் சக்தி ஜாதகர்க்கு ஏற்பட்டு விடும். லாபாதிபதி உச்சம் பெற்றால், தொழிற் துறையில் லட்சக் கணக்கில் லாபம் கிடைக்கும். தனாதிபதி 9ல் இருந்தால், அளவுக்கு மீறிய பொருள் சேரும். 4ம் அதிபதி என்பவர் வீடு, வண்டி, வாகன சுகத்தைக் கொடுப்பவர். 10ம் அதிபதி தொழிலை கொடுப்பவர். இவ்விருவரும் கூடி, இரண்டாமிட மென்னும் தனஸ்தானத்தில் இருந்தால், இவனுக்குப் பெரியதொரு தொழில் ஏற்பட்டு, வீடு, வண்டி வாகனம் முதலியன வாங்கும் அளவுக்கு தனவசதி வந்து சேரும். மேற்படி சகல வித அமைப்புகளும், ஒரு ஜாதகத்தில் அமையப் பெறின்,

அவன் ஒரு கோடீஸ்வரனாக வாழ இடமுண்டு என்பது முனிவரது கணிப்பு. உண்மையுங் கூட!

9. பாக்கியவான்

கலைமதியும் பதியில் நிற்க,கணக்கன் குரு சுக்கிரனா
ரேழேட்டில், மற்ற - கடமையுள்ளோர் மூன்று பத்து பதினொன்
றில் நின்றார்கள் தாயே, அதுகேள் - கணக்கு வழக்கில்
லாமல் மிக்க செம்பொன் தேடி வைப்பன் பாக்கியன்,
நல்ல - கலைமதியை யணிந்த பெண்ணே போகர் பாதம் தலை
மேல் கொண்டேன் மகளே!

பொருள் :- சந்திரன் ஜென்ம லக்கனத்தில் நிற்க, புதன், குரு, சுக்கரன் 6-7-8ல் நிற்க, மற்ற தீக்கோட்கள் 3-10-11ல் நின்றால், அந்த ஜாதகனுக்குக் கணக்கு வழக்கில்லாமல் பொன், பொருள் சேரும். மிக்க செம்பொன்னை இவன் தேடி வைப்பான். பாக்கியன் என்றேன். நல்ல கலைமதியை அணிந்த பெண்ணே, போகர் தாள் பணிந்து கூறினேனம்மா!

விளக்கம் :- ஜென்ம லக்கனத்தில் சந்திரன் நிற்பது 'சாமரை யோகம்' எனப்படும். இது ஒரு நல்ல யோகமாகும். இதுபோக, லக்கனத்திற்கு 6-7-8ல் சுபர்கள் இருப்பது இராஜயோகமாகும். தீக் கோட்கள் 3-10-11ல் நின்றால், அவர்கள் நற்பலன்களை விசேஷமாக செய்ய இடமுண்டு. இப்படியாக, மூன்று வித யோகங்களைப் பெற்ற ஜாதகர் ஒரு பெரிய தனவந்தனாக வாழ்வதில் எவ்வித சந்தேகமுமில்லை என்பது முனிவரது வாதம். எனவே, இவனை இவர் பாக்கியவான் என்று அழைக்கிறார் எனலாம்!

10. இதுவுமது

வியத்தில் வெள்ளி தனத்தில் பொன்னும், விளங்கு
பதி கேந்திர கோணமேற, நல்ல - விளங்கும் லாபம்
தரும னோக்க விதி கூறுவாய் எனக்கறியத் தாயே
அதுகேள் - குயவன் விதிப் பிரகாரம் குமரன் மிகு பாக்
கியவான் யோகன், நல்ல - போக ரிஷி சொன்ன நூலைப்
புலிப்பாணி உரைத்தேனடி மகளே!

பொருள் :- விரயஸ்தானத்தில் சுக்கிரன் நிற்க, தனஸ்தனத்தில் குரு இருக்க, லக்கினாதிபதி கேந்திர, கோணங்களில் நிற்க, இவர்களை தர்மாதிபதி, லாபாதிபதி நோக்க, இவன் பிரமன் விதிப்படி ஒரு பெரிய பாக்கியவானாக திகழ்வான். நல்ல யோகவான். போகர் நூல் பார்த்து புலிப்பாணி உரைத்தேனடி மகளே!

விளக்கம் :- சுக்கிரன் 12ல் இருப்பதே ஒரு நல்ல யோகமாகும். 2ல் குரு இருப்பதும் நல்ல யோகம் தரும். லக்கனத்துக்கு 2-12ல் சுபர்கள் இருந்தால், இராஜயோகமாகும். லக்னாதிபதி கேந்திர, கோணமேறுவதும் இராஜயோகம் தான். இவர்களை சுபர்களான தர்மாதிபதி, லாபாதிபதி பார்த்தால், மேற்படி இராஜயோக பலன்கள் இன்னும் அதிகரிக்கும் எனக் கொள்ள வேண்டும். இவ்வகை காரணங்களால், மேற்படி அமைப்புள்ள ஜாதகன் ஒரு பெரிய பாக்கியவான் என முனிவர் கூறுகிறார் என்பது உணரத்தக்கது.

11

சுக பாக்கியாதிபதி தோன்றுஞ் ஜென்ம லக்கனத்தில்
தோன்ற, நல்ல சுபக் கோள்களிலிருந்து நோக்க ஜென்

மனுக்கு ராஜயோகந்தாயே, அதுகேள - சுகன் நீலன்
வெள்ளி மேக, சுருதிபடி வியத்தில் மாலும் நிற்க,
கூறும் - சுருதிபடி மறு தகப்பனென்றுரைத்தேன் சென்
மனுக்கு மகளே!

பொருள் :- சுகாதிபதி, பாக்கியாதிபதி ஆகிய இருவரும் கூடி, லக்கனத்தில் நிற்க, இவர்களை சுபக் கோட்கள் நல்ல ஸ்தானங்களிலிருந்து நோக்க, ஜென்மனுக்கு இராஜயோகமுண்டாகும். சுகாதிபதி, சனி, சுக்கிரன் கூடியிருக்க, 12ல் புதன் இருந்தால், ஜென்மன் மறு தகப்பன் வம்சம் என்றேன் மகளே!

விளக்கம் :- 'சுக பாக்கியாதிபதி' என்றால் 4-9ம் அதிபதிகளின் சேர்க்கையை குறிப்பிடும். இவர்கள் இருவரும் இந்த ஜாதகர்க்குச் சுபர்கள். எனவே, இவ்விருவரும் கூடி முழுச் சுபர் ஸ்தானமான ஜென்ம லக்கனத்தில் இருக்கும்போது, இவர்களுக்கு இராஜயோக பலன்களை அள்ளி வழங்கும் சக்தி ஏற்பட்டு விடும் என்பது முனிவரது கணிப்பு. உண்மையுங் கூட!

4ம் அதிபதி என்பது இவனது மாதாவை குறிப்பிடும். இவருடன், சனி, சுக்கிரன் கூடியிருக்கும் போது இவனது மாதாவுக்கு தன் கணவனைவிட்டு வேறொருவர்பால் காதல் உணர்வு தோன்றி, அதன் விளைவால் ஏற்பட்ட பிள்ளைதான் இந்த ஜாதகர். சனி நீசப்புத்தியை கொடுக்கக் கூடியவன். சுக்கிரன் காதல் வசப்படுத்த கூடியவன். இதன் விளைவாக, இவனது மாதாவுக்கு தவறான காதல் உணர்வு தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், சனி, சுக்கிரன் ஆட்சி, உச்சமாக இருந்தால் மேற்படி துர்பலன் பலிதமாகாது என்பது குறிப்பிடத்தக்கது.

12

சுக்கிரன் நல்ல சுகத்திலேற சோமன் சென்மன்
சனியன் மதியும் நடுவில், சென்மன் - சுகவானாம் விதி
தீர்க்கம் சுருதிவிதி பிசகாது தாயே, அதுகேள் - கொக்
கி்ு து போல் துயிலாள் குமரனுக்கு எட்டாண்டி லரிட்டம்
கூறும் - குமரனுக்கு யோக மெத்த குறிநிலையை கூர்ந்து
செப்பு மகளே!

பொருள் :- சுக்கிரன் சுபஸ்தானமென்னும் நான்காமிடத்திலிருக்க, சந்திரன் நின்ற இராசிநாதனும், லக்கினாதிபதியும் சனி, சந்திரன் ஆகிய இருவருக்கும் மத்தியில் இருக்க, ஜென்மன் சுகவான். விதி தீர்க்கமுண்டு. சொன்ன பலன் மாறாது தாயே! அதேசமயம் கொக்கு இறகுபோல் குழவிக்கு எட்டாண்டில் அரிஷ்ட தோஷமுண்டு. கிரக வலியறிந்து கூறுவாயே!

விளக்கம் :- சுக்கிரன் சுகத்திலிருந்தால், நல்ல சுகபோக வசதியுண்டாகும். இராசியதிபதி, லக்கினாதிபதி இவர்கள் கூடியோ (அ) பக்கத்திலோ இருக்கும் போது, ஜாதகரது யோக பலன்கள் அதிகரிக்கும். ஆயுள் பலமும் தீர்க்கமாகும். ஆனால், லக்னாதிபதியும், இராசிநாதனும் சனி, சந்திரனுக்கு மத்தியில் உள்ளதால், எட்டாண்டில் அரிஷ்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவர்கள் வலுவாக இருந்தால் இந்த தோஷமு விலகி விடுமென அறிக.

13

சயனசுகன் தனமேற தனத்தோனும் சயனத்தில் நிற்க
ஜென்மன் - சப்ரமஞ்சன் ஊஞ்சலிலே சயனித்து வாழ்ந்

திருப்பன் தாயே, அதுகேள் - தவமருளால் வந்துதித்தோன்
தங்க நல்ல வீடுகட்டி வாழ்வன், நல்ல - தவசிகளை மயக்கு
மானே தரணி தனிலெடுத்துரைப்பாய், மகளே!

பொருள் :- சயன சுகஸ்தானாதிபதி தனஸ்தானத்தில் இருக்க தனத்தோன் சயனத்தில் இருக்க, ஜென்மன் சப்ரமஞ்சன் ஊஞ்சலிலே ஆடி உல்லாசமாக வாழ்ந்திருப்பான், தாயே! பரமன் அருளால் இவன் நல்ல தங்க வீடு கட்டி வாழ்வன். தவசிகளை மயக்கும் பெண்ணே! புவியோர்க்கு அன்பாய் எடுத்துரைப்பாயே!

விளக்கம் :- 'சயனசுகஸ்தானம்' என்பது 12ம் இடமாகும். 'தனஸ்தானம்' என்பது இரண்டாம் இடமாகும். இந்த 2-12ம் அதிபதிகள் ஒருவர் வீட்டில் ஒருவராக மாறி, பர்வர்த்தனையாக நின்றால், இவனுக்கு அழகான தங்க வீடு கட்டி வாழும் யோகம் உண்டாகும் என்பது முனிவரது கணிப்பு. ஆனால், இவர்கள் ஆட்சி உச்சம் பெற்றிருந்தால்தான், மேற்கூறியவாறு தங்க வீடு கட்டி வாழ முடியும். இல்லையெனில், சாதாரண வீடு கட்டி சுபமாக, உல்லாசமாக வாழ்வாரெனக் கூறுக.

14

நாலவனும் யேழோனும் நவமுடையோன் கருமன் தன
லாபன், கூறும் நல்ல பதியிலேற நயந்தெடுத்து உணர்த்
திடுவாய், தாயே, அதுகேள் - சீலமுள்ள செல்வனுக்கு
செம்பொன் முத்துநாடி பரி ஆள்கள் நல்ல - செந்நெல்
விளை சூளை பூமியுண்டு சாமிநாதன் நிலையறிவாய் மகளே!

பொருள் :- நாலாம் அதிபதி, ஏழாம் அதிபதி, ஒன்பதாம் அதிபதி, கருமாதிபதி, தன லாபாதிபதி - இவர்கள் நல்ல நல்ல வீடுகளில் இருக்க, ஜென்மனுக்கு மிகவும் சிறப்பான நற்பலன்கள் நடைபெறும். செம்பொன், முத்து பொருள் சேர்க்கையுண்டாகும். யானை, குதிரை, சேவை செய்ய பல வேலை ஆட்கள் என பலவித யோகங்கள் உண்டாகும். நல்ல விளை நிலமும், பூமி சேர்க்கையும் உண்டாகும். குருவின் நிலையை அறிந்து கூறுவாய் மகளே!

விளக்கம் :- ஒரு ஜாதகத்தில் 2, 4, 7, 9, 10, 11ம் அதிபதிகள் நல்ல பண வசதியையும், பூமி சேர்க்கை, தொழில் பலத்தைத் தருபவர்கள். இவர்கள் தங்களது ஆட்சி உச்ச வீடுகளிலோ (அ) கேந்திர திரிகோணம் என்னும் சுபஸ்தானங்களிலோ இருந்தால், இந்த ஜாதகர்க்கு பல்வித யோகங்கள் கூடி வரும். சகலவித சுபங்களையும் அனுபவித்து ஒரு இராஜா போல் வாழ்ந்திருப்பார் எனக் கூற வேண்டும்.

குறிப்பு :- 'கருமாதிபதி' என்றால் 10ம் அதிபதி எனவும் தன, லாபாதிபதி என்றால் 2-11ம் அதிபதிகள் எனவும் பொருள் கொள்க. 'சாமிநாதன்' என்றால் 'குரு' என அறிக.

'குரு' தனகாரகன் என்பதால், மேற்படி யோக பலத்தை ஆராயும் போது, குருவின் பலத்தையும் ஆராய வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

15

வியமாறெட்டோன் வீற்றிருந்த நற்பதியின் வினை பலனைக்
கூற, முன்னாள் - போகமுனி செப்பு நூலை விடுகதை

போல் செப்பிடுவாய் தாயே, அதுகேள் - நயம் பயமு மிரண்டுண்டு
நற்பதிக்கு விதிபாகம் ஆய்ந்து, நல்ல - நாட்டிலுள்ள
பேர்களுக்கு நயந்தெடுத்து உரைத்திடுவாய் மகளே!

பொருள் :- *6-8-12ம் அதிபதிகள் நல்ல ஸ்தானங்களில் வீற்றிருக்க, அதனால் விளையும் பலன்களை, முன்னாள் போகர்முனி நூல் பார்த்துக் கூறுகிறேன். கேள் மகளே! நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. ஜென்மனுக்கு லக்ன பாவ பலம் ஆய்ந்து நாட்டில் உள்ளோர்க்கு நயமாக எடுத்துரைப்பாய் தாயே!*

விளக்கம் :- 6-8-12ம் அதிபதிகள் தீமையை செய்பவர்கள் என்பது பொதுவான கருத்து. இவர்களை 'பாவிகள்' என்றும், 'கொடியோர்கள்' என்றும் சாஸ்திர நூல் வல்லுநர்கள் கூறுவது வழக்கம். ஆனால், இவர்கள் தங்களது ஆட்சி, உச்ச வீடுகளிலோ (அ) கேந்திரம், திரிகோணம் என்னும் சுபஸ்தானங்களிலோ இருக்கும் போது, இவர்கள் சற்று திருந்தி, நல்லவர் களாக மாறி நன்மை செய்ய ஆரம்பித்து விடுவர் என்பது முனிவரது கருத்து. லக்ன பாவ பலமும் அதிகமாக இருந்தால், மேற்படி தோஷத்தால் அதிக பாதிப்பு ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

16

பாக்கியத் தோனிருந்த வீட்டோன் பரிவாக ஆக்ஷி யுச்சம்
கோணம் கூறும் - பற்றி நின்ற விடம் பார்த்து பிரிந்துரைப்
பாய் எனக்கறிய தாயே, அதுகேள் - தேக்கி வைத்த நிதி
களெல்லாம் திவாகரனு மறையுமுன்னே ஈவான். நல்ல -
தேன்மொழி மாதருடன் சுகித்திருப்பன் திடவானடி மகளே!

பொருள் :- *பாக்கியாதிபதியிருந்த இராசிநாதன் ஆட்சி உச்சம் பெற்றிருக்க (அ) கோணஸ்தானங்களில் இருக்க ஜென்மனுக்கு கிடைக்கும் பலாபலன்களை கேளம்மா! இதுவரை கொடுக்காமல் தேக்கி வைத்த பொன், பொருள் அனைத்தையும் இவன் மறையும் முன்னே மக்களுக்குக் கொடுத்து மகிழ்வான். அழகாக, இனிமையாக பேசும் மாதருடன் கூடி குலாவியிருப் பான். திடவானடி மகளே!*

விளக்கம் :- 'பாக்கியாதிபதி' என்பது ஒன்பதாம் அதிபதியை குறிப்பிடும். இவர் பிறர்க்குக் கொடுத்து மகிழ்பவர். 'தர்மவான்' என்றும், 'கொடை வள்ளல்' என்றும் பெயர் பெறுவதை விரும்புபவர். பாக்கியாதிபதி எந்த இடத்தில் இருந்தாலும், அவர் நின்ற இராசிநாதன் ஆட்சி உச்சஸ்தானங் களில் இருந்தால், அவர்க்கு தர்மகுணம் ஏற்பட்டு விடும். தான் தேக்கி வைத்த பொருள் அனைத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்து மகிழும் மனப் பக்குவம் உண்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு :- ஒரு கிரகம் இருந்த இராசிநாதனுக்கு, அந்தக் கிரகத்தின் காரகத் துவ பலன்களைச் செய்ய உரிமை உண்டு என்பதை நினைவில் கொள்க. இந்த விதி, மேற்படி சுலோகத்தில் கையாளப்பட்டுள்ளதைக் காண்க.

17

பத்தவனும் மதிக்கேழிற் பாவியுடன் கேந்தரிக்கலா
மோ, முன்னாள் - பதினெண்பேர் செப்பு நூலை பதவுரையாய்
எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - முத்துச்சரம் பூண்ட
மாதே மேதினியில் செல்வனுக்கு யோகம், நல்ல - மூர்த்தி
களை துதிசெய்வன் அமடுவந்து விலகுமடிமகளே!

பொருள் :- *10ம் அதிபதி சந்திரனுக்கு ஏழில் பாவிகளுடன் கூடியிருக்க, முன்னாள் பதினெண் முனிவர்கள் கூறிய பதத்தை ஆராய்ந்து கூறுகிறேன் கேளம்மா! முத்து சரம்அணிந்த மாதே, செல்வனுக்கு நல்ல யோகம் உண்டாகும். மும்மூர்த்திகளை வழிபடுவன். சில துன்பங்கள் வந்து விலகுமடி தாயே!*

விளக்கம் :- *10ம் அதிபதி என்பவர் தசம கேந்திராதிபதி என்கிற அடிப்படையில் நல்லவர். நன்மை செய்ய இவர்க்கு உரிமை உண்டு. இவர் சந்திரனுக்கு சப்தம கேந்திரமான ஏழாமிடத்தில் இருக்கும் போது, அவரது நற்குணம் இன்னும் அதிகரிக்கும். அதிகமான நற்பலன்களைச் செய்வார் எனக் கொள்ளலாம். இவருடன் பாவிகள் கூடியிருந்தால் தீமை செய்ய இடமுண்டு. ஆனால் பாவிகளுக்கு 10ம் இடம் நல்லது. எனவே, 10ம் அதிபதியின் சேர்க்கையும் நல்லது. இவ்வகை காரணங்களால், இந்த ஜாதகனுக்கு நற்பலனும், தீய பலனும் கலந்து நடைபெறும் எனக் கூற வேண்டும்.*

18

சாமிநாதன் வலிமை பெற்று சொல்லும் திரிகோண, கேந்
திரமேற, முன்னாள் - சாமிநாதனுரைத்த நூலை சபை
தனிலே எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - சேயனுக்கு
கரியுமுண்டு ஐரெண்டில் யிராமனிற்க வினையால், நல்ல
அகம் பொருளு பண்டுமுண்டு மனையுமுண்டு சேனையுண்டு
மகளே!

பொருள் :- குரு நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று, கேந்திர திரிகோணங்களில் இருக்க, சாமிநாதன் உரைத்த நூலை சபையிலே எடுத்துரைப்பாய் மகளே! செல்வனுக்கு சகல வித யோகமுண்டு. பத்தாமிடத்தில் புதன் இருக்க, செல்வனுக்கு நல்ல பொருள் சேர்க்கையும், வீடு, மனை பாக்கியமும் உண்டு. படை பலமும் உண்டு மகளே!

விளக்கம் :- பூரண சுபக்கிரகமான குருபரன் ஆட்சி உச்சப்பலத்துடன் இருக்கும்போது, சகல வித சுக பாக்கியங்களும் தானாக வந்துசேரும் என்பது யாவரும் அறிந்த உண்மை. இருப்பினும் அவரவர் ஜாதகப்படி, மற்றக் கிரக அடைவுகளால், குரு யோக நிலையில் பலவீனமாகக் காணப்பட்டால் தீமை செய்ய இடமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

10ல் புதன் இருப்பது நல்லது. காரணம், பத்தாமிடம் ஒரு சுபஸ்தானம். புதனும் சுபர். எனவே நற்பலன்கள் உண்டாகுமென கூறப்பட்டது.

19

எட்டு மூன்று பதினொன்றில் அசுபர் நின்ற விதி கூற
வேணும், முன்னாள் - அகத்தியரால் செப்புநூலை அவனி
தனிலெடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - சையோகன்
கீர்த்தியுள்ளோன் சென்மனுக்கு விதிதீர்க்கம் செப்பு,
நல்ல - சரச மொழி மாதழகி சுருதிவிதி குறிப்பறிவாய் மகளே!

பொருள் :- *8-3-11ல் அசுபர் நிற்க, முற்காலத்தில் அகத்தியர் கூறிய வாக்கினை எடுத்துரைப்பேன் கேள், மகளே! நல்ல யோகங்கள் உள்ளவன். கீர்த்தி நிறைந்தவன். சென்மனுக்கு விதி தீர்க்கமுண்டு. சுருதி விதி மாறாது பண்பாக பகர்வாய் மகளே!*

விளக்கம் :- எட்டு, மூன்று, பதினொன்று ஆகிய மூன்று வீடுகளும் அசுப ஸ்தானங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றில், தீக்கோட்கள் நிற்கும் போது, அவற்றின் பாவக்குணம் அதிகரிக்கும் என்றாலும், சிறப்பு விதிப்படி அவை சுப பலன் கொடுக்கும் தன்மையும் ஏற்பட்டுவிடும். காரணம், கெட்டவர்களுக்கு அசுப வீடுகள் சுபஸ்தானமாகும். எனவே, ஜென்மனுக்கு நல்ல புகழும், செல்வாக்கும் ஓங்கும். ஆயுள் பலம் தீர்க்கமாகும்.

20

ஆறவனுமிரண்டலேற அவனுடனே சேர் கிரகமின்றி
அவனும் தனித்து நின்றால் என்ன பலன் தரணியுள்ளோர்க்
கெடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - அவனிதன்னிலடைக்
கலமாய் அவனிடத்தில் வைத்த பொருள் மோஷம்,
பின்னும் அகம்பொருளும், மனையுமுண்டு பாக்கியவான்
வஞ்சனடி மகளே!

பொருள் :- ஆறாம் அதிபதி 2ம் வீட்டில் நிற்க, அவருடன் வேறு எந்தக் கிரகமும் சேராமல், தனித்து நின்றால், இப்புவியோர்க்கு அவர் அளிக்கும் பலனைக் கேளாய் மகளே! இப்புவியில் இவன் அடைக்கலமாய் சேர்த்து வைத்த பொருள் நாசமாகும். அதேசமயம் பொன் பொருள் சேர்க்கையும் வீடு, மனை பாக்கியமும் உண்டு. வஞ்சன் என்றேன் தாயே!

விளக்கம் :- 6ம் அதிபதி என்பவர் ஜென்மனுக்கு எதிரியாவர். தீமையே செய்யும் எண்ணம் கொண்டவர். இவர் 'குடும்பஸ்தானம்' என்னும் 2ம் வீட்டில் நிற்கும்போது, இவனது குடும்பத்திலுள்ள பணத்தை நாசம் செய்யும் குணம் இவர்க்கு. வருவது இயல்புதான். ஆனால், குடும்பஸ்தானம் என்பது சுபஸ்தானம் என்பதால், எதிரியை அதிக தீமை செய்ய விடாது தடுத்து விடும். எனவேதான், "அகம் பொருளும் மனையுமுண்டு" என முனிவர் கூறுகிறார். பொதுவாக 6ம் அதிபதி 2ல் இருந்தால் சுப பலன், பாவ பலன் இரண்டும் கலந்து, 'சம' பலனாக நடைபெறும் எனக் கொள்ள வேண்டும். 2ம் வீடு சுப வீடாகவோ (அ) 6ம் அதிபதிக்கு நட்பு, ஆட்சி உச்சமாகவோ இருந்தால், சுப பலன் அதிகமாக நடைபெறும் எனக் கொள்ளவும்.

21. 12ம் வீட்டோன் நிலைமை

திரண்ட பனிரெண்டதிபன் திடவானாய் சுபவானாய்
நிற்கில், நல்ல - திருவருளும், பொருளுமுண்டு தேசம் புகழ்
கீர்த்தியுண்டு தாயே, அதுகேள் - திரண்ட கும்பஸ்தனத்
தழகி திருமகள் போல் மாடியுண்டு அதனால், நல்ல - திரு
மகளும் வாசஞ் செய்வள் மருமகளும் நேசம் கொள்வாள்
மகளே!

பொருள் :- 12ம் அதிபதி பலவானாய், சுபவானாய் நின்றால், நல்ல திருவருளும், லட்சுமி கடாக்ஷமும் உண்டாகும். தேசம் முழுவதும் இவனது புகழும், செல்வாக்கும் அதிகரிக்கும். மாடி மெத்தையுண்டு. எனவே, இவனது இல்லத்தில் திருமகளும் வாசம் செய்வாள். மருமகளும் நேசம் கொள்வாள், தாயே!

விளக்கம் :- 12ம் இடம் என்பது 'சயன சுகம்' தரும் ஸ்தானமாகும். இந்த ஸ்தானாதிபதி தன் சொந்த வீட்டிலோ (அ) உச்ச வீட்டிலோ இருக்கும்

போது இவனுக்குப் பொன் பொருள் சேர்க்கையும், புகழும் உண்டாகும். 'சயனசுகம்' அனுபவிக்கக் கூடிய அளவுக்குப் பெரிய மெத்தை வீடு கட்டி வாழ்வான் என்பது இப்பாடலின் கருத்து!

22. மேஷ சூரியன்

மேடத்தில் கதிரோன் நிற்கில் மேதினியில் சேயடையும்
பலனை, மெள்ள - மறை வல்லோர் விதிநூலை மகிழ்ந்து ரைப்பாய்
எனக் கறியத் தாயே, அதுகேள் - மோச வஞ்சன் கொடிய
சென்மன் மேதினியில் நலமாக வாழ்வன், பொல்லா - மகர
மீனம் உயிரானால் மைந்தன் சிறை காவல் கொள்வன் மகளே!

பொருள் :- மேஷத்தில் சூரியன் நின்றால், இத்தரணியில் ஜென்மன் அடையும் பலன் யாதெனில், மோஷவஞ்சகன்; கொடிய குணம் நிறைந்தவன். ஆனால், இப்புவியில் சிறப்பாக வாழ்வான். மகர, மீன லக்னமானால், ஜென்மன் சிறைக்காவல் அதிகாரி என்றேன், மகளே!

விளக்கம் :- மேஷத்தில் நிற்கும் சூரியன் உச்சப் பலனைத் தரவேண்டு மென்பது பொது விதி! காரணம், மேஷம் அவர்க்கு உச்ச வீடு. ஆனால், சூரியன் ஒரு பாவக் கோள். மேஷம் ஒரு பாவ இராசி. எனவே, சூரியன் ஒரு கொடிய பாவியாக மாறிவிடுவார். 'செவ்வாய், சனி வீடுகளில் இருக்கும் சுபரும் பாவராவர்' என்பது அகஸ்தியர் வாக்கு! இதன் விளைவாக சூரியனது வலிமை குன்றிவிடும். அதாவது, உச்சப்பலன் கொடுப்பதற்கு பதிலாக 'நட்பு' பலனே கொடுப்பார் எனக் கொள்ளலாம். அதே சமயம், செவ்வாயும், சூரியனும் நண்பர்கள். எனவே, சூரியன் செவ்வாயின் வீட்டில் நிற்பதால், அதனது வலிமை அதிகரிக்கவும் செய்யும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மொத்தத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் மேஷ சூரியன் ஆட்சி பலன் கொடுக்கும் எனக் கொள்ளலாம். ஆனால், மகர லக்னகாரர்களுக்கு சூரியன் அஷ்டமாதிபதி, மீன லக்னகாரர்களுக்கு 6ம் அதிபதி சூரியன் ஆவார். எனவே, இவர்களுக்கு இவர் 'நட்பு' பலனே கொடுப்பார் எனக் கொள்ளலாம். இதன் காரணமாகத்தான் மீன, மகர லக்னக்காரர்கள் சிறைக் காவல் அதிகாரியாக இருப்பார்கள் என முனிவர் கூறுகிறார்.

23

தனத்தோன் தர்மன் மாறிநிற்க தரணிதனில் செய்யும்
பலன் செல்வன், நல்ல - தனவானாம் குணவானாம் தார்
வேந்தர்க் கொப்பாவான் தாயே, அதுகேள் - பஞ்சமனும்
பாக்கியனும் பகருமிரண்டோனிவர்கள் மாரில், நல்ல - பாக்
கியவான் சிலாக்கியவான் பாரும் புலிப்பாணி யேசல் மகளே!

பொருள் :- தனாதிபதி, தர்மாதிபதி ஆகிய இருவரும் வீடு மாறி பரிவர்த்தனையாக இருக்க, ஜென்மனுக்கு நல்ல யோகமுண்டாகும். தரணிதனில் பெரிய தனவந்தனாகவும், குணவானாகவும், பாராளும் மன்னர்க் கொப்பானவாகவும் வாழ இடம் உண்டு. 2-5-9ம் அதிபதிகள் கிரக மாறி, பரிவர்த்தனையாக இருந்தால், ஜென்மன் நல்ல பாக்கிய வானாகவும், செல்வந்தனாகவும் இப்பாரில் இருப்பானடி, தாயே!

விளக்கம் :- இரண்டு, ஐந்து, ஒன்பது ஆகிய இந்த மூன்று வீட்டு அதிபர்களும் நல்ல சுப பலன்களையும், செல்வ பெருக்கையும் அள்ளி

வழங்குபவர்கள். இம்மூவரும் ஒருவர் வீடு ஒருவராக மாறி 'பரிவர்த்தனை' யோகம் பெற்றிருந்தால், இவர்களது வலிமை மேலும் அதிகரித்து, அவர்கள் நினைத்ததைச் சிறப்பான முறையில் செய்யும் ஆற்றல் ஏற்படும் என்பது இப்பாடலின் கருத்து.

24

சிங்கத்தில் குருவேற சேயடையும் பலன் கூறவேணும்
நல்ல - சித்தாதிகள் செப்பும் நூலை சிந்தை வைத்து எனக்
குரைப்பாய் தாயே, அதுகேள் - பங்கமில்லா பாலனுக்கு
பணமும் புதை பொருளுமுண்டாகும், நல்ல - பாலனுக்கு
புத்திரியுண்டாம், புத்தியுண்டு பகர்ந்து சொல்லு மகளே!

பொருள் :- சிம்ம இராசியில் குரு இருக்க, செல்வன் அடையும் பலன் யாதெனில், பங்கமில்லா பாலனுக்கு பணமும், புதை பொருள் சேர்க்கை யுண்டாகும். புத்திர பாக்கியம் உண்டு. நல்ல புத்திர ஞானமும் உண்டு. சரியாக பகர்ந்து கூறுவாய் மகளே!

விளக்கம் :- சிம்மம் என்பது சூரியனின் வீடு. சூரியனுக்கு குரு நட்பு. மேலும், குரு ஒரு பூரண சுபக்கிரகம். குருவுக்கு சிம்மம் நட்பு வீடும்கூட! எனவே, சிம்ம குரு நன்மை செய்வார் என்பது நமது முன்னோர்களின் கணிப்பு. உண்மையுங் கூட!

25

பாக்கியனும் தனபதியும் பக்குவமாய் லாபத்திலேற
சென்மன் - பயனருளால் அடையும் பலன் பார்த்தெனக்கு
எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - பாக்கியமும்
மெத்தவுண்டு பைங்கிளியே லாபனவன் சேர, நல்ல -
பாக்கியமும் புதை பொருளும் பண்டு பொருள் கிட்டு
மடி மகளே!

பொருள் :- பாக்கியாதிபதியும், தனாதிபதியும் கூடி, லாபஸ்தானத்தில் இருக்க, சென்மன் அடையும் பலனை பக்குவமாய் எடுத்துரைப்பாய் தாயே! செல்வனுக்கு பாக்கியங்கள் நிறைய சேரும். லாபாதிபதியும் இவர்களுடன் கூடினால், நல்ல பாக்கியமும், புதை பொருளும் மற்றும் பலவித பொருளும் கிட்டுமடி மகளே!

விளக்கம் :- தன, பாக்கியாதிபதிகள் நல்ல பொருள் சேர்க்கையையும், பாக்கியங்களையும் அள்ளி வழங்குபவர்கள். இவர்கள் இருவரும் கூடினால், "லட்சதிகாரி யோகம்" என ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. இவர்களுடன் லாபாதிபதியும் கூடிவிட்டால், இவன் லட்சாதிபதியாவது உறுதியாகிவிடும். லாபாதிபதி என்பவர் வியாபாரத்தில் நல்ல லாபத்தை அள்ளி வழங்குபவர். இவர்கள் லாபஸ்தானத்தில் இருக்கும் போது கணக்கெடுக்க முடியாத அளவுக்கு பொன் பொருள் வந்து சேரும் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

26

தேளோனும் பதியாகி திடமாக உச்சத்திலோங்க,
அந்த தேடலுடையோன் கோணமேற திரவியவான்

பூமியுள்ளோன் தாயே, அதுகேள் - கால கூட யோகஞ்
சொன்னேன் கனத்த பொருளாபரணஞ் சேரும், நல்ல -
அரசனாயும் சீமானாய்க் காளை கருவிதி தீர்க்கம் மகளே!

பொருள் :- விருச்சிக இராசியே, ஜெனன லக்கனமாகி, லக்கினாதி பதியான செவ்வாய் திடமாக மகர இராசியில் உச்சப் பலத்துடன் ஓங்க, அவர் நின்ற இராசி நாதனாகிய சனி கோணஸ்தானமேற, செல்வன் ஒரு பெரிய திரவியவானாகவும், பூமி சேர்க்கையுடையவனாகவும் இருப்பான். இதுதான் காளகூட யோகம் ஆகும். கனத்த பொருளும், ஆபரண சேர்க்கையும் உண்டாகும். நல்ல அரசனாகவும் சீமானாகவும் இவன் வாழ்வான். இவனுக்கு ஆயுள் பலம் தீர்க்கமுண்டு மகளே!

விளக்கம் :- விருச்சிக லக்ன காரர்களுக்கு, லக்கினாதிபன் செவ்வாய் ஆவார். இவர்க்கு 3-மிடமான மகர இராசி 'உச்ச' வீடாகும். பாவிகளுக்கு 3-மிடம் சுப வீடாகும். எனவே, செவ்வாய் 3ல் இருப்பதே நல்லது. அதுவும் உச்சப் பலத்துடன் இருந்தால், சொல்லவா வேண்டும்? அளவுக்கு மீறிய நன்மையை செய்வாரல்லவா? மேலும், செவ்வாய் நின்ற இராசி நாதனாகிய சனி 1-5-9 என்னும் கோணஸ்தானங்களில் நிற்கும் போது, அவரது வலிமை மேன்மேலும் அதிகரித்து, மிகவும் விசேஷமான சுப பலன்களை அள்ளி வழங்க ஏதுவாகும் என்பதாம்!

27

தன பஞ்சமாதிபதி திரிகோண லாபத்திலேற, அவர்
தயவாக ஈயும் பலன் தரணிதனி லெடுத்துரைப்பாய்
தாயே, அதுகேள் - பணமும் புதை பொருளும் மனை
மெத்தை காடி பரி ஆள்கள், நல்ல - பரமசிவ மருளு
முண்டு பைங்கிளியே கூர்ந்து செப்பு மகளே!

பொருள் :- தன, பஞ்சமாதிபதி திரிகோண, லாபஸ்தானங்களில் ஏற, அவர்கள் தரும் பலா பலன்களைப் புவியோர்க்கு பக்குவமாய் எடுத்துரைப் பாய் மகளே! நல்ல பொருள் சேர்க்கையும், புதையல் யோகமும் உண்டாகும். வீடு, மனை வாங்கும் யோகம் கிட்டும். சேவை செய்ய அநேக வேலை யாட்கள், சயனசுக பாக்கியமும் உண்டு. பரமசிவன் அருளும் உண்டு, மகளே!

விளக்கம் :- 'தன, பஞ்சமாதிபதி' என்றால் 2-5ம் அதிபதிகளைக் குறிப் பிடும். இவர்கள் இருவரும் கூடியிருந்தால், திடீர் திடீரென (லாட்டரி போல்) தனயோகம் வந்து கொண்டிருக்கும். இவர்கள் 1-5-9 என்னும் கோண ஸ்தானங்களிலோ (அ) 11-மிடமென்னும் லாபஸ்தானத்திலோ இருந்தால், செல்வனுக்கு பல வழிகளிலிருந்து தன விருத்தியும், பொன் பொருள் சேர்க்கையும் உண்டாகும். காரணம், இவையாவும் சுபஸ்தானங்கள், தன விருத்தியை தருபவை.

28

பத்தில் பதினொன்றில் பாவி சுபர் நின்றால் வினை
யால் நல்ல - பலன்களையும் அளித்திடுவார் பாக்கி
யவானென்றுரைத்தேன் தாயே, அதுகேள் - பத்தும்
பதினொன்றிருந்தோன்பலமறிந்து எடுத்து ரைப்பாய்

புவியில், நல்ல - படவரவு, அரசிலையைப்
பழிக்கும் அல்குல் பசும் பொன்னே, மகளே!

பொருள் :- பத்து, பதினொன்றாம் இடங்களில் பாவி, சுபர் நின்றால், ஜென்மனுக்கு நல்ல பலன்கள் உண்டாகும். பாக்கியவான் என்றேன், மகளே! பத்து, பதினொன்றதிபர்களின் பலத்தை ஆராய்ந்து கூறுவாயே!

விளக்கம் :- 10, 11ம் வீடுகளில் சுபர், பாவர் இருந்தாலும் நல்ல பலன்களைத் தருவார்கள் என்பது சிறப்பு விதி. இந்த விதியின்படி, முனிவர் இதற்கு சுப பலன்களைக் கூறியுள்ளாரென அறிக.

29. பாதாள இலக்கனம்

பதிக்கு வியம் சுபனேற பாதாள இலக்கனமென்
றறிந்தேன், அன்றும் பரமசிவனருளினாலே பலன்
விதியை எடுத்துரைப்பாய் தாயே, அதுகேள் - பதி
தனமும் மாடியுண்டு மாமயிலே கீர்த்தி பெலவானாம்
கூறும் - மாலைக் கோள் விதி கூர்ந்து மைந்தனுக்கு
யுரைத்திடுவாய் மகளே!

பொருள் :- இலக்கனத்துக்கு பன்னிரண்டில் சுபர் ஏற, பாதாள லக்கன மென்றேன். பரமசிவன் அருளினாலே அதன் விதியை எடுத்துரைப்பாயே. ஜென்மனுக்கு நல்ல தன சேர்க்கையும், மாடியுமுண்டு. நல்ல புகழும் சேரும். தேக பலம் உண்டாகும். மாலைக்கோள் விதியறிந்து சரியாக மைந்தனுக்கு கூறுவாய் மகளே!

விளக்கம் :- 12-மிடம் என்பது பண விரயத்தைத் தரும் ஸ்தானமாகும். அதில் சுபர் இருந்தால், பண விரயத்தைக் கட்டுப்படுத்தி, தனசேர்க்கையை உருவாக்குவார் என்பது இப்பாடலின் கருத்து. காரணம், 12ல் சுபர் இருப்பது இராஜயோகமாகும். மாலைக் கோள் என்பது சுக்கிரனாகும். மேற்படி யோகம் சிறப்பாக நடைபெற வேண்டுமானால், சுக்கிரன் பலமாக இருக்க வேண்டுமென்பது முனிவரது கருத்து!

30. சக்கரவர்த்தியாகும் யோகம்

இல்லாறோன் வியத்தோனும் இருநான்கும் மூவர்
பதிமாற, நல்ல ஈஸ்வரியாள் மைந்தன் நூலை எடுத்து
ரைப்பாய் புவியோர்க்குத் தாயே, அதுகேள் - சல்லா
பேரன் தன சுகனும் சமரசமாய் மாறி நிற்க கோளும்
நல்ல - சதிரோலுச்சம் பெற சக்கரவர்த்தியா யிருப்பனடி
மகளே!

பொருள் :- லக்கனத்துக்கு 6ம் அதிபதி, 12ம் அதிபதி, 8ம் அதிபதியாகிய இம்மூவரும் கிரக மாறி பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்க, நல்ல ஈஸ்வரி மைந்தன் நூல் பார்த்து எடுத்துரைப்பாய் தாயே! நல்ல போக பாக்கியம் உண்டாகும். தனாதிபதியும், சுகாதிபதியும் வீடு மாறி பரிவர்த்தனையாக உச்சப் பலத்துடன் நிற்க, ஜென்மன் சக்கரவர்த்தியாயிருப்பனடி மகளே!

விளக்கம் :- 6-8-12ம் ஸ்தானாதிபதிகள் தீமையை செய்பவர்கள். இம்மூவரும் தங்கள் வீடுகளிலேயே மாறி நின்று கொண்டால், இவர்கள் விபரீத இராஜயோகத்தைத் தருவார்கள் என்பது சிறப்பு விதியாகக் கொள்ளப்படுகிறது. மேலும், 2-4ம் அதிபதிகள் பரிவர்த்தனை அடைந்து உச்சப் பலம் பெறுவது மிகவும் விசேஷமான யோகப் பலத்தைத் தரும்.

எனவே மேற்படி இருவித அமைப்பும் பெற்ற ஜாதகர் சக்கரவர்த்தியாக இருப்பதில் தடையேது?

31. சூரியன் புதன்

கதிர் கணக்கன் ஓரில்லில் கனமாக நின்ற விதிகூற,
முன்னாள் - சித்தர்களால் சொன்ன நூலைக் கண்டித்துச்
செப்பிடுவாய் தாயே, அதுகேள் - பதிபோல வாழ்ந்தி
ருப்பன் மனை மெத்தை காடி பரி இல்லும், நல்ல - பதி
சிம்மம் தனுசு காளை பதியிலமர்ந்தால் நன்று மகளே!

பொருள் :- சூரியனும், புதனும் கூடி பலமாக ஏதாவது ஓர் இராசியில் இருக்க, ஜென்மன் அரசன் போல் வாழ்ந்திருப்பான். வீடு, மனை, மெத்தை, யானை, குதிரை சேவையாட்கள் அனைத்தும் உண்டு. நல்ல இராசிகளாகிய சிம்மம், தனுசு, ரிஷபம் முதலியவற்றில் இருந்தால் மிகவும் நல்லது, மானே!

விளக்கம் :- கதிர் என்றால் சூரியன்; கணக்கன் என்றால் புதன்; இவ்விருவரும் நண்பர்கள். எனவே இவர்கள் கூடி எந்த வீட்டில் இருந்தாலும் நன்மையை செய்வார்கள் என்பது இப்பாடலின் கருத்து. சிம்மம் சூரியனுக்கு ஆட்சி வீடு. தனுசு குருவின் வீடு, ரிஷபம் சுக்கிரனின் வீடு. இவ்வீடுகளில் சூரியன், புதன் இருந்தால், இவர்களது வலிமை மேலும் அதிகரிக்கும் என்பதால், இப்பதியில் இருப்பது நன்று என முனிவர் கூறினார் எனலாம்!

32. புதன் உச்சம்

கணக்கனுச்சனானாலும் காளைக்கு அதிக
வித்தை யுரைத்தேன், அன்றும் - கனத்த பேரம் செய்ய
வல்லோன் கடு மொழியனென்றுரைத்தேன் தாயே,
அதுகேள் - கணக்கனுடன் குரு வெள்ளி கலந்திருக்க
மறையோர்கள் பாசன், நல்ல - கலைமகளும் வாசம்
செய்வள்; கர்த்தன் திருவடி கொள் மகளே!

பொருள் :- புதன் உச்சமாக இருந்தால், செல்வனுக்கு அதிக வித்தை ஞானமுண்டாகும். கனத்த பேரம் செய்யும் ஆற்றல் நிறைந்தவன். கடுமொழியன் என்றேன் தாயே! புதனுடன் குரு, சுக்கிரன் கூடியிருந்தால், செல்வனுக்கு மறையோர்பால் நேசமுண்டு. நல்ல கலைமகளும் இவனது இல்லத்திற்கு வாசம் செய்வாள். அதிக யுக்தி நிறைந்தவன், தாயே!

விளக்கம் :- புதன் வித்தைக்கும், கல்விக்கும் அதிபதி என்பதால், இவர் 'உச்ச' நிலையில் இருக்கும் போது மேற்படி காரகத்துவ பலன்களை விசேஷமாக செய்ய முடியும் எனக் கொள்க. புதனுடன் குரு, சுக்கிரன் கூடியிருக்க புதனின் பலம் பன்மடங்கு அதிகரிக்கும். எனவே, இவனது வீட்டிற்கு கலைமகள்கூட வாசம் செய்வாள் எனக் கூறப்பட்டது. அதாவது, இவன் சகல விஷயங்களிலும் கெட்டிக்காரனாக இருப்பான் எனக் கொள்ளலாம்.

33. புதையல் தனயோகம்

காரியாதி பத்திலோங்க கனத்த சுப சப்தமத்தோன்
நோக்க, கூறும் - கனத்த அட்டோன் நாலிலேற காளைக்
குப் பலனுரைப்பாய் தாயே, அதுகேள் - பாரில் மனைக்

குள்ளாக பந்தனமாய் வைத்திருக்கும் நிதியை, நல்ல -
பாலனுமே மூன்று திசா புத்திகளில் தோண்டி கொள்வன்
மகளே!

பொருள் :- 3ம் அதிபதி பத்தாமிடத்தில் பலமாக நிற்க, சக்தி வாய்ந்த சுப சப்தமத்தோன் நோக்க, பலம் பொருந்திய அஷ்டமாதிபதி நாலில் ஏற, காளைக்கு நல்ல யோகமுண்டாகும். பூமியினுள் பத்திரமாக வைத்திருக்கும் புதையல் தனத்தை மேற்படி மூன்று திசாபுத்தி காலங்களில் தோண்டி எடுத்துக் கொள்வன், தாயே!

விளக்கம் :- காரியாதி என்றால் 3ம் அதிபதியாகும். சப்தமத்தோன் என்பது 7ம் அதிபதியையும், அட்டோன் என்றால் 8ம் அதிபதியையும் குறிப்பிடும். 3ம் அதிபதி 10ல் ஓங்கி பலமாக நிற்பது நல்ல சுப பலன்களைக் கொடுக்கும். இதை சப்தமாதிபதி நோக்கினால் இவரது வலிமை இன்னும் அதிகரிக்கும். 8ம் அதிபதி பாவி என்றாலும் ஆட்சி, உச்சப் பலத்துடன் நாலில் நிற்பது மிகவும் நல்ல பலனை தரும். 4-மிடம் புதையல் கிடைப்பதற்கு பொருத்தமான ஒரு ஸ்தானமென்பதால், இவனுக்குப் புதையல் கிடைக்க வாய்ப்பு உண்டு என்பது முனிவரது கருத்து!

34. சக்கரவர்த்தி

பாக்கியத்தோன் பதியிலேற பதியோரும் திரிகோண
மேற நல்ல - பகரந்தணன் நிதியேற பாலனுக்கு விதி
கூறுவாய் தாயே, அதுகேள் - பாக்கியங்கள் கணக்கெடுக்கப்
பாரில் முடியாது நல்ல பூபன், கூறும் - பதிக்கு சுபர்
லாபன் நோக்க பாரில் சக்கரவர்த்தி என்றேன் மகளே!

பொருள் :- பாக்கியாதிபதி லக்ன கேந்திரமேற, லக்னாதிபதி திரிகோண மேற, அந்தணனாகிய குரு பாக்கியகோணமேற பாலனுக்கு தீர்க்காயுள் உண்டு. கணக்கிலெடுக்க முடியாத அளவுக்குப் பாக்கியங்கள் வந்து சேரும். நல்ல பூபன்; லக்னத்தை சுபர், லாபன் நோக்க, சக்கரவர்த்தியாக இருப்பானடி, தாயே!

விளக்கம் :- திரிகோணாதிபதிகள், திரிகோணங்களிலே இருந்தால் இராஜ யோகம் உண்டாகும் என்பது அகஸ்தியர் வாக்கு! இப்பாடலில், பாக்கியாதிபதி லக்ன கேந்திரம் பெறுவதும், லக்னாதிபதி திரிகோணம் ஏறுவதும் இராஜயோக அமைப்புகளாகும். லக்னத்தை சுபர், லாபன் நோக்குவதும் நல்லதுதான். லக்ன பலன் இன்னும் அதிகரிக்கும். இவ்வகை காரணங்களால், இவனுக்கு சக்கரவர்த்தி யோகம் கிட்டும் எனக் கூறப்பட்டது என யூகிக்கலாம்.

35

பாம்பும் பிரகஸ்பதியும் பாலனுக்கு மோரில்லிலேற
சென்மன் - பாக்கியவானென்று ரைத்தேன் பதினெண்பேர்
நூல் விதிபோல் தாயே, அதுகேள் - பாம்பும் மேதை
கணக்கன் சேர பாக்கியவான் வீரசாலி பயனால்,
நல்ல - பார் புகழும் போகர் நூலால் புலிப்பாணி யேசல்
சொன்னேன் மகளே!

பொருள் :- குருவும், ராகுவும் கூடி ஏதாவது ஓர் இராசியில் இருக்க, ஜென்மன் பாக்கியவான் என்றேன். முன்னாள் பதினெண் பேர் நூல் பார்த்துக் கூறினேன், தாயே! புதனும் ராகுவும் கூடி ஏதாவது ஓர் இல்லில் அமர,

ஜென்மன் பாக்கியவான், வீரசாலி! நல்ல பார் புகழும் போகர் நூல் பார்த்துக் கூறினேன், மகளே!

விளக்கம் :- பாம்பு என்றால் ராகு, கேதுக்களையும், பிரகஸ்பதி என்றால் 'குரு'வையும் குறிப்பிடும்! இவ்விருவரும் கூடியிருப்பது ஒரு நல்ல யோகமாகும். இதைச் சிறப்பு விதியாகக் கொள்க. ராகு, கேதுக்களுடன் சம்பந்தப்பட்ட குரு முழுப்பாவி என்பது பொது விதி! ராகு யோககாரகன் என்பதால், குருவுடன் அவர் கூடுவது மிகவும் பிரபலமான இராஜ யோகத்தைத் தருமெனவும் கொள்ளலாம்!

புதனுடன் ராகு கூடி ஏதாவது ஓர் இராசியில் இருப்பதும் நல்லதுதான். அதாவது, ஜென்மனுக்கு நல்ல மனோ தைரியத்தையும், பாக்கியத்தையும் கொடுப்பார் என்பது போக முனிவரது கருத்து! இந்த யோகம் கிடைக்க வேண்டுமானால், மேற்படி கிரகங்கள் தமது ஆட்சி, உச்ச இராசிகளில் இருக்க வேண்டுமென்பதும் உணரத் தக்கது!

36

> **ஒன்றிரண்டுக் குடைய நீலம் உதிக்கும் தனம் கேந்திர லாபமேற,**
> **சென்மன் ஊராளும் வேந்தனாலும் நன்மையுண்டு மணியன்**
> **சீமான் தாயே, அதுகேள் - பண்டு பொருள் பாக்கியங்கள் பாலனுக்**
> **குண்டாகுமுன் போல், கூறும் பதிரெண்டு மூன்றுடையோன்**
> **பலன் விதியைப் பகர்ந்துரைப்பாய் மகளே!**

பொருள் :- *1-2க்குரிய சனி, தனம், கேந்திரம், லாப ஸ்தானங்களில் நிற்க சென்மன் ஊராளும் வேந்தனாலும் நன்மையை அடைவான். சீமானாய் வாழ்வான் தாயே! பலவித பொன், பொருள் பாக்கியங்கள் பாலனுக்குச் சேரும். இந்தப் பலன் சனி 2-3ம் ஆதிபத்தியம் பெற்று கேந்திர, திரிகோணங்களில் இருந்தால் நடைபெறுமென அறிக.*

விளக்கம் :- சனி 1-2ம் ஆதிபத்தியம் பெறுவது மிகவும் நல்லது. ஜாதகனுக்கு பிறக்கும்போதே பணத்தைச் சேமிக்கும் குணம் உண்டாகி விடுமென்பதை இது தெரியப்படுத்தும். இவ்வாறு நல்ல சுய ஆதிபத்தியம் பெற்ற சனி, சுபஸ்தானங்களான தன, லாபம், கேந்திர ஸ்தானங்களில் இருந்தால், மேற்படி சுப பலன் மேலும் அதிகரிக்கும் என்பது இப்பாடலின் கருத்து.

சனி 2-3ம் ஆதிபத்தியம் பெற்றாலும் நல்லதுதான். இவனும் முன் போல் நல்ல ஸ்தானங்களில் இருந்தால், மேற்படி சுப பலன் மேலும் அதிகரிக்கும் எனக் கொள்க.

37

> **மூன்று நாலுக்குடைய நீலன் மும்மூன்று கேந்திர லாபமேற,**
> **சேய்க்கு - முற்பாகத்தில் சுகமில்லை. மும்மூன்றோனோக்க**
> **வேணும் தாயே, அதுகேள் - பண்டு பொருள் மனையுமில்லும்**
> **பாலனுக்கு உண்டாகும் பின்னால் நல்ல - போகர் பாதம்**
> **வணங்கிச் சொன்னேன் புலிப்பாணி யேசலடி மகளே!**

பொருள் :- *3-4க்குரிய சனி கேந்திரம், பாக்கியம், லாபம் ஏற, இவனது ஆரம்ப கால வாழ்க்கை சோபிக்காது! பாக்கியாதிபதி இவனை நோக்க, பாலனுக்கு பண்டுபொருள் மனையுமுண்டு. நல்ல யோகசாலி என்றேன், தாயே!*

விளக்கம் :- சனிக்கு 3-4ம் ஆதிபத்தியம் கிட்டினாலும் செல்வனுக்கு நல்ல யோகமுண்டாகும். இவன் 1-4-7-10 என்னும் கேந்திர ஸ்தானங்களிலோ (அ) 9-11 என்னும் ஸ்தானங்களிலோ இருந்தால், இவனது சுப பலன் மேலும் அதிகரிக்கும். ஆனால், இவனது ஆரம்ப கால வாழ்க்கை சுமாராகத்தான் இருக்கும். காரணம், சனி ஒரு தீக்கோள், 3ம் ஆதிபத்தியம் வேறு! இவை யிரண்டும் தீமை தருபவை!

38

சுகபஞ்சமாதிபதி தோன்றும் சென்மம் தன லாப மேற சென்மம்
- சுக வானாய்ச் சீமானாய்த் தொல்புவியில் சுகித்திருப்பவன்
தாயே, அதுகேள் - சுகன் நின்ற பதியோனும் சுந்திரமே
ஆறெட்டில் வீழ, சேய்க்கு - சுகம் பொருளு மெத்தயில்லை
சுருதி விதி எடுத்துரைப்பேன் மகளே!

பொருள் :- சுக பஞ்சமாதிபதியாகிய சனி, லக்னம், தனம், லாபமேற, சென்மன் சுகவானாய், சீமானாய் இப்புவியில் சிறப்பாக வாழ்வான். ஆனால், இந்தச் சனி நின்ற இராசிநாதன் 6-8ம் இடங்களில் வீழ, செல்வனுக்குச் சுகமுமில்லை; பொருளுமில்லை; சுருதி விதி பிசகாது எடுத்துரைத்தேன், மகளே!

விளக்கம் :- சுக பஞ்சமாதிபதி என்றால் 4-5ம் அதிபதி என பொருள் படும். அதாவது, 4ம் இடமென்பது சுக ஸ்தானமாகவும், 5-மிடம் பஞ்சம ஸ்தானமாகவும் வரையறுத்து ஜோதிட சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஸ்தானங்களும் ஒரு ஜாதகர்க்கு சுபவீடுகளாகும். எனவே, சனி இவர்களது ஆதிபத்தியம் பெறும்போது, அவரது குரூர குணம் குறைந்து, சுபகுணம் அதிகரிக்க வழி செய்யும். மேலும், இவர் சுப ஸ்தானங்களான லக்னம், தனம், லாபம் ஆகிய ஸ்தானங்களில் இருக்கும்போது இவரது சுப பலம் மேலும் அதிகரித்து இராஜ யோக பலன்களை அள்ளி வழங்குவார் என்பது இப்பாடல் தரும் விளக்கமாகும்! ஆனால், சனி நின்ற இராசிநாதன் 6-8 என்னும் தீய ஸ்தானங்களில் இருக்கும்போது, சனியின் சுப பலம் குன்றி, பாவ பலம் அதிகரிக்கும். இதன் விளைவாக, இந்த ஜாதகர் அசுப பலன்களை அனுபவிக்க நேரிடும் என்பது உணர்தற்பாலது!

39

ஐந்து ஆறுக்குடைய மந்தன் ஐயிரண்டு லாபம் தனமேற, கூறும்
- அலரி மைந்தன் நின்ற இல்லோன் அடுக்கடுக்காய் பொறை
பார்ப்பாய் தாயே, அதுகேள் - ஆறேழுக்குடைய நீலன் ஆறேழு
ஐயிரண்டில் சேர, சேய்க்கு அன்னியஸ்தன் பொருள் சேரும்
அமடு இல்லை அகம்பார்ப்பாய் மகளே!

பொருள் :- 5-6க்குடைய சனி 2-10-11-மிடங்களில் இருக்க, சனி நின்ற இராசிநாதன் பலம் அறிந்து கூறுவாய், மகளே! 6-7க்குரிய சனி 6-7-10-மிடங்களில் இருக்க, அன்னிய மனிதர்களது பொருள் சேரும். தோஷமில்லை! இருக்குமிடம் பார்த்துக் கூறுவாய், தாயே!

விளக்கம் :- சனி 5-6ம் ஆதிபத்தியம் பெறும்போது நல்லதும், கெட்டதும் நடைபெற இடமுண்டு. இவர் சுபஸ்தானங்களான 2-10-11ம் இடங்களில் இருக்கும்போது நன்மை செய்வார் என்றாலும், விசேஷமான சுப பலன்களைக் கூற இயலாது; காரணம், சனி ஒரு முழுப்பாவி! எனவே, சனி நின்ற இராசிநாதன் பலம் அறிந்தே சரியான பலன் கூற முடியும் என்பது முனிவரது கருத்து!

சனி 6-7ம் ஆதிபத்தியம் பெற்றாலும், மேற்கூறியவாறே நன்மையும், தீமையும் செய்ய இடமுண்டு'. இவர் 6-7-10ம் இடங்களில் இருக்கும்போது, அன்னிய மனிதர்களது பொருள் சேர இடமுண்டு என்றாலும், சனி இருக்கும் ஸ்தான பலம் அறிந்தே சரியான பலன் கூற முடியும் என்பது இப்பாடலின் கருத்து!

40

சப்த அட்டம் நிலைமையுள்ளோன் சரத்தில் நிற்க விதி தீர்க்கம்
சேய்க்கு, அன்றும் - ஜனப்பகைஞுன் பொருளுமுள்ளோன் சமய
விதி பார்க்க வேணும் தாயே, அதுகேள் - அஷ்டமத்தோன் பாக்கிய
நஷ்ட மைய்யமில்லை அமர்ந்திருக்க நன்று: நல்ல - சீமானாய்
அதிர்ஷ்டவானாய் அகமுடையோ னென்றுரைத்தேன், மகளே!

பொருள் :- சப்தம, அஷ்டமாதிபதியாக சனி சர இராசியில் இருக்க, செல்வனுக்கு விதி தீர்க்கமுண்டாகும். அதேசமயம், இவன் ஜனப் பகைஞனாகவும், பொருளுமுள்ளவனாகவும் இருப்பான். அவர் இருக்கும் ஸ்தான பலம் அறிய வேணும் தாயே! அஷ்டமத்தோன் பாக்கியாதிபதியாக இருக்க நஷ்டமில்லை; அவ்வாறு அமர்ந்திருக்க நன்று; நல்ல சீமானாய் அதிர்ஷ்டவானாய், யோகமுடையவனாய் வாழ்வான் தாயே!

விளக்கம் :- சனி 7-8ம் ஆதிபத்தியம் பெறும்போது நன்மைக்கும், தீமைக்கும் ஒரு யுத்தம் நடைபெறும். இதன் விளைவாக, இவர் சிறிது நற்பலன் செய்து, மிகுதியான தீய பலனே செய்வார் எனக் கொள்ள வேண்டும். இவர் சர இராசியில் இருந்தால், கொஞ்சம் நற்பலன் செய்ய இடமுண்டு. எனவே, இதன் பலன் பற்றி, சரியாக கூற வேண்டுமானால், சனி இருக்கும் ஸ்தான பலம் அறிந்தே கூற வேண்டுமென்பது இப்பாடலின் கருத்து.

ஆனால், சனி 8-9ம் ஆதிபத்தியம் பெற்றால் அதிக நன்மை செய்ய இடமுண்டு. காரணம், எட்டு ஒன்பதாம் அதிபதிகள் ஒருவருக்கொருவர் சமமான உறவுடையவர்கள். 9ம் ஆதிபத்தியம், எட்டாம் ஆதிபத்தியத்தை விட மிகவும் சக்தி வாய்ந்தது. இவர் நல்ல வீடுகளில் அமர்ந்தால், நிச்சயம் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார் என்பது முனிவரது கருத்து!

இருப்பினும், சனி ஒரு முழுப்பாவி! சனி 8ம் ஆதிபத்தியம் பெற்றால், காரக நாசம் செய்யும் தோஷம் உள்ளது! எனவே, சனி 8-9ம் ஆதிபத்தியம் பெறுவதால், பாவ பலனே அதிகம் செய்ய இடமுண்டு என்பது எமது ஆய்வின் முடிவு! ஆட்சி உச்சம் பெற்றால் நன்மை செய்ய இடமுண்டு!

41

பத்தும் பதினொன்றுடை பதிக்குடைய நீலன் கேந்திர முச்சம்,
ஏற - பாக்கிய வானதிகாரி பக்தனென்றே தெளிந்தனடி தாயே;
அதுகேள் - கொக்கரித்து லாப வியம் கோள் நிலைமையு
மாராய்ந்து பார்த்து, கூறும் - கொங்கணர் நூல் விதிப்படியே
குறித்திடுவாய் புலிப்பாணி யேசல் மகளே!

பொருள் :- 10-11க்குரிய சனி கேந்திரம் (அ) உச்ச இராசிகளில் இருக்க, பாக்கியவானாகவும், மிகுந்த பக்தி நிறைந்தவனாகவும் இருப்பான், தாயே! ஆனால், சனி 11-12ம் ஆதிபத்தியம் பெற்றிருந்தால், சனியின் பலம் ஆராய்ந்து பார்த்துப் பலன் கூறுவாய், மகளே!

விளக்கம் :- *10, 11மிடங்கள் சுபஸ்தானங்கள் என்பதால், சனி 10-11ம் அதிபதியாகி, கேந்திரம் (அ) உச்ச இராசியில் இருந்தால், அதிகமான சுப பலன்களைச் செய்யும் ஆற்றல் தானாகவே வந்து விடுமென்பது சொல்லாமலேயே விளங்கும். ஆனால், 11-12ம் ஆதிபத்தியம் பெற்றிருந்தால், சனி நல்ல பலன்களைச் செய்யும் ஆற்றலை இழந்து விடுவார். அதேசமயம், ஆட்சி உச்சம் பெற்றிருந்தாலோ, கேந்திர, திரிகோண ஸ்தானங்களில் இருந்தாலோ அதிக நன்மை செய்ய இடமுண்டென்பது முற்றிலும் உண்மையே!*

42

பதிக்கு விய மெட்டு ஆறில் பைங்கிளியே உச்சக்கோள் ஏற,
சென்மன் - பாக்கியவான் சம்பத்துள்ளோன் பாலன் விதி நிலை
யறிவாய் தாயே, அதுகேள் - பவுமன் ஆதி பஞ்ச கோள்கள்
பாலனுக்கு விதியை மெள்ள நோக்க, சென்மன் - பாக்கியவான்
தீர்க்காயுள் மனை மாடி காடியுண்டு, மகளே!

பொருள் :- லக்னத்துக்கு 6-8-12ல் உச்சக் கோட்கள் ஏற, செல்வனுக்கு நல்ல சம்பத்தும், பாக்கியமும் வந்து சேரும். ஆயுள் பலமும் தீர்க்கமாகும், தாயே! செவ்வாய் முதலாகவுள்ள பஞ்ச கோள்கள் லக்னத்தை மெதுவாக நோக்க, செல்வனுக்கு தீர்க்காயுளும் உண்டு; பல்வித பாக்கியங்களும், மாட... கூட மாளிகைகளும், வாகன வசதியும் உண்டாகும், மாதே!

விளக்கம் :- 6-8-12ம் இடங்கள் துர்ஸ்தானங்கள் என்றாலும், அவற்றில் உச்சக் கோட்கள் நிற்கும்போது, அவற்றின் துஷ்ட குணம் அடிபட்டு போகும். நற்பலன்கள் உண்டாக வழிவகைகள் உருவாகும். ஆனால், ஆரம்ப காலத்தில், சென்மன் சில கஷ்டங்களை அனுபவித்து, பிறகு நற்பலன்களை அடைவான் என்பது குறிப்பிடத்தக்கது!

செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி - இவ்வைந்தும் பவுமன் ஆதி பஞ்சக் கோட்கள் எனப்படும். இவர்களில் யாராவது ஓரிருவர், லக்னத்தை நோக்கினால், ஜென்மனுக்கு சகலவித யோகமுண்டாகும் என்பதைச் சிறப்பு விதியாகக் கொள்க. இது 'ஒரு யோக அம்சம்' எனக் கணக்கிட்டுக் கொள்க.

43

பத்தில் பத்தோன் சென்மன் சேர பாலன் வெகு பூஷணங்களுள்
ளோன், நல்ல - செங்கோலுக்கதிபதியும் யேசனுக்குத்
தோழமென்றேன் தாயே, அதுகேள் - கன்மன் திரிகோணமேற
காளகூட யோகஞ் சொன்னேன் அதனால், நல்ல - கணித வித்தை
சோதிடத்தை வழங்கும் சேயன் அரசனென்றேன், மகளே!

பொருள் :- லக்னாதிபதி 10ல் இருக்க, 10ம் அதிபதியும் அதே வீட்டில் கூடியிருக்க, ஜென்மன் பல்வகை பூஷணங்களுள்ளோன். செங்கோல் ஏந்தும் வேந்தனாகவோ (அ) அவருக்குத் தோழனாகவோ இருப்பானடி, தாயே! கர்ம ஸ்தானாதிபதி 1-5-9 என்றும் திரிகோணங்களில் இருக்க, ஜென்மனுக்கு காளகூட யோகம் உண்டாகும். நல்ல கணித வித்தையும், ஜோதிட ஞானமும் உண்டாகும். அரசன் என்றேன் தாயே!

விளக்கம் :- *12 பாவாதிபதிகளிலே மிகவும் சக்தி வாய்ந்தவர் லக்னாதி பதிதான்! இவர் தொழில் ஸ்தானம் என்னும் 10ம் இடத்தில் வீற்றிருக்கும்*

போது, இவர்க்கு தொழில் துறையில் சிறப்பாக விளங்க இடமுண்டு. அத்துடன் 10ம் அதிபதியும் அவருடன் கூடி ஆட்சி பலத்துடன் இருக்கும் போது, இவர் தொழிற்துறையில் 'உச்ச' நிலையை அடைய வாய்ப்பு ஏற்படும் என்பது இப்பாடலின் கருத்து! அதாவது, இவர் நாட்டுக்கு இராஜாவாக இல்லாவிட்டாலும், 10 பேரை வைத்து வேலை வாங்கும் அளவுக்கு இராஜ யோக பலனை அடைவார் எனக் கூறலாம். இதுபோல், 10ம் அதிபதி 1-5-9ல் இருந்தால், இவர் தொழிலில் 'உச்ச' நிலையை அடைய நேரிடும். காரணம் 'திரிகோணம்' என்பது முழுச்சுபர் ஸ்தானங்கள்!

44

பதிக்கு நாலோ னிருந்த யில்லோன் பத்தோனும், ஏக வீட்டோன்
மூவர் நல்ல - பதியிலேற பரமன் விதி பாலனுக்கு எடுத்துரைப்பாய்
தாயே, அதுகேள் - பதிபோல வாழ்ந்திருப்பன் பாலன் ஜன
சேர்க்கையுள்ளோன் வல்லோன், நல்ல போகர் அருள் கிருபை
யாலே புலிப்பாணியேசல் சொன்னேன் மகளே!

பொருள் :- நாலாம் அதிபதி இருந்த வீட்டோனும், 10ம் அதிபதியும், ஏக வீட்டானாகிய சூரிய, சந்திரர்களில் ஒருவரும் நல்ல பதியில் ஏற, ஜென்மனுக்கு நல்ல யோகம் உண்டாகும். பதிபோல வாழ்ந்திருப்பான். அநேக ஜனங்களின் ஆதரவு உண்டு. மிகவும் சக்தி வாய்ந்தவன். நல்ல போகர் நூல் பார்த்து புலிப்பாணி கூறினேன், மகளே!

விளக்கம் :- 4ம் அதிபதி சுபர் என்பதால், அவர் நின்ற இராசி நாதனும் சுபராக மாறி விடுவார். 10ம் அதிபதியும் சுபர் ஆவார். இவ்விருவருடன் சூரியன் (அ) சந்திரன் கூடின் இராஜ யோக அம்சம் உண்டாகும் என்பது போகர் வாக்கு! இதை ஒரு சிறப்பு விதியாக எடுத்துக் கொள்க. கிரக வலி நிர்ணயம் செய்யும்பொழுது, இவர்களது இயற்கையான வலிமையுடன் 'கால்' பலன் கூட்டிக் கணக்கிடவும்.

36. கோசார பலன்கள்

குருவின் கோசார பலன்கள்

பாரப்பா இன்னமொன்று பகரக் கேளு
பரமகுரு ஜென்மத்தில் வந்தபோது
கூறப்பா கோதண்ட பாணி வீரன்
கொற்றவனே குடியேறிப் போகச் செய்தார்
சீரப்பா ஜென்மனுக்கு வேதை மெத்த
சிவசிவா செம்பொன்னும் நஷ்டமாகும்
வீரப்பா வேந்தனுட தோஷமுண்டு
விளம்பினேன் கோள்சார வினையைக் கேளே!

பொருள் :- இன்னுமொரு விபரம் சொல்வேன் கேளப்பா! பரமகுரு ஜென்ம இராசிக்கு வரும்போது, கோதண்ட பாணி வீரன் தன் குடியை விட்டு விலகி போகச் செய்தார். மேலும், ஜென்மனுக்குப் பகை பல கூடும். செம்பொன் யாவும் சேதமாகும். அரசனின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். இதுதான் ஜென்ம குருவின் கோள்சாரபலனே!

விளக்கம் :- 'கோசார பலன்' என்பது அவரவர் ஜாதகத்தில் சந்திரன் நிற்கும் இராசி முதலாக, அவ்வப்போது சஞ்சரித்து வரும் நவக்கிரக

சஞ்சாரத்தை எண்ணிப் பார்த்து பலன் கூறுவதாகும். லக்கனம் முதலாகவும் எண்ணிப் பார்த்துப் பலன் கூறலாம். ஆனால், இதன் பலன் இராசியின் பலனில் பாதியளவுதான் பலிதமாகும் என்பதை மனதில் கொள்க.

இராசிப்படியோ (அ) லக்னப்படியோ குரு ஜென்மத்திற்கு வருங்காலம், செல்வனுக்கு அதிக தொல்லைகள் உண்டாகும். இருப்பிடம் விட்டு நகர வைக்கும். பொருள் சேதமுண்டாகும் என்பது இப்பாடலின் கருத்து! ஆனால், குரு ஆட்சி, உச்சம் பெற்றால் இந்த தோஷம் விலகி, நற்பலன்கள் உண்டாகு மென அறிக.

2. குரு 3ல் வந்த பலன்

கேளப்பா குருபதியும் மூன்றிலேறக்
கெடுதிமெத்த செய்வனடா வேந்தன் தானும்
ஆளப்பா அகத்திலே களவும் போகும்
அப்பனே அரிட்டமடா சிசுவுக்கே தான்
கூறப்பா குவலயங்களெல்லாம் மாண்ட
குற்றமில்லா காந்தாரி மகனும் தானும்
வீளப்பா வீமன்கை கதையினாலே
விழுந்தானே மலைபோலே சாய்ந்தான் சொல்லே!

பொருள் :- குரு மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும்பொழுது அதிக தீய பலன்கள் உண்டாகும். வேந்தனாலே அவதூறான பலன்கள் விளையும். வீட்டிலே பொருட்கள் திருடு போகும். சிசுவுக்கு அரிஷ்ட தோஷம் உண்டாகும். இப்புவியெல்லாவற்றையும் ஆண்ட காந்தாரி மகனும், வீமனால் அடிபட்டு வீழ்ந்ததும் இந்த மூன்றாமிட குருவினால் வந்த வினையென்று கூறு மகளே!

விளக்கம் :- மூன்றில் குரு வருவது பொதுவிதிப்படி தீய பலன்களைத் தரும். குரு தனகாரகன்; மன்னன் காரகன் என்பதால் பொருள் திருடு போகுமென்றும், வேந்தனால் கஷ்டம் வரும் என்றும் கூறப்பட்டது. ஆனால், குரு ஆட்சி, உச்சம் பெற்று நின்றால், மேற்படி பாவ பலன் விலகி, நற்பலன் தர வாய்ப்பு உண்டென அறிக.

3. குரு ஆறில் வந்த பலன்

பாரப்பா பரமகுரு ஆறிலேற
பலமுள்ள மாபலிச் சக்கிரவர்த்தி
சீரப்பா சிறைகூடம் சென்றாரப்பா
சிவசிவா தேவர்கள் தன் கொடுமையாலே
ஈரப்பா இராஜ பயம் கலகம் துன்பம்
இல்லறத்தில் களவுபோம் கிலேசம் மெத்த
வீரப்பா வெகுபயமாம் சர்ப்ப தோஷம்
வேந்தன் நின்ற பதியறிந்து வினையைமுட்டே.

பொருள் :- பரமகுரு ஆறில் வர, மிகவும் பலசாலியான மாபலி சக்கர வர்த்திகூட சிறைவாசம் சென்றார் இந்நிலை தேவர்களின் சூழ்ச்சியால் நடந்ததப்பா! மேலும், அரசர்களால் தொல்லையும் கஷ்டமும் உண்டாகும். வீட்டில் பொருள்கள் களவு போகும். பெரிய மனக்கிலேசம் உண்டாகும். மனதில் பீதியும் அச்சமும் குடிபுகும். சர்ப்ப தோஷமும் உண்டு. குரு நின்ற பதிநிலை ஆய்ந்து சரியாக பலன் கூறுவாய், மகளே!

விளக்கம் :- ஆறாமிடமென்பது சத்துருஸ்தானம் என்பதால், ஆறாமிட குருவால் சத்துரு தொல்லை அதிக்மாக இருக்குமெனக் கூறலாம். தேவர்களே பகையாக மாறி, மாபலி சக்கரவர்த்தி சிறை சென்றதும் இதன் காரணமென உணர்க. குரு ஆட்சி, உச்சமாக இருந்தாலோ (அ) சுப ஆதிபத்தியம் பெற்றிருந்தாலோ மேற்படி தோஷம் விலக வாய்ப்புண்டு என அறிக. உதாரணமாக, கடக இராசிக்காரர்களுக்கு, குரு 6-9ம் அதிபதியாகி, 6ல் இருந்தால், ஆட்சி பலம் பெறுவார். எனவே, இவர்களுக்கு 6மிட குரு நன்மையைச் செய்யுமெனக் கூறலாம்!

4. குரு நான்கில் வந்த பலன்

சொல்லப்பா சூதாட்டம் கொடியதப்பா
சுகமுள்ள பஞ்சவர்கள் வினையினாலே
அல்லப்பா அகிலங்கள் எல்லாம் தோற்று
அப்பனே ஆரணியம் சென்றா ரைவர்
நல்லப்பா நாலதனில் குருவுமேற
நாச்சுகமுங்கிட்டாது நலிவு முண்டு
மல்லப்பா மண்ணாலும் பொன்னால் வேதை
மகத்தான குரு பதியின் கடாக்ஷத்தாலே!

பொருள் :- குரு நான்காமிடத்தில் வந்ததால், பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோற்று, தம் பொன், பொருள், சொத்து சுகம் அனைத்தும் இழந்து, காடு சென்றாரப்பா. மேலும், உண்ண உணவுமின்றி, உடல்நலம் குன்றி, இப்புவியில் உள்ள மக்கள் கண்படாது வாழ நேரிட்டது! பொன் பொருளெல்லாம் இவர்களுக்கு வேதையாகவே போய் விட்டது. எல்லாம் இந்த நாலாமிட குருவின் வினைதானே என்று கூறப்பா!

விளக்கம் :- நாலாமிடம் வீடு, மனை, சொத்து, சுகம் முதலியவற்றை நிர்வகிக்கும் ஸ்தானமாகும். எனவே, நாலில் குரு சஞ்சரிக்கும் காலம், அந்த ஜாதகர் தன் நாடு, நகரம், பூமி முதலியவற்றை இழந்து, மக்கள் கண் படாத இடத்தில் ஒழிந்து வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பது இப்பாடலின் கருத்து! குரு கேந்திர, திரிகோணாதிபதியாகவோ (அ) ஆட்சி உச்ச வீடுகளிலோ இருந்தால் மேற்படி தோஷம் விலகி, நற்பலன்கள் ஏற்பட ஏதுவாகுமெனக் கூறுக.

5. குரு எட்டில் வந்த பலன்

மூட்டப்பா யின்னமொரு மொழியைக் கேளு
மூர்க்கமுள்ள வாலியுமோ சத்ருபங்கன்
கூட்டப்பா கோதண்ட பாணி அம்பால்
கொற்றவனே மலை போலே சாய்ந்தான் காளை
நாட்டப்பா ஜென்மனுக்கு நமனால் கண்டம்
நலந்தப்பும் பொருள்சேதம் அரசர் தோஷம்
வீட்டப்பா வேதியனும் மதிக்கு எட்டில்
விளங்கவே வெகுபயமா விளைவு போமே!

பொருள் :- இன்னுமோர் வார்த்தை சொல்வேன்; கேளப்பா! மூர்க்கம், கர்வம் நிறைந்த வாலியும், கோதண்டபாணி அம்பால், மலைபோல் வீழ்ந்தானப்பா! மேலும், ஜென்மனுக்கு எம பயமும், பொருள் சேதமும் உண்டாகும். வேந்தன் பகை, வேதியர் தோஷமும் உண்டாகும். இவை யாவும், சந்திரனுக்கு எட்டில் குரு வருங்காலம் நடைபெறுமென கூறுமப்பா!

விளக்கம் :- எட்டாமிடமென்பது ஆயுள் ஸ்தானம், மாரகஸ்தானம் என்பதால், இவற்றில் எந்தக் கிரகம் வந்தாலும் தீமையே செய்வாரெனக் கொள்ளலாம். குரு வந்தால், வேந்தர் பகை, எம பயம், வேதியர் பகை, பொருள் நஷ்டம் முதலியன ஏற்பட வாய்ப்பு உண்டு. காரணம், குரு மேற்கூறியவற்றிற்கு காரகன்! ஆனால், குரு 2-5-7-9-11ம் ஆதிபத்தியம் பெற்றிருந்தாலோ (அ) ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தாலோ, நல்ல பலன்கள் தர இடமுண்டு! 1-4-10ம் ஆதிபத்தியம் பெற்றால், சமபலனும் 3-6-8-12ம் ஆதிபத்தியம் பெற்றால் பாவ பலனும் நடைபெறுமெனக் கூறுக.

6. குரு 10ல் வந்த பலன்

போமப்பா யின்னமொரு புதுமை கேளு
பொன்னனுமே பால்மதிக்கு பத்திலேற
ஆமப்பா ஆதிசிவன் தெருவு தோறும்
அரகரா ஐயமெடுத் துண்டாரப்பா
ஊமப்பா உத்தமனாயிருந்த புருரன்
உள்ளபடி யறுப்புண்டான் வினையினாலே
வேமப்பா வேந்தனுட ராசி கூர்ந்து
விளம்புவாய் புவியோர்க்கு வினையைத் தானே!

பொருள் :- இன்னுமோர் புதுமை சொல்வேன்; கேளப்பா! சந்திரனுக்கு 10ல் குரு வர, தேவாதி தேவன் ஈசனே தெருத் தெருவாய் சென்று இரந்துண்டு வாழும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது! மேலும், உத்தம புருஷன்கூட, குணம் மாறி திங்கு செய்யும் பண்பு உண்டாகும் இந்தக் குருவாலே! குரு இருக்கும் ஸ்தான பலம் அறிந்து, சரியான பலனை புவியோர்க்குக் கூறுவாயப்பா!

விளக்கம் :- 10-மிடமென்பது ஜாதக நியதிப்படி சுபஸ்தானம் என்றாலும், கோசார நியதிப்படி அசுபஸ்தானமாகும். 10-மிடம் தொழில் ஸ்தானம் என்பதால், 10ல் குரு வருங்காலம் தொழில் முடக்கம் ஏற்பட்டு ஜீவனம் நடத்த முடியாத சூழ்நிலை உருவாகும் என்பது இப்பாடலின் கருத்து! "ஈசனுக்கு 10ல் குரு வர, இரந்துண்டு வாழும் சூழ்நிலை ஏற்பட்டது" என்பது இந்த சுலோக கருத்துக்கு ஓர் உதாரணமாகும். ஆனால், குரு ஆட்சி, உச்சம் பெற்றாலோ, (அ) சுப ஆதிபத்தியம் பெற்றாலோ தோஷ நிவர்த்தியெனக் கூறவும்.

7. குரு 12ல் வந்த பலன்

தானென்ற சந்திரனாம் வியத்திலேற
தவத்தாலே வந்ததொரு இலங்கை வேந்தன்
கோனென்ற இராமன் கை அம்பால் மாண்டான்
குவலயத்தில் சென்மனுக்கு கொடுமை மெத்த
மானென்ற மறலிபயம் பொருளுஞ்சேதம்
மைந்தனே அரிட்டங்கள் வந்து கூடும்
ஊனென்ற போகருட கடாக்ஷத் தாலே
உத்தமனே புலிப்பாணி உரைத்தேன் காணே!

பொருள் :- சந்திரனுக்கு 12ல் குரு வர, தவத்தால் வந்ததொரு இலங்கை வேந்தனாகிய இராவணன் ஸ்ரீராமர் அம்பால் உயிர் நீத்தான்! ஜென்மனுக்கு 12-மிட குருவால் கொடிய துன்பங்கள் உண்டாகும். பொருட்சேதமும், அரிஷ்ட தோஷமும் உண்டாகும். துஷ்ட தேவதை வாசம் செய்து, பீதியை உருவாக்கும். போகர் நூல் பார்த்து, நுட்பமாய் புலிப்பாணி பாடினேனப்பா!

விளக்கம் :- 12-மிடமென்பது மிகவும் பலவீனமான ஸ்தானமாகும். இந்த இடத்தில் குரு வருங்காலம், பலவித கஷ்டங்களும், பொருட் சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்படும் என்பது இப்பாடலில் கருத்து! ஆனால், குரு 2-5-7-9-11 என்னும் ஸ்தானங்களின் ஆதிபத்தியம் பெற்றிருந்தாலோ (அ) ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தாலோ, மேற்படி தோஷம் விலகி, நற்பலன் தர இடமுண்டெனஅறிக.

8. கோசாரப்படி கொடிய பலன் தரும் கிரக நிலைகள்

கேளப்பா குருமூன்றில் கலை தானெட்டு
கேடு செய்யும் சனிஜென்மம் புந்திநாலில்
சீளப்பா சேயேழு செங்கதிரோன் ஐந்தும்
சீறிவரும் கரும்பாம்பு நிதியில் தோன்ற
ஆளப்பா அசுரகுரு ஆறிலேற
அப்பனே திசையினுட வலுவைப்பாரு
மாளப்பா குற்றம் வரும் கோசாரத்தாலே
குழவிக்கு நிரியாணங் கூர்ந்து சொல்லே!

பொருள் :- குரு மூன்றிலும், சந்திரன் எட்டிலும், சனி ஜென்மத்திலும், புதன் நாலிலும், செவ்வாய் ஏழிலும், சூரியன் 5லும், ராகு 9லும், சுக்கிரன் 6-லும் வருங்காலம் குழவிக்கு மிகவும் கஷ்டப் பலன்கள் உண்டாகும். திசாபுத்தி பலன் பார்த்துச் சரியான பலன் கூறுவாயப்பா!

விளக்கம் :- மேலே, ஒவ்வொரு கிரகத்திற்கும் கூறப்பட்ட ஸ்தானங்கள் மிகவும் கொடிய பலன்களைத் தரும் ஸ்தானங்களாகும். உதாரணமாக, சந்திரன் எட்டில் வருங்காலம் சந்திராஷ்டம தினங்கள் எனக் கூறுவர். இந்த இரண்டு நாட்களிலும் எந்தச் சுபக் காரியம் செய்தாலும் அது தோல்வியில் முடியும் என்பது அனுபவ ரீதியான உண்மை! ஆனால், அவரவர் திசா புத்தி கிரக நிலைகள் பலமாக இருந்தால், மேற்படி தோஷத்தால், அதிக பாதிப்பு ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

9. ஏழரை நாட்டுச் சனி

பாரப்பா பனிரெண்டு ஜென்மம் ரெண்டில்
பங்கான முடவன் சஞ்சாரம் நாலில்
சீரப்பா சிரநோயும் அம்மை பேதி
சிவசிவா சல பயமும் பொருளுஞ்சேதம்
கூறப்பா குடியோடிப் போகச் செய்வன்
கொற்றவனே குடும்பத்தில் களவு போகும்
வீரப்பா வெகுபேர்க்கு கொடியோனாகி
விளங்குவோன் புவிதனிலே விளம்பக் கேளே!

பொருள் :- சந்திரனுக்கு பன்னிரண்டு, ஜென்மம், இரண்டாம் இடங்களில் சனி வருங்காலம் மிகவும் கொடிய பலன்கள் உண்டாகும். இதனை ஏழரை சனியன் என்று கூறுவது வழக்கம். சிரசு ரோகம், அம்மை குத்து, பேதி முதலிய நோய்கள் உண்டாகும். ஜல பயமும், பொருட்சேதமும் ஏற்படும். பிறந்த வீட்டை விட்டு வெளியேறச் செய்யும். குடும்பத்தில் பொருள் திருடு போகும். பலர்க்கு இவன் பகையாக இருப்பான் எனக் கூறுவாய், மகனே!

(இதற்கு விளக்கம் தேவையில்லை.)

10. இதுவுமது

கேளப்பா கடகம் தேள் சிம்மம் ஜென்மம்
கெடுதி மெத்த செய்வனடா வேதை தானும்
நாளப்பா நலமாகும் மற்ற ராசி
நரச்சுதமும் கிட்டுமடா வேட்டலுண்டு
கூறப்பா கோதையினால் பொருளுஞ் சேதம்
கொற்றவனே கடன் வந்து தீருமென்றே
ஆளப்பா திசை பாரு வலுவை நோக்கி
அப்பனே முடவன் செய் வலுவை கூரே!

பொருள் :- இன்னும் கேளப்பா! கடகம், விருச்சிகம், சிம்ம இராசிக் காரர்களுக்கு மேற்படி ஏழரை சனியால் பெரிய துன்பம் உண்டாகுமப்பா! மற்ற இராசிக்காரர்களுக்கு அவ்வளவு பெரிய துன்பங்கள் உண்டாகாது! சில சமயம் நற்பலன்களும் நடைபெறும். பெண்களால் பொருட்சேத முண்டாகும். கடன் வந்து தீரும். திசை பலமாக இருந்தால், ஏழரை சனியால் அதிக பாதிப்பு ஏற்படாதென கூறப்பா!

விளக்கம் :- கடக இராசிக்கு அதிபதி சந்திரன், விருச்சிக இராசிக்கு அதிபதி செவ்வாய். சிம்ம இராசிக்கு அதிபதி சூரியன், இந்த மூன்று இராசி அதிபதிகளுக்கும் சனி பகைவர் என்பதால், இந்த இராசிக்காரர்களுக்கு ஏழரை சனி அதிக தீமை செய்யும் எனக் கூறப்பட்டதை நினைவில் கொள்க. மற்றவர்களுக்கு ஏழரை சனி சம பலனாக செய்யும் எனக் கொள்க. ரிஷப இராசிக்காரர்களுக்கு சனி தர்ம, கர்மாதிபதி என்பதால், 12ல் வருங்காலம் மட்டும் தீமை செய்யும். பிறகு வரும் 5 ஆண்டுகளில் நன்மை செய்யும் என அறிக.

11. வாக்கில் சனி

பாரப்பா இன்னமொன்று பகரக் கேளு
பானு மைந்தன் பால்மதிக்கு வாக்கில் வந்தால்
சீரப்பா மேம்பாடு சவுக்கியம் செம்பொன்
சிவசிவா கிட்டுமடா வேட்டல் கூடும்
கூறப்பா கோதையினால் பொருளுஞ் சேரும்
கொற்றவனே குடிநாதன் வலுவைப்பாரு
ஆரப்பா போகருட கடாக்ஷத்தாலே
அப்பனே புலிப்பாணி அறைந்திட்டேனே!

பொருள் :- இன்னுமோர் விபரம் கூறுவேன்; கேளப்பா! 'பானு மைந்தன்' என அழைக்கப்படும் சனி, சந்திரா இராசிக்கு வாக்கு ஸ்தானமென்னும் இரண்டாமிடத்தில் வந்தால், நற்பலன்கள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. நல்ல சௌக்கியம், மேம்பாடு, செம்பொன் கிட்டும். பெண்களால் பொருளும் சேரும். சனி நின்ற இராசிநாதன் வலுவைப் பார்த்துச் சரியான பலன் கூறுவாயப்பா!

விளக்கம் :- சந்திரனுக்கு 12-1-2 ஆகிய மூன்று இராசிகளில், இராசி ஒன்றுக்கு இரண்டரை ஆண்டு வீதம் சுமார் ஏழரை ஆண்டு காலம் சஞ்சரிப்பது, ஏழரை நாட்டு சனி என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது! இந்தச் சனி மிகவும் கொடிய பலன்களைச் செய்யும் என்பது பொதுவான அபிப்பிராயம்!

இதில் முதல் 5 ஆண்டு காலம் மிகவும் கொடிய பலன்களை யும், கடைசி இரண்டரை ஆண்டு காலம் சுமாரான தீய பலன்களையும் கொடுப்பார் என்பது அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மை! சனி நின்ற இராசிநாதன் பலமாக இருந்தால், 2-மிட சனி நன்மை செய்யும் என்பது இப்பாடலின் கருத்து!

37. திசா புத்திப் பலன்கள்

சூரியதிசை பலன்கள்

1. சூரிய திசையில் சூரிய புத்தி பலன்கள்

கூறப்பா கதிருக்கு வருஷம் ஆறு
குணமுள்ள புத்தி நாள் நூத்தெட்டாகும்
பாரப்பா அக்கினியால் பீடையுண்டு
பாங்கான சுபமிருத்துப் பொருளுஞ்சேதம்
ஆரப்பா அறிவார்கள் பிதா மிருத்தியு
அரிதான வாணிபஞ் செயாகாது நஷ்டம்
கோளப்பா கண்ணோவாங் கனலே மீரும்
கொடுமையுள்ள நாளென்று கூறினோமே!

பொருள் :- சூரியனுக்கு திசா வருடம் ஆறு ஆகும். அதன் சுய புத்தியான சூரிய புத்திக்கு 108 நாட்களாகும். இந்த 108 நாட்களில் நடைபெறும் பலனைக் கேளப்பா! அக்கினியால் பீடையுண்டு; அபமிருத்தியு தோஷ முண்டாகும். பொருட்சேதம் ஏற்படும். பிதாவுக்கு தோஷம் காட்டும். வாணிபம் செய்ய முடியாத நிலை ஏற்படும். நஷ்டம் உண்டாகும். இதுவே, சூரிய புத்தியில் நடைபெறும் பலன் என அறிவாயே!

விளக்கம் :- இப்பாடலில், சூரிய புத்தி முழுவதும் அசுப பலன்கள் தரும் எனக் கூறப்பட்டுள்ளது. காரணம், சூரியன் ஒரு பாவக் கோள். ஆனால், சூரியன் கேந்திர, திரிகோணங்களில் இருந்தாலும் (அ) ஆட்சி, உச்சமாக இருந்தாலும், மேற்படி தோஷம் விலகி, நற்பலன்கள் உண்டாகு மென அறிக.

2. சூரிய திசையில் சந்திர புத்தி-6 மாத பலன்கள்

கூறினோம் ரவிதிசையில் சந்திரபுத்தி
குணமான மாதமது ஆறதாகும்
தேறினோம் அதன் பலனைச் செப்பக் கேளு
தீங்கில்லா தனலாபம் சம்பத்துண்டாம்
ஆறினோம் வந்தபிணி தீரும் ரோகம்
அரசரால் மகிழ்ச்சியது தானுண்டாகும்
தேறினோம் ரவிசந்திரன் பொசித்த நாளில்
தீங்கிலா நாளென்று தெளிந்து தானே!

பொருள் :- சூரிய திசையில் சந்திர புத்தியின் காலம் 6 மாதமாகும். அதன் பலனைச் சொல்வேன்; கேளப்பா! நல்ல தனலாபம், சம்பத்துண்

டாகும். வந்த பிணி திரும். அரசரால் நற்பலன்கள் உண்டாகும். சூரிய திசையில் சந்திர புத்தி காலம் நன்மை திரும் காலம் என்று தெளிந்தேனப்பா!

விளக்கம் :- சந்திரன் ஒரு சுபக்கிரகம் என்பதால் நற்பலன்கள் கூறப் பட்டது. சந்திரன் பலவீனமாக இருந்தாலோ (அ) பாவச் சேர்க்கையுடன் இருந்தாலோ தீய பலன்கள் தர இடமுண்டு. எனவே, கிரக வலிவறிந்து பேசுவதே சரியான கருத்து என்பதை உணரவும்.

3. சூரிய திசையில் செவ்வாய் புத்தி
(4 மாதம் - 6 நாள்)

காணவோ ரவிதிசையில் செவ்வாய் புத்தி.
கனதையுள்ள நாளதுவும் நூத்திருபத்தாறாம்
தோணவே அதன் பலனைச் சொல்லக் கேளு
சொல்பெரிய பூமிதளம் செல்வமாடும்
நாணவே நடை காரி நன்றாய்ச் சேரும்
நன்மையுடன் நவதானியம் விளைவுமாகும்
பூணவே பூபாலன் செவ்வாய் தானும்
புகழ்ந்து மனை வீடகத்தில் வாழலாமே!

பொருள் :- சூரிய திசையில் செவ்வாய் புத்தியின் காலம் 4 மாதம், 6 நாள்களாகும். அதன் பலனை நான் சொல்லக் கேட்பாயாக! புகழ்ந்து சொல்லுகின்ற பெரிய பூமியும் செல்வமும் நிறைவாய் உண்டாகும். வாகனம் உண்டாகும். நவதானியம் நன்றாய் விளையும். சொந்தவீட்டில் சுகமாக வாழலாம்.

விளக்கம் :- சூரியனும் செவ்வாயும் நண்பர்கள். எனவே நற்பலன்கள் சொல்லப்பட்டன. எனினும் இப்பலன்களை அடைவதற்கு, செவ்வாய் நட்பு, ஆட்சி, உச்சமாய் இருப்பதோடு சூரியனுக்கு மறைவுஸ்தானங்களில் இல்லாமலும் இருக்க வேண்டும், ஆராய்ந்து பலன் சொல்லுக.

4. சூரிய திசையில் ராகு புத்தி
(10 மாதம்-24 நாள்)

ஆமென்ற ரவி திசையில் ராகுபுத்தி
ஆகாத மாதம் பத்துநாள் மூவெட்டாகும்
போமென்ற அதன் பலனை புகழக் கேளு
பொன்னோடு பெண்ணதுவும் நாசமாகும்
நாமென்ற சத்துருவால் சண்டை யுண்டாம்
நலமில்லா வியாதியது பீடிப்பாகும்
தாமென்ற மனைவியரை பிரித்து வைக்கும்
தகமை யில்லா நாளென்று தணிந்து நில்லே!

பொருள் :- சூரிய திசையில் ராகு புத்தி 10 மாதம் 24 நாள்வரை நடைபெறும். இதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! பொன் பொருளும், பெண்ணதுவும் நாசமாக போகும். சத்துருவால் தகராறு, சண்டை சச்சரவு வந்து சேரும். மோஷமான நோய் பீடிக்கும்

விளக்கம் :- ராகு ஒரு தீக்கோள். சூரியனுக்கு எதிரி! எனவே, இப்புத்தி யில் கொடிய பலன்கள் மிதமிஞ்சி நடைபெற இடமுண்டு. இருப்பினும்,

ராகுவுக்கு உச்ச பலமோ (அ) குரு பார்வையோ இருந்தால் சொற்ப நற்பலன்கள் நடைபெறுமென அறிக.

5. சூரிய திசையில் குருபுத்தி (9 மாதம் - 18 நாள்)

நில் லென்ற ரவிதிசையில் வியாழன் புத்தி
நேர்மையுள்ள நாளதுவும் இருநூத்தி எண்பத்தெட்டு
வில் லென்ற அதன் பலனை விரித்துச் சொல்வோம்
விபரமாய் சம்பத்தும் தனதானிய முண்டாம்
சொல் லொன்றும் தவறாது வினையகலும் பாரு
சொல்லப்பா நாள் இன்பமெய்து வாழலாகும்
பல் லென்ற புத்திரனும் ஆகும் பாரு
பொல்லாத சத்துருவும் வணங்குந்தானே!

பொருள் :- சூரிய திசையில் குரு புத்தி 9 மாதம் 18 நாள் வரை நடைபெறும். இதன் பலனை விரிவாக கூறுவேன்; கேளப்பா! நல்ல தனதான்ய சம்பத்து உண்டாகும். துஷ்ட வினைகள் எல்லாம் அகன்று விடும். இந்தப் புத்திக் காலம் முழுவதும் வாழ்க்கை இன்பகரமாக இருக்கும். நல்ல புத்திர பாக்கியமும் உண்டாகும். சத்துருக்களும் அடிபணிந்து வணங்குவார் பாரே!

விளக்கம் :- குரு ஒரு பூரண சுபக் கிரகம் என்பதால், அதிக நன்மை செய்ய இடமுண்டு. மேலும், சூரியனுக்கு இவர் நெருங்கிய நண்பர். எனவே, இப்புத்தியில் பெரும்பாலும் நற்பலன்களே நடைபெறும். இருப்பினும், குரு தன் பகை, நீச வீடுகளில் இருந்தாலோ (அ) பாவர் சேர்க்கையுடன் இருந்தாலோ, தீய பலன்கள் செய்ய இடமுண்டு. எனவே, கிரக வலிவறிந்து பலன் கூற வேண்டுமென்பது உணர்தற் பாலது!

6. சூரிய திசையில் சனி புத்தி (மாதம் 11 - நாள் 12)

வணங்குவார் ரவி திசையில் சனி புத்தி கேளு
வாக்கிலா நாளதுவும் மாதம் பதினொன்று
இணங்குவார் நாளதுவும் முந்நான்காகும்
இதனுடைய பவத்தையினி இயம்பக் கேளு
குணங்குவார் சத்துருவும் மன்னவருந்தானும்
குலை பொருளுஞ்சேதமே ஆக்கி வைப்பார்
பிணங்குவார் பிதிரரு மாரகமே யாவர்
பிலன் கேடு பண்ணி வைப்பான் சனியன்தானே!

பொருள் :- சூரிய திசையில் சனி புத்தி 11 மாதம் 12 நாள்வரை நடைபெறும். இதன் பலன் பின்வருமாறு: சத்துருவும், மன்னரும் ஜென்மனுக்கு பல பொருட்சேதத்தை உருவாக்கி வைப்பார்கள். பிதாவுக்கு மாரக முண்டாகும். பலவித துன்பங்களைக் கொண்டு வந்து சேர்ப்பான் சனியன் தானே!

விளக்கம் :- சூரியனும், சனியும் பகைவர்கள். சனி ஒரு முழுப்பாவி. எனவே, துர்ப்பலன்கள் நடைபெறும் எனக் கூறப்பட்டது! ஆனால், சனி ஆட்சி, உச்சம் பெற்றாலோ (அ) சுபர் சேர்க்கை பெற்றாலோ சுப பலன் நடைபெற வாய்ப்புண்டு என அறிக.

7. சூரிய திசையில் புதன் புத்தி (10 மாதம் - 6 நாள்)

தானென்ற ரவிதிசையில் புதனார் புத்தி
சாதகமாம் மாதம் பத்து நாளாறாகும்
ஆனென்ற அதன் பலனை அறையக் கேளு
அடங்காது வியாதி வந்து பின்னிக் கொல்லும்
வானென்ற வான்பொருளும் சேதமாகும்
வாகுடைய புத்திமதி நாசமாகும்
கோனென்ற குடிகேடு பண்ணி வைக்கும்
கொடுமையுள்ள நாள் தனிலே குடி கேடாமே!

பொருள் :- சூரிய திசையில் புதன் புத்தி 10 மாதம் 6 நாள்வரை நடைபெறும். அதன் பலன் பின்வருமாறு: அடங்காத நோய் வந்து பின்னிக் கொள்ளும். கைப்பொருள் அனைத்தும் சேதமாகும். நல்லோரது புத்திமதி நாசமாகும். குடும்பத்தில் குடிகேடு உண்டாகும். இந்த காலம் முழுவதும், குடும்பத்தில் பல கேடு உண்டாகும் பாரே!

விளக்கம் :- புதன் ஒரு அரை சுபர். புதனுடன் சம்பந்தப்பட்ட கிரகம் சுபரானால், அது சுபராக மாறி விடும். பாவர் சம்பந்தம் பெறின், அது ஒரு பாவியாக மாறிவிடும். இங்கு சூரிய திசை நடைபெறுவதால், அது பாவியாக மாறி, அசுபபலன் தரும் என்பது முனிவரின் கணிப்பு! இருப்பினும், புதன் ஆட்சி, உச்சம், கேந்திர பலம் பெறின் நற்பலன் தர இடமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது!

8. சூரிய திசையில் கேது புத்தி (4 மாதம் - 6 நாள்)

ஆமென்ற ரவி திசையில் கேது புத்தி
ஆகாத நாளதுவும் நூற்றிருபத்தாறு
போமென்ற அதன் பலனை புகலக் கேளு
பொருந்துகின்ற காரியங்கள் சேதமாகும்
நாமென்ற மனைவி தன்னை நாசம் பண்ணும்
நலமில்லா சத்துருவும் நல்குவான் பார்
தாமென்ற இருந்தவிடம் விட்டேக வைக்கும்
தரணிதனில் தண்டம் வரும் சார்ந்து கேளே!

பொருள் :- சூரிய திசையில் கேது புத்தி 4 மாதம் 6 நாள்வரை நடைபெறும். இதன் பலனை விபரமாக கூறுகிறேன், கேளப்பா! பொருந்தி வரும் காரியங்கள் யாவும் சேதமாகும். அன்புள்ள மனைவி தன்னை நாசம் செய்யும். துஷ்ட குணமுள்ள சத்துருவும் நெருங்கி வந்து தொல்லை கொடுப்பான். இருந்த இடம் விட்டு விரட்டிப் போக வைக்கும். தரணிதனில் பொல்லா தண்டமும் வந்து சேரும், பாரே!

விளக்கம் :- சூரியனும், கேதுவும் பகைவர்கள். கேது ஒரு கொடிய பாவி! எனவே, துஷ்டப் பலன்கள் நடைபெறும் எனக் கூறப்பட்டது. கேது தன் உச்ச வீட்டிலோ (அ) திரிகோணத்திலோ இருந்தால், சொற்ப சுப பலன் தர இடமுண்டு என அறிக.

9. சூரிய திசையில் சுக்கிரபுத்தி (1 வருடம்)

கேளப்பா ரவிதிசையில் சுக்கிர புத்தி
கெணிதமுள்ள மாதமது பனிரண்டாகும்

ஆளப்பா அதன் பலனை அறையக் கேளு
ஆகாத சூரியுடன் சூஸ்திர வாய்வு
பாளப்பா ஆகுமடா திரேகந் தன்னை
பகை யதுவுமுண்டாகும் பலனோ யில்லை
வாளப்பா மனையாட்டி சிலுக்குண்டாகும்
வகையுடனே வான்பொருளும் கேடாம் சொல்லே!

பொருள் :- சூரிய திசையில் சுக்கிர புத்தி 1 வருட காலம்வரை நடைபெறும். அதன் பலன் பின்வருமாறு: வாய்வுத் தொல்லை உண்டாகும். திரேகம் மெலிந்து போகும். தேக சூடு அதிகரிக்கும். வீண் பகை உண்டாகும். அற்ப பலன்கூட நடைபெறாது! மனைவியாலும் பிரயோஜனமான பலன் நடைபெறாது! வகையான எல்லா பொருளும் சேதமாகும், பாரே!

விளக்கம் :- சூரியனும், சுக்கிரனும் பகைவர்கள். சுக்கிரன் சுபர் என்பதால், நற்பலன் தருவதுபோல் காண்பித்து, பெருத்த நஷ்டத்தில் தள்ளி விடும் என்பது இப்பாடல் தரும் சுருக்கமான கருத்தாகும்! ஆனால், சூரியனும், சுக்கிரனும் சுபபலம் பெற்றிருந்தால், இப்புத்தி முடிவில் விசேஷமான சுப பலன் ஏற்படும் என்பது அனுபவ ரீதியாக கண்ட உண்மை!

சந்திர மகா திசையின் பலன்கள்

1. சந்திரபுத்தி (10 மாதம்)

சொல்லவே சந்திரதிசை வருஷம் பத்தில்
சுகமுடைய சந்திர புத்தி மாதம் பத்து
நில்லவே யதனுடைய பலனைச் சொல்வோம்
நிகரில்லா மன்னருடன் மகிழ்ச்சியாகும்
சொல்லவே சுயம்வரங்கள் நாட்டில் வைத்து
சுகமான கல்யாணம் ஆகும் பாரு
வெல்லவே சத்துருவை ஜெயிக்க வாகும்
வேணபடி நிதி சேரும் விபரந்தானே!

பொருள் :- சந்திர மகா திசை வருஷம் 10க்கு, சுகமான சுயபுத்தி சந்திர புத்தியாகும். இதன் கால அளவு 10 மாதங்கள். இதன் பலன் பின்வருமாறு: சிறப்பு வாய்ந்த மன்னர்கள் யாவரும் வர, சுயம்வரம் நாட்டில் வைத்து சுகமான கல்யாணம் ஆகும். எதிரிகளை வெல்ல முடியும். நாம் விரும்பிய படி பொருள் சேரும்.

விளக்கம் :- சந்திரன் ஒரு சுபக்கோள் என்பதால் சுப பலன் கூறப் பட்டது. ஆனால், தேய்பிறை சந்திரனாக இருந்தாலோ (அ) பகை, நீச வீடு க்ளில் இருந்தாலோ பாவபலன் நடைபெறுமெனக் கொள்க.

2. செவ்வாய் புத்தி (7 மாதம்)

தானென்ற சந்திர திசை செவ்வாய் புத்தி
தன்மையில்லா நாளதுவும் மாதம் ஏழு
வானென்ற அதன் பலனைச் சொல்லக் கேளு
வாதமுடன் கிரந்தி பித்தம் வாய்வு ரோகம்

ஏனென்ற கள்ளரால் சோபமுண்டாகும்
எளிதான யேந்திழையால் துக்கமுண்டாம்
கோனென்ற கோதையரும் சகோதரத்தால்
கொடுமைகளு முண்டாகும் கூர்ந்து பாரே!

பொருள் :- *சந்திர மகா திசையில் செவ்வாய் புத்தியின் கால அளவு 7 மாதம் ஆகும். அதன் பலனைச் சொல்கிறேன்; கேளப்பா! வாதமுடன் கிரந்தி பித்தம், வாய்வு ரோகம் உண்டாகும். கள்ளர் பயமும், சோரஸ்திரீயால் துக்கமுமுண்டாகும். அரச குல பெண்டிரும் பகையாக மாறுவர். சகோதரர் களாலும் துன்பம் உண்டாகும், பாரே!*

விளக்கம் :- செவ்வாய் ஒரு தீக்கோள் என்பதால் பாவ பலன் கூறப்பட்டது. செவ்வாய் தன் சொந்த வீட்டிலோ (அ) உச்ச வீட்டிலோ இருந்தால் நற்பலன் தர இடமுண்டு என அறிக.

3. சந்திர திசையில் ராகுபுத்தி (1 வருடம் - 6 மாதம்)

பாரப்பா சந்திர திசை ராகுபுத்தி
பகையான நாளதுவும் மாதம் பதினெட்டாகும்
ஆரப்பா அதனுடைய பலத்தைக் கேளு
அடங்காத சத்துருவால் தன நஷ்டமாகும்
வீரப்பா வியாதியது பீடிப்பாகும்
விதியளவும் புத்திமதி நாசம் பண்ணும்
காரப்பா களிறுடனே காலிசாவாம்
கனகமது சிலவாகும் கண்டு தேறே.

பொருள் :- *சந்திர மகாதிசையில் ராகு புத்தி 1 வருடம் 6 மாத கால அளவு நடைபெறும். இதன் பலனை விபரமாக கூறுகிறேன்; கேளப்பா! அடங்காத சத்துருவால் தனநஷ்டம் வந்து சேரும். தேகத்தில் பலவித பீடைகள் வந்து பீடிக்கும். புத்தி பேதலித்துப் போகும். கன்று, காலி, யானை முதலியவை மரணமடையும்! கைப்பணம் விரயமாகும், பாரே!*

விளக்கம் :- ராகு ஒரு முழுப்பாவி. சந்திரனுக்குப் பகைவருங்கூட! எனவே, இந்தத் திசையில் ராகு புத்தி நற்பலன் தர வாய்ப்பில்லை! இருப்பினும், ராகு உச்சம் பெற்றாலோ, கேந்திரம், திரிகோண வீடுகளில் இருந்தாலோ நற்பலன் செய்ய இடமுண்டெனஅறிக.

4. சந்திர திசையில் குருபுத்தி (1 வருடம் - 4 மாதம்)

தேறவே சந்திர திசை வியாழபுத்தி
தீங்கில்லா மாதமது பதினாறாகும்
கூறவே யிருந்த பலன் தன்னைக் கேளு
குணமுடைய மாதர்களும் சோபனமே யுண்டாம்
சேரவே செட்டுடனே லாப முண்டாகும்
செந்நெல் முதல் விளைவாகுஞ் செல்வம் சேரும்
வீரவே வியாதியது நிவர்த்தி யாகும்
வீறான மணியமுடன் வினையகலும் பாரே!

பொருள் :- *சந்திர மகா திசையில் குருபுத்தி 1 வருடம் 4 மாதம்வரை நடைபெறும். இதன் பலனைக் கூறுவேன்; கேளப்பா! நற்குணமுள்ள*

மாதர்களால் சோபனமுண்டாகும். தொழில்துறையில் நல்ல லாபம் கிடைக்கும். நிலத்தில் விளைச்சல் அதிகரிக்கும். செல்வம் சேரும். உடல் வியாதி நிவர்த்தியாகும். துஷ்ட வினைகள் யாவும் அகலும், பாரே.

விளக்கம் :- குரு ஒரு பரிபூரண சுபக்கிரகம். சந்திரனுக்கு இவர் நட்பு. எனவே, நற்பலன்கள் கூறப்பட்டது. குரு 6-8-12ல் இருந்தால் தீமை செய்ய இடமுண்டு. கிரக வலியறிந்து பேச வேண்டுமென்பதை மனதில் கொள்க.

5. சந்திர திசையில் சனிபுத்தி (1 வருடம் - 7 மாதம்)

பாலில்லா சந்திரதிசை சனியன் புத்தி
பகரும் நாள் மாதமது பத்தொன்ப தாகும்
நேரப்பா அதனுடைய பலத்தைச் சொல்வோம்
நேரிழையாள் மரணமதாம் நெஞ்சுதனில் நோவாம்
காரப்பா கனகமது சிலவே யாகும்
கள்ளரால் சோரர் பயம் துக்கமுண்டாகும்
சாரப்பா சத்துருவால் இடஞ்சலு முண்டாம்
சஞ்சலங்களுண்டாகும் தவமே பாழாம்

பொருள் :- சந்திர மகாதிசையில் சனி புத்தி 1 வருடம் 7 மாதம்வரை நடைபெறும். அதன் விபரம் கூறுவேன்; கேளப்பா! கட்டிய மனைவி தானும் மரணமடைவாள். நெஞ்சில் நோயுண்டாகும். பொன் பொருள் யாவும் நாசமாக போகும். கள்ளர் பயம், சோரர் பயம், சத்துரு வாதை முதலிய தொல்லைகள் உண்டாகும். பலவித சஞ்சலங்கள் உண்டாகும், பாரே!

விளக்கம் :- சனி ஒரு முழுப்பாவி! சந்திரனும், சனியும் பகைவர்கள். எனவே, இவரது புத்தியில் சுப பலன்கள் நடைபெற வாய்ப்பில்லை! இருப்பினும், சனி தன் ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தாலோ (அ) யோக வலியில் பலம் பெற்று நின்றாலோ சுப பலன் தர வாய்ப்புண்டு எனக கூறுக.

6. சந்திர திசையில் புதன் புத்தி (1 வருடம் - 5 மாதம்)

பாலில்லா சந்திரதிசை புதன் புத்தி
பகரும் நாள் மாதமது பதினேழாமே
கோலில்லா அதன்பலத்தை கூர்ந்து சொல்வோம்
குணமுடைய மாதர்களும் மனமகிழ்ச்சி யுண்டாம்
நாளில்லா கலியாணம் நடக்கும் பாரு
நன்றான பாக்கியமும் நவதானியஞ் சேரும்
தேளில்லா சத்துருவை செயிக்க லாகும்
தெரிவையர்கள் மோகமுடன் தெளிந்து நிற்பான்.

பொருள் :- சந்திர மகாதிசையில் புதன் புத்தி 1 வருடம் 5 மாதம் நடைபெறும். அதன் பலன் பின்வருமாறு:- நற்குணமுள்ள மாதர்களால் மனமகிழ்ச்சியுண்டாகும். மிகவும் சிறப்பான கல்யாணம் நடக்கும். நல்ல பாக்கியமும், நவதான்யமும் சேரும். சத்துரு ஜெயம் உண்டாகும். பெண்கள் இவன் மீது மோகம் கொள்வர் பாரே!

விளக்கம் :- புதன் ஒரு சுபக்கிரகம். சந்திரனுக்கு புதன் நட்பு. புதனுக்கு சந்திரன் பகை. எனவே, ஆரம்பத்தில் சில தீய பலன்களைக் கொடுத்து.

பின்பு மிகச் சிறப்பான நற்பலன்கள் உண்டாகுமெனக் கொள்ளலாம். புதன் 6-8-12ம் வீடுகளில் பலவீனமாக இருந்தால் தீமை செய்ய இடமுண்டு. கிரக வலிவறிந்து பேச வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

7. சந்திர திசையில் கேது புத்தி (7 மாதம்)

தெரிந்துநின்ற சந்திரதிசை கேது புத்தி
தென்மையில்லா நாளதுவும் மாதம் ஏழு
புரிந்து கொண்ட அதன்பலனைப் புகலக் கேளு
புகழ்பெத்த மார்பில் சிலபிணியு முண்டாம்
பரிந்து கொண்ட பாவையரும் பகைநாசமுண்டாம்
பாங்கான தாய்தந்தை சுதன் மரணமாகும்
விரிந்து கொண்ட வியாதியது விழலாய்ப் பண்ணும்
வீணாக தேசமெங்கும் அலைவன் பாரே!

பொருள் :- சந்திர திசையில் கேதுபுத்தி 7 மாதம் வரை நடைபெறும். இதன் பலனை கேளப்பா! மார்பில் சில பிணிகள் உண்டாகும். பாவையரும் பகையாக மாறுவர். அன்பான தாய் தந்தையரும் மரணமடைவர். வியாதி பெருகி மிகுந்த தொல்லை தரும். வீணாக தேசமெங்கும் இவன் அலைவான், பாரே!

விளக்கம் :- சந்திரனும் கேதுவும் பகைவர்கள், கேது ஒரு கொடிய தீக்கோள். எனவே, தீய பலன்கள் கூறப்பட்டன. கேது உச்சம், திரிகோண பலம் பெற்றால், சொற்ப நன்மை ஏற்பட வாய்ப்புண்டு என அறிக.

8. சந்திர திசையில் சுக்கிரபுத்தி 1 வருடம், 8 மாதம்

கேளப்பா சந்திரதிசை சுக்கிர புத்தி
கெணிதமுள்ள நாளதுவு மாதம் நாலைந்து
ஆளப்பா அதன் பலனை சொல்லக் கேளு
அன்பான லட்சுமியு மனுதினமு நிற்பாள்
வாளப்பா வாகனமும் பொன்முத்து சேரும்
வகையான பூஷணமும் மிகுதி யுண்டாம்
கேளப்பா கலியாணங் கெணிதமுடன் நடக்குங்
கெந்தமுடன் சுகந்தங்கள் அணிவான் பாரே!

பொருள் :- சந்திர மகா திசையில் சுக்கிரபுத்தி ஒரு வருடம் 8 மாதம் வரை நடைபெறும். இதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! அன்பான லட்சுமியும், தினமும் வந்து உதவி செய்வாள். வாகனமும், பொன், முத்து சேர்க்கையுமுண்டாகும். பல்வகை பூஷணங்கள் மிகுதியான அளவில் உண்டாகும். கல்யாணமும் சிறப்பான முறையில் நடக்கும். பல்வகை சுகந்தங்கள் அணிவான் பாரே!

விளக்கம் :- சந்திரனும், சுக்கிரனும் சுபர்கள். இருவரும் பகைவர்கள் என்றாலும், சுபர்கள் என்பதால் அந்த தோஷம் விலகி, நற்பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. சுக்கிரன் தன் பகை, நீச வீடுகளிலோ (அ) 6-8-12 என்னும் துர்ஸ்தானங்களிலோ இருந்தால், பாவ பலன் தர இடமுண்டு. எனவே, கிரக வலிவறிந்து நுட்பமாக பலன் கூறுவாயே!

9. சந்திர திசையில் சூரிய புத்தி (6 மாதம்)

மானே கேள் சந்திர திசை சூரிய புத்தி
மரணநாள் மாதமது ஆறதாகும்
தானே தான் சத்துருவும் அக்கினியின் பயமும்
தாபமுள்ள சுர தோஷம் சன்னி தோஷம்
ஏனேதான் காணுமடா யிறுக்கமது வுண்டாம்
ஏகாந்த தேகமது இருளதுவே யடையும்
தேனே கேள் லட்சுமியும் தேகமுடன் போவன்
திரவியங்கள் சேதமடா சிலவுடனே தீதாம்!

பொருள் :- சந்திர திசையில் சூரிய புத்தி 6 மாதம்வரை நடைபெறும். இதன் பலன் பின்வருமாறு:- சத்துரு தொல்லை, அக்கினி பயம், சுர தோஷம், சன்னி தோஷம் முதலிய அசுப பலன்கள் உண்டாகும். உடலில் சில பிணிகள் தோன்றி இறுக்கம் உண்டாகும். தேகமதில் இருள் சூழ்ந்ததுபோல் காணப்படும். லட்சுமி கடாஷம் விலகிப் போகும். திரவியங்கள் சேதமாகும். அதிக செலவுகள் வரும், பாரே!

விளக்கம் :- சூரியன் ஒரு பாவக்கோள் என்பதால், இந்த மாதிரி துர்ப் பலன்கள் நடைபெறுமெனக் கூறப்பட்டது. சூரியன் கேந்திர, கோணங்களில் ஆட்சி, உச்சமாக இருந்தால் நன்மை செய்ய இடமுண்டு!

3. செவ்வாய் மகாதிசையின் பலன்கள்

1. செவ்வாய் புத்தி (4 மாதம் - 27 நாள்)

ஆமென்ற சேய்திசை வருஷம் ஏழில்
அங்காரகன் புத்திநாள் நூற்று நாற்பத்தேழு
போமென்ற அதன் பலனை புகலக் கேளு
புகழான் அரசர்பகை ஆயுதத்தால் பீடை
தாமென்ற சத்துருவால் வியாதியது காணும்
தனச்சேதம் உடல்சேதம் தானே உண்டாம்
நாமென்ற நகரத்தில் சூனியங்களுண்டாம்
நாடெல்லாம் தீதாகும் நன்மையில்லாப் பகையே.

பொருள் :- செவ்வாய் திசை வருஷம் ஏழுக்கு, செவ்வாய் புத்தியின் கால அளவு 4 மாதம் 27 நாள் ஆகும். அதன் பலன் வருமாறு: அரசர் பகை வந்து சேரும். ஆயுதத்தால் பீடை உண்டாகும். சத்துருவால் வியாதி வந்து தொல்லை கொடுக்கும். தனச்சேதம், உடல் சேதம் தானே உண்டாகும். நகரத்தில் பலவகை சூனியங்கள் உண்டாகும். நாடெல்லாம் பல கொடூர நிகழ்ச்சிகள் நடைபெறும். நன்மையில்லாத பகை பல வந்து சேரும்.

விளக்கம் :- செவ்வாய் ஒரு தீக்கோள் என்பதால் பாவ பலன்கள் கூறப் பட்டது. செவ்வாய் ஆட்சி, உச்சமாக இருந்தாலோ (அ) கேந்திர கோணங் களில் இருந்தாலோ சுப பலன் நடைபெறும் வாய்ப்புண்டு என அறிக.

2. செவ்வாய் திசையில் ராகுபுத்தி
(1 வருடம் - 18 நாள்)

பகையான சேய்திசை ராகு புத்தி
பாங்கில்லா நாளதுவும் வருஷம் ஒன்று
துகையில்லா நாளதுவும் பதினெட்டாகும்
துன்பங்கள் சுர தோஷம் வாத பீடை
வகையில்லா சத்துருவும் அக்கினியு முண்டாம்
வளங்கொடியாள் விரோதமது வகையுடனே காட்டும்
நகையுடனே பூஷணங்கள் நலமில்லா சிலவாம்
நன்மையில்லா நிலை விட்டு நடப்பான் காணே!

பொருள் :- *செவ்வாய் திசையில் ராகுபுத்தி 1 வருடம் 18 நாள் நடைபெறும். இதன் பலன் பின்வருமாறு: பல்வகை துன்பங்கள் உண்டாகும். சுரதோஷம், வாதபீடை, சத்துரு பயம், அக்கினி பயம், களத்திர பகை, பொன், பொருள், நகை நாசமாக போகும். வீண் செலவுகள் உண்டாகும். தரங்கெட்டு திரிவாள் இவனது களத்திரம் பாரே!*

விளக்கம் :- செவ்வாயும், ராகுவும் பகைவர்கள், கொடிய பாவிகள், எனவே, தீய பலன்கள் கூறப்பட்டன. ஆனால், தனது உச்ச வீட்டிலோ (அ) திரிகோணங்களிலோ நின்றால் நற்பலன் தர வாய்ப்புண்டென அறிக.

3. செவ்வாய் திசையில் வியாழ புத்தி
(11 மாதம் - 6 நாள்)

காணவே சேய்திசை வியாழ புத்தி
கனமான நாளதுவு மாதம் பதினொன்று
நாணவே நாளதுவும் ஆறதாகும்
நன்றாக அதன் பலனை நவிலக் கேளு
பூணவே பூவையரும் பொருந்தியிருப்பான்
புகழான் சிலவுடனே சிறப்புண்டாகும்
தோணவே சத்துருவும் வணக்கமாவான்
தொடுத்த தொரு காரியங்கள் வெற்றியாமே!

பொருள் :- *செவ்வாய் திசையில் வியாழ புத்தி 11 மாதம் 6 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! நற்குணமுள்ள மாதருடன் நட்பாக பொருந்தியிருப்பான். செலவு வந்தாலும், புகழும் சேர்ந்து வரும். சத்துருக்களும் பணிந்து நடப்பர். தொடுத்த காரியங்கள் யாவும் வெற்றியாகும் பாரே!*

விளக்கம் :- வியாழன் ஒரு சுபக்கோள். செவ்வாய்க்கு நண்பர். எனவே, நற்பலன்கள் நடைபெறுமெனக் கூறப்பட்டது. வியாழன் பகை, நீசமாக இருந்தாலோ (அ) 6-8-12ல் மறைந்து நின்றாலோ அசுப பலன்கள் நடைபெற வாய்ப்புண்டு! கிரக வலிவறிந்து பேசுவது அவசியம்!

4. செவ்வாய் திசையில் சனிபுத்தி

(1 வருடம், 1 மாதம், 13 நாள்)

வெற்றியில்லா சேய்திசை சனியன் புத்தி
வீறான நாளதுவும் மாதம் பதிமூன்று
சத்தியில்லா நாளதுவும் ஒன்பதாகும்
சுகமில்லை அதன்பலனை சூட்டக் கேளு
புத்தியில்லா சத்துருவும் ரோக பயமுண்டாம்
பூவையரும் புத்திரரும் புனிதமுடன் மடிவாம்
தத்தியில்லா தர்க்கங்கள் மெத்தவுண்டு பாரு
கனதையுள்ள சூனியமும் கனாவுடனே காணும்.

பொருள் :- செவ்வாய் திசையில் சனி புத்தியின் கால அளவு *1 வருடம், 1 மாதம், 9 நாள் ஆகும். அதன் பலனைக் கேளப்பா! புத்தி கெட்ட சத்துருவால்* தொல்லை உண்டாகும். ரோக பயம் உண்டு. பூவையரும், புத்திரரும் மரணமடைவர். அநேக தர்க்கங்கள் உண்டாகும். சூனியத் தோஷமும் கனவில் காணச் செய்யும் பாரு!

விளக்கம் :- சனி ஒரு தீக்கோள். செவ்வாய்க்குப் பகைவரும்கூட! எனவே, தீய பலன்கள் கூறப்பட்டன. சனி ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தாலோ (அ) யோக பலத்தில் ஓங்கி நின்றாலோ நன்மை செய்ய இடமுண்டென அறிக.

5. செவ்வாய் திசையில் புதன் புத்தி

(11 மாதம், 27 நாள்)

காணவே சேய்திசையில் புதனார் புத்தி
கணக்கான நாளதுவும் மாதம் பதினொன்று
பூணவே நாளதுவும் மூணொன்பதாகும்
பூட்டான அதன் பலனை புகலக் கேளு
பேணவே ஓடிவந்த பிரமியமும்
பெரிதான நீரிழிவும் பிறன்கேடு பண்ணும்
தோணவே தோகையரும் வியாதியாவான்
தொடுத்த தொரு காரியங்கள் பொல்லாப்பாமே!

பொருள் :- செவ்வாய் திசையில் புதன் புத்தி 11 மாதம், 27 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! நீரிழிவு நோய் உண்டாகும். பிறரால் கேடு உண்டாகும். இவனது குடும்பஸ்திரீகள் வியாதியால் அவதிப்படுவர். எடுத்த காரியங்கள் யாவும் தோல்வியில் முடியும் பாரே!

விளக்கம் :- புதன் ஒரு அரை சுபர். செவ்வாய் ஒரு தீக்கோள். எனவே, புதனும் அசுபராக மாறி பாவம் செய்வார் என்பது இப்பாடலின் கருத்து! ஆனால், புதன் தன் ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தால், நன்மை செய்வார் என்பது குறிப்பிடத் தக்கது.

6. செவ்வாய் திசையில் கேது புத்தி (7 மாதம்)

ஆகுமே செவ்வாயில் கேது புத்தி
ஆகாத நாளதுவும் நூற்றிருபத்தியேழு

போதவே பலன்தனை பூட்டக்கேளு
பூவையரும் புத்திரரும் வியாதியாகும்
ஏகுமே வியாதியது கூடிக் கொல்லும்
இன்பமுள்ளயின விரோதம் தானுமுண்டாம்
சாகுமே சத்துருவும் பிசாசு தானும்
சஞ்சலங் களதினாலே கோடி தானே!

பொருள் :- செவ்வாய் திசையில் கேது புத்தி 4 மாதம் 27 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! இவனது களத்திரமும், புத்திரரும் வியாதியால் கஷ்டப்படுவர். வியாதி அதிகமாகி மரணமடையச் செய்யும். உறவினர் பகையுண்டாகும். சத்துரு தொல்லை, பிசாசு தொல்லையினால் சஞ்சலங்கள் கோடி உண்டாகும், பாரே!

விளக்கம் :- கேது ஒரு கொடிய தீக்கோள். திசா நாதனாகிய செவ்வாய்க்குப் பகை. எனவே, தீய பலன்கள் கூறப்பட்டன. கேது, உச்சம், திரிகோண வீடுகளில் இருந்தால் நற்பலன் தர இடமுண்டு!

7. செவ்வாய் திசையில் சுக்கிரபுத்தி
(1 வருடம், 2 மாதம்)

தானென்ற சேய்திசையில் சுக்கிரன்புத்தி
தாழ்வான மாதமது பதினாலாகும்
வீணென்ற அதின் பலனை வினவக் கேளு
விரசாவு சத்துருவால் விலங்கு முண்டாம்
ஏனென்ற யீனஸ்திரீ போக முண்டாம்
இன்பமில்லா துன்பமது இடஞ்சல் காட்டும்
கோனென்ற இராஜாவால் கலக முண்டு
கோதண்டம் தான் வருகும் கொடுமை பாரே!

பொருள் :- ()செவ்வாய் திசையில் சுக்கிர புத்தி 1 வருடம் 2 மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! சத்துருவால் வீரச் சாவு உண்டாகும். கையில் விலங்கு மாட்ட நேரிடும். ஈன ஸ்திரீ போக முண்டாகும். இன்பமில்லாத துன்பம் வரும். பல இடைஞ்சல்களும் தலை நீட்டும். அரசரால் கலகம் உண்டாகும். கடுமையான தண்டனை வரும் பாரே!

விளக்கம் :- சுக்கிரன் ஒரு சுபக்கோள் என்றாலும், திசாநாதன் பாவியாக இருப்பதால், திசாநாதனின் வலி நமக்கு உட்பட்டு இவர் பாவ பலன்களைச் செய்வார் என்பது இப்பாடலின் கருத்து! ஆனால், சுக்கிரன் ஆட்சி உச்சமாக இருந்தால் நற்பலன் செய்ய இடமுண்டென அறிக.

8. செவ்வாய் திசையில் சூரியபுத்தி
(4 மாதம், 6 நாள்)

பாரப்பா செவ்வாயில் சூரிய புத்தி
பாங்கான நாளதுவும் நூற்றிருபத்தியாறு

ஆரப்பா அதன் பலனை அறையக் கேளு
ஆனதொரு சம்பத்து ஐஸ்வரிய முண்டாம்
சாரப்பா சத்துருவும் உறவாகிப் போவான்
சஞ்சலங்கள் தானகலும் சம்பத்துண்டாம்
சேரப்பா சிலதலங்கள் சேரப் பண்ணும்
தீங்கில்லா சிவவேடம் பூணுவானே!

பொருள் :- செவ்வாய் திசையில் சூரிய புத்தி 4 மாதம் 6 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன். கேளப்பா! நல்ல சம்பத்தும் ஐஸ்வரியமும் உண்டாகும். சத்துருவும் மித்துருவாக மாறி விடுவர். சஞ்சலங் கள் தானாக அகன்று விடும்! சில சிவ ஸ்தலங்கள் சென்று, சிவ வேடம் பூணுவான், பாரே!

விளக்கம் :- செவ்வாயும், சூரியனும் நண்பர்கள். எனவே, நற்பலன்கள் உண்டாகும் எனக் கூறப்பட்டது! ஆனால், சூரியன் தன் பகை, நீச வீடுகளில் இருந்தாலோ (அ) 6-8-12 என்னும் துர்ஸ்தானங்களில் இருந்தாலோ அசுப பலன்கள் செய்ய இடமுண்டென அறிக.

9. செவ்வாய் திசையில் சந்திரபுத்தி (7 மாதம்)

பூணுவான் செவ்வாயில் சந்திரபுத்தி
புகழான நாளதுவும் மாதம் யேழு
ஆணுவான் அதன் பலனை அன்பாய்க் கேளு
ஆயிழை யாளருகிருந்து செல்வபதி யாவாள்
கோணுவான் கொடியோர்கள் வணக்கஞ் செய்வார்
கொற்றவனே குவலயத்தில் பேர் விளங்கும்
ஊணுவான் தோகையரும் புத்திரருமுண்டாம்
உதித்த தொரு குலதெய்வம் உறுதிகாணே!

பொருள் :- செவ்வாய் திசையில் சந்திர புத்தி 7 மாதம்வரை நடை பெறும். அதன் பலனைக் கேளப்பா! பெண்கள் இவன் அருகிருந்து சேவை செய்வர்; அதன் காரணமாக இவனுக்கு நல்ல மரியாதை உண்டாகும். கொடியோர்களும் இவனைக் கண்டு தலை வணங்குவர். இப்புவியில் இவன் புகழ் எங்கும் பரவும். புத்திர, புத்திரிகள் உண்டு. குலதெய்வம் நன்மை செய்யும் பாரே!

விளக்கம் :- செவ்வாயும், சந்திரனும் நண்பர்கள். சந்திரன் ஒரு சுபக் கோள். எனவே, நற்பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது. சந்திரன் தன் பகை, நீச வீடுகளில் இருந்தால், தீமை செய்ய இடமுண்டென அறிக.

4. ராகு மகா திசையின் பலன்கள் [18 வருடம்]

1. ராகுபுத்தி (2 வருடம், 8 மாதம், 12 நாள்)

காணவே ராகுதிசை வருஷம் பதினெட்டு
கனதையுள்ள ராகுவினில் ராகுபுத்தி

தோணவே மாதமது முப்பத்தி ரெண்டு
துகையான நாளதுவும் பனிரெண்டாகும்
யேனவே சத்துருவால் நிபந்தனையோடும்
யெண்ணமுள்ள மனைவியரும் யிருந்தவிடம் பாழாம்
போனவே பழம் பொருளும் சேதமாகும்
பெலமான நோயதுவும் கூடிக் கொல்லும்.

பொருள் :- ராகு திசையின் கால அளவு 18 ஆண்டுகள் ஆகும். இதில், ராகுவின் சுயபுத்தி 2 வருடம், 8 மாதம், 12 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! சத்துரு வாதையும், களத்திர பகையும் உண்டாகும். இருந்த இடம் பாழாய் போகும். பழம்பொருள் சேதமாகும். பெலமான நோயதுவும் வந்து தொல்லை கொடுக்கும்.

விளக்கம் :- ராகு ஒரு கொடிய பாவி! எனவே, தீய பலன்கள் கூறப் பட்டன. ராகு மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் முதலிய இராசிகளில் இருந்தாலோ (அ) உச்ச, திரிகோண வீடுகளில் இருந்தாலோ நற்பலன்கள் உண்டாகுமென அறிக.

2. ராகு திசையில் குரு புத்தி
(2 வருடம், 4 மாதம், 24 நாள்)

கூடியே ராகுதிசை வியாழ புத்தி
குணமுள்ள மாதமது யிருபத் தெட்டும்
நாடியே நாளதும் மூவெட்டும்
நலமுள்ள ராசரால் நன்மையுடன் வாழ்வன்
தேடியே தெரிவையரும் சோபனமே யாகும்
தெவிட்டாத புத்திரனும் தென்புடனே வாழ்வன்
பாடியே பாக்கியமும் பவுசு களுண்டாம்
பலன் தரும் பூமி முதல் யோகந் தானே!

பொருள் :- ராகு திசையில் குருபுத்தி 2 வருடம் 4 மாதம் 24 நாள்வரை நடைபெறும். அரசரால் இவன் நன்மையுடன் வாழ்வான்! பெண்களால் நல்ல சோபனமுண்டாகும். நல்ல மகிழ்ச்சிகரமான புத்திரன் பிறந்து தெம்புடன் வாழ்வான். நல்ல பாக்கியமும், பவுசுகளும் உண்டாகும். பூமியில் நல்ல பலிதமுண்டாகும், பாரே!

விளக்கம் :- குரு ஒரு பூரண சுபக் கிரகம். எனவே, சுப பலன்கள் உண்டாகுமென முனிவர் கூறினார். ஆனால், குரு பலவீனமாக இருந்தால், தீமை செய்ய இடமுண்டு! கிரக வலிவறிந்து பேசுவதே சரியான கருத்தாகும்!

3. ராகு திசையில் சனிபுத்தி
(2 வருடம், 10 மாதம், 6 நாள்)

தானென்ற ராகுதிசை சனிபுத்தி கேளு
தன்மையில்லா மாதமது முப்பத்தி னாலு

நானென்ற நாளதுவும் ஆறதாகும்
நலமில்லா பிரமை கொண்டு நாடுநகர் திரிவன்
கோனென்ற பிதிர் பீடையுண்டாகும் பாரு
கொடியிடையாள் நோவாகும் குழந்தையது சாவாம்
தேனென்ற தேவதையின் இடைஞ்சலுண்டாம்
தெண்டமுடன் சத்துருவும் திரவியங்கள் சேரும்.

பொருள் :- ராகு திசையில் சனி புத்தி 2 வருடம் 10 மாதம் 6 நாள் வரை நடைபெறும். நலமில்லா பிரமை கொண்டு கண்ட இடமெல்லாம் திரிந்தலைவான். தந்தைக்குப் பீடை யுண்டாகும். இவன் மனைவிக்கு நோய் உண்டாகும். குழந்தைக்கு மரணம் உண்டாகும். தேவதைகூட பகையாக மாறும். பல்வித கெண்டங்களும், சத்துரு உபாதையும், பொருள் விரயமும் உண்டாகும் பாரு!

விளக்கம் :- ராகு, சனி இருவரும் தீக்கோள்கள். எனவே, துர்ப்பலனகள் உண்டாகுமென கூறப்பட்டது. ஆனால், இருவரும் நண்பர்கள். நல்ல இடங்களில் இருந்தால் விசேஷமான சுப பலன்கள் உண்டாகுமென அறிக.

4. ராகு திசையில் புதன் புத்தி (2 வருடம், 6 மாதம், 18 நாள்)

சேதமில்லா ராகுதிசை புதனார் புத்தி
செப்புநாள் மாதமது முப்பதாகும்
பாதமில்லா நாளதுதான் பதினெட்டாகும்
பகுத்தறியும் அதன் பலனை பகரக் கேளு
வாதமில்லா வாணிபஞ் செட்டாகும் பாரு
வகையான சகோதரமுடன் வாழலாகும்
பேதமுடன் பொருளுண்டாம் பூமிலாபம்
பொங்குமாங் புத்திரனில் புகழ்மிகப்பாரே.

பொருள் :- ராகு திசையில் புதன் புத்தி 2 மாதம் 6 மாதம் 18 நாள் ஆகும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! நல்ல வியாபாரம் கைகூடும். நல்ல ஸ்திரமான சகோதரருடன் வாழ நேரிடும். பொன், பொருள், பூமி லாபம் உண்டாகும். இவனது புத்திரனின் புகழ் நாடெல்லாம் பரவும், பாரே!

விளக்கம் :- புதன் ஒரு சுபக்கிரகம். ராகு யோக காரகன். எனவே, சுப பலன்கள் நடைபெறும் எனக் கூறப்பட்டது! ஆனால், புதன் பலவீனமாக இருந்தாலோ (அ) 6-8-12ம் இடங்களில் இருந்தாலோ துர்ப்பலன்கள் உண்டாகு மென அறிக.

5. ராகு திசையில் கேது புத்தி (1 வருடம், 18 நாள்)

பாரே நீ ராகுதிசை கேது புத்தி
பகருகின்ற மாதமது பனிரெண்டாகும்
சேரேநீ நாளதுவும் பதினெட்டாகும்
செலுத்துகின்ற அதன்பலனை செப்பக் கேளு

ஊரே நீ விரோதமுடன் சத்துருவுமுண்டாம்
உடன்கேடு பண்ணிவைக்கும் உண்மை பாரு
தேரே நீ திரவியங்கள் ஏவலுடன் சேதம்
தீதான காயங்கள் தேகத்தில் காணும்

பொருள் :- *ராகு திசையில் கேது புத்தி 1 வருடம் 18 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! பலர் பகையும், சத்துரு தொல்லையும் உண்டாகும். கெட்ட பலன்கள் உடனடியாக வந்து சேரும். திரவிய சேதம், தேகத்தில் பல காயங்கள் உண்டாகும், பாரு!*

விளக்கம் :- கேது ஒரு கொடிய பாவி; திசாநாதனாகிய ராகுவும் அப்படித்தான்! எனவே, தீய பலன்கள் நடைபெறுமெனக் கூறப்பட்டது!

6. ராகு திசையில் சுக்கிரபுத்தி (3 வருடம்)

காணவே ராகுதிசை சுக்கிர புத்தி
கணக்கான மாதமது ஆறாறாகும்
தோணவே அதன் பலனை சொல்லக் கேளு
தோகையர்கள் தன்னாலே சுகமாகும் பாரு
பூணவே பூமிமுதல் பொருளுஞ் சேரும்
புகழ்பெற்ற அரசரால் சந்தோஷமாகும்
ஊணவே வியாதியது பீடிப்பாகும்
உடன்கேடு வந்ததனால் கலகமாமே!

பொருள் :- *ராகுதிசையில் சுக்கிரபுத்தி 3 வருடம்வரை நடைபெறும். அதன் பலனை கேளப்பா! பெண்களால் அனுகூலமான பலன்கள் உண்டாகும். பொன், பொருள், பூமி சேரும். புகழ் வாய்ந்த அரசரால் லாபமுண்டாகும். பல வியாதிகள் தேகத்தில் வரவும் வாய்ப்புண்டு. உடன் கேடு, கலகம்கூட வந்து சேரலாம், பாரே!*

விளக்கம் :- சுக்கிரன் ஒரு நல்ல சுபக்கிரகம். எனவே, நற்பலன்கள் நடைபெறுமென கூறப்பட்டது. ஆனால், திசாநாதனின் அதிகாரத்துக்குட் பட்டு இவர் தீமை செய்யவும் நேரிடும். எனவே, கடைசி இரு வரிகளில் கெட்ட பலன்கள் கூறப்பட்டது. சுக்கிரன் ஆட்சி, உச்சம் பெறின் பூரண சுப பலன் உண்டு என அறிக.

7. ராகுதிசையில் சூரிய புத்தி (10 மாதம், 24 நாள்)

ஆகுமே ராகு திசை சூரிய புத்தி
அருளில்லா மாதமது பத்தே யாகும்
யேகுமே நாளதுவும் மூவெட்டாகும்
யென்ன சொல்வேனதன் பலனை யியம்பக்கேளு
போகுமே சத்துருவால் வியாதி காணும்
பொருள் சிலவு பூமிமுதல் சேதமாகும்
சாகுமே நாள்தோறும் சண்டையாலே
சதிரான பூமிமுதல் காலி போமே!

பொருள் :- ராகு திசையில் சூரியபுத்தி 10 மாதம் 24 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன். கேளப்பா! சத்துருவால் தொல்லை வந்து சேரும். உடலில் வியாதி காணும். அதிக பொருள் செலவும், பூமி சேதமும் உண்டாகும். நாள்தோறும் சண்டையாலே சாவுமே வந்து சேரும். நல்ல பூமியும் காலியாகி விடும்!

விளக்கம் :- ராகுவும், சூரியனும் பகைவர்கள். சூரியன் ஒரு தீக்கோள். எனவே, துர்ப்பலன்கள் கூறப்பட்டன. சூரியன் ஆட்சி, உச்சப் பலம் பெற்றாலோ (அ) குரு பார்வை பெற்றாலோ நற்பலன்கள் உண்டாகுமென அறிக.

8. ராகு திசையில் சந்திரபுத்தி (1 வருடம், 6 மாதம்)

காலியென்ற ராகுதிசை சந்திர புத்தி
கனமில்லா மாதமது ஈரோன் பதாகும்
வேலியென்ற அதன் பலனை விளம்பக் கேளு
விதமில்லா மனைவி தன்னால் பொருளுஞ் சேதம்
வாலியென்ற குரங்கதுபோல் மாண்டு போவான்
வகையான தேசம்விட்டு அலைவன் பாரு
மாலியென்ற மனைவியால் சுகபோக மில்லை
மக்கள்முதல் மாடுடன் கேடாங் கேளே!

பொருள் :- ராகு திசையில் சந்திரபுத்தி 1 வருடம் 6 மாதம்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! குணம் கெட்ட மனைவியாலே பொருள் சேத முண்டாகும். வாலி என்ற குரங்கு போல் இவன் மரணம் அடைவான். தனது தேசம் விட்டு, வெளியிடம் சென்று அலைவான். தனது மனைவியாலே சுகபோகம் உண்டாகாது. தன் குழந்தைகளுக்கும், மாடுகளுக்கும் கேடு உண்டாகும், பாரே!

விளக்கம் :- ராகுவும், சந்திரனும் பகைவர்கள். எனவே, துர்ப்பலன்கள் உண்டாகும் எனக் கூறப்பட்டது! சந்திரன் ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தாலோ (அ) சுபர் சேர்க்கை பெற்றாலோ நற்பலன்கள் உண்டாகுமென அறிக.

9. ராகுதிசையில் செவ்வாய் புத்தி (1 வருடம், 18 நாள்)

கேளப்பா ராகுதிசை செவ்வாய் புத்தி
கேடான நாளதுவும் வருஷம் ஒன்று
நாளப்பா நாளதுவும் பதினெட் டாகும்
நன்மையில்லா அதன் பலனை நவிலக் கேளு
ஆளப்பா அக்கினியும் சோரபய முண்டாம்
அடிபணியும் தேவதையால் அவதி யுண்டாம்
பாளப்பா பாவையரும் பலனுந் தீதாம்
பாழாகும் பொருள் சிலவும் பலவிதமுந்தானே!

பொருள் :- ராகு திசையில் செவ்வாய் புத்தி ஒரு வருடம் 18 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! அக்கினி பயம், சோர பயம் உண்டாகும். நீச தேவதையால் அவதி மெத்த உண்டாகும். பெண்களால் கெட்ட பலன்கள் வந்து சேரும். பல வழிகளிலும் தாறுமாறாக பொருள் செலவு வந்து சேரும், பாரே!

5. குரு மகா திசையின் பலன்கள் [16 வருடம்]

1. குரு புத்தி (2 வருடம், 1 மாதம், 18 நாள்)

தானென்ற வியாழ திசை ஒரு பத்தாறு
தன்மையுடனதன் புத்தி வருஷம் ரெண்டு
நானென்ற நாளவும் நாற்பத் தெட்டு
நன்றாக அதன் பலனை நவிலக்கேளு
கோனென்ற ராசாவும் குரு வருளுமுண்டு
குறைவில்லா திரவியங்கள் வெகு லாபமுண்டாம்
ஆனென்ற பெண் கொடியாள் மனமகிழ்ச்சியுண்டாம்
மங்களமும் சோபனமும் வளருங் கலியாணம்

பொருள் :- வியாழ திசையின் கால அளவு 16 வருடங்களாகும். அதன் சுயபுத்தி 2 வருடம் 1 மாதம் 18 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! மன்னராலும், குருவாலும் நல்ல லாபமுண்டாகும். குறை சொல்ல முடியாத அளவுக்கு திரவியங்கள் சேரும். பெண்களால் நல்ல, சந்தோஷமான பலன்கள் உண்டாகும். மங்களமும், சோபனமும் கல்யாணத்தால் மிகுந்து காணப்படுமப்பா!

விளக்கம் :- குரு ஒரு பூரண சுபக்கிரகம், மிகுந்த வலிமையுடையது. எனவே, விசேஷமான சுப பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது. ஆனால், குரு 6-8-12ம் இடங்களில் இருந்தாலோ (அ) பகை, நீச வீடுகளில் இருந்தாலோ தீய பலன்கள் ஏற்பட இடமுண்டு; அதாவது, நற்பலன், துர்ப்பலன் இரண்டும் கலந்து நடைபெறுமெனக் கொள்க.

2. குருதிசையில் சனி புத்தி (2 வருடம், 6 மாதம், 12 நாள்)

வளருமென்ற வியாழ திசை சனியின் புத்தி
வாகான மாதமது முப்பதுவே யாகும்
வளருமென்ற நாளதுவும் பனிரெண்டாகும்
வண்மையுடன் அதன் பலனை வழுத்தக்கேளு
வளருமென்ற கெர்ப்பமுடன் போகம் சித்தி
வகையுடனே திரவியமும் பூஷணமுஞ் சேரும்
வளருமென்ற மன்னன்போல் வளருமது யோகம்
வாகான தண்டிகையும் வாகன முண்டாம்.

பொருள் :- குரு திசையில் சனிபுத்தி 2 வருடம் 6 மாதம் 12 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! கெர்ப்பம் விருத்தியாகும். போகம் சித்தியாகும். பல்வகை திரவியமும், பூஷணமும் சேரும். மன்னனது வளர்ச்சி போல், அவனது யோகமும் வளரும். அழகான தண்டிகையும், வாகன யோகமும் உண்டாகும், பாரே!

விளக்கம் :- சனி ஒரு முழுப்பாவி. ஆனால், குரு ஒரு பூரண சுபக்கிரகம். சனி, ஒரு பாவியாக இருந்தாலும், திசாநாதனான குருவின் அதிகாரத்துக்கு உட்பட்டு, சனி நன்மை செய்வார் என்பது முனிவரின் கருத்து! சனி ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தால் விசேஷ சுப பலன்களும், பகை, நீச வீடுகளில் இருந்தால் சொற்ப தீய பலன்களும் உண்டாகுமென அறிக.

3. குரு திசையில் புதன் புத்தி
(2 வருடம், 3 மாதம், 6 நாள்)

உண்டாகும் வியாழதிசை புதனார்புத்தி
உண்மையுள்ள மாதமது மூவொன் பதாகும்
தென்றாகும் நாளதுவும் ஆறதாகும்
தெவிட்டாத அதன் பலனை தென்புடனே கேளு
உண்டாகும் மலைபோலே பெருகுஞ் செல்வம்
குறைவில்லா மாதர்மைந்தர் கட்டுடனே வாழ்வன்
சென்றாகும் திருவுடனே பட்டங்கட்டும்
திருவான லெட்சுமியும் சேர்வள் பாரே!

பொருள் :- குரு திசையில் புதன் புத்தி 2 வருடம் 3 மாதம் 6 நாள்வரை நடைபெறும். அதன் பலனை தெம்புடனே கேளப்பா! மலைபோல செல்வ வளம் பெருகும். குறைவில்லாத மனைவி, மக்களுடன் சிறப்பாக வாழ்வர். நல்ல பட்டங்களும், பெயரும் வந்து சேரும். திருமகளும் இவன் இல்லத்தில் வாசம் செய்வாள், பாரே!

விளக்கம் :- குரு, புதன் ஆகிய இருவரும் சுபக்கோட்கள். எனவே, விசேஷமான சுபபலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது. புதன் பலவீனமாக இருந்தால், சொற்ப தீய பலன்கள் நடைபெற இடமுண்டென அறிக.

4. குரு திசையில் கேது புத்தி (11 மாதம், 6 நாள்)

பாரப்பா வியாழ திசை கேதுபுத்தி
பாழாகும் மாதமது பதினொன்றாகும்
சேரப்பா நாளதுவும் ஆறதாகும்
செம்மையில்லா அதன்பலனை செப்பக் கேளு
வீரப்பா வியாதியது கூடிக் கொல்லும்
விதமில்லா மனைவிதன்னால் நிலைவிட்டுப் போவான்
சாரப்பா சத்துருவும் சதஞ்செய்ய வருவான்
சகலசன பாக்கியமும் க்ஷணத்தில் போமே!

பொருள் :- குரு திசையில் கேது புத்தி 11 மாதம் 6 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! கொடிய கேதுவால் பல தீய பலன்கள் உண்டாகும். வியாதியது கூடிக் கொல்லும். துஷ்டக் குண மனைவியால் தன் நிலையிழந்து போவான். சத்துருவும் சதஞ் செய்ய வருவான். சகல ஜனங்களும் பகையாக மாறுவர், பாரே!

விளக்கம் :- கேது ஒரு பயங்கரமான தீக்கோள். எனவே, தீய பலன்கள் உண்டாகுமென கூறப்பட்டது. ஆனால், உச்சம், திரிகோண வீடுகளில் இருந்தால், நன்மை செய்வாரென அறிக.

5. குரு திசையில் சுக்கிர புத்தி (2 வருடம், 8 மாதம்)

போமென்ற வியாழ திசை சுக்கிர புத்தி
பொருள் காணு மாதமது முப்பத்திரண்டு
ஆமென்ற அதன் பலனைச் சொல்லக் கேளு
அருளான லெட்சுமியும் அன்புடனே சேர்வாள்

சுபமென்ற சோபனமும் மனமகிழ்ச்சி யுண்டாம்
சுகமான கன்னியுடன் சுகமுடனே வாழ்வன்
நாமென்ற நாடுநகர் கைவசமே யாகும்
நன்றாக அவனிதனில் நன்மையுடன் வாழ்வான்.

பொருள் :- குருதிசையில் சுக்கிரபுத்தியின் கால அளவு 2 வருடம் 8 மாதம் ஆகும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! அருளான லட்சுமியும் அன்புடன் வந்து சேர்வாள். நல்ல சுப சோபனமும், மனமகிழ்ச்சியும் உண்டாகும். நல்ல கனிவான கன்னியுடன் சுகபோகமாக வாழ்வான். நாடுநகரெல்லாம் இவன் கைவசம் அமையும். இப்புவியில் மிகச் சிறப்பாக வாழ்வான், பாரே!

விளக்கம் :- குரு, சுக்கிரன் ஆகிய இருவரும் மிகவும் சிறப்பு வாய்ந்த சுபக்கோட்கள். எனவே, லட்சுமி கடாக்ஷம் உண்டாகுமெனக் கூறப்பட்டது. இவர்கள் பலவீனமாக இருந்தால்கூட, சொற்ப தீய பலன்களே நடைபெறு மென அறிக.

6. குருதிசையில் சூரியன் புத்தி (9 மாதம், 18 நாள்)

வாமென்ற வியாழதிசை சூரிய புத்தி
வகையுடைய மாதமது ஒன்பதாகும்
தாமென்ற நாளதுவும் பதினெட் டாகும்
தன்மையுடன் அதன்பலனை சாற்றக் கேளு
பாமென்ற பரதேசியாகிப் போவான்
பாங்கான மடபதியில் பரமகுரு ஆவான்
ஞானமென்ற பதியில் நின்றுயோக நிலையை
ஞாபகத்தின் சிவனடியை மறவான் காணே!

பொருள் :- வியாழ திசையில் சூரிய புத்தி 9 மாதம் 18நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! சிவபக்தி உருவாகி பரதேசியாகப் போவான். சிறப்பு வாய்ந்த மடபதியில் பரமகுரு ஆவான். ஞானமுள்ள பதியில் நின்று, பல யோகங்கள் செய்வான். சிவன் நாமம் மறவாமல் ஓதுவான் பாரே!

விளக்கம் :- சூரியனுக்குரிய தேவதை 'சிவன்' என்பதால், இப்புத்தியில் ஜென்மனுக்கு சிவபக்தி உண்டாகி, சிவ ஸ்தலங்கள் சென்று, சிவநாமம் உரைப்பான் எனக் கூறப்பட்டது. அதுமட்டுமல்ல, சூரியனது காரகத்துவ அடிப்படையில் சுப பலன்கள் நடைபெறுமெனக் கொள்க. அதாவது, அரசாங்க அனுகூலம், பிதுர் சொத்து சேர்க்கை, பிதுர் நேசம், புகழ், கௌரவம் ஓங்குதல் போன்ற சுப பலன்களும் நடைபெறுமெனக் கொள்க.

7. குரு திசையில் சந்திர புத்தி (1 வருடம், 4 மாதம்)

காணவே வியாழ திசை சந்திர புத்தி
கனமுள்ள மாதமது பதினாறாகும்
தோணவே அதன் பலனை சொல்லக் கேளு
சுகமடைய கலியாணம் சோபனங்களுண்டாம்
பேணவே சிவிகைமுத்து வெண்குடையு முண்டாம்
பெரிதான ராசாவால் பெருஞ்செல்வ முண்டாம்

பூணவே தாய்தந்தை மனைவியுடன் புத்திரன்
புகழுடன் வாழ்ந்திருப்பான் பூலோகந் தன்னில்

பொருள் :- குருதிசையில் சந்திர புத்தி 1 வருடம் 4 மாதம்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! நல்ல கல்யாணமும், சுகமான சோபனமும் உண்டாகும். சிவிகை யோகமும், முத்து ஆபரண சேர்க்கையும், வெண்குடையும் உண்டாகும். பெரிய அரசர்களால் பெருஞ் செல்வம் வந்து சேரும். தாய், தந்தை, மனைவியுடன் புத்திரனும் சிறப்பாக வும், புகழுடனும் வாழ்ந்திருப்பான் பாரே!

விளக்கம் :- குருவும், சந்திரனும் நல்ல சுபக் கோட்கள். நண்பர்களும் கூட! எனவே, விசேஷமான சுப பலன்கள் கூறப்பட்டது. துர்ஸ்தானங்களில் இருந்தால் சொற்ப தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறுக.

8. குரு திசையில் செவ்வாய் புத்தி (11 மாதம், 6 நாள்)

தன்னிலே வியாழதிசை செவ்வாய் புத்தி
தண்மையில்லா மாதமது பதினொன்றாகும்
விண்ணிலே நாளதுவும் ஆறதாகும்
மாறான பலனதுவை விளம்பக் கேளு
புண்ணிலே அக்கினியால் வியாதி காணும்
பூமியினால் விளைவு குன்றும் மாடாடு சாகும்
விண்ணிலே போனாலும் சத்துருவுண்டு
வீணான விலங்கதுவும் விதிவசமே யாகும்.

பொருள் :- வியாழ திசையில் செவ்வாய் புத்தி 11 மாதம் 6 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! அக்கினியால் வியாதி காணும். பூமியில் விளைச்சல் குன்றிப் போகும். ஆடு, மாடுகள் இறந்து போகும். விண்ணுலகம் சென்றாலும்கூட, சத்துரு தொல்லை வந்து சேரும். விலங்கு மாட்டவும் நேரிடும். இது அவனது தலைவிதி எனக் கூறே!

விளக்கம் :- செவ்வாய் ஒரு தீக்கோள். எனவே, பாவ பலன்கள் நடை பெறுமெனக் கூறப்பட்டது. ஆனால், செவ்வாயும், குருவும் நண்பர்கள். எனவே, நற்பலன்களும் ஏற்பட வாய்ப்புண்டு. செவ்வாய் ஆட்சி, உச்சப்பலம் பெற்றால், விசேஷ சுப பலன்கள் உண்டாகுமெனக் கூறுக.

9. வியாழன் திசையில் ராகுபுத்தி (2 வருடம், 4 மாதம், 24 நாள்)

ஆகமே வியாழதிசை ராகுபுத்தி
அருளில்லா மாதமது யிருபத் தெட்டு
போகுமே நாளதுவு மூவெட் டாகும்
பொல்லாத அதன்பலனைப் புகலக் கேளு
வாகுமே வியாதியது பீடிப்பாகும்
மனைவியரும் புத்திரரும் மாண்டு போகும்
ஏகுமே சத்துருவும் இடஞ்சல முண்டாம்
இதங்கேடு பண்ணி வைக்கும் யிம்மையுடன் கேளே!

பொருள் :- குரு திசையில் ராகுபுத்தி 2 வருடம் 4 மாதம் 24 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! பொல்லாத வியாதி பீடிக்கும். மனைவியரும், புத்திரமும் மாண்டு போவர். சத்துரு தொல்லைகளும், பல இடைஞ்சல்களும் உண்டாகும். பல கேடுகளும் உண்டாகும்,பாரே!

விளக்கம் :- ராகு ஒரு முழுப்பாவி. எனவே, பாவ பலன்கள் நடைபெறுமென முனிவர் கூறினார். ஆனால், ராகு தன் 'உச்ச' வீட்டிலோ (அ) திரிகோணங்களிலோ நற்பலன் தர வாய்ப்புண்டென அறிக. ராகு யோக பலத்தில் ஓங்கி நின்றாலும் சுப பலன்கள் எனக் கொள்க.

6. சனி மகாதிசையின் பலன்கள் [19 வருடம்]

1. சனிபுத்தி (3 வருடம், 3 நாள்)

கேளப்பா சனிதிசையில் மார்க்கங் கேளு
கெடியான வருஷமது பத்தொன்பதாகும்
கேளப்பா சனிபுத்தி வருஷம் மூன்று
கேடான நாளதுவும் மூன்றதாகும்
பாரப்பா பாவையரும் பாலன் தானும்
பாங்கான வருஷம் ஒன்றில் சாவதாகும்
ஆனப்பா அலைச்சலு மெத்த வுண்டாம்
அளவில்லா தனச் சேதமாகுந் தானே!

பொருள் :- சனி திசையின் மார்க்கமதை கேளப்பா! இதன் ஆட்சி காலம் 19 ஆண்டுகள் ஆகும். இதில், இதன் சுயபுத்தி 3 வருடம் 3 நாள்வரை நடைபெறும். இதன் பலனைக் கேளப்பா! பாவையரும், இந்தப் பாலனும் வருஷம் ஒன்றில் மரணமடைய நேரிடும். மிகுந்த அலைச்சலும் உண்டாகும் அளவில்லாத தனச்சேதமும் உண்டாகும்.

விளக்கம் :- சனி ஒரு முழுப்பாவி. இவர் மிகவும் கொடிய பலன்களைத் தருவார் என்பது பொதுவாக ஒரு அபிப்பிராயம். முனிவரும், இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தியுள்ளார். ஆனால், உண்மையில் சனியின் வலிமையைப் பார்த்தே அதனது பலனைக் கூற வேண்டும். சனி ஆட்சி உச்சமாக இருந்தால், விசேஷமான சுப பலன்களைக் கொடுப்பார். இதைத் தான், 'பொங்கும் சனி' என்று ஜோதிட நூல் வல்லுநர்கள் கூறுவர்.

2. சனி திசையில் புதன் புத்தி (2 வருடம், 8 மாதம், 9 நாள்)

தானென்ற காரிதிசை புதன்புத்தி கேளு
தன்மையுள்ள மாதமது நாலெட் டாகும்
நானென்ற நாளதுவும் ஒன்ப தாகும்
நன்றாக அதன் பலனை நவிலக் கேளும்
மானென்ற மன்னரால் மகிழ்ச்சி யுண்டாம்
மாதர்முதல் பந்துக்களும் மகிழ்ச்சி யாகும்
வானென்ற ஞானமுடன் யோக மார்க்கம்
வளர்கின்ற கர்ப்பமுதல் தேக் சித்தியாமே!

பொருள் :- சனி திசையில் புதன் புத்தியின் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! இதனது ஆட்சி காலம் 2 வருடம் 8 மாதம் 9 நாள் ஆகும்.

மன்னரால் லாபமுண்டாகும். மாதர் முதல் பந்துக்களும் மகிழ்ச்சி யாக இருப்பர். நல்ல ஞானமுடன் யோக மார்க்கம் உண்டாகும். வளர்கின்ற கர்ப்ப முதல் தேகசித்தியாகும்!

விளக்கம் :- புதன் ஒரு சுபக்கிரகம், சனிக்கு புதன் நட்பு! எனவே, நற்பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது! புதன் ஆட்சி உச்சமாக இருந்தால் நற்பலனும், பகை நீசமாக இருந்தால் தீயபலனும் ஏற்படுமென அறிக.

3. சனி திசையில் கேது புத்தி (1 வருடம், 1 மாதம், 9 நாள்)

ஆமென்ற காரிதிசை கேது புத்தி
அருளில்லா மாதமது பதின்மூன்றாகும்
போமென்ற நாளதுவும் ஒன்பதாகும்
புகழில்லா அதன் பலனை புகலக் கேளு
தாமென்ற தலைவலியும் கணரோக மாகும்
தப்பாது பாண்டுவுடன் தனப்பொருளுஞ் சேதம்
நாமென்ற சத்துருவால் முத்தண்ட முண்டாம்
நன்மையுள்ள மாதரால் கெர்ப்பமது பாழாம்.

பொருள் :- சனி திசையில் கேது புத்தி 1 வருடம் 1 மாதம் 9 நாள்வரை நடைபெறும். புகழில்லா அதன் பலனைக் கேளப்பா! தலைவலியும், கண் ரோகமும் உண்டாகும். தனச்சேதம் உருவாகும். சத்துருவால் தண்டம் உண்டாகும். நற்குணமுள்ள மாதரால் கெற்ப சேதம் உருவாகும், பாரே!

விளக்கம் :- கேது ஒரு கொடிய பாவி. சனியும் அப்படித்தான்! எனவே, தீய பலன்கள் கூறப்பட்டது! ஆனால், கேது தன் உச்ச வீட்டிலோ, திரி கோணங்களிலோ இருந்தால், நற்பலன் ஏற்படுமென அறிக.

4. சனி திசையில் சுக்கிர புத்தி (3 வருடம், 2 மாதம்)

பாளில்லா காரி திசை சுக்கிர புத்தி
பாங்கான மாதமது முப்பத்தெட்டு
நாளில்லா மங்கையரும் மனமாட்சி யுமாம்
நன்றான பெருஞ்செல்வம் நாலதிலே யுண்டாம்
ஆளில்லா அரசனுடன் அனுதினமும் வாழ்வன்
அணைகட்டு விரக்கமுடன் அலங்கார முண்டாம்
கோளில்லா சத்துரு நோய் இல்லையது பாரு
கோகனகமாது செல்வம் கொடுப்பான் தானே!

பொருள் :- சனி திசையில் சுக்கிரபுத்தி 3 வருடம் 2 மாதம்வரை நடைபெறும். இதன் பலனைக் கேளப்பா! மங்கையர் விருத்தியும், மனதில் இன்பமும் உண்டாகும். பெருஞ்செல்வம் வந்து சேரும். அரசனுடன் அனுதினமும் வாழ்வான். நல்ல இரக்கக் குணமும், அலங்காரம் செய்யும் குணமும் உண்டு. சத்துரு, நோய் தொல்லை இல்லை! அரசகுல மகளிரால் செல்வ சேர்க்கை உண்டாகும், பாரே!

விளக்கம் :- சுக்கிரன் ஒரு நல்ல சுபக்கிரகம், முக்கால் சுபர் எனது ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. எனவே, சுப பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது. ஆனால், சுக்கிரன் பகை, நீச வீடுகளிலோ (அ) 6-8-12 என்னும் மறைவு ஸ்தானங்களிலோ இருந்தால், தீய பலன் உண்டாகுமென கூறுக.

5. சனி திசையில் சூரிய புத்தி
(11 மாதம், 12 நாள்)

தானென்ற காரி திசை கதிரோன் புத்தி
 தயவில்லா மாதமது பதினொன் றாகும்
நானென்ற நாளதுவும் பனிரெண் டாகும்
 நன்மையில்லா அதன் பலனை நவிலக் கேளு
ஊனென்ற சுரபீடை இரத்த மேறும்
 உதிரத்தால் சூலைநோய் உடனே காணும்
மானென்ற மனைவியரும் மக்கள் தானும்
 மயங்குகின்ற நோவதினால் வருத்தங் காணே!

பொருள் :- *சனி திசையில் சூரியன் புத்தி 11 மாதம் 12 நாள்வரை நடைபெறும். நன்மையில்லா அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! சுரத்தால் பீடையும், இரத்த அழுத்தமும் உண்டாகும். சூலை நோயும் ஏற்படும். மனைவி, மக்களுக்கு நோய் உண்டாகி, மன வருத்தத்தை உருவாக்கும்.*

விளக்கம் :- *சனியும், சூரியனும் பகைவர்கள். கொடிய பாவிகள். எனவே, தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. சூரியன் தனது ஆட்சி உச்ச வீடுகளில் இருந்தாலும், சுபர் பார்வை (அ) சுபர் சேர்க்கையுடன் இருந்தாலும் நற்பலன்கள் உண்டாகுமென அறிக.*

6. சனி திசையில் சந்திர புத்தி (1 வருடம், 7 மாதம்)

காணவே காரி திசை. சந்திர புத்தி
 கனமில்லா மாதமது பத்தொன்ப தாகும்
தோணவே அதன் பலனை சொல்லக் கேளு
 தோகையருஞ் சண்டையதால் துன்பம் வருங்கேடு
பூணவே பூமி முதல் பூணாரங்கள்
 புகன்றதொரு தனமுதல் சேதமாகும்
ஆணவே அலைச்சலது உண்டாகும் பாரு
 அளவில்லா பேயதுவுங் கூடிக் கொல்லும்.

பொருள் :- *சனி திசையில் சந்திரபுத்தி 1 வருடம் 7 மாதம்வரை நடைபெறும். அதன் பலனை விபரமாகக் கூறுகிறேன்; கேளப்பா! பெண்களால் சண்டை வரும். துன்பமும் வரும். பொன், பொருள், பூமி சேதமாகும். வீண் அலைச்சல் உண்டாகும். பேய் பிசாசுகள் கூடிக் கொல்லும் என்பதாம்!*

விளக்கம் :- *சந்திரன் ஒரு சுபக்கோள் என்றாலும் சனி திசையின் பிற்பாதியில் வருவதால், சனியின் பாவ வலிமை அகோரமாக இருக்கும். எனவே, சந்திரன் தனது சுப வலிமையை இழந்து, தீமை செய்வார் என்பது முனிவரது கருத்து! சந்திரன் தனது ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தால், சொற்ப நன்மைகளைச் செய்வாரென அறிக.*

7. சனி திசையில் செவ்வாய் புத்தி
(1 வருடம், 1 மாதம், 9 நாள்)

கூடியே காரிதிசை செவ்வாய் புத்தி
 குணமில்லா மாதமது பதிமூன்றதாகும்

தேடியே நாளதுவும் ஒன்பதாகும்
சேதமுள்ள அதன்பலனைச் சொல்லக் கேளு
பாடியே பாவையரும் வகை நாசமாகும்
பண்புடனே சத்துருவும் தனச்சேதம் பண்ணும்
வாடியே அலைந்திடுவாய் தேசமெங்கும்
வாகான தேவதையால் பிசகுண்டாமே!

பொருள் :- *சனி திசையில் செவ்வாய் புத்தி 1 வருடம் 1 மாதம் 9 நாள்வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! பெண்களால் தொல்லை உண்டாகும். தன் குலப்பெண்களுக்குத் தொல்லைகள் உண்ட்ாகும். சத்துரு தொல்லையும், தனநாசமும் வந்து சேரும். தேச முழுவதும் வீணாக அலைந்து திரிவான். துஷ்ட தேவதையால் துன்பங்கள் வரும், பாரே!*

விளக்கம் :- சனியும், செவ்வாயும் பாவிகள்; இருவரும் பகைவர்கள். எனவே, துர்ப்பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டன. செவ்வாய் தனது ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்து, சுபர் பார்வை (அ) சேர்க்கையுடன் இருந்தால், நற்பலன்கள் உண்டாகுமெனக் கூறுக.

8. சனி திசையில் ராகு புத்தி
(2 வருடம், 10 மாதம், 6 நாள்)

உண்டாகும் காரிதிசை ராகு புத்தி
உறுதியில்லா மாதமது முப்பத்துநாலு
கொண்டாகும் நாளதுவும் ஆறதாகும்
கொடுமையுள்ள அதன்பலனை குறித்துச் சொல்வோம்
விண்டான வியாதியுடன் வாந்தி காணும்
விதமான சரீரமதில் மேகரண முண்டாம்
துண்டாகும் சரீரமதுயிரு பிளவாய் போகும்
துன்பமுள்ள நாளதனில் சாவாம்.

பொருள் :- *சனி திசையில் ராகு புத்தி 2 வருடம் 10 மாதம் 6 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! வாந்தியும், பேதியும் உண்டாகும். சரீரத்தில் மேக சூடு உண்டாகும். சரீரம் துண்டிக்கப்பட்டு இரு பிளவாகப் போகும். துன்பமுள்ள இந்தக் காலத்தில் கொடிய சாவும் வந்து சேரும், பாரே!*

விளக்கம் :- சனியும், ராகுவும் முழுப் பாவிகள். எனவே பாவ பலன்கள் ஏற்படுமென முனிவர் கூறினார். ஆனால், சனியும், ராகுவும் நண்பர்கள். எனவே, வலுவாக இருந்தால், விசேஷமான சுப பலன்கள் ஏற்படுமென அறிக.

9. சனி திசையில் குரு புத்தி
(2 வருடம், 6 மாதம், 12 நாள்)

சாவில்லா காரிதிசை வியாழ புத்தி
சமானமுள்ள மாதமது முப்பதாகும்

நாளில்லா நாளதுவும் பன்னிரண்டாகும்
நன்மையுள்ள அதன் பலனை நவலுவோம் கேள்
மாயில்லா மங்கையளும் மணமுடனே வருவாள்
மார்க்கமுள்ள பழம் பொருளும் வகையுடனே வரும்
காயில்லா கனகமது கண்டெடுப்பான் பாரு
கனதையுள்ள சத்துருவும் காலடியில் வீழ்வான்.

பொருள் :- *சனி திசையில் குரு புத்தி 2 வருடம் 6 மாதம் 12 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! மங்கையரும் நல்ல குணமுடன் வருவாள். பழம் பொருளும் வகையுடனே வந்து சேரும். கனக மணி ரத்தினமும் இவன் கண்ணுக்குத் தென்படும். சத்துருக்களும் இவன் காலடியில் வீழ்ந்து கிடப்பார், மகனே!*

விளக்கம் :- குரு ஒரு பரிபூரண சுபக் கிரகம். எனவே, நற்பலன்கள் ஏற்படுமென கூறப்பட்டது. ஆனால், குரு பலவீனமாக இருந்தாலோ (அ) 6-8-12ம் இடங்களில் இருந்தாலோ கெட்ட பலன்கள் ஏற்படுமென அறிக. இந்தக் குரு புத்தியில், சனி தனது பாவ வலிமையை அகோரமாக செலுத்துவார் என்பதால், இப்புத்தி முடிவில் (குரு சுபபலமாக இருந்தாலும்) தீய பலன்கள் உண்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது!

7. புதன் மகா திசையின் பலன்கள் [17 வருடம்]

1. புதன் திசையில் புதன் புத்தி (2 வருடம், 4 மாதம், 27 நாள்)

அடியில்நின்ற புதன் திசை தான் வருஷம் பதினேழு
அதனுடைய புத்தியது மாதம் நாலேழ்
முடியில் நின்ற நாளதுவும் மூவொன்பதாகும்
மூர்க்கமுள்ள அதன் பலனைக் கூறக் கேளு
படியில் நின்ற பழம் பொருளும் பாவையருஞ் சேருவன்
பாங்கான சோபனமும் பாங்குடனே காணும்
குடியில் நின்ற குலதெய்வங் குணமுடனே சேரும்
குடும்பத்தில் புத்திரனுங்குணமுடனே வாழ்வான்.

பொருள் :- *புதன் திசையின் ஆட்சி காலம் 17 ஆண்டுகள் ஆகும். அதனது சுய புத்தியின் ஆட்சி காலம் 2 வருடம் 4 மாதம் 27 நாள் ஆகும். அதன் பலனைக் கேளப்பா! பழம் பொருளும், பாவையர் சேர்க்கையும் உண்டாகும். நல்ல சோபனமும் சிறப்பாக நிகழும். இவனது குலதெய்வமும் நல்ல குணமுடன் வந்து சேரும். குடும்பத்தில் இவனது புத்திரனும் நலமுடன் வாழ்வான் பாரே!*

விளக்கம் :- புதன் ஒரு சுபக் கிரகம். "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது" என்பது பழமொழி. எனவே, சுப பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது. புதன் பகை, நீச வீடுகளிலோ (அ) 6-8-12 என்னும் துர்ஸ்தானங் களிலோ இருந்தால் அசுப பலன்கள் உண்டாகுமென அறிக.

2. கேது புத்தி (11 மாதம், 27 நாள்)

வாழலாம் புதன் திசையில் கேது புத்தி
வகையில்லா மாதமது பதினொன்றாகும்

கூளலாம் நாளதுவும் இருபத்தேழு
கொடுமையுள்ள அதன் பலனைக் கூறக்கேளு
மாளலாம் பகை வரும் உத்தார் நாசம்
மணமில்லா வியாதியது மடித்துக் கொல்லும்
தேடலாம் திரவியங்கள் சேதமாகும்
தினந்தோறும் சத்துருவும் நீதான் பாரே!

பொருள் :- புதன் திசையில் கேது புத்தி 11 மாதம் 27 நாள் வரை நடை பெறும். கொடுமையுள்ள அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! பகை வரும், உறவினரும் நாசமாய்ப் போவர். கொடிய வியாதி உடலில் பரவி கொல்லும். தேடிய திரவியங்கள் யாவும் சேதமாகும். தின்ந்தோறும் சத்துருவும் தோன்றுவார், பாரே!

விளக்கம் :- கேது ஒரு கொடிய தீக்கோள். புதன் அரை சுபர். எனவே, இப்புத்தியில் தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. கேது உச்சம் பெற்று, சுபர் பார்வை (அ) சம்பந்தம் பெறின் நற்பலன்கள் தர வாய்ப்புண் டென அறிக.

3. புதன் திசையில் சுக்கிர புத்தி
(2 வருடம், 10 மாதம்)

பாரப்பா புதன் திசையில் சுக்கிரபுத்தி
பாங்குள்ள மாதமது முப்பத்துநாலு
சேரப்பா அதன் பலனை செப்பக் கேளு
தேவதையால் தர்க்கமது தீதாம் பாரு
ஆரப்பா மனைவியுடன் புத்திரனும்
அனுதினமும் வாழ்ந்திருப்பன் அலங்காரமுடன்
காரப்பா கனகமது கனசம்பத்துண்டாம்
கனமான ராசாவால் கடாட்சமுண்டாங்கேளே!

பொருள் :- புதன் திசையில் சுக்கிர புத்தி 2 வருடம் 10 மாதம் நடை பெறும். அதன் பலனை விபரமாகக் கூறுகிறேன், கேளப்பா! தேவதையால் தர்க்கமது வரும். தன் மனைவி குழந்தைகளுடன் தினமும் இன்பகரமாக வாழ்ந்திருப்பான். அலங்கார பிரியன். கனகமணி ரத்தினமும், பொன், பொருள் சேர்க்கையுமுண்டாகும். நாடாளும் மன்னராலே நயமான பலன்கள் உண்டாகும், மகனே!

விளக்கம் :- புதனும், சுக்கிரனும் சுபர்கள். நண்பர்களுங்கூட! எனவே, நற்பலன்கள் கூறப்பட்டது. இவர்கள் பலவீனமாக இருந்தால், சுப பலன், பாவ பலன் இரண்டும் கலந்து நடைபெறுமென கூறுக.

4. புதன் திசையில் சூரிய புத்தி
(10 மாதம், 6 நாள்)

கேளப்பா புதன் திசையில் சூரியபுத்தி
கெணிதமுள்ள நாளதுவுமாறு மாதம் பத்து

ஆளப்பா அதன் பலனை அறையக் கேளு
ஆதிகுரு தலஞ்சிவ பதங்களுள்ளாம்
காணப்பா காவியது வேஷ்டியுண்டு
காசினியில் பரதேசி ஆகிப் போவான்
வாளப்பா மடபதியி லிருந்துக் கொண்டு
மனையாட்டி தன்னுடனே வாழ்ந்திருப்பான், தானே!

பொருள் :- புதன் திசையில் சூரியபுத்தி 10 மாதம் 6 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! குருஸ்தலம், சிவஸ்தலம் சென்று வாழ்வான். காவியது வேஷ்டியுண்டு. இவ்வுலகில் பரதேசி போல் போவான். சிவபதியில் இருந்து கொண்டே, தன் மனைவியுடன் வாழ்ந்திருப்பான் என்பதாம்.

விளக்கம் :- சூரியனின் தேவதை 'சிவன்' என்பதால், ஜென்மனுக்குச் சிவ பக்தியுண்டாகி, சிவஸ்தலம் சென்று வாழ்வான் எனக் கூறப்பட்டது. ஆட்சி, உச்சப் பலம் பெறின், சிவபக்தியுடன், தன் குடும்பத்தையும் அனுசரித்து வாழ்வான் எனக் கூறுக.

5. புதன் திசையில் சந்திர புத்தி
(1 வருடம், 5 மாதம்)

தானே தன் புதன் திசையில் சந்திர புத்தி
தாழ்வான மாதமது பதினேழாகும்
தேனென்ற அதன் பலனை சொல்லக் கேளு
தெரிவையர்கள் கலகமுடன் யிளப்பா சயரோகம்
கோனென்ற ராசாவால் குடிக்கேடு செய்யும்
கோதையர்கள் தன்னாலே குடிபாழாகும்
வானென்ற வான் பொருளும் வகையில்லாச் சேதம்
வையகத்தில் நீதியில்லா மாதரைச் சேர்வாயே!

பொருள் :- புதன் திசையில் சந்திரபுத்தி 1 வருடம் 5 மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! பெண்களால் கலகமும், க்ஷய ரோகமும் உண்டாகும். நாடாளும் மன்னராலே குடிக்கேடு உண்டாகும். பெண்களாலே இவனது குடி பாழாய் போகும். வான் பொருளும் சேதமடையும். இந்த வையகத்தில் நீதி நெறி தவறிய, முறைகேடான குல மகளிருடன் கூடியிருப்பான், பாரே!

விளக்கம் :- புதனுக்கு சந்திரன் பகை. மேலும், தேய்பிறையில் சந்திரன் பாவியாவார். எனவே, தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. சந்திரன் பலவானாக, கேந்திர, கோணங்களில் இருந்தால், நல்ல சுப பலன்கள் உண்டாகுமென அறிக.

6. புதன் திசையில் செவ்வாய் புத்தி
(11 மாதம், 27 நாள்)

சேரலாம் புதன் திசையில் செவ்வாய் புத்தி
செயமில்லா மாதம் பதினொன்றாகும்

தேறலாம் நாளதுவும் இருபத் தேழில்
தெரிவையர்கள் தன்னாலே கிரந்தியது நோவாம்
மாறலாம் சத்துருவால் மயக்கமுடன் பேயும்
மனதான சகோதரமும் அதனால் சேதம்
பாரலாம் பல நிதியுங் கெடுதி காணும்
பணமுடைய பூமி முதல் பலனுந்தீதாம்

பொருள் :- புதன் திசையில் செவ்வாய் புத்தி 11 மாதம் 27 நாள் வரை நடைபெறும். பெண்களாலே கிரந்தி நோயுண்டாகும். சத்துரு வாதையும், பேய் தொல்லையும், அன்பு சகோதரர் பகையும் உண்டாகும். அத்துடன் பலவகையான பொருள் சேதமும் உண்டாகும். நல்ல விலையுயர்ந்த நிலத்தில் மகசூல் குறைந்து சேதமுண்டாகும், பாரே!

விளக்கம் :- செவ்வாய் ஒரு தீக்கோள். மேலும், புதனும், செவ்வாயும் பகைவர்கள். எனவே, தீய பலன்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டது. செவ்வாய் தனது ஆட்சி, உச்ச வீடுகளில், சுபர் பார்வையுடன் இருந்தால், மேற்படி தோஷம் விலகி நற்பலன்கள் உண்டாகுமெனக் கூறுவாயே!

7. புதன் திசையில் ராகு புத்தி
(2 வருடம், 6 மாதம், 18 நாள்)

பலனில்லா புதன் திசையில் ராகு புத்தி
பாழான மாதமது முப்பதாகும்
நலமில்லா நாளதுவும் பதினெட்டாகும்
நன்றாக அதன் பலனை நவிலக் கேளு
பலமில்லா பிணிகளுடன் மயக்கம் சேதம்
பிரட்டான சத்துருவால் பேதையர்கள் யாவும்
நலமில்லா வியாதியினால் நற்பொருளுஞ் சேதம்
நன்றான வீடு முதல் பூமி நிதி போமே!

பொருள் :- புதன் திசையில் ராகுபுத்தி 2வருடம் 6 மாதம் 18 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! பல வித பிணிகளுடன் மயக்கமும் வந்து சேரும் உருட்டு மிரட்டான சத்துருவால் புத்தி பேதலித்துப் போக நேரிடும். கொடிய வியாதியினால் பொருள் சேதம் உண்டாகும். நல்ல வீடு முதல், பூமி வரை அனைத்தும் போய்விடும் மகனே!

விளக்கம் :- ராகு ஒரு கொடிய தீக்கோள். புதன் அரை சுபர். எனவே, திசாநாதனாகிய புதனும், புத்திநாதனுடன் சேர்ந்து அசுபராக மாறி, கொடிய பலன்களைச் செய்வார் என்பது இப்பாடலின் கருத்து! ஆனால், ராகு தனது உச்ச வீட்டிலோ (அ) திரிகோணங்களிலோ நின்றால் நற்பலன்கள் உண்டாகுமென உணர்வாய்!

8. புதன் திசையில் குரு புத்தி (2 வருடம், 3 மாதம், 6 நாள்.)

போமென்ற புதன் திசையின் வியாழ புத்தி
புகழுள்ள மாதமது யிருபத்தேழு

நாமொன்று நாளதுவும் ஆறதாகும்
நன்றாக வதன்பலனை நவிலக் கேளு
தாமென்ற சத்துரு நோய் பயமும் போகும்
சகலசம்பத்துண்டாகும் தரணில் வாழ்வன்
ஓமென்ற யோகமது கைக்குள் சிக்கும்
யேகமாம் புத்திரனும் இதிலுண்டாமே.

பொருள் :- புதன் திசையில் வியாழ புத்தி 2 வருடம் 3 மாதம் 6 நாள் வரை நடைபெறும். அதன் பலனை கூறுகிறேன். கேளப்பா! சத்துரு தொல்லை! ரோக பயம் விலகும். சகல சம்பத்தும் உண்டாகும். தரணிதனில் சிறப்பாக வாழ்வான். பெரிய யோகம் கைக்குள் சிக்கும். அநேக புத்திரர்களும் உண்டாகும், பாரே!

விளக்கம் :- புதனும், குருவும் சுபர்கள். எனவே, நற்பலன்கள் கூறப்பட்டன. இவர்கள் பலவீனமாக இருந்தால், சுபம், பாவம் கலந்து மிக்ஸரான பலன்கள் நடைபெறுமெனக் கூறுக.

9. புதன் திசையில் சனி புத்தி (2 வருடம், 8 மாதம், 9 நாள்)

பாரப்பா புதன் திசையில் சனியின் புத்தி
பாழான மாதமது முப்பத்திரண்டு
சேரப்பா நாளதுவும் ஒன்பதாகும்
செலுத்துகிற பலனது வை செப்பக் கேளு
வீரப்பா சத்துருவால் சூனியமுண்டாம்
விதமில்லா நோய் போலே விதங்கேடு பண்ணும்
பாரப்பா மனைவியரும் புத்திரரும் தானும்
மரணமாய் உன்னுடலு மரணமாமே!

பொருள் :- புதன் திசையில் சனி புத்தி 2 வருடம் 8 மாதம் 9 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன்; கேளப்பா! சத்துருவால் சூனியமுண்டு. பலவிதநோய்களும், கேடுகளும் உண்டாகும். மனைவியும், பிள்ளைகளும் உன்னுடன் சேர்ந்து மரணமடைவார், பாரே!

விளக்கம் :- சனி ஒரு கொடிய தீக்கோள் என்பதால், அசுப பலன்கள் கூறப்பட்டது. சனி தனது ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தால், நல்ல சுப பலன்கள் உண்டாகுமென அறிக.

8. கேது மகா திசை [7 வருடம்] - பலாபலன்கள்

1 கேது புத்தி (4 மாதம் 27 நாள்)

ஆமென்ற கேது திசை வருஷம் யேழு
அதனுடைய புத்தி நாள் நூற்று நாற்பத்தேழு
போ மென்ற அதன் பலனை புகலக் கேளு
புகழான அரசர் படை ஆயுதத்தால் பீடை

தாமென்ற சத்துருவால் வியாதிகாணும்
தனச் சேதம் உடல் சேதம் தானே உண்டாம்
நாமென்ற நகரத்தில் சூனியங்களுண்டாம்
நாடெல்லாம் தீதாகும் நன்மையில்லாப் பகையே

பொருள் :- கேது திசையின் ஆட்சி காலம் 7 ஆண்டுகள் ஆகும். அதன் சுய புத்தியின் கால அளவு 4 மாதம் 27 நாள் ஆகும். இதன் பலனை கேளப்பா! அரசர் படை, ஆயுதத்தால் பீடை உண்டாகும். சத்துருவால் வியாதி வந்து சேரும். தனச் சேதம், உடல் சேதம் தானே உண்டாகும். நகரத்தில் சூனியங்கள் உண்டாகும். நாடெல்லாம் தீமை வந்து சேரும். நன்மையில்லாத பகையும் வரும், பாரே!

விளக்கம் :- கேது ஒரு கொடிய பாவக் கிரகம். கேதுவைப்போல் கெடுப்பவன் வேறு எவரும் கிடையாது. எனவே, இவனது திசையில் கடுமையான தீய பலன்கள் உண்டாகும் என்பது சொல்லாமலே விளங்கும். இருப்பினும், கேது தன் உச்ச வீட்டிலோ (அ) திரிகோணங்களிலோ இருந்தால், மேற்படி அசுப பலன்கள் நீங்கி, சொற்ப சுப பலன்கள் உண்டாகுமென அறிக.

2. கேது திசையில் சுக்கிரபுத்தி

(1 வருடம், 2 மாதம்)

பகையான கேதுதிசை சுக்கிர புத்தி
பாங்கில்லா மாதமது பதினாலாகும்
தகையான அதன் பலனை சாற்றக்கேளு
தாழ்வில்லா சத்துருவால் விலங்குண்டாகும்
நகையான பூஷணங்கள் சிலவதாகும்
நாரிழையாள் தன்னுடனே அபமிருத்து காணும்
வகையான ராசாவால் மனமகிழ்ச்சியாகி
மனைவி மக்கள் தன்னுடனே வாழ்வன் காணே!

பொருள் :- கேது திசையில் சுக்கிரன் புத்தி 1 வருடம் 2 மாதம் வரை நடைபெறும். இதன் பலனைக் கேளப்பா! தாழ்வில்லா சத்துருவால் விலங்கு மாட்ட நேரிடும். நல்ல உயர்ந்த வகை பூஷணங்கள் கைவிட்டுப் போகும். வீண் செலவும் வந்து சேரும். அரசரால் மனமகிழ்ச்சி உண்டு. பெண்களால் நோய் உண்டாகும். மனைவி மக்களுடன் வாழும் பாக்கியம் உண்டாகும்.

விளக்கம் :- சுக்கிரன் ஒரு சுபக்கிரகம். ஆனால், கேது ஒரு கொடிய பாவி. எனவே, சுபம், பாவம் கலந்து மிக்ஸரான பலன்கள் உணடாகுமெனக் கூறப்பட்டது. ஆனால், சுக்கிரன் ஆட்சி, உச்சப் பலம் பெற்றிருந்தால், விசேஷமான சுப பலன்கள் உண்டாகுமென அறிக.

3. கேது திசையில் சூரிய புத்தி

(4 மாதம், 6 நாள்)

பாரப்பா கேது திசை சூரியபுத்தி
பாங்கான நாளதுவும் நூற்று இருபத்தாறு

பாரப்பா அதன் பலனைச் சொல்லக் கேளு
ஆகாத சத்துருவால் அக்கினியும் பேயும்
சேரப்பா சேர்ந்துமே கூடிக் கொல்லும்
சேர்ந்து நின்ற தந்தை குரு மரணமாகும்
வீரப்பா வீண் செலவு மிகவேயாகும்
வீடு விட்டு காஷாயம் பூணுவானே!

பொருள் :- கேது திசையில் சூரியபுத்தி 4 மாதம் 6 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! சத்துரு, அக்கினி, பேய் - இவை மூன்றும் சேர்ந்து கொல்லும். பிதா, குருவுக்கு மரணமுண் டாகும். வீண் செலவு மிதமிஞ்சி வந்து சேரும். வீடு மாறி வந்து காஷாயம் பூணுவான், மகளே!

விளக்கம் :- கேதுவும், சூரியனும் பாவிகள். இருவரும் பகைவர்கள். எனவே, தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. சூரியன் தனது ஆட்சி உச்ச வீடுகளில் சுபர் பார்வையுடன் இருந்தால், நற்பலன்கள் உண்டாகுமென அறிவாய்!

4. கேது திசையில் சந்திர புத்தி (7 மாதம்)

பூணுவான் கேது திசை சந்திர புத்தி
புகழான மாதமது நாலுமூணும்
ஆணுவான் அதன் பலனை அறையக்கேளு
ஆயிழையாள் விலகி நிற்பள் அற்பமாகும்
தோணுவான் தோகையரும் புத்திரரும் பாழாம்
தொகுதியுடன் பொருளதுவுஞ் சேதமாகும்
நாணுவான நாரிகையும் சலத்தில் வீழ்ந்து
நன்றாக மடிந்திடுவாள் நலமில்லை தானே!

பொருள் :- கேது திசையில் சந்திர புத்தி 7 மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! வீட்டிற்கு வந்த மனைவியும் விலகி நிற்பாள். குலப்பிள்ளைகளும், புத்திரர்களும் பாழாய் போகும். மிகுந்த பொருள் சேதம் உண்டாகும். இவனது களத்திரம் சலத்தில் விழுந்து மரண மடைவாள். நலமில்லை எனக் கூறே!

விளக்கம் :- சந்திரன் ஒரு சுமாரான சுபக் கிரகம். கேது ஒரு கொடிய பாவி. எனவே, தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. சந்திரன் ஆட்சி, உச்சப் பலம் பெற்றால், நற்பலன்கள் உண்டாகுமென அறிக.

5. கேது திசையில் செவ்வாய் புத்தி (4 மாதம், 27 நாள்)

தானென்ற கேது திசை செவ்வாய் புத்தி
தாழ்வான நாளதுவும் நூற்று நாற்பத்தேழு
வானென்ற அதன் பலனை வழுத்தக் கேளு
வண்மையுடன் யினசத்துரு தானே உண்டாம்
கோனென்ற கோளுநால் குடி கேடாகும்
கோதையரால் குலமதுவு நாசமாகும்

தேனென்ற திரவியமும் சேதமாகும்
தெவிட்டாத துணை தம்பி தீதுண்டாமே!

பொருள் :- கேது திசையில் செவ்வாய் புத்தி 4 மாதம் 27 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! வன்மையுடன் சத்துரு தொல்லை உண்டாகும். குடிகேடு உண்டாகும். கோதையரால் குல நாசம் ஏற்படும். திரவிய சேதம் உண்டாகும். அன்பான சகோதரனும் துண்டு பட்டுப்போவான், பாரே!

விளக்கம் :- கேதுவும், செவ்வாயும் பாவிகள். சத்துருவும் கூட! எனவே, தீய பலன்கள் கூறப்பட்டன. செவ்வாய் ஆட்சி, உச்ச வீடுகளில் இருந்தால், நற்பலன்கள் உண்டாகுமெனக் கூறுக.

6. கேது திசையில் ராகுபுத்தி
(1 வருடம், 18 நாள்)

உண்டான கேது திசை ராகுபுத்தி
உண்மையில்லா நாளதுவும் வருடம் ஒன்று
நன்றாகும் நாளதுவும் மூவாறாகும்
நலமில்லா அதன் பலனை நவிலக்கேளு
விண்டாகுஞ் சத்துருவால் சோரபயமாகும்
வினையான மனைவி தன்னால் வீண் கலகமாகும்
ஒன்றாகும் உன் உடம்பில் பிணியுண்டாகும்
உறுதியில்லா உன் தெய்வ மோடுந்தானே!

பொருள் :- கேது திசையில் ராகுபுத்தி 1 வருடம் 18 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! சத்துரு வாதையும், சோர பயமும் உண்டாகும். சூனியம் பிடித்த மனைவியால் வெகு கலகமுண்டாகும். தேகத்தில் பல பிணிகள் ஏற்படும். உறுதியில்லா உன் தெய்வம்கூட உனக்கு துணை செய்யாமல் ஓடிவிடும் பாரே!

விளக்கம் :- கேதுவும், ராகுவும் கொடிய பாவிகள். எனவே, துர்ப்பலன் கள் கூறப்பட்டது. ராகு உச்சம், நட்பு வீடுகளில், சுபர் சேர்க்கையுடன் இருந்தால், நற்பலன்கள் உண்டாகுமென அறிக.

7. கேது திசையில் வியாழ புத்தி
(11 மாதம், 6 நாள்)

காணவே கேதுதிசை வியாழ புத்தி
கனமான மாதமது பதினொன்றாகும்
தோணவே நாளதுவும் ஆறதாகும்
தொகையான தனங்களும் புத்திரனாலுண்டாம்
பூணவே பூவுடையாள் நிர்த்தனம் செய்வாள்
பூமிதனில் வெகுலாபம் பொருந்தி காணும்
நாணவே ராசாங்க யோகம் பெற்று
நன்றாக சகடமது யோகந் தானே!

பொருள் :- கேது திசையில் குருபுத்தி 11 மாதம் 6 நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! அதிக தனங்களும், புத்திரர் உதவியால்

உண்டாகும். பூ போன்ற பெண்களின் ஆதரவு கிட்டும். பூமியில் வெகு லாபம் உண்டாகும். ராஜாங்க யோகம் அமையும். சகடயோகமும் வரும், பாரே!

விளக்கம் :- குரு ஒரு பரிபூரண சுபக் கிரகம் என்பதால், சுப பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. குரு பகை, நீச வீடுகளில் இருந்தால், தீய பலன்கள் ஏற்படுமென அறிக. என்னத்தான் குரு வலுப்பெற்று இருந்தாலும், சுமாரான பலன்களையே எதிர்பார்க்க முடியும். காரணம், நடப்பது கேது திசையல்லவா?

8. கேது திசையில் சனி புத்தி
(1 வருடம், 1 மாதம், 9 நாள்)

தானென்ற கேது திசை சனியின் புத்தி
தாழ்வான மாதமது பதின்மூன்றாகும்
நானென்ற நாளதுவும் ஒன்பதாகும்
நலமில்லா அதன் பலனை நவிலக் கேளு
வாளென்ற வான் பொருளும் கேடுவாகும்
வகையான மனைவியுடன் மக்களதுவும் போம்
மானென்ற பதின்மூன்றில், மரணமாவான்
மனக்கவலை ரொம்ப உண்டு மாள்வான் பாரே!

பொருள் :- கேது திசையில் சனி புத்தி *1* வருடம் *1* மாதம் *9* நாள் வரை நடைபெறும். நலமில்லா அதன் பலனை கேளப்பா! வான் பொருளும் கேடுடையதாக இருக்கும். நல்ல மனைவியுடன் மக்களும் நாசமாய் போவர். பதின்மூன்றாவது வயதில் மரணமாவான். மனக் கவலை ரொம்ப உண்டு, பாரே!

விளக்கம் :- கேதுவும், சனியும் கொடிய பாவிகள். எனவே, தீய பலன்கள் கூறப்பட்டன. சனி ஆட்சி, உச்சம் பெறின், மேற்படி துஷ்டப் பலன் களிலிருந்து நிவாரணம் பெற முடியும்.

9. கேது திசையில் புதன் புத்தி
(11 மாதம், 27 நாள்)

பாரப்பா கேது திசை புதனார் புத்தி
பாங்குள்ள மாதமது பதினொன்றாகும்
சேரப்பா நாளதுவும் இருபத்தேழு
சேதமில்லா அதன் பலனை செப்பக் கேளு
வீரப்பா கொண்டு நின்ற மயக்கம் போய்நீ
மேதினியில் நீயுமொரு மனுஷனாவாய்
சீரப்பா லட்சுமியும் சேர்ந்து கொள்வாள்
தீங்கில்லா மனக் கவலையில்லை காணே!

பொருள் :- கேது திசையில் புதன் புத்தி *11* மாதம் *27* நாள் வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! இப்புவியில் நீயும் ஓர் மனுஷனாவாய். லட்சுமியும் வாசம் செய்வாள். மனக் கவலை தீருமப்பா!

விளக்கம் :- புதன் ஒரு சுபக் கோள். எனவே, சுப பலன்கள் ஏற்படுமென கூறப்பட்டது. ஆனால், புதன் வலுத்திருந்தால்தான், இந்த மாதிரி சுப

பலன்களை எதிர்பார்க்க முடியும். இல்லையெனில், துர்ப்பலன்கள்தான் ஏற்படுமென அறிக.

9. சுக்கிர திசை [20 வருடம்] - பலன்கள்

1. சுக்கிர புத்தி (3 வருடம், 4 மாதம்)

காணவே சுக்கிர திசை வருஷம் நாலைந்து
கனமான சுக்கிரனில் சுக்கிரன் புத்தி
பூணவே மாதமது நாற்பதாகும்
பூலோக மன்னரைப் போல் பூவிலரசாள்வான்
பேணவே சவுக்கியங்களுண்டாகும் பாரு
பெரிதான லெட்சுமியும் பொற்கொடி போல் வருவாள்
தோணவே சோபனமும் சுபயோகமுண்டாம்
தோகையர்கள் வந்தவுடன் தொகுதியுடன் வாழ்வான்.

பொருள் :- சுக்கிர திசையின் ஆட்சி காலம் 20 ஆண்டுகள் ஆகும். அதன் சுயபுத்தியின் கால அளவு 3 வருடம் 4 மாதம் ஆகும். பூலோக மன்னரைப் போல், இப்புவியில் அரசாள்வான். நல்ல சௌக்கியங்களுண் டாகும். மகாலட்சுமியும் பொற்கொடிபோல் வாசம் செய்வாள். நல்ல சோபனமும், சுப யோகமும் உண்டாகும். பெண்கள் வந்தவுடன் மொத்தமாக சேர்ந்து வாழ்வான்.

விளக்கம் :- சுக்கிரன் ஒரு நல்ல சுபக் கிரகம். பொதுவாக இதை அதிர்ஷ்ட திசை என்று கூறுவது வழக்கம். சுக்கிரன் ஆட்சி, உச்சமாக இருந்தால், மிகவும் விசேஷமான சுப பலன்களை எதிர்பார்க்கலாம். பகை, நீசமாக இருந்தால், சொற்ப சுப பலன்களும், பாவ பலன்களும் உண்டாகு மென அறிக.

2. சுக்கிர திசையில் சூரிய புத்தி (1 வருடம்)

வாழலாம் சுக்கிர திசை சூரியபுத்தி
வகையில்லா மாதமது பனிரெண்டாகும்
நாளலாம் அதின் பலனை நவிலக் கேளு
நன்மையில்லா சுரபீடை நாய்கடிகளுண்டாம்
கேளலாம் சத்துருவும் குடிகேடு செய்வான்
குணமான தாய் தந்தை மரண மதுவாகும்
வாழலாம் சித்தமதில் வெகு கலக்க முண்டாம்
மனைவிதனை விட்டேகி மலையாண்டி யாவன்

பொருள் :- சுக்கிர திசையில் சூரியன் புத்தி 1 வருடம் நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! நன்மையில்லாத சுரபீடையும், நாய்கடிகளும் உண்டாகும். சத்துருவும் குடிகேடு செய்வான். குணமிகுந்த தாய், தந்தையர் கூட மரணமடைவர். மனதில் வெகு கலக்கமுண்டாகும். மனைவிதனை விட்டு பிரிந்து, ஆண்டியாய் திரிவான், பாரே!

விளக்கம் :- சூரியன் ஒரு பாவக்கிரகம். சுக்கிரனும், சூரியனும் கடுமை யான பகைவர்கள். எனவே, துர்ப்பலன்கள் உண்டாகுமென கூறப்பட்டது.

சூரியன் ஆட்சி, உச்சம், கேந்திரம், திரிகோண வீடுகளில் இருந்தால் நல்ல சுப பலன்கள் உண்டாகும் என கூறலாம்.

3. சுக்கிர திசையில் சந்திர புத்தி (1 வருடம், 8 மாதம்)

ஆவானே சுக்கிர திசை சந்திர புத்தி
அருளில்லா மாதமது நாலைந்தாகும்
போவானே அதன் பலனை புகலக் கேளு
பொன் பெறுவான் அன்னையுமே மரணமாவாள்
சாவானே சம்பத்தும் குறைந்து போகும்
சதிரான மனையை விட்டு ஓடிப் போவான்
நோவானே வியாதியது துடர்ந்து கொள்ளும்
நுணுக்கமுள்ள வினை சமயம் நுகருந் தானே!

பொருள் :- *சுக்கிர திசையில் சந்திர புத்தி 1 வருடம் 8 மாதமாகும். அதன் பலனைக் கேளப்பா! பொன் பெறுவான். மாதா மரணமடைவாள். சம்பத்துக் குறைந்து போகும். தன் வீட்டை விட்டு ஓடிப் போவான். வியாதியது தொடர்ந்து கொல்லும். நுணுக்கமான வினையும் சமயம் பார்த்து வரும், பாரே!*

விளக்கம் :- சுக்கிரனும், சந்திரனும் பகைவர்கள். இந்தப் புத்தியில் கேது திசையின் 'முழுச் சக்தி' செலுத்தப்படும் காலமாதலால், பாவ பலன்கள் கூறப்பட்டது. இருப்பினும், மேற்படி இருவரும் சுபக் கோட்கள் என்பதால், சொற்ப சுப பலன்கள் உண்டாகுமென அறிக. மேலும், இவர்கள் வலுவாக இருந்தால் விசேஷமான சுப பலன்களைச் சொல்ல இடமுண்டென அறிக.

4. சுக்கிர திசையில் செவ்வாய் புத்தி (1 வருடம், 2 மாதம்)

தானென்ற சுக்கிர திசை செவ்வாய்புத்தி
தாழ்வான மாதமது பதினாலாகும்
ஏனென்ற அதன் பலனை விளம்பக் கேளு
எலிகடியும் பீனிசமும் இணைப்பு முண்டாம்
வானென்ற வயிற்றினிலே தோஷமுண்டாம்
வகையுடனே ஆசனத்தில் கடுப்புண்டாகும்
தேனென்ற தெரிவையர்கள் விகற்பமாகும்
தீதான சத்துருவும் சேர்வான் பாரே!

பொருள் :- *சுக்கிர திசையில் செவ்வாய் புத்தி 1 வருடம் 2 மாதம் வரை நடைபெறும். அதன் பலனை விபரமாக கூறுகிறேன் கேளப்பா! எலி கடி விஷம் உண்டாகும். வயிற்று நோவும், ஆசன கடுப்பும் ஏற்படும். தேன் போன்ற இனிமையான பெண்கள் விரோதியாக மாறுவர். சத்துரு வாதையும் உண்டாகும் பாரே!*

விளக்கம் :- செவ்வாய் ஒருதீக்கோள். எனவே, தீய பலன்கள் உண்டாகுமெனக் கூறப்பட்டது. சுக்கிரன் சுப பலம் பெற்றிருந்தால், செவ்வாய் புத்தியின் பிற்பாதியில் நற்பலன்கள் உண்டாகுமெனக் கூறுக.

5. சுக்கிர திசையில் ராகு புத்தி (3 வருடம்)

பாரப்பா சுக்கிர திசை ராகுபுத்தி
பகையான மாதமது முப்பத்தாறாகும்
சேரப்பா அதன் பலனை செப்பக் கேளு
சிற்றோகம் காமாலை ஜெயமும் நோவாம்
ஆரப்பா அரசர் பகை அபமிருத்துமாமே
அன்பான தாய் தந்தை அடவுடனே சாவாம்
மேரப்பா மேகமதால் ரோக முண்டாம்
மேலெல்லாம் சிரங்கு குட்டம் ஆவான் பாரு!

பொருள் :- சுக்கிர திசையில் ராகு புத்தி 3 வருட காலம் நடைபெறும். அதன் பலனை கேளப்பா! சிறுநீரகக் கோளாறு, மஞ்சட் காமாலை போன்ற நோய்கள் உண்டாகும்.

அரசர் பகையும், அபமிருத்தியு தோஷமும் உண்டாகும். அன்பான தாய் தந்தையரும் மரணமடைவர். மேக வெட்டு ரோகமுண்டாகும். உடலெல்லாம் சிரங்கு, குட்டம் பீடிக்கும் பாரே!

விளக்கம் :- ராகு ஒரு முழுப் பாவி! எனவே, தீய பலன்கள் கூறப் பட்டுள்ளது. ஆனால், சுக்கிரன் ஒரு சுபக் கோளாக இருப்பதால், அதிக பாதிப்பு ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. ராகு உச்சம், திரிகோண வீடுகளில் இருந்தால் விசேஷமான சுப பலன்கள் உண்டாகுமெனக் கூறுக.

6. சுக்கிர திசையில் குரு புத்தி (2 வருடம், 8 மாதம்)

காணவே சுக்கிர திசை வியாழ புத்தி
கனமான மாதமது முப்பத்திரண்டு
தோணவே அதன் பலனை சொல்லக் கேளு
தோகையரும் மங்களமும் சுபயோகமாகும்
பேணவே பெருஞ்செல்வம் பெருகும் பாரு
பெரிதான புத்திரனும் பெண்களுண்டாகும்
நாணவே நாடு நகரம் உண்டாகும் பாரு
நன்மையுடன் வாகனமும் நட்புடனே உண்டாம்.

பொருள் :- சுக்கிர திசையில் குரு புத்தி 2 வருடம் 8 மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! பெண்களது ஆதரவும், நல்ல மங்களகரமான நிகழ்ச்சிகளும், சுப யோகமும் உண்டாகும். மிகுந்த செல்வம் பெருகி வரும். சிறப்பான புத்திர புத்திரிகள் உண்டாகும். நாடு, நகரம் விருத்தியாகும். நல்ல வாகன சேர்க்கையும் உண்டாகும், பாரே!

விளக்கம் :- சுக்கிரனும், குருவும் நல்ல சுபர்கள். எனவே, சுப பலன்கள் கூறப்பட்டன. மேலும், இப்புத்தியில் சுக்கிரன் வலுப்பெறுவார். எனவே, இதில் விசேஷமான சுப பலன்களை எதிர்பார்க்கலாம்!

7. சுக்கிர திசையில் சனி புத்தி
(3 வருடம், 2 மாதம்)

உண்டாகும் சுக்கிர திசை சனியின் புத்தி
உண்மையுள்ள மாதமது முப்பத் தெட்டு
தெண்டாடுமதன் பலனை சொல்லக் கேளு
திரவியமும் பூமி முதல் சேரும் பாரு
நன்றாகும் அரசர் பதியாவாய் பாரு
நன்மையுள்ள மாதர் மைந்தர் நாடு நகர் உண்டாம்
சென்றாகும் செல்வ பதியாவான் பாரு
தீர்க்கமுள்ள மன்னனெனச் செப்பலாமே!

பொருள் :- *சுக்கிர திசையில் சனி புத்தி 3 வருடம் 2 மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! நல்ல திரவியமும், பொன் பொருள் பூமி சேர்க்கையும் உண்டாகும். அரசர் பதியில் இருக்க நேரிடும். நன்மையுள்ள மாதர், மைந்தர், நாடு, நகரம் உண்டாகும். செல்வ பதிக்கு அதிபன் ஆவான். தீர்க்காயுளுள்ள மன்னன் என்றேன், மகனே!*

விளக்கம் :- சுக்கிரனும், சனியும் நண்பர்கள். சுக்கிர திசையின் பிற்பாதியில் சனி புத்தி வருவதால், அதன் பாவ குணம் அடங்கிப் போகும். காரணம், சுக்கிர திசையின் முற்பாதியில் கேதுவின் பாவ சக்தி ஆட் கொண்டிருக்கும் என்பதால், முற்பாதியிலுள்ள சுப புத்திகளும் தீய பலன்கள் தரும். பிற்பாதியிலுள்ள பாவ புத்திகளும் சுப பலன் தரும் என்பது முனிவரது கருத்து! உண்மையுங் கூட! சனி வலுவாக இருந்தால் அகோரமான சுப பலன்கள் உண்டாகுமென அறிக. சுக்கிரனும், சனியும் கூடி பலமாக இருந்தால், இன்னும் விசேஷமான சுப பலன்கள் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது!

8. சுக்கிர திசையில் புதன் புத்தி
(2 வருடம், 10 மாதம்)

ஆமென்ற சுக்கிர திசை புதனார் புத்தி
அன்புடைய மாதமது முப்பத்துநாலு
நாமென்றதன் பலனை நவிலக் கேளு
நாடு நகர் உன் வசமே ஆகும் பாரு
தானென்ற தன்னரசு ஆண்டு நீயும்
தாரணியில் நீயுமொரு தவசியாவாய்
போமென்ற பொன் முதலும் பூமியாண்டு
பொங்கமுடன் தானிருந்து அரசு ஆள்வாய்

பொருள் :- *சுக்கிர திசையில் புதன் புத்தி 2 வருடம் 10 மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கூறுகிறேன், கேளப்பா! நாடு, நகரெல்லாம் உன் வசம் ஆகும். உன்னுடைய நாட்டை ஆண்டு, இப்புவியில் நீயும் ஒரு பெரிய தவசியாவாய். பொன், பொருள், பூமி அனைத்தையும் சிறப்பான முறையில் ஆண்டு, அரசாள்வாய் மகனே!*

விளக்கம் :- சுக்கிரனும், புதனும் சுபர்கள். திசையின் பிற்பாதியில் புதன் புத்தி வருவதால் மிகவும் விசேஷமான சுப பலன்கள் உண்டாகும் என்பது முனிவரது கருத்து. ஆனால், சுக்கிரன் பகை, நீசமடைந்து பலவீனமாக இருந்தால், இந்தப் புத்தியில் மிகவும் கஷ்டமான பலன்கள் நடைபெறுமென அறிக.

9. சுக்கிர திசையில் கேது புத்தி
(1 வருடம், 2 மாதம்)

ஆனலாம் சுக்கிரனில் கேது புத்தி
ஆகாத மாதமது யீரேழாகும்
வாழலாம் அதன் பலனை வகுத்துச் சொல்வேன்
வளர்கொடியாள் தான் சாவாள் வான் பொருளும் போகும்
தாழ்வான தன்னரசு ராச்சியங்கள் போகும்
சம்பத்து தான் குறையும் தந்தை தாய் மரணம்
கோளலாம் சத்துருவால் குடிகேடாகும்
கோதையளும் தான் போவாள் குடிகேடாமே!

பொருள் :- சுக்கிர திசையில் கேது புத்தி *1* வருடம் *2* மாதம் வரை நடைபெறும். அதன் பலனைக் கேளப்பா! கொடியிடையாள் தானும் மரணமடைவாள். காட்டுப் பயிர்களால் வரும் பொருளும் நாசமடையும். தன் நாட்டிலுள்ள இராஜ்ஜியங்கள் எதிரி கையில் போய்விடும். செல்வ சம்பத்து குறையும். தாய், தந்தையர் மரணமுண்டாகும். சத்துரு தொல்லையால், குடிகேடு உண்டாகும். உனது குடிக்கு கேடு வரும் வண்ணம், உன் களத்திரமே உன்னை விட்டு பிரிந்து போவாள், பாரே!

விளக்கம் :- கேது ஒரு பயங்கரமான பாவக் கோள். சுக்கிரன் ஒரு சுபக் கோளாக இருந்தாலும், அதை மீறி தீமை செய்யக் கூடிய சக்தி கேதுவுக்கு உண்டு என்பது இப்பாடலின் கருத்து. ஆனால், கேது தன் உச்ச வீட்டில் 'சுபர்' பார்வையுடன் இருந்தால், நல்ல சுப பலன்கள் உண்டாகுமென்பது குறிப்பிடத்தக்கது!

◆ ◆ ◆

எமது புதிய வெளியீடுகள்...

1.	தமிழில் 3D STUDIO MAX '7' கற்றுக் கொள்ளுங்கள் - பி.ஆர். சிவகுமார்	ரூ.	120.00
2.	இதுதான் இணையம் 'INTERNET' - ஆர்.வி.பதி	ரூ.	60.00
3.	செக்ஸ் பாடம் கற்றுக் கொள்ளுங்கள் - நடுவிக்கோட்டை 'நவீன்'	ரூ.	50.00
4.	தினமும் ஒரு திருமந்திரம் - முனைவர். கு.வெ. பாலசுப்பிரமணியன்	ரூ.	40.00
5.	ஸ்வர யோகம் - என்.தம்மண்ண செட்டியார்	ரூ.	27.00
6.	கால விதானம் என்னும் அதிர்ஷ்டச் சக்கரம் - என். தம்மண்ண செட்டியார்	ரூ.	30.00
7.	மர்ம எண்ணும் எழுத்தும் - என். தம்மண்ண செட்டியார்	ரூ.	18.00
8.	படித்த - படிக்காதவர்களுக்கான தொழிற்பயிற்சிகளும் தொழில்களும் - கந்தவர்வ கோட்டை ராஜேந்திரன்	ரூ.	50.00
9.	மகாகவி பாரதியார் வாழ்க்கை வரலாறு - ஆர்.வி.பதி	ரூ.	35.00
10.	உத்தவ கீதை - எஸ். சூரியமூர்த்தி	ரூ.	50.00
11.	'விப்ரோ' அதிபர் அசிம் பிரேம்ஜி - கார்த்திக்	ரூ.	25.00
12.	'இன்ஃபோசிஸ்' அதிபர் நாராயண மூர்த்தி-கார்த்திக்	ரூ.	25.00
13.	'ரிலையன்ஸ்' அதிபர் திருபாய் அம்பானி-கார்த்திக்	ரூ.	25.00
14.	'உலகத் தொழிலதிபர்' ரத்தன் டாடா - கார்த்திக்	ரூ.	25.00
15.	துரோணர் கதை - ஸ்வாமி	ரூ.	25.00
16.	பீஷ்மர் கதை - ஸ்வாமி	ரூ.	25.00
17.	குசேலர் கதை - அரசுதாசன்	ரூ.	24.00
18.	திருமால் கதைகள் - அரசுதாசன்	ரூ.	30.00
19.	பீஷ்மர் சொன்ன நீதிகள் - ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா	ரூ.	35.00
20.	ஆத்மார்த்த பூஜை முறைகள் - பாலா. கோபாலன்	ரூ.	45.00
21.	ஸ்ரீ துளசிதாசர் கதை - ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா	ரூ.	35.00
22.	பக்த துகாராம் கதை - ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா	ரூ.	55.00
23.	ஸ்ரீ சமர்த்த ராமதாசர் கதை - ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா	ரூ.	50.00

ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்

40, பிஞ்சால சுப்பிரமணியம் தெரு, தி. நகர், சென்னை - 600 017